

# சொல்லத் தயங்கும் உண்மைகள்

- கொழுமம் ஆதி -

சொல்லத் தயங்கும் உண்மைகள்
- கொழுமம் ஆதி -

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **சொல்லத் தயங்கும் உண்மைகள் ...!** - கட்டுரை நூல் |
| உள்ளடக்கம் | : | குமுகநலக் கட்டுரைகள் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு<br>திருவள்ளுவராண்டு 2046, மேழம் (சித்திரை)<br>(24.04.2015) |
| ஆசிரியர் | : | **கொழுமம் ஆதி** |
| வெளியீடு | : | **பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறை,** உடுமலை.<br>**தேன்தமிழன் பதிப்பகம்**, கொழுமம். |
| உரிமை | : | ஆசிரியருக்கு. |
| தொடர்பு முகவரி | : | 3, முத்து அகம்,<br>முத்தையா குடியிருப்பு, உடுமலைப்பேட்டை,<br>திருப்பூர் மாவட்டம் - 642 126. |
| அலைபேசித் தொடர்புக்கு | : | 98422 18 0 14, 98 65 90 67 35 |
| மின்னஞ்சல் | : | kozhumamaathi@gmail.com |
| தாள் அளவு | : | 1 / 8, இயல்வண்ணம்-அச்சுத்தாள் |
| பக்கங்கள் | : | 160 + 2 (அட்டை) |
| படிகள் | : | ஓராயிரம் (1000) |
| விலை | : | **உருவா. 120** |
| கணினி வடிவமைப்பும் அச்சாக்கமும் | : | **இளையநிலா கணிப்பொறி அச்சகம்**,<br>கொழுமம், உடுமலைப்பேட்டை. |

# படைக்கின்றேன்...




எதிர்காலப் போராளிகளாம்

எம் இரு

மழலைச் செல்வங்களுக்கு...!

## அணிந்துரை



# தமிழர்க்குப் பயனுடைய நூல் !

- **திருமிகு.**பொறிஞர். **கு.ம. மருதநாடன்** ஐயா,
(கு.ம.சுப்பிரமணியம், மின்வாரியத் தலைமைப் பொறியாளர் (ஓய்வு)),
தலைவர், திருச்சி சிந்தனையாளர் கழகம்,
26/35, இந்திய மாநில வைப்பகப் பணியாளர் குடியிருப்பு,
கிராப்பட்டி, திருச்சி-620 012. பேசி : 93629 70121.

தோழர் **கொழுமம் ஆதி, சொல்லத் தயங்கும் உண்மைகள்** என்ற நூலை எழுதியுள்ளார். நூல் முழுவதையும் இடையறா எழுத்துப் பணியினூடே படித்துப் பார்த்தேன். 25 தலைப்புகளில் கட்டுரைகள் வடித்துள்ளார். அனைத்தும் மிகச் சிறப்பாக உள்ளன. இப்படிப்பட்ட கருத்துகளை வெளியிடப் பெரிய எழுத்தாளர்கள் என அறிமுகமாகி உள்ள எவரும் முன்வருவதில்லை. நாடறிந்த எழுத்தாளர்கள் எழுதுவன எல்லாம் பெரிதும் பொருளற்றவையாயிருப்பினும் படிக்கிறோம். ஆனால், கொழுமத்தார் எழுதியிருப்பது அத்தனையும் பொருள் பொதிந்தவை. படித்துப் பார்த்த பிறகு தான் இவரிடம் மறைந்து கிடக்கும் எழுத்தாற்றல் புலப்படுகிறது. எமக்குத் தெரிந்தவரையில் அண்மைக் காலத்தில் எந்த எழுத்தாளரும் இத்தகைய சிறப்பான படைப்பை அளித்ததில்லை. இது அறிவாசான் தந்தை பெரியார் வழியில் படைக்கப்பட்ட ஒரு கருத்துக் கருவூலம் !

தோழர் ஆதி தமிழார்வம் மிக்கவர். *சொல்லுக சொல்லிற் பயனுடைய* என்றார் வள்ளுவப் பேராசான். அவர் இந்நூலில் சொல்லியுள்ளவையெல்லாம் தமிழர்க்குப் பயனுடையவையே என்பதில் எவ்வகை ஐயப்பாடும் இல்லை. பாவாணர் இயக்கத்தின் வழிவந்த பெருஞ்சித்திரனாரின் முதன் மாணாக்கராகத் தம்மை இந்நூலின்வழி காட்டிக்கொண்டுள்ளார். பாப் புனைதலோடு எம் எழுத்துப் பணியைச் சுருக்கிக் கொண்டுவிட்ட எமக்கு, இவருடைய எழுத்துத் திறன் வியக்க வைக்கிறது. சில உண்மைகள் சுடும் என்றாலும் அவற்றைச் சொல்லத் தயங்காதவர்.


பெரியார் தமிழைக் காட்டுவிலங்காண்டி மொழி என்று சொல்லிவிட்டாராம் ; இதை நேற்று முளைத்த காளான்களான, அரைவேக்காட்டு எழுத்தாளர்கள் சிலர் சரியான புரிதலின்றிப் பெரியார் தமிழுக்கு எதிரானவர் என்று தூற்றுகிறார்கள். பெரியாரோடு

அணுக்கமாக இருந்த உரிமையில் சொல்லுகிறோம். பெரியார் இம் மண்ணில் விதைத்த விதை முளைத்து, இன்று பெரிய மரமாக வளர்ந்து நிழல் தருகிறது என்பதை இரண்டாந் தலைமுறையில் தோன்றிய நம் *ஆதி* மெய்ப்பித்துள்ளார். பெரியாரியம் எம்முடைய தலைமுறையோடு மறக்கப்பட்டு விடுமோ என்ற எம் போன்றோரின் அச்சத்தை இந்நூலின்வழி போக்கியுள்ளார். இது எமக்கு மிகவும் மகிழ்ச்சி ஊட்டுவதாகும்.

பொதுத்தொண்டு செய்பவன் மானம்-மானக்கேடு பற்றிக் கவலைப்படக்கூடாது என்பார் பெரியார். ஒரு முறை அவரோடு சிற்றுந்தில் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுகொண்டிருந்த போது ஓரிடத்தில் வண்டி நின்றது. அப்போது அவ்வழியாக வந்த பெண்கள் கூட்டம் பெரியாரை வேடிக்கை பார்த்தது. ஐயா மனத்துக்குள்ளே முணுமுணுக்கிறார். *ஊம் ! இவர்களையெல்லாம் எப்போது அறிவுள்ள மாந்தர்களாக ஆக்குவது ?* என்று அவர் முணுமுணுத்தது எம் காதிலும் விழுந்தது. ஐயா ! யாம் இருக்கிறேன் என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டோம்.


அது அன்று சொன்னது. இன்று சொல்கிறோம் ; யாம் தனியரல்லர். இதோ ஆதி போன்றோர் எம் பின்னாலுள்ளனர் என்று சொல்லத் தயங்கோம். என்ன ஆதி ! சரிதானே?

தோழமையுடன்,



திருச்சி
30.06.2014

# வாழ்த்துரை



## மொழித்தூய்மை, பகுத்தறிவுச் சிந்தனை விரவிக் கிடக்கின்றன!

– **திருமிகு.**தோழர். **கொளத்தூர் தா.செ. மணி**
(தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.)
18/59, பழைய அங்காடி, கிழக்குப் பெருஞ்சாலை,
மேட்டூர் அணை - 636 401. சேலம் பேசி : 94433 59666

பொதுவாகக் குமுக அக்கறையுள்ளோர் அருகி வருகிறார்கள். குமுக அக்கறையுள்ளோரிலும் குமுக அவலங்களைக் கண்டு மனம் வெதும்பி, தமக்குள் குமுறிக் கொதிப்போரே அதிகம். குமுகாயத்துக்குத் தவறுகளைச் சுட்டிக் காட்டியும் எடுத்து விளக்கியும் தம்மை அறியாமல் தடம்புரண்டு செல்வோரை நெறிப்படுத்தியும் – நன்கறிந்தே தப்புகள் செய்வோரை அம்பலப்படுத்தி எச்சரிப்போர் வெகுசிலரே.

அவ்வாறான முயற்சிகளில் ஒன்றாக, மொழி, பெரியார், விழா, ஈழம், குறள் எனப் பல்வேறு தளங்களில் தோழர் **கொழுமம் ஆதி** அவர்களால் பல்வேறு இதழ்களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் ஆகும்.

தோழர் ஆதி அவர்கள் நல்ல மரபுப் பாவலராக, தனித்தமிழ் ஆர்வலராக, அழுத்தமான பெரியாரியராக விளங்குபவர் ஆவார். அதற்கு இந்நூலின் கட்டுரைகளே நல்ல சான்றாகும்.

பெரியாரை ஆதரிப்போரிலும் எதிர்ப்போரிலும் பெரியாரை முழுமையாகப் பார்க்காமல், பகுதி பகுதியாகப் பார்க்கும் போக்கே பரவலாக உள்ளது. *ஈ.வெ. இராமசாமியாகிய நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகிலுள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் கொண்ட சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே வேலையாய் இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்குத் தகுதி ( யோக்கியதை ) இருக்கிறதோ இல்லையோ, இந்நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக்கொண்டு தொண்டாற்றி வருகிறேன்* என்று தன்னைப் பற்றித் தன்னிலை விளக்கம் கொடுத்தவர் பெரியார்.

தனக்குப் பின்னர் இவ்வாறான பணிகளுக்கு முழு ஈடுபாட்டுடன் பணியாற்ற யாரும் வருவார்களா என்ற ஐயத்தோடு பணியாற்றிய பெரியார், நெருங்கி வரும் தன் சாவுக்கு முன்பாகவே தன் நோக்கம் நிறைவேற வேண்டும் என விரும்பிய பெரியார், *எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்* என்று ஓடியாடி, அலைந்து திரிந்து பணியாற்றிய

பெரியார், பல்வேறு கட்டங்களில் அக்காலச் சூழல்களுக்கு ஏற்பத், தம் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாமல், உடனடி வேலைத் திட்டங்களை மட்டும் மாற்றி வந்திருக்கிறார். எனவே தான், பல்வேறு காலக் கட்டங்களில் வெவ்வேறு நிலைப்பாடுகளை அவர் மேற்கொண்டதாகவும் முரண்பட்ட நிலைப்பாடுகளை மேற்கொண்டதாகவும் நமக்குத் தெரியும். நுணுகிப் பார்த்தால், அம் மாறுபட்ட நிலைப்பாடுகளுக்கு அடிநீரோட்டமாய் குமுக நலம், குமுக மேம்பாடு என்பவையே இருக்கும். ***ஊட்டியில் சுவெட்டர் போடு என்றேன். மேட்டுப்பாளையம் வந்ததும் வியர்க்கிறது, கழற்று என்றால், நீதானே போடச் சொன்னாய், நீயே கழற்று என்கிறாய், மாற்றி மாற்றிப் பேசுகிறாய் என்று கோபப் படுகிறாயே*** எனப் பெரியார் பேசியுள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவைகளில் பெரியாரின் மொழி குறித்த சிந்தனையே முதன்மையாக உள்ளது. *தந்தை பெரியார் தமிழுக்கு எதிரியா ?* என்ற கட்டுரையில் தோழர் ஆதி அழுத்தமான ஒரு சொற்போரை (விவாதத்தை)த் தொடங்கி வைத்திருக்கிறார்.

இவ்விடத்தில் மொழி குறித்து அவர்தம் இறுதிக் காலத்தில் பேசியுள்ள இரண்டு மேற்கோள்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

***தமிழ்மொழி, ஆங்கில மொழி இரண்டைப் பற்றிய எனது கருத்தைப் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஆங்கிலம் வளர்ந்த மொழி என்பதும் தமிழ் வளர்ச்சி அடையாத பழங்கால மொழி என்பதும் என்னுடைய மதிப்பீடாகும். இதை நான் சொன்னதற்கான முதன்மை நோக்கம் தமிழ்மொழி ஆங்கில மொழி அளவுக்கு அறிவியல் மொழியாகவும் பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை என்பதுதானே தவிர, தமிழ்மீது எனக்குத் தனி வெறுப்பில்லை.*** (விடுதலை,1.12.1970)

***மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு நாட்டு உணர்ச்சியோ நாட்டு நினைவோ எப்படி வரும் ? நம் பிற்காலத் தலைமுறையாவது சிறிது நாட்டு உணர்ச்சி வரும்படி செய்ய வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி சிறிதாவது இருந்தால் தான் முடியும். அன்றியும் சமுதாய உணர்ச்சி சிறிதாவது இருக்க வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி இருந்தால் தான் முடியும்.***

***எடுத்துக்காட்டாக, இன்று பார்ப்பனர்களுக்கு, அவர்கள் எந்த வகுப்பார்களானாலும் சமுதாயத்துறையில் எவ்வளவு பேதங் கொண்டவர்களானாலும் சமற்கிருதம் ( வடமொழி ) என்கின்ற ஓர்***

***உணர்ச்சியாலேயே அவர்கள் பிரிக்க முடியாத - கட்டுப்பாடான இன உணர்ச்சி உள்ளவர்களாக இருக்கிறார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், ஆரியம் சமயத் துறையில் ஆதிக்கம் பெற்றதாலும் ஆங்கிலம் அரசியல் முதலிய பல துறைகளில் ஆதிக்கம் பெற்றதாலுமே தமிழர்களுக்குள் இன உணர்ச்சி பலப்படவில்லை ; குறைந்து விட்டது. இப்போது மீதியுள்ள துறைகளிலும் இந்தி ஆதிக்கம் பெற்று, இந்தி மயமாகி விட்டால், இந்தியும் ஆட்சி பீடமேறிப் பெருமை பெற்றுவிட்டால் - தமிழர் நிலை என்ன ஆகும் என்பதைச் சிந்தியுங்கள்!***

(விடுதலை, 25.07.1972)

இவையிரண்டுமே பெரியாரின் நிலைப்பாட்டைத் தெளிவாக்கும்.

***கூலியின் குறியீடு தாலியா ?*** கட்டுரை, ஆதி தன் வாழ்வின் நிகழ்வு ஒன்றினை ஒட்டி எழுதப்பட்டதாகும். வரலாற்றில் இதே போன்றதொரு நிகழ்வு எதிர்மாறாக நடைபெற்றுள்ளது நினைவுக்கு வருகிறது. செட்டிநாடு, கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் அவர்கள் பெரியாரின் நெருங்கிய நண்பர். பெரும் செல்வந்தர் ; சுயமரியாதைக் கொள்கையர். அவருடைய மகள் பார்வதியின் திருமணத்தில் நடந்த நிகழ்வே அது. அத் திருமணத்தில் பேசிய பெரியார், ***மணமகள் பார்வதி தனக்குத் தாலி கட்டிக் கொள்ள விருப்பமில்லை என்றும், தாலி, பெண் அடிமையைக் குறிக்கும் சாதனம் என்றும் மறுத்ததால் இருவர் கழுத்திலும் ஒருவருக்கொருவர் சங்கிலி போட்டுக்கொள்வது என்கின்ற ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று*** என்று குறிப்பிடுகிறார். (குடிஅரசு, 14.07.1935). விரைவில் தோழர் விருப்பம் நிறைவேறட்டும்.

***பெரியார் எனும் பெருமாந்தர்*** எனும் கட்டுரை பெரியாருக்கு எதிராக அவதூறுகளைத் தூற்றித் திரியும் சில *தமிழ் ஆர்வலர்* களுக்கு நல்ல விளக்கம் ஆகும். கல்வி, தமிழ்வழிக் கல்வி, தாய்த்தமிழ்ப் பள்ளி குறித்து எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் ஆழ்ந்து உணர்ந்து, பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுக் கட்டுரைகள் ஆகும்.

எல்லா ஆதிக்கங்களையும் எதிர்ப்பது போலவே, தமிழ்மொழி மீது பிறமொழிகள் செலுத்தி வரும் ஆதிக்கத்தையும் எதிர்ப்பதும் அவ் ஆதிக்கங்களிலிருந்து தமிழை மீட்கப் போராடுவதும் ஓர் ஆதிக்க எதிர்ப்புப் போர்தான். அந்நோக்கத்தில் முகிழ்த்ததுதான் தனித்தமிழ் இயக்கம்.

தோழர் ஆதி அவர்கள் மொழித்தூய்மை பேணுவதில் காட்டும்

ஆர்வமும் அதுபோலவே அவர்தம் பகுத்தறிவுச் சிந்தனைப் போக்கும் நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

என்றபோதிலும், வெள்ளி மெட்டி அணிவதால் உடல்நலம் சிறக்கும் என்பது சடங்குகளை ஞாயப்படுத்த சிலர் கூறும் சமாளிப்பு; அறிவியல் விளக்கம் போல் உள்ளதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அடுத்து, பெயர்ச்சொற்களை மொழிபெயர்க்கும் அவரது முயற்சி. பெயர் சூட்டும்போதே நல்ல தமிழ்ப் பெயரைப் பிள்ளைக்குச் சூட்டுவது அனைவரும் செய்ய வேண்டியது தான். ஆனால், வரலாற்றில் நிலைத்துவிட்ட பெயர்களை, பெயர்ச்சொற்களை, மொழிபெயர்த்துக் கூறுவது சரியா என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. தற்சமம், தற்பவம் என நம் மரபுக்கேற்பப் பிறமொழிப் பெயர்களை ஆளலாம். ஆனால், பிரபாகரனைக் ( அடைப்புக் குறிக்குள்தான் எனினும் ) கதிர்க்கையன் என்கிறார். அவ்வாறாயின் பாலசந்திரனை இளமதி என்றிருக்க வேண்டாமா ? அதுவுமன்றி, கதிர்க்கையன் என்பது சரியான மொழிபெயர்ப்பா என்பதையும் பார்க்க வேண்டும். ***பிரபா*** எனில் கதிர், ஒளி எனக் கொள்கிறார். ஆனால் ***கரன்*** என்பதைக் ***கரம்*** என்ற வேர்ச்சொல்லாக எடுத்துக்கொண்டு ***கையன்*** என்கிறார். சிவனைக் குறிக்கும் ***அரன்*** *( ஹரன் )* என்ற சொல்லுக்கு நிலையானவன், நிலைத்து இருப்பவன் என்றல்லவா பொருள் கொண்டிருக்க வேண்டும் ? நிலைத்த ஒளியுடையோன், கதிரவன் என்றிருந்தால் தானே சரியான மொழிபெயர்ப்பாக இருக்க முடியும் ? அப்படியே ஆனாலும் அமெரிக்க *புஷ்சை*, *ஃபைர்சுடோனை*, *கோல்ட்சுமித்தை*, *வோர்ட்சுவொர்த்தை* எவ்வாறு மொழிபெயர்ப்பது ?

இவை என்னுடைய கருத்துகளே ஆகும். எண்ணினேன் ; எழுதி விட்டேன். இவை சரியா தவறா என்பதை மொழியறிஞர்கள்தாம் கூறவேண்டும்.

மக்கள் நலம் பேணல், பகுத்தறிவு, தாய்மொழிக்கல்வி, மொழித் தூய்மை போன்ற தளங்களில் அக்கறை கொண்டு படைத்தளித்ததைப் போற்றுகிறோம். இதுபோன்ற ஏராளமான நூல்களைப் படைத்தளிக்க வேண்டும் என விழைகிறோம்.

தோழமையுடன்...

மேட்டூர் அணை,

05.07.2014 தா.செ. மணி



## வாழ்த்துரை

# உண்மைகள் சில இப்படித்தான் இருக்கின்றன...

- - **திருமிகு.**தோழர். **பொழிலன்**
(தலைவர், தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்.)
சென்னை. பேசி : 860 806 8002

**கொழுமம் ஆதி**யின் கட்டுரைத்தொகுப்பு **சொல்லத் தயங்கும் உண்மைகள்**, தோழர்கள் பலரையும் சிந்திக்கச் செய்வன.

தழல், புகழ்ச்செல்வி இதழ்களில் வெளியான அவரின் 25 கட்டுரைகளும் காலத் தேவைகளோடு முடிவுறுவனவன்று ; தமிழகத்தின் குமுக மாற்றத் தேவைக்குரிய காலம்வரை தேவைப்படுவன.

மொழி தொடர்பாக, கல்வி தொடர்பாக, தமிழர்தம் பண்பாடு தொடர்பாக, தந்தை பெரியார் தொடர்பாகவெல்லாம் மிகுந்த அக்கறையெடுத்து விரிவான கருத்துகளை அடைவாகத் தந்திருக்கிறார் ஆதி.

தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக் கொள்வதில் உள்ள தேவையும் அரசியலும் விளக்கப்பட்டிருப்பது போலவே, தமிழ்வழிக்கல்வி தொடர்பான செய்திகளிலும் பல கோணங்களில் விளக்கி எழுதியிருக்கிறார்.

அரசுப் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளிலேயே பயிற்றுவிக்கச் சட்டமியற்ற வேண்டுமென வலியுறுத்துவதும் தனியார் பள்ளிகளுக்கு இணையாக, இன்னும் சொல்லப்போனால் தனியார் பள்ளிகளுக்கு மேலான தரத்துடன் அரசுப் பள்ளிகளைச் செயல்படுத்திட வேண்டும் என்பதும் தோழர் ஆதியின் சிறந்த கருத்துகளே !

இருப்பினும், தனியார் பள்ளிகள் என்பனவே தேவையற்றன ; அவற்றை எல்லாம் அரசு உடனடியாகத் தடைசெய்து அரசுப் பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்பது தேவையானதாக உள்ளது.

மேலும் கல்வித்துறை என்பது தமிழக அரசுக்குப் பொறுப்புடையதாக உள்ளது என்பதைக் கடந்து, இந்திய அரசும் ஆளுமை செய்து ( சி.பி.எசு.இ., ஐ.ஐ.டி. உள்ளிட்ட ) பள்ளி, கல்லூரிகளைக் கொண்டிருப்பதை மறுத்து, முழுக்க முழுக்கத் தமிழக அரசு மட்டுமே பொறுப்புடையதாகத் தமிழகக் கல்வித்துறையை உருவாக்க வேண்டும்.

இப்படியான கருத்துகளை இணைத்து எழுதியிருந்தால் இன்னும் சிறப்புற இருந்திருக்கும்.

தமிழர் பண்பாடு குறித்துத் தோழர் ஆதி எழுதியுள்ள கருத்துகள் சிந்திக்க வேண்டியவையும் தமிழகம் எங்கும் பரவவும் பரப்பவும் பட வேண்டியவையுமாகும்.

திரைப்படத்துறை அடிமைப்படுத்தி வைத்திருப்பதைத் ***தீயினில் தள்ளும் திரைப்பட ஈர்ப்பு*** என்று தெளிவாக வெளிப்படுத்துகிறார்.

**திருக்குறள் திருவிழா** என்கிற பெயரில் தமிழகம் முழுக்க விழாக்கள் எடுப்பது பண்பாட்டுச் சீர்மைக்கு வழி என்கிற அவரின் விளக்கம் மகிழத் தக்கது.

நான்கு பதினான்குகள் குறித்து விளக்கும் கட்டுரையின் பார்வை மகிழ்வுக்குரியது. தமிழர் திருநாள், காதலர் நாள், அம்பேத்கர் நாள், வெள்ளையன் வெளியேறிய நாள் பற்றிய விளக்கங்கள் சிறப்பானவையே. ஆயினும் ஆங்கிலேய வெள்ளையன் ஆகத்து 14-இல் வெளியேறியதான கருத்து, மேலும் சரியான வகையில் சொல்லப்பட்டிருக்கலாம். ஆகத்து 14இல் வெள்ளையன் இந்தியாவை விட்டு முழுமையாக வெளியேறிவிடவில்லை என்பதுதான் உண்மை.

அவன் உண்மையில் வெளியேறிடாது, அவன் மட்டுமன்றி, பன்னாட்டுக் கொள்ளையர்களும் சூழ்ந்துகொண்டு கொள்ளையடிப்பதும் அக் கொள்ளையடிப்புக்கு இணக்கமான அதிகார வெறி ஆட்சியாகவே இந்திய ஆட்சி நடந்துகொண்டிருப்பதும் விளக்கப்படுத்திட வேண்டிய செய்திகள். அச் செய்திகளையும் விளக்கியிருந்தால் நல்லது.

அதேபோது நவம்பர் 14ஐ மறுப்பதும் ஏப்பிரல் 14ஐ ஏற்பதுமான தோழரின் விளக்கம், மகிழ்வாக ஏற்க வேண்டுவது.

அடுத்து, பெரியார் குறித்து இப்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிற செய்திகள் பலவற்றுக்கும் விளக்கம் தருகிறார் தோழர்.

குறிப்பாக, மொழியியல் கருத்து குறித்துப் பெரியாரின் கூற்றுகளைப் பல சான்றுகளுடன் விளக்குகிறார். பெரியார் தமிழ்வழிக் கல்வி குறித்த செய்திகளை அவர் வாழ்ந்த காலச் சூழலோடு பொருத்திக் காட்டுகிறார்.

தோழர் ஆதி எடுத்துக் காட்டும் பல செய்திகள் எண்ணத் தகுந்தவையே.

இருப்பினும் பெரியார் குறித்த இன்றைய தேவைகளையும் அவர் கொண்டிருந்த கருத்துகளில் இருக்கும் இன்றைய தேவைக்குரிய சில நிறைவுகளையும், நிறைவின்மைகளையும் இன்னும் ஆழமாகத் தோழர் எடுத்துக்காட்டியிருக்கலாம்.

அப்படி வெளிப்படுத்தியிருந்தால் அவை பெரியார் பற்றிய குறைபார்வையுடையோர்க்கு வெளிச்சத்தைத் தந்திருக்கும்.

ஆக, இன்றைய தமிழ்க் குமுகத்திற்குத் தேவைப்படும் தமிழியச் செய்திகளை வெளிப்படுத்தும் உண்மைகள் எனும் அளவில் தோழர் ஆதி வெளியிட்டிருக்கும் இந்நூல், தோழர்களின் சிந்தனைக்குப் பயன்படும் சிறந்ததொரு நூல் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது.

– பொழிலன்

சென்னை,
30.10.2014



## வாழ்த்துரை

# இவர்தம் படைப்புகள் இனத்திற்கு அரணாக உள்ளன !

- **திருமிகு.**தோழர். **பரணிப்பாவலன்**
(செயலர், புகழ்ச்செல்வி - திங்களிதழ்.)
2/99, அண்ணா தெரு, மகிழ்வூர், சென்னை-73.
பேசி : 78711 87306.

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய எம் தொப்புள் கொடி உறவுகளுக்கு வணக்கமும் வாழ்த்தும் !

உயிர் மெய் எழுத்தினை வைத்து இனத்தின் மொழியான தமிழைப் பலர் சிதைத்து வருகின்றனர். பிறமொழி கலந்து எழுதுவதில் பெருமை கொள்ளும் கேடர்கள் நடுவே பாவலர் ஆதி அவர்கள் எம்மொழியாம் தமிழைச் செம்மைப்படுத்தி வருகின்றார் பாவலரேறு பெருஞ்சித்திரனார் வழியில். பணிச்சுமை மிகுந்த இவர், கனிச்சுவை ததும்பும் பாவினையும் தனிச்சுவை கொட்டும் கட்டுரைகளையும் எழுதி வருகின்றார். அதைப் பல ஏடுகளுக்கும் அனுப்பிப் பதியவைக்கின்றார் ; தமிழர் வீட்டில் பதியம் போடுகின்றார்.

அகவையில் இளையவராக இருப்பினும் அறிவில் மூப்படைந்தவராய் இவரது கருத்துகள் இருக்கின்றன. களமும் கருத்தும் ஒன்றாய் இவரிடம் கைகோர்த்து நிற்கக் காலம் சொல்லும் இவரின் படைப்பினை வெல்லும் நிலையில். தாய்மொழியாம் தமிழைப் படிக்காத அல்லது படிக்க விரும்பாத தமிழர்கள் நடுவே தமிழ்மொழியைப் பற்றிப் பேசினால் ஏளனமாய்ப் பார்க்கும் எத்தர்கள் நடுவே இவரின் படைப்புகள் இனத்திற்கு அரணாக உள்ளன.

இந்தத் தொகுப்பில் 25 தலைப்புகளில் வரையப்பட்ட கட்டுரைகளில் 20 கட்டுரைகள் நம் புகழ்ச்செல்வி இதழில் பதியப்பட்டுப் பலருடைய பாராட்டைப் பெற்றன என்பதைச் சொல்லிக் கொள்ள நான் பெருமை அடைகின்றேன் புகழ்ச்செல்வி இதழின் செயலர் என்ற முறையில். பக்கத்தை நிறைக்க எழுத்துகளை, சொற்றொடர்களைப் போடாது குறளைப் போல் சொல்லை வடிகட்டி எல்லையைக் காக்கும் படையாய்க் கடைகட்டித் தந்திடும் பாங்கு போற்றுதலுக்குரியது. கருத்தினை அறுவடை செய்து களத்து மேட்டில் கொட்டிய ஆதிக்கு நன்றி.

இந்நூலுள் இடம் பெற்ற அனைத்துச் சொற்களும் நம்மைச் செதுக்கும். அது நாளைய தலைமுறையை வழிநடத்தும் என்பதில்

ஐயமில்லை. ஆனால், இத்தொகுப்பு எத்தனை கைகளுக்குப் போகும், எத்தனை கண்கள் படிக்கும் என்பதே வினாக்குறி !

இதுபோன்ற நூல்களுக்கு நூலக ஆணை கிடைக்காது என்பது தெரியும். இருப்பினும் தன் காசினைப் போட்டு, நம் மனத்தில் உள்ள மாசினை அகற்ற அரும்பாடாற்றி உள்ளார் என்பது நூலினைப் பார்த்தால் – படித்தால் விளங்கும்.

மானமும் அறிவும் தாங்கி வந்த இந்த நூலினை நாம் தாங்கிப் பிடிப்போம் ! இனம், மொழி உயர்வினைத் தூக்கிப் பிடிப்போம் !

அல்லவை தீயவை அகற்றிட நாளும்
நல்லவை நமக்குள் நடந்திட நாட்டில்
உள்ளவை உரியவை உணர்த்திட ஆதியின்
நல்சுவைத் தொகுப்பினை நாட்டினில் விதைப்போம்

– பரணிப்பாவலன்

சென்னை,
10.07.2014

## அணிசெய்யும் வாழ்த்துரை

# ஆதியின் ஒவ்வொரு கட்டுரைக் கருவியும் நுண்மையானவை !



**– திருமிகு. தழல் தேன்மொழியம்மையார்,**
ஆசிரியர் – ***தழல்*** – குமுகத் திங்களிதழ்,
மகளிர் பகுத்தறிவு–தன்மானக் கழகம்,
புதுச்சேரி – 605 009. பேசி : 75980 75002

இந்தக் குமுக மக்களிடையே காணப்பெறும் நச்சு முட்களையும் அவற்றைப் பரப்புகின்ற நச்சு விதைகளையும் முழுமையாகப் பல குமுகப் போராளிகளின் பெருஞ்செயல்களென்னும் அருங்கூர் கருவிகள் அழித்தொழித்தும் மீண்டும் மீண்டும் முளைப்பதற்குரிய கரவு விதைகள் பசுமையாகச் செழித்து வளர்ந்து, எதிர்வரும் மாந்தத் தலைமுறைகள் உள்ளிழுக்கும் காற்றையும் உயிர்ப்பூட்டும் குருதியையும் உணர்வூட்டும் சிந்தனைகளையும் நச்சுப்படுத்தி வருகின்ற நிலையை, தம் அறிவுரை–அறவுரைகளை, திருத்தத்திற்கான மெல்லிய–வலிய உரைகளைச் சான்றோர்களின்வழிகாட்டுதலுடனும் அவர்தம் அடியொட்டியும் பல இளைஞர்கள் பரப்புதற்கு முன்வந்துள்ளனர். அவர்களுள் கொழுமம் ஆதி அவர்கள் தந்தை பெரியார் அவர்களையும் தமிழ்த்தேசியத் தந்தை பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களையும் வழிகாட்டுதலாகக் கொண்டு இக் குமுகத் தேற்றத்திற்கான இன்றியமையாப் பணிகளைச் செய்துவருகிறார். அவர் தேனீ போன்ற உழைப்பினராதலால் அவர் சிந்தனையுள் பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறை என்ற கொள்கைப் பாசறையை நிறுவி அதன்வழி குமுக – அறிவுப்பணி ஆற்றி வருகிறார்.

இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய இளைஞர்களுள் தலைமையான ஒருவர் ஆதி. அவர் ஓரிரு இதழ்களில் எழுதிய அரிய செய்திகள் அடங்கிய – கட்டுரைகள் அனைத்தும் இந்தக் குமுகத்திற்குத் தேவையானவை. படிப்பவர்கள் சிந்தித்து, அறிவுள்ளவர்களாயின் – இந்தக் குமுகம் திருத்தமுற விருப்பமுள்ளவர்களாயின் ஏற்று தாம் நடக்கவும் – பிறரை நடப்பிக்கவும் வேண்டும்.

இந்த நூலில் பதியப்பெற்றுள்ள இருபத்தைந்து கட்டுரைகள் ஒவ்வொன்றும் இக்குமுகச் சீரழிவுப் பள்ளத்தில் குப்பைக் கூளங் களையும் இழிவுகளையும் எவரும் கொட்டி அரிய நிலப் பகுதியை இழிவு படுத்தாமலிருக்க, மேட்டிமைப்படுத்தி, மற்ற நிலத்தவருக்குச் சமமாக

–இணைப்படுத்தமும் தூய்மையும் செய்யும் அரிய கருவிகளாகும்.

இளைஞர் ஆதி அவர்கள் முற்போக்குச் சிந்தனையும் – பகுத்தறிவும் மட்டும் உடையவரல்லர். அன்பையும் பண்பையும் – அறிவையும் தொழக்கூடிய மாந்தநேய மிக்க அரிய மாந்தர்.

நேரிய – தன்னலமற்ற – இந்தத் தமிழியக் குமுகம் எண்ணி, தன்னை ஈகப்படுத்திக் கொண்ட இருபெருந் தலைவர்களான தமிழ்த் தேசியத் தந்தை பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களையும் பகுத்தறிவுச் சாட்டையால் முன்னேற்றமடைந்த மூடத்தனங்களையும் தன்மானமற்ற அடிமை உணர்வுகளையும் அழித்தழிக்க முற்பட்ட குமுகத் தந்தை பெரியார் அவர்களையும் உயிராகப் போற்றி – உளத்திலேற்றி, தன் பகுத்தறிவுப் பாதைவழிச் செல்லும் ஆதி, இடையில் ஏற்படும் முட்டுக்கட்டைகளை அகற்றச் சினங்கொண்டெழுந்து என்னிடம் தொலைபேசியிலும் நேரிலும் தொடர்புகொள்ளும்போது *நம் கையிலுள்ள அரிய பொருள் உடையவும் கூடாது, அழுக்கையும் தேய்த்து அகற்ற வேண்டும் ; அழுக்கு மிகவும் பிடிப்பாக இருக்குமானால் அழுத்தமான அறிவுத் தேய்ப்பானால், மென்மையாகத் தேய்த்துத் தூய்மையடையச் செய்ய வேண்டும்* என்ற என் மெல்லிய கருத்தின் மூலம் உடனே அமைதியடையும் அறிவன்பு மகனாய், நான் ஈன்றெடுக்காத தத்து மகனாய் இயங்கிவரும் ஆதி என்னும் அரிய மகனை என் உயிரும் உள்ளமும் குளிர வாழ்த்துகின்றேன்.

என்னுயிர் இவ்வுலகை விட்டு நீங்கும் வரை *ஆதி* போன்ற அருஞ் செல்வங்களின் அருஞ்செயல்கட்கு அணி செய்வதாகவே என் அறவுரைகள் – அறிவுரைகள் – வாழ்த்துரைகள் அமையும்.

ஆதியின் ஒவ்வொரு கட்டுரைக் கருவியும் இக்குமுக அவலங்களை, மூடத்தனங்களை அழித்துப் பொசுக்கி, குமுகத் தேவைகளை, மலர்ச்சிகளை உருவாக்கும் நுண்மையானவை. இவை போன்ற கட்டுரைகள் ஆதியின் காலங்களில் அருமையான நூல்களாக வெளிப்பட வேண்டும். ஆனால் ஒரே அறிவுரை என் மகனுக்கு...

அறிவுரைகள் மட்டுமே இந்த மக்களுக்கு இன்றையதேவையன்று. வறட்சியாக அறிவு நோக்கியே செல்லும் இன்றைய சூழலில், பாலையில் அரிதாய்த் தென்படும் சோலை போல் (Oasis) இடையிடையே இலக்கியச் சுவையுடனும் சில நெருப்புரைகளைக் கூறினால் அறிவு வெப்பம்,

படிப்பவர் உள்ளங்களைச் சுட்டுத் தாக்காமல் இருத்தல் நலம். அவை அன்புரைகளாகவோ – அருளுரைகளாகவோ இடையிடையே சில அறிவுத் தொடர்புச் செய்திகளை நகைச்சுவையுணர்வு இழையோடவும் கூறலாம். கடுமையான கசப்பு மருந்துகளை இனிப்புக் குப்பியுள் அடைத்துக் கொடுத்து, நோய் நீக்குவது போல், வறண்ட உளத்தினராய் அன்பு நீர் கிடைக்காமல் தவிக்கும் மக்களுக்கு மெல்லிய சுனைநீர் போல் கருத்து இழைகளைக் கொடுக்கும் அன்பு உத்திகளைக் கொடுக்க ஆதி பழக வேண்டும்.

இந்த உலக மக்கள் அனைவரும் நம்முடையவர்களே ! மற்றவர்கட்கு எடுத்துக்காட்டாய் நம் பதிவுகள் இருத்தல் வேண்டும். பகைவனுக்கும் நம் கருத்தோட்டம் நம் உலகப் பொதுமறை நூல் போன்றும் கிறித்துவ, இசுலாமிய மத நூல்கள் போன்றும் பொதுவிதைகளாக இருத்தல் வேண்டும். இந்தக் குமுக மலர்ச்சிக்காக, விடிவிற்காக உழைக்கும் ஆதி மகன், மிக மிக அமைதியாக – மென்மையாக ஆனால் செயல்வன்மையுடன் இயங்கிப் பல அரிய நூல்களைப் படைக்க வாழ்த்தி வணங்கும்... **தழல் தேன்மொழி.**

திரு·பெ·அ·தேன்மொழி

புதுச்சேரி,
07.08.2014



## எ(மு)ன்னுரை

# எழுத்துப்போர் தொடரும்...

**– கொழுமம் ஆதி**



அன்புத் தமிழ் நெஞ்சங்களே !

***பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறை*** யின் எட்டாம் வெளியீடு, **தேன்தமிழன் பதிப்பக**த்தின் ஏழாம் நூல் மற்றும் என்னுடைய ஏழாம் நூலாக வெளிவரும் **சொல்லத் தயங்கும் உண்மைகள்...** என்னும் இந்த நூல், நான் எழுதும் முதல் கட்டுரை நூலாகும்.

குமுகத்தின் வழக்கமான மாந்தன் எனும் நிலையிலிருந்து மாறி, நம் ஆதிப்பேராசான் திருவள்ளுவர் வழியிலும் பகுத்தறிவுத் தந்தை பெரியார் வழியிலும் தமிழ்த்தேசியத் தந்தை பாவலரேறு பெருஞ்சித்திரனார் வழியிலும் இயங்கி, இக் குமுகத்தைப் பார்த்தபோதும் பழகியபோதும், குமுகத்தில் நடைமுறையில் நான் கண்டவற்றை, எனக்குள் அவ்வப்போது எழுந்த இக்குமுகத்தின் மீதான சினங்களை – தாக்கங்களைத் தூயதமிழ்ப் பாக்கள் வழியேயும் தூயதமிழ்க் கட்டுரைகள் வழியேயும் அவ்வப்போது தென்மொழி, தழல், புகழ்ச்செல்வி போன்ற இதழ்கள் வழியே எழுதி வந்தேன். அக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். ஒவ்வோர் கட்டுரையும் இக் குமுகத்தின் ஒவ்வோர் நிலையையும் சுட்டுவதாக அமைந்துள்ளது.

சிறிய அகவையிலும் சரி, பள்ளி, கல்லூரிகளில் பயிலும் காலங்களிலும் சரி, என்னுடைய உள்ளத்தில் உருவாகும் இன்ப– துன்பங்களை, ஏக்கங்கள்–வருத்தங்களை எவரிடமும் சொல்ல இயலாமல் – சொல்லத் தெரியாமல் நிற்கும்போது எனக்குத் துணைநின்றவை இந்த எழுத்தாற்றலும் இதை வெளிக்கொட்டப் பயன்பட்ட தாள்களும் தூவல்களுமே !

நாளடைவில் குமுகத்தின் – குமுக மக்களின் நேரிய போக்கற்ற தன்மையும் செயற்பாடுகளும் குமுகத்தின் மீது கடுஞ்சினத்தைத் தோற்றுவித்தன. குறிப்பாகத் தமிழ்க்குமுகம் இன்றைய சூழலில் எதிர்கொண்டு வருகின்ற பல்வேறு சிக்கல்கள், இன்னல்கள், வீழ்ச்சிகள், இவையெவற்றையும் பற்றி அறியாமல் திரைப்பட, தொலைக்காட்சிக் கேளிக்கைகள், விளையாட்டுகள், பொழுதுபோக்குகள் போன்றவற்றில் மூழ்கிக் கிடக்கும் இன்றைய இளைஞர் கூட்டங்கள், பிஞ்சுப் பிள்ளைகளின் நிலைமைகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது நெஞ்சில் கொப்பளித்த சினத்தின் ஆற்றாமையே இந்நூலின் கட்டுரைகள்.

**தமிழா ! உன்பெயர் தமிழா ?** – தொடங்கி, **தமிழர் திருவிழா** – முடிய இந்நூலின் கட்டுரைகள் அனைத்தும் என் வாழ்வின் ஒவ்வொரு படிப்பினையே ! பட்டறிவே ! நான் பார்த்த இக் குமுகத்தில் நிலவிய பல்வகைப் போக்குகளே !

பெரும்பாலும் பாக்கள் வழியே வெளிக்காட்டி வந்த என் குமுக

ஆற்றாமையை முதன்முதலில் கட்டுரை வழி வெளிக்கொணர்ந்தது **தழல்** இதழ்தான். அதன் ஆசிரியர் தேன்மொழியம்மையார்க்கு என் நன்றிகள் !

மொழி, பகுத்தறிவு, குமுக முன்னேற்றம், பெரியார் என்பவை குறித்து என் கண்முன் கண்டு, எண்ணத்தில் தோன்றியதை, அந்தந்தத் திங்களில் வெளியாகும் தம் **புகழ்ச்செல்வி**–இதழுக்குக் கட்டுரையாக எழுதிட என்னைத் தூண்டிய அதன் செயலர் பரணிப்பாவலருக்கு என் நன்றிகள் !

***பெரியார் எனும் பெருமாந்தர்...*** எனும் பெரியார் பற்றிப் பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனாரின் பாடல் ஒப்பீடுகளுடன் நான் எழுதிய கட்டுரையை வெளியிட்ட **கருஞ்சட்டைத் தமிழர்** இதழுக்கு என் நன்றிகள் !

***மொழிக்கொலை புரியலாமா...?*** –எனும் மொழித்தூய்மை குறித்த என் கட்டுரையை வெளியிட்ட **தெளிதமிழ்** இதழுக்கு என் நன்றிகள்!

கட்டுரைகளைத் தொகுத்து, நூலாக வெளியிட முனைந்து, முதன்முதலில் இதன் படியைக் கொடுத்ததும் ஆழ்ந்து படித்து, சிறந்ததோர் அணிந்துரையை வழங்கிய பெரியார் தொண்டர் **தோழர் கு.ம. மருதநாடன் ஐயா** அவர்கட்கும் இடையறாக் கழகப் பணிகட்கு நடுவிலும் சிறந்ததோர் வாழ்த்துரையை எழுதியனுப்பிய **தோழர் கொளத்தூர் மணி** அவர்கட்கும் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் முதலான பல்வேறு தளங்களில் போராளியாக இயங்கிக்கொண்டு, எம் நூலுக்கு அரியதோர் வாழ்த்துரை வழங்கிய **தோழர் பொழிலன்** அவர்கட்கும் இந்நூலின் பெரும்பாலான கட்டுரைகளைத் திங்கள்தோறும் வெளியிட்டதோடு, இத் தொகுப்புக்கு வாழ்த்துரையும் அளித்த **புகழ்ச்செல்வி** இதழின் செயலர் **தோழர் பரணிப்பாவலன்** அவர்கட்கும் என்நெஞ்சார்ந்த நன்றிகள் ! இந் நூலுக்கு அருமையான அட்டைப்படம் வடிவமைத்துத் தந்த திருப்பூர் வாகை வரைகலையகம், அன்புத்தங்கை **தமிழினி–சதீசுகுமார்** இணையர்க்கு என்நன்றிகள்!

அனைத்துக் கட்டுரைகளையும் நூலாகத் தொகுக்க முதல் தூண்டுதலும் ஊக்கமும் அளித்த என்இணையர் **தீந்தமிழுக்கும் என் பெற்றோர்க்கும்** என் நன்றிகள் !

நான் சந்தித்த நாள்முதலாய்க் கொள்கைவழி, அன்புவழி– அறிவுவழி என்னை இயக்குவித்து, வழிநடத்துவதோடு, என்னின் அனைத்து ஆக்கங்களையும் உள்ளார்ந்த அன்புத்தாயாய் நின்று ஊக்குவித்து, என் போராட்டங்களுக்குப் பெருந்துணைநல்கிப் பெருமைப்படுத்தி வருகின்ற பகுத்தறிவுப் பெண்போராளியாம் **தழல் தேன்மொழியம்மையாருக்கு** என் நனிநன்றிகள் !

தோழர்களே ! படியுங்கள் ! நந்தமிழ்க் குமுகம், அனைத்து இழிநிலைகளிலிருந்தும் மீண்டு நன்னிலைக்குத் திரும்பும் வரை எம் போன்றோரின் இதுபோன்ற எழுத்துப்போர் தொடரும் ! தொடரும் ! தொடரும் !

அமைப்பாளர், பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறை. ( கொழுமம் ஆதி )

## கட்டுரை வரிசை

1. தமிழா ! உன் பெயர் தமிழா....?.................................. 21
2. ஆசிரியப்பணி - அறப்பணியா....?..................................25
3. விழாக்கள் எப்படியிருக்க வேண்டும்....?.........................30
4. அழைப்பிதழ்களில் எங்கே தமிழ்...?
அச்சகத்தார் கவனிக்கவேண்டும்....................................38
5. பிள்ளைகளைக் கெடுக்கும் தொ( ல் )லைக்காட்சி !................43
6. தந்தை பெரியார் தமிழுக்கு எதிரியா...? ......................... 49
7. அரசுப் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகள்
அரசுப் பள்ளியில் படிக்கின்றனரா ?.................................62
8. கூலியின் குறியீடு தாலி................................................65
9. தீயினில் தள்ளும் திரைப்பட ஈர்ப்பு...!..............................73
10. எச்சரிக்கை கொள்வோம்... இனங்கெடுக்கும் ஆரியரிடம் !..... 78
11. மொழி க் கொலை புரியலாமா...?................................ 84
12. ஈழம் மீளும்...! ...........................................................90
13. தமிழ்வழிக் கல்வி....? ..................................................93
14. பெரியார் எனும் பெருமாந்தர் ! ...................................... 97
15. தொடர்களா...? இடர்களே...! .....................................104
16. பேருந்துகளில்... ........................................................ 111
17. எண்ணும் எழுத்தும் எம்மினச் சொத்து ! ..........................115
18. தந்தையும் தம்பியும்... ...............................................120
19. திருக்குறளூர் - திருவிழா ........................................... 124
20.கல்லூரிகளில் கறைபடும் தமிழ் ...................................129
21. நான்கு பதினான்குகள்... ............................................134
22.வீணாகும் விடுமுறைகள்... ..........................................139
23.அலைபேசியும் சாலைநேர்ச்சியும் ..................................142
24.தத்தளிக்கும் தாய்த்தமிழ்ப் பள்ளிகள்... ...........................146
25.தமிழர் திருவிழா ! ...................................................154

# 1. தமிழா ! உன் பெயர் தமிழா ?

வணக்கத்திற்குரிய செந்தமிழ் மக்களே !

ஒவ்வொரு மாந்தனையும் அடையாளப்படுத்துவது அவனுடைய தாய்மொழியும் அவனுடைய பெயரும்தாம். உலகிலுள்ள பல்வேறு இனங்களுள் எந்த இனங்களில் பிறந்தவரும் தத்தம் தாய்மொழியிலேயே பெயர்வைத்துத் தம் மொழியை - தம் இனத்தை அடையாளப்படுத்துகின்றனர். ஆனால், நம் தமிழன் மட்டுமே தம் மொழியின் பெருமையறியாமல் - தன் இனத்தின் உயர்வு புரியாமல் தம் தாய்மொழியில் - தமிழ்மொழியில் பெயர்சூட்ட முன்வருவதில்லை. இதுவே நம் தமிழரின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும் முதல் தடைக்கல்லாகும்.

சப்பான்காரர் ஒருவரைக் கண்டறிய அவரின் பெயரைச் சொன்னால் போதும். சீனாக்காரரை அறிந்துகொள்ள அவரின் பெயரைக் கேட்டால் போதும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வேறெந்த மாநிலத்தவராயினும் வேறெந்த இனத்தவராயினும் அவர் தம்முடைய பெயரைக் கூறியதும் அவரின் தாய்மொழியை அறிந்திடலாம்.

நம் தமிழனை மட்டும் இவன் தமிழன் என்பதை அடையாளங் கொள்ள முடியாதவாறு எண்ணற்ற கலப்படப் பெயர்கள். உலக மொழிகள் அனைத்தும் தோன்றுவதற்கு மூல முதலாக விளங்கிய நம் தமிழ்மொழிக்குத் தமிழ்நாட்டிலே இந்த அவலநிலை. எண்ணுவதற்கே வெட்கமாக உள்ளதில்லையா ?

முதல் மாந்தஇனமாம் தமிழினம் தோன்றிய காலத்திலிருந்து உலகெங்கும் அறியப்பட்டவனாய் - உலக நாடுகள் பலவற்றிற்கும்

சென்று வணிகத் தொடர்பு கொண்டவனாய்க் கொடிகட்டிப் பறந்த தமிழன், ஆரியப் பார்ப்பனர் நுழைவிற்குப் பின்பு சிறிதுசிறிதாகத் தன் அடையாளத்தைத் தொலைக்கத் தொடங்கினான். அதன் உச்சம் தான் இன்றைய பெயர்க்கொலைகள் !

முன்பு, இனத்தின் அடையாளமாய்ப் பெயர்தாங்கியவன் பின்பு இறைவழியில் பெயர்களைத் தாங்கி - இன்று அதிலும் மொழி-இன அடையாளத்தை இழந்து, நாகரிகம் என்னும்பெயரில் என்னென்னவோ புரியாத பெயர்களை சூட்டிக்கொண்டு பெருமை பீற்றிக் கொண்டுள்ளான்.

முன்பெல்லாம் குழந்தை பிறந்தவுடன் அதன் அம்மாவோ அப்பாவோ அல்லது அவ்வீட்டிலுள்ள தாத்தா - பாட்டியோ அக் குழந்தையை அழைக்கும் முகமாக உடனே ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்து விடுவர். அப்பெயர் அனைவரின் வாயிலும் மனத்திலும் நுழைந்து பதியும் பெயராகவே இருக்கும். பெருமளவு அப்பெயர்கள் தமிழ்ப்பெயர்களாகவும் இருக்கும்.

ஆனால், இன்று குழந்தை பிறந்தவுடன் அதற்குப் பெயர்வைக்க அதன் அம்மா - அப்பாவுக்கு, தாத்தன் - பாட்டிக்கு எந்தவகை முன்னுரிமையும் இல்லை, அதைப்பற்றி அவர்கள் சிந்திப்பதும் இல்லை. குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆரியப் பார்ப்பனரிடமும் எண்கணிதம் பார்ப்பவரிடமும் ஓடுகின்றனர். நாம் பெற்ற பிள்ளைக்குப் பெயர்வைப்பது எவரோ ஒரு முகமறியாத மாந்தர்( !) - உடனே அவர் சூட்டிடுவார் தக்-ா, லக்-ா, தர்-ன், தக்ஷின், தக்ஷினி, நி-ாந்த், அனுஜ், விஷ்வா, மனோஜ்.......... என்று வாயில் நுழையாத - என்ன பொருளென்றே புரியாத வடமொழிப் பெயர்களை! நம் பெற்றோர்களும் வாயெல்லாம் பல்லாக - அவருக்கு வணக்கம்போட்டுக் காணிக்கையாகவோ கட்டணமாகவோ பணமும் கொடுத்து வருகின்றனர். என்ன கொடுமையிது !

இன்னும் ஒருசிலர் நம்மிடம் வந்து, தமிழில் பெயர் சொல்லுங்களேன்.... என்று கேட்பர். நாம் சிலவற்றைச் சொன்னாலோ அல்லது நம்மிடமுள்ள தமிழ்ப் பெயர்களின் தொகுப்புநூலைத் தந்து படித்துப் பாருங்கள், பிறகு பெயரைத் தேர்ந்தெடுத்து சூட்டுங்கள்

என்றாலோ சரியென்று நூலையும் வாங்கிக் கொண்டு, ஒரு பக்கத்தைக்கூட முழுமையாகப் பாராமல் - படிக்காமல், இணையதளத்தில் பெயர் தேடுகிறேன் என்று அங்கேபோய் பொழுதெல்லாம் வீணாக்கி, இறுதியில் அங்கும் - அதிலும் அந்த வடமொழிக் கருமம் தான் வந்து நிற்கும். உடனே அதைக் கொண்டுவந்து (அதன் பொருளும் புரியாமல்) அப்படியே அப்பெயரை வைத்துவிடுவர். அதற்கொரு விளங்காத விளக்கம் வேறு கொடுப்பர்.

தமிழகத்தில் - இன்றைய தமிழரிடத்தில் மட்டுமே இந்தத் தரங்கெட்ட நிலை.

ஒரு மொழியழிந்தால் அதன் இனமழியும் என்பர் அறிஞர். தமிழர்தம் அடையாளப் பெயரிழந்தால் தமிழரின் மொழியே அடையாளமின்றி மறைந்து போகின்ற இழிநிலை உருவாகும். தமிழர் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

**அன்றாடம் நமக்குச் சோறு வேண்டும், உடைகள் வேண்டும், வேலை வேண்டும், பகட்டான வாழ்க்கை வேண்டும் என்று மட்டும் வாழும் தமிழர்களே! இவையனைத்திலும் முகாமையானது நாம் பிறந்த மண்ணின் - மொழியின் தூய்மை காத்தலும் பண்பாடு காத்தலும் ஆகும். இத்தகைய மொழிகாப்புக்கும் பண்பாட்டுக் காப்புக்கும் அடிப்படையான நம் பெயர்களைத் தூயதமிழில் இட்டுக்கொள்வோம் !**

உலகின் எந்த மூலைக்குப் போனாலும் நாம் தமிழன் என்பதை நிலைநிறுத்திடச் செய்யும் நம் தாய்மொழிப் பெயரினையே நாம் ஒவ்வொருவரும் சூட்டிக் கொள்ள வேண்டும்.

இன்றைய செய்தித்தாள்களைத் திறந்தால், ஆதர்ஷ், யுவபிரியா, ஹரிஹரன், கிருத்திகா, நிவாஸ், ஹரிபிரியா, ஹரிபிரசாந்த், திவ்யா, ஸ்ரீகௌரிபிரசாத், ஜெகதீஸ், கோவர்த்தினி என்று பள்ளிகளின் பெயர்களும் அதில் பயிலும் மாணாக்க, மாணாக்கியரின் பெயர்களும் சிறிதும் புரியாத பொருளில் அமைந்த வட, வேற்றுமொழிப் பெயர்கள்தாம். தமிழ்ப்பெயர்களை ஆயிரத்தில் ஒன்று... இல்லையில்லை... இலக்கத்தில் ஒன்றுதாம் நம்மால் பார்க்க முடிகிறது. அந்த அளவுக்கு இன்றைய இளஞ்சிறார்களின் - செந்தமிழ்

மழலைகளின் பெயர்கள் அனைத்திலும் தாய்த்தமிழ் தூக்கியெறியப் பட்டு, வடமொழியான சமற்கிருதமும் இன்னபிற வேற்றுமொழிப் பெயர்களுமே வந்து ஆளுமை கொண்டுவிட்டன.

இவை மாற வேண்டும் ; உலக மொழிகளுக்குத் தாயான தமிழ், உலக அரங்கில் வைக்கப்படாமல், அம் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழனே அதனைச் சீண்டாமல் தள்ளும் நிலை மாற்றப்பட வேண்டும். அதற்குத் தமிழை உணர்ந்த, தமிழினத்தை உணர்ந்த, தமிழ்ப்பெயர்களின் செம்மையை உணர்ந்த ஒவ்வொரு தமிழரும் பாடாற்ற வேண்டும். தம்மால் இயன்றவரை தம் நண்பர்கள், அண்டைவீட்டார், உறவினர்கள், சுற்றத்தார் அனைவரிடமும் அவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குத் தமிழில் பெயர் வைக்கப் பரிந்துரைக்க வேண்டும் ; விளக்கிக் கூற வேண்டும். அதற்கு உறுதுணையாக நாங்கள் வெளியிட்டுள்ள ***தூயதமிழ்ப் பெயர்கள்*** என்னும் நூல் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஏறத்தாழ 3000 தமிழ்ப் பெயர்கள் அடங்கிய இந்த நூலினுள் தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் பற்றிய செய்தியும், ஈருருளி, மூவுருளி, மகிழுந்து, பேருந்து போன்ற ஊர்திகளில் தமிழில் எண் பலகை எழுதுவதன் விளக்கமும் அதற்குரிய அரசாணை பற்றிய விளக்கச் செய்தியும் இடம்பெற்றுள்ளன.

வாங்கிப் பயனடையுங்கள் ! தமிழராய் வாழ்ந்து சிறந்திடுங்கள் !



# 2. ஆசிரியப்பணி – அறப்பணியா ?

தமிழ்நாட்டில் ஆசிரியப் பணிபுரியும் பெருமக்களுள் பலர் தம் பணியின் உயர்வையும் – சிறப்பையும் உணர்ந்திடுவதில்லை.

" ஒரு குழந்தையை – ஒரு மகவை ஈன்று, பாலூட்டி, சீரோடு வளர்க்கின்ற ஒரு தாயை நம் நாட்டில் எவ்வளவு உயர்வாக – மதிப்பாகக் கொள்கிறோம், எத்தகைய பெருமைதந்து போற்றுகிறோம். அவளுக்கு ஈடு இணை இவ்வுலகில் வேறு எதுவும் இல்லையென எத்தனை பெருமையும் செருக்கும் அடைகிறோம்..." அப்படியிருக்கையில்,

கணக்கிலடங்காப் பிள்ளைச் செல்வங்களைக் கல்வியென்னும் பாலூட்டி – ஒழுக்கமென்னும் சோறூட்டி, பண்பிற் சிறந்தோராய்ப் பார்போற்றக் கற்றுத்தருகின்ற ஆசிரியப் பணியை மேற்கொள்வோர் ஒவ்வொருவரும் எத்தகையவராய் இருக்கவேண்டும் – எவ்வளவு உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கத் தக்கவராய்ச் செயல்படவேண்டும் ? ஆனால், இன்று அவர்கள் அனைவருமே தங்களின் மதிப்பை – தங்களுடைய பணியின் சிறப்பை உணர்கின்றனரா – உணர்ந்து செயல்படுகின்றனரா என்று கேட்டால் இல்லையென்றே வருந்திக் கூறவேண்டியுள்ளது.

ஏதோ கடமைக்குப் பணியாற்றுபவர் போல, காலை 9.10க்கு உள்ளே நுழைவது, பதிவேட்டில் கையொப்பமிடுவது, ஓரிரு வகுப்புகளில் உலாவி விட்டு, 11 மணிக்குத் தேநீர் இடைவேளை, 12.40க்குப் பகலுணவு. பிற ஆசிரியர்களுடன் அமர்ந்து அரட்டை ; 4.10 ஆனதும் மாணாக்கர் வெளியேறுகின்றனரோ இல்லையோ இவர்கள் முதலில் வெளியேறி விடுதல் என்று எத்தனை அரசுப் பள்ளி ஆசிரியர்கள் இன்றும் தங்கள் பணியினை இப்படிச் செய்கின்றனர் தெரியுமா...? இவர்களெல்லாம் தங்களுக்கென்று மனச்சான்றே இல்லாதவர்களா...?

" தம்முடைய பணியின் – பதவியின் மேன்மையையும் முதன்மையையும் உணர்ந்து தம் செயலை ஒழுங்காகப் புரிகின்றவர்கள் மிகச் சிலரே. " பெரும்பான்மையான அரசுப்பள்ளி ஆசிரியர்கள் தத்தம் கடமைகளை மறந்து, ஏதோ வேலை பார்த்தோமா... திங்களுக்குத் திங்கள் ஊதியத்தைப் பெற்றோமா... குடும்பம், குழந்தை, குட்டிகளுடன் வாழ்க்கையைக் களிப்புடன் நடத்தினோமா... என்றுதான் பணிபுரிகின்றனர்.

சிற்றூர்ப்புறங்களில் செயற்படும் சில பள்ளிகளில் ஆசிரியர்கள் – குறிப்பாகத் தலைமையாசிரியர்கள் பள்ளிக்கு வருவதுகூட இல்லை. அப்படி வந்தாலும், தங்கள் சொந்த வேலைகளைப் பார்ப்பதும் தாங்கள் சேர்த்துவைத்துள்ள பணத்தை ஒன்றுக்கு இரண்டாக வட்டிக்கு விட்டு மேன்மேலும் வரும்படி சேர்ப்பதிலும் இன்னும் ஒருசிலர் பள்ளியிலிருந்து கொண்டே தனியாக ஒவ்வோர் தொழில்களைச் செய்து (Multy Level Marketing, Finance, Real Estate Buisiness, பொருள்கள் விற்பது போன்றவற்றைச் செய்துகொண்டு ) மேலும்மேலும் பொருள்சேர்ப்பதிலும் தான் நேரத்தைப் போக்குகின்றனரே தவிர அவர்கள் தம் ஆசிரியப்பணியைச் செவ்வனே செய்வதில்லை. ஆனால் அவ்வாசிரியர்களே பள்ளியிலிருந்து வெளியில் வந்ததும் மாலையில், தனிப்பயிற்சி எடுக்கிறேன் எனும்பெயரில் தனிவருமானத்தையும் ஈட்டுகின்றனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு ஊதியமும் பஞ்சப்படி, பயணப்படி, வாடகைப்படி, போக்குவரத்துப்படி, அந்தப்படி – இந்தப்படி என்று சலுகைகளும் அரசால் தரப்படுகின்றன. தாங்கள் பெறுகின்ற ஊதியத்திற்கு அளவாகவேனும் தங்களுடைய பணி உள்ளதா என்று கூட – இவர்களைப் போன்றவர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை. இதுதான் ஆசிரியப்பணியா – இதுதான் அறப்பணியா...?

இப்படிப்பட்ட அரசுப்பள்ளியாசிரியர்கள் இப்படிப் பொறுப்பற்று இருப்பதால்தான், அரசுப்பள்ளிகள் தரமிழந்து செயல்படுகின்றன. இதனால்தான் நடுத்தர மக்களல்லாமல் அடித்தட்டு மக்கள்கூடத் தங்கள் பிள்ளைகளை வேறு தனியார் பள்ளிகளில் கொண்டு சேர்க்கின்றனர். அங்கு தனியார் பள்ளிகளில் நிற்பதற்குக் கட்டணம், உட்காருவதற்குக் கட்டணம், ஓடுவதற்குக் கட்டணம் என்று கட்டணம் மேல் கட்டணம் வாங்கி, மக்களிடம் காசைக் கறந்து விடுகின்றனர் என்பது இன்னொரு செய்தி. ஆனாலும், மக்கள் அத்தகைய தனியாரிடம் செல்வது, நம் அரசுப் பள்ளிகளின் தரமின்மையாலும் பொறுப்பற்ற தன்மையாலும் தான். உண்மையான – நேர்மையான மக்கள் நலம் பேணுகின்ற – எந்த அரசாக இருந்தாலும் அரசுப் பள்ளிகளை ஒழுங்குபடுத்தி, அதில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களைச் சரியாக வேலை வாங்கினாலே போதும் ; கல்வியில் நம் நாடு இருப்பவர் – இல்லாதவர் என்றில்லாமல்

எல்லாருமே கல்விச் செல்வத்தைப் பெற்று, உயர்ந்திடலாம்.

இதில் சிலர்க்கு நல்லாசிரியர் என்று தகைமைப்பரிசு ( விருது ) வழங்குகின்றனர். ஆசிரியர்களின் நற்செயலையும் பணிநேர்மையையும் திறமையையும் பார்த்து அரசே அவர்களுக்கு வழங்கும் பரிசு இது. ஆனால், இதை இன்று எத்தனை ஆசிரியர்கள் தங்களுடைய உண்மையான உழைப்பால் அரசு தானே முன்வந்து கொடுத்துப் பெறுகின்றனர் என்று கேட்டால் அந்தத் தகுதிக்குரியவர்களும் ஒருசிலரே!

பெரும்பாலான நல்லாசிரியர்கள் தத்தமக்கு விருது வேண்டுமென மேலிடத்துப் பரிந்துரைகளின் பேரிலும் இன்னும் சொல்லப்போனால் பணம் கொடுத்தும் தான் அதனைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனை எத்தனை நல்லாசிரியர்களால் மறுக்க முடியும், ஒரு சில நல்லவர்களைத் தவிர.

எமக்குத் தெரிந்து, நாம் படித்த பள்ளியின் தமிழாசிரியர் ஒருவர் – திரு. கருப்பண்ணன் என்று பெயர். அவர் தம் பள்ளிப் பணிநாள்களில் விடுமுறையே போடாமல் தமக்கென்று உள்ள விடுமுறை ( விடுப்பு )க் காலத்தைக்கூட பயன்படுத்திக்கொள்ளாமல் ஓய்வுபெறும் வரையில் விடுப்பின்றியே பணியாற்றினார். ( அவர் ஓய்வு பெற்றபோது "பிழைக்கத் தெரியாதவர் " என்று அவரை ஏசிய வாய்கள் ஏராளம்.) இவர் போன்ற ஆசிரியர்கள் இன்று எத்தனைபேர் உள்ளனர் – எண்ணிப்பாருங்கள் !

இவர் பணிபுரிந்த நாள்களில், மாணவர்களுக்கு முன்பே பள்ளிக்கு வந்திடுவார். மாணவர்கள் பள்ளிக்குள் நுழைந்ததும் பள்ளி தொடங்குமுன்பே அவரின் அறைக்குச் சென்று, திருக்குறளோ – பிற மனப்பாடச் செய்யுள்களோ ஒவ்வொருநாளும் ஒப்பித்துவிட்டுத்தான் வகுப்பிற்குச் செல்லவேண்டும். அந்த ஆசிரியப்பணியே அறப்பணி.

இன்றும் தாய்த்தமிழ்ப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பலரும் ஈகமனப்பான்மையோடும் – தொண்டுநோக்கோடும் – மொழிப்பற்றோடும் கல்வி பயிற்றுவிக்கும் மிகவுயர்ந்த செயலைக் காணமுடிகிறது. அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியமும் மிகக்குறைவே. இருப்பினும் தங்களின் உணர்வார்ந்த பணியாலும் உள்ளார்ந்த தொண்டாலும் அந்த ஆசிரியர்கள் மேற்கொள்கின்ற பணியையே அறப்பணி எனலாம்.

அரசுப் பள்ளியாசிரியர்கள் இன்று எத்தனைபேர் இதுபோன்ற பொறுப்புமிக்கவர்களாய்ச் செயற்படுகின்றனர் ? அந்த ஆசிரியர்களின் பணி, அறப்பணி என்று சொல்ல முடியுமா...?

எங்கள் நண்பராக உள்ள ஆசிரியர் ஒருவர் தம் வீட்டிலிருந்த பயன்மிக்க பழைய தமிழ் இதழ்களை (பழைய என்றால் நான்கைந்து ஆண்டுகளுக்குள்ளானவை, அவற்றை) எடை போட்டு வாங்குபவரிடம் விற்கிறார். ஏன் இப்படிச் செய்கிறீர் என்று கேட்டால் - இவற்றை யார் படிக்கிறார்கள் - இவற்றால் என்ன பயன் என்று எம்மைத் திருப்பிக் கேட்கிறார்.

படித்த ஒருவர் - அதுவும் ஒரு பள்ளியாசிரியர் செய்கின்ற செயலா இது ?

நூல்கள் - புத்தகங்கள் என்பவை என்ன...? அவை நம் பிறங்கடைகளுக்கு - நம் பின்வரும் தலைமுறையினருக்கு நாம் விட்டுச் செல்ல வேண்டிய பெருஞ்செல்வங்களல்லவா - அழியாத சொத்துகளல்லவா..? இவற்றை நாம் எப்படிச் சேர்த்துவைக்க வேண்டும்?

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** (திருக்குறள் : 400)

என்றார் திருவள்ளுவப் பேராசான். எத்தனை பெருஞ்செல்வங்கள் காலத்தால் கரைந்தாலும் - அழிந்தாலும் கல்வி என்னும் நற்செல்வம் அழியாமல், எக்காலும் கைகொடுக்குமல்லவா - இதை ஏன் அவர் போன்ற ஆசிரியர்கள் உணர்வதில்லை.

வீட்டை அடைத்துக்கொண்டுள்ளதே என்று வெளித் தள்ளிவிட்டால் - இழந்துபோனவற்றைப் பிறகு மீண்டும் பெறமுடியுமா ?

படிக்காத - பட்டிக்காட்டு மக்கள் கூடச் செய்யக்கூடாத ஒரு இழிசெயலைப் படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் செய்தல் தகுமா ?

இதழ்கள் - நூல்கள் என்பவை இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஓர்நாள் நம் அறிவைத் தூசுதட்டிடவும் - தம் நற்கருத்துகளை அசைபோட்டுப் பிறருக்குச் சொல்லித்தந்திடவும் பயன்படக்கூடிய அறிவுக்கருவூலங்கள் !

நாம் அனைவருமே பெருங்கல்வியாளர்களோ - மேதைகளோ - ஞானிகளோ அல்லர் ; நாம் கற்றவை கைம்மண்ணளவு - கல்லாதவை உலகளவு. அப்படியிருக்கையில் நம் வாழ்க்கை முழுவதிலும் இன்னும்

தெரிந்துகொள்வதற்கும் – நம் வழித்தோன்றல்களை நல்வழிப்படுத்தி நெறிப்படுத்துவதற்கும் பயன்படக்கூடிய அறிவுப்புதையல்களல்லவா இதழ்களும் நூல்களும். இதை எளிய – இயல்பான மக்களே அறிந்து, புரிந்து செய்ய வேண்டுமென்றால் ஆசிரியப்பணியிலுள்ளவர்கள் எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் – எப்படி இதை அவர்கள் மற்றவர்கட்குச் சொல்லித்தர வேண்டும் – பரப்பிட வேண்டும் ?

முதலில் ஒவ்வோர் ஆசிரியர் வீட்டிலும் நூல்கள் தொகுக்கப்பட்ட ஓர் நூலகம் உள்ளதா... என்றால் அதுவும் கேள்விக்குறிதான். எல்லார் வீட்டிலும் அது இருப்பதில்லை. பூசை அறை வைத்து வழிபாட்டுப் பொருள்களை அடுக்கி வைத்திருப்பார்கள் – தொலைக்காட்சி அறை வைத்துத் தேவையற்ற படக் குறுந்தகடுகளைத் தேக்கி வைத்திருப்பார்கள். பயன்படுகின்ற அளவை விட – அளவுக்கு மீறிய ஏனங்கள் ( பாத்திரங்கள் ) அடுக்கிய சமையலறையையும் அழகுப் பொருள்கள், பரிசுப் பொருள்களைக் கொண்ட வரவேற்பறையையும் கொண்டுள்ள பல ஆசிரியர்களின் பரந்த – பெரிய வீடுகளில் அறிவுச் சுடரேற்றக் கூடிய அரும்பெரும் நூல்கள் அடங்கிய நூலக அறை என்ற ஒன்று பெரும்பாலும் இருப்பதில்லை. பிறகு எப்படி அவர்களை ஆசிரியர் என்று சொல்ல முடியும் ? அவர்களின் பணியை எப்படி அறப்பணியாகக் கொள்ள முடியும் ?

ஆகவே, ஆசிரியராகப் பணியாற்றுபவர்கள் அதனை மற்ற வேலைகளைப் போன்று – வயிற்றுப் பிழைப்புக்காக ஊதியம் பெறும் ஓர் பணியாகக் கொள்ளக்கூடாது.

வெறும் கல்லினைக் கொத்திச் செழுமைப்படுத்தி, அழகிய சிலையாக வடிக்கும் தச்சரைப் போல, மாணவர்களை – நல்ல மாந்தர்களாக உருவாக்கி அடுத்த தலைமுறையைச் செம்மைப்படுத்தி வழிநடத்தும் மிகவுயர்ந்த செயலைச் செய்கின்ற அருங்கடமையும் பெரும்பேறும் தமக்கே உண்டு என்பதை உணர்ந்து, அவர்கள் பணியாற்றிட வேண்டும். தமக்குரிய கடமையினின்று வழுவாது பாடாற்றி, தம்மிடம் பயிலும் எதிர்காலப் பிள்ளையர் ஒவ்வொருவரையும் தம் பிள்ளையராய் எண்ணிக் கற்பிப்பதை ஆசிரியர் ஒவ்வொருவரும் கருத்திற்கொண்டு செயற்பட்டால் மட்டுமே ஆசிரியப்பணி அறப்பணியாக அமையும்.

# 3. விழாக்கள் எப்படியிருக்க வேண்டும்...?

( உடுமலைப்பேட்டையில் தோழர் பெரியார்பித்தன் - தோழர் தமிழ்ச்செல்வி இல்லத்தார் நிகழ்த்திய குடும்ப விழா வில் நான் பேசிய அறிமுக உரை )

நம் வீடுகளில் விழாக்கள் என்றாலே, காதணி விழா, பூப்புநீராட்டு விழா, கோயில்விழா – குலதெய்வ விழா என்று இன்றைய சூழலில் தேவையற்ற எத்தனையோ விழாக்களை நம் தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

ஆனால், இன்று இங்கு நம் தோழர் பெரியார் பித்தன் அவர்களும் தோழர் தமிழ்ச்செல்வி அவர்களும் நிகழ்த்துகின்ற இந்தக் **குடும்ப விழா**வானது அவற்றிலிருந்து மாறுபட்டதாக இங்கு இன்று நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஆடி மாதம் நிகழ்ந்த **கொழுமம் ஆதி – தீந்தமிழ்** ஆகிய எங்களின் திருமணம் என்னும் இணையேற்பு விழா நிகழ்வின் மாறுபட்ட அழைப்பிதழை எங்கோ ஒரு தோழர் வீட்டில் பார்த்த **நம் தோழர் பெரியார் பித்தன்** அவர்கள், ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகும் அந்த அழைப்பிதழைப் பாதுகாப்பாக வைத்திருந்து, என்னைத் தொடர்புகொண்டார். அப்போதுதான் அவரை முதன்முறையாகப் பார்க்கிறேன், பேசுகிறேன், அறிமுகம் கொள்கிறேன். தம் வீட்டில் நிகழ இருக்கும் இந்தக் **குடும்ப விழா** அழைப்பிதழையும் அப்படியோர் மாறுபட்ட முறையில் அச்சிட்டுத் தாருங்கள் என்று கேட்டார். அழைப்பிதழ் அச்சிட்டுத் தந்ததோடு அறிஞர் பலர் கலந்துகொள்ளும்

அந்த விழாவில் இன்று நானும் பங்கேற்கும் பேறு பெற்றமைக்காகப் பெரிதும் மகிழ்கிறேன் ; பெருமையுறுகிறேன்.

**குடும்ப விழா** என்று சொல்லிவிட்டு வெறும் குடும்ப உறுப்பினர்களையும் குடும்ப உறவினர்களையும் மட்டும் அழைத்துச் சோறுபோட்டு, மொய்கள் வாங்கிக் கொண்டாடாமல், தன்னைச் சுற்றியுள்ள உற்றார் உறவினர்கள், நண்பர்கள், வணிகத் தொடர்பாளர்கள் - என இப்படித் தனக்கு அறிமுகமாகியுள்ள அனைத்துத் தோழர்களையும் அழைத்து, அவர்களுக்கு நம்மாலான நல்ல கருத்துகளை - சிந்தனைகளை விதைக்க வேண்டுமென்று அறிவிற்சான்ற பெரியோர்களையும் - அறிஞர்களையும் - தமிழ்ப் பெருமக்களையும் அழைத்து, இங்கு உரையாற்ற அமர வைத்துள்ள தோழர் பெரியார் பித்தன் அவர்கள் உண்மையில் தன் பெயருக்கேற்றபடி, தந்தை பெரியார் அவர்களின் வழிவந்த நற்தொண்டராகச் செயற்படுகிறார் என்பதைத் தெள்ளத்தெளிவாக அறியமுடிகிறது.

வயிற்றுக்கு அளிக்கும் வெறும் உணவுவிருந்தோடு அனுப்பிவிடாமல், நம் செவிக்கும் சிந்தனைக்கும் உள்ளத்திற்கும் உயர்ந்த பல நற்கருத்துகளை - பகுத்தறிவுச் சிந்தனைகளை அறிவு விருந்தாகவும் அளித்து, வந்துள்ள அனைத்து உறவினர் - நண்பர்களும் இங்கிருந்து வெளியேறும்போது ஓர் புதிய மாந்தராக - முற்போக்குச் சிந்தனையாளராக வெளியேற வேண்டும் என்ற அவாவுடனும் உயர்ந்த நோக்குடனும் அவர் எடுக்கின்ற இந்தக் **குடும்ப விழா**, தொடக்கம் முதல் நிறைவு வரை அமைதியுடன் சிறந்து நிகழ, நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - அமைதி காத்துப் பொறுமையுடன் ஆன்றோர்தம் கருத்துகளைச் செவிமடுக்க வேண்டும்.

உலகில் முதல் தோன்றிய பேரினமாம் தமிழினத்தில் பிறந்து, உலக மொழிகளுக்குத் தாய்மொழியாகிய செந்தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களாகிய நாம், நமக்கே உரிய ***வந்தாரை வாழ வைக்கும்*** என்னும் பொதுமைப் பண்பினாலும் - எங்கும் எதனையும் துணிந்து தட்டிக் கேட்காத பெரும்போக்காலும், நம் தமிழ் மொழி - இன - பண்பாட்டையும் நாகரிகத்தையும் இழந்து வந்தோம் - இன்றும் இழந்து வருகிறோம்.

நம் ஆதித் தமிழரின் தொன்மையையும் மேன்மைச் சிறப்புகளையும் அடையாளத்தையும் பாதியில் வந்த ஆரிய இனத்தவரால் - நாம் இழந்து வருவதைக் கண்ணுற்றபோதுதான் **திருவள்ளுவப் பேராசான்** போன்ற அறிஞர் பெருமக்கள் நம் தமிழினத்தில் தோன்றி நம்மை வழிநடத்திடத் **திருக்குறள்** முதலான அரும்பெரும் இலக்கியங்களைப் படைத்தனர். ஆம்...

திருக்குறளில்,

" மாந்தனே நீ இப்படியெல்லாம் இரு, இவ்வாறெல்லாம் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து, இப்படி வாழ்ந்து செல்.." என்னும் நன்னெறிகளைச் சொன்ன அதே திருவள்ளுவர்,

" மாந்தனே நீ இப்படியெல்லாம் தவறான வழிகளில் வாழாதே... இத்தகைய தீய பழக்கங்களைக் கைவிட்டு வாழ்ந்திடு.." என்றும் சொல்லிச் சென்றுள்ளார்.

"இப்படியெல்லாம் வாழ்ந்திடு..." என்பதை அவர் நம் முன்னோராம் ஆதித் தமிழரின் வாழ்நிலையிலிருந்தும் அவர் தம் வாழ்க்கை நிலையிலிருந்தும் தெளிவுபடுத்துகிறார்.

ஆனால், "எப்படியெல்லாம் வாழ்ந்திடக் கூடாது..." என்பதற்கு நம்முள் வந்தேறிய ஆரிய இனத்தை மறைமுகமாகக் காட்டியே தம் குறட்பாக்களில் அறிவுறுத்துகிறார்.

ஆயினும்,

அத்தகைய நஞ்சு மன ஆரியரின் தொடர்பினால் - அவரின் பின்சென்றதால் காலங்காலமாக நாம் அடைந்த அடிமைத்தனத்தால் வந்த தமிழினச் சீரழிவைக் கண்டு, இத் தமிழரை - தமிழினத்தை மீட்டெடுக்கத் தோன்றியோரே **தந்தை பெரியார், பாவலரேறு பெருஞ்சித்திரனார்** போன்ற குமுகப் புரட்சியாளர்கள்.

## திருக்குறள் பற்றித் தந்தை பெரியார் சொன்னார்...

*"அருமைத் தமிழர்களே ! திருக்குறள் உலகில் உள்ள எல்லா இசங்களுக்கும் அஃதாவது இலெனினசம், சோசலிசம் ஆகியவற்றைவிட உயர்ந்த மெய்மங்களை (தத்துவங்களை)க் கொண்ட மக்களின் நல்வாழ்விற்கான அறநூலாகும். அதை இனியேனும் தமிழர்கள் படித்து, அதன்வழிச் சென்று பொதுப்பணி*

*ஆற்றினால், நாம் எவருக்கும் அடிமைப்பட்டிருக்க மாட்டோம் என்பது மட்டுமல்ல, எவரும் நம்மை ஏமாற்றியிருக்கவோ ஏமாற்றவோ இயலாது "*

என்று சொன்ன தந்தை பெரியார்,

தமிழிலக்கியங்களில் திருக்குறள் ஒன்றை மட்டுமே தமிழினத்திற்கென தமிழர் மீட்புக்கென எழுதப்பட்ட நூலென்று, மிகத் தெளிவாக அறுதியிட்டு உரைத்தார்.

ஏனென்றால், திருக்குறளைத் தவிர பிற தமிழிலக்கியங்கள் அனைத்தும் தமிழரை, இறைப்பற்று என்றும் சாதிமதப் பற்று என்றும் மூடநம்பிக்கைகளில் தள்ளி இக் குமுகாயத்தில் சீரழிவுகளை ஏற்படுத்திடக் காரணமானவை என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அதனால் தான் இன்றும் இந்துத்துவத் துறவிகளும் இந்துமத – ஆரியத் தலைவர் பலரும் உலகப் பொதுமறை உள்ள திருக்குறளை ஏற்காமல், அதைத்தவிர மீதியுள்ள இலக்கியங்களை மட்டும் மக்களிடையே பரப்பி வருகின்றனர். அரசுப் பள்ளிகளைத் தவிர எத்தனை தனியார் பள்ளிகளில் திருக்குறளை முழுமையாகக் கற்றுத் தருகின்றனர் கூறுங்கள் ! பிற வேத புராணப் புளுகுக் குப்பைகளையே பெரும்பாலான தனியார் பள்ளிகள் இன்றைய குழந்தைகளிடத்தில் கற்பித்து வருகின்றன. தமிழில், வணக்கம் என்று சொல்வதைக்கூட பெரும்பாலான பள்ளிகளில் குற்றம் என்று கூறித் தண்டனை வழங்குகின்றனர். நமஸ்தே என்றுதான் கூறவேண்டுமெனக் கற்பிக்கின்றனர். இவர்களால் தமிழ்க் குமுகாயம் எப்படி மலரும் – எப்படி வளரும்?

அன்றைய தமிழ்க்குமுகாயத்தில் நிலவிய அனைத்துக் குமுகக் கொடுமைகளையும் தன் வாழ்நாள் முழுவதும் எதிர்த்துப் போராடியவர் தந்தை பெரியார். சாதியம், மதம், பெண்ணடிமை போன்ற அனைத்திலிருந்தும் இத்தமிழினம் விழிப்புறாதா – என்று தம்முடைய கருத்துகளை ஆழ்ந்த பகுத்தறிவுப் பேச்சுகளாலும் எழுத்துகளாலும் பரப்பிப் பாடுபட்டவர் அவர்.

**பெரும்பணியைச் சுமந்த உடல் ; பெரும்புகழைச் சுமந்த உயிர் – பெரியார் என்னும் அரும்பெயரைச் சுமந்த நரை !**

**அழற்கதிரைச் சுமந்த மதி ! – அறியாமை மே...ல்**
**இரும்புலக்கை மொத்துதல் போல்**
**எடுக்காமல் அடித்த அடி ! எரிபோல் பேச்சு !**
**பெரும்புதுமை ! அடடா, இப் பெரியாரைத் தமிழ்நாடும் பெற்றதம்மா...!**

என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார், தந்தை பெரியாரைப் பற்றிக் கூறுவார்.

இந்த மாபெரும் அறிஞர்களின் தோன்றலுக்குப் பின்னரே தமிழினம் தன்னிலை உணரத் தொடங்கியது. குமுகத்தில் சாதியாலும் மதங்களாலும் இருந்த ஏற்றத் தாழ்வுகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. அனைத்து நிலையிலிருந்த மக்களும் கல்வியறிவைப் பெறத் தொடங்கினர்.

ஆனால், அவ் வேறுபாடுகளும் குமுகாயக் கொடுமைகளும் முழுமையாக இன்னும் மறைந்திடவில்லை. மூடநம்பிக்கைகளும் குலக்கொடுமைகளும் இன்றும் ஆங்காங்கே நிலவிக் கொண்டுதான் உள்ளன.

இவை அடியோடு அகற்றப்படவேண்டுமெனில் முதலில் தமிழன், தான் தமிழன் என்பதை உணரவேண்டும். சாதி – மதமின்றித் தமிழன் மொழியாலும் இனத்தாலும் நாட்டாலும் தான் தமிழன் என்னும் உணர்வு இத்தமிழர் அனைவருக்குள்ளும் ஓடும் உடற்குருதியிலும் உள்ளத்திலும் உடல் நரம்புகளின் இயக்கத்திலும் கலந்திட வேண்டும். அதற்குத் தமிழரிடையே தாய்மொழியுணர்வு வேண்டும். அத்தகைய தாய்மொழியுணர்வை ஊட்டவும் – மொழியை ஆரிய அடிமையினின்று மீட்கவும் பாடுபட்டோரே **பாவேந்தர், பாவலரேறு பெருஞ்சித்திரனார்** போன்ற அறிஞர் பெருமக்கள்.

தான் வாழ்ந்த அறுபத்து மூன்றாண்டுகளில் நாற்பதாண்டு காலம் இத் தமிழ் மொழி– இன – நாட்டு மீட்புக்காகவே வாழ்ந்து போராடி மறைந்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். அவர்தம் பாடல்களும் கட்டுரைகளும் கருத்துப் பொழிவுகளும் எவருக்கும் அஞ்சாது நின்று போராடிய போராட்டங்கள் அனைத்தும் தமிழ் – தமிழர் – தமிழ்நாட்டின் மீட்சிக்காகவே இருந்தன. அவர் தாம் மட்டுமின்றி தம்முடைய மனைவி, மக்கள், பெயரக்குழந்தைகள் அனைவரையும் இத்தமிழினத் தொண்டுக்கே ஆளாக்கி விட்டுச்சென்றுள்ளார்.

இத்தகைய அறிஞர் பெருமக்களெல்லாம் தோன்றி, வாழ்ந்து, செய்த புரட்சிகளெல்லாம் பதவி நோக்கும் பணத்தாசையும் கொண்ட இன்றைய பல அரசியலாளரின் இரண்டகப் போக்கால் இன்றைய மக்களிடம் கொண்டுசெல்லப் படாமல் பின்தள்ளப்பட்டுவிட்டன.

**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு !**

என்று பாவேந்தர் பாடலையும்

**எந்தக் கட்சியில் நீ இருந்தாலும் இனத்தை மறந்திடாதே – உன்**
**சொந்தக் குடும்பம் தனைப் பல கருத்தால்**
**சுட்டுப் பொசுக்கிடாதே !**

என்று பாவலரேறு பாடலையும்

ஒலிக்க வேண்டிய இன்றைய தமிழ் இளைஞர்களின் வாய்கள் – தமிழ்க் குழந்தைகளின் வாய்கள் – இன்று **Why this கொலைவெறி கொலைவெறி கொலைவெறிடி ?** என்று பாடித் திரிந்துகொண்டிருக்கின்றன. இது நமக்கு இழிவில்லையா ? இந்த இந்தியத் துணைக்கண்டத்தின் **பிரதமர் எனப்படும் தலைமை அமைச்சர்கூட இப்பாடலுக்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறார்.** அவருக்கென்ன, அவருடைய தாய்மொழி தமிழல்லவே...! இதை எதிர்த்து நம்மில் எத்தனை தமிழர்கள் குரல் கொடுத்தோம் ?

**என் தமிழ்மொழி மேலுனக் கேனிந்தக் கொலைவெறிடா...**
**என் தமிழ்மொழி – தாய்மொழி – செம்மொழி பாவமடா...**

என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சில தமிழிளைஞர்கள் தான் எதிர்ப்பாட்டு எழுதி, அதைப் பாடி இணையத்தில் உலவ விட்டுள்ளனர். இருந்தும் என்ன... இன்னும் நம்மூர் முண்டங்கள் கொலைவெறி கொண்டு, கொலைவெறியைப் பாடிக்கொண்டுதானே உள்ளன.

இதுமட்டுமா –

இன்றைய தமிழரிடையே பொருளில்லாத எண்ணற்ற மூடப் பழக்கங்கள் – குப்பைகளாய்ப் பரவிக் கிடக்கின்றன.

எடுத்ததற்கெல்லாம் இன்னும் நாள் – நேரம் பார்ப்பது, சோதிடம் பார்ப்பது, இதைக்கேட்க ஆரியப் பார்ப்பனரிடம் ஓடுவது தன்வீட்டில் நிகழும் திருமணத்திற்கும் – ஏன் தான் உயிர்தந்து பெற்ற

பிள்ளைக்குப் பெயர் வைப்பதற்கும் ஆரியப் பார்ப்பனரிடமும் எண்கணிதரிடமும் ஓடுவது...

சாதி – மதக் கூட்டங்களில் பங்கேற்று, தான் இன்ன சாதி – இன்ன மதம் என்றும் தன்னுடைய சாதியே உயர்ந்தது – தன்னுடைய மதமே சிறந்தது என்றும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு வேற்றுமைப்பட்டுத் திரிகின்ற கொடுமைகள் இன்றும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

இவற்றுடன்,

நம் தமிழினப் பெண்களிடையே புதிதாகக் கடந்த சில ஆண்டுகளாக, திருமணமான பெண்கள் உச்சந்தலையில் குங்குமப் பொட்டு வைக்கும் மூடவழக்கம் தோன்றியுள்ளது. இதனை மிகப் பெருமையாகக் கருதிக்கொண்டு – நம் பெண்கள் ஒவ்வொருவரும் இப்படி வைத்துக் கொண்டுள்ளனர். ஆனால், உச்சந்தலையில் வைக்கும் அந்தக் குங்குமப் பொட்டுக்கான பொருள் – அர்த்தம் எவ்வளவு இழிவானது என்பதை நாம் உணர்ந்தோமா... எதற்காக அது வைக்கப்படுகிறது... என்று எண்ணியாவது பார்த்தோமா...?

இந்த வழக்கமே தமிழர் மரபு அல்ல. நெற்றியில் வைப்பதைக் கூடத் தாழ்வில்லை என்று ஏற்கலாம். ஆனால், உச்சந்தலையில் வைக்கும் பொட்டு எதற்காக – அது எதைக் குறிக்கிறது...?

அது வடநாட்டானிடமிருந்து இங்கு வந்து பரவிய வழக்கு.

**நம் நாட்டிலுள்ள முருகக் கடவுளை வடநாட்டான் வைத்து வணங்குகிறானா... இல்லை. ஆனால், வடநாட்டான் கொண்டுவந்த – அவன் கடவுளான பிள்ளையாரை – விநாயகனை நம் தமிழர்கள் வீடுதோறும் – தெருத்தோறும் வைத்து, விழுந்து விழுந்து வணங்குகிறோம். கேட்டால் முழுமுதற் கடவுளாம். முழுமுதற் கடவுள் இன்றும் ஆற்றங்கரையில் அமர்ந்து கொண்டு, அங்கு குளிக்க வருகின்ற பெண்களையெல்லாம் பார்த்துக்கொண்டு தன் திருமணத்திற்குப் பெண்தேடிக் கொண்டிருக்கிறாராம்... இப்படி அதற்கொரு மூடக் கதைவேறு கூறுகின்றான்.**

அந்த விநாயகனைப் போன்று,

**வடக்கிருந்து வந்த வழக்கமே இந்த உச்சந்தலைக் குங்குமப் பொட்டு.**

அதன் விளக்கம் என்னவென்றால்...

வடநாட்டில் சிவப்பு விளக்குப் பகுதியிலுள்ள பெண்கள் - அதாவது விலைமகள்கள் எனப்படும் பெண்கள், தாங்கள் மாத விலக்கில் இருக்கிறோம் என்பதை அங்குவரும் ஆண்களிடம் குறிப்பால் தெரிவிக்கவே தங்கள் உச்சந்தலைகளில் சிவப்புப் பொட்டைவைத்துக் காண்பிப்பார்களாம். சொல்லவே நா கூசுகிறது. இந்த இழிவான அடையாளத்தை - இது என்னென்று தெரியாமல், இத் தமிழ்நாட்டில் நம்மூர்ப் பெண்கள் வைத்துக்கொண்டுள்ளனர். இக் கொடிய செயல் முற்காலத்தில் இங்கு இல்லை. கடந்த காலங்களிலும் இல்லை. பழைய திரைப்படங்களிலெல்லாம் பாருங்கள், இந்த அடையாளம் எந்தப் பெண்மணிக்கும் காணப்படாது. இந்த 20 - 25 ஆண்டுகளாக இங்குள்ள ஊடகங்களும் தொலைக்காட்சித் தொடர்களும் இறக்குமதி செய்து, பழக்கிவிட்ட ஓர் இழிவான அடையாளத்தைத் தான் அழகு என்றும் பெருமை என்றும் நம்வீட்டுப் பெண்கள் சுமந்துகொண்டுள்ளனர்.

இத்தகைய இழிவுமிக்க பொருள்தருகின்ற - இந்த உச்சந்தலைக் குங்குமப் பொட்டை இனியேனும் நம் தமிழ்ப்பெண்கள் வைத்துக்கொள்ளலாமா, எண்ணிப்பாருங்கள் தாய்மார்களே தங்கைமார்களே....!

இவைபோன்ற இன்னும் எண்ணற்ற மூடப்பழக்கங்களில் மூழ்கியுள்ள தமிழனை அப் புதைகுழியிலிருந்து மீட்டெடுத்துத் தன்மதிப்பும் - தன்மானமும் கொண்ட தமிழனாய் மாற்றுவதற்கு இதுபோன்ற பகுத்தறிவு மிக்க குடும்ப விழாக்களைத் தோழர் பெரியார் பித்தன் போன்று நாம் ஒவ்வொருவரும் நிகழ்த்திட வேண்டும். இவ்விழா நமக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதைச் சொல்லி

என் அறிமுக உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி ! வணக்கம் !

# 4. அழைப்பிதழ்களில் எங்கே தமிழ் ? அச்சகத்தார் கவனிக்கவேண்டும்...

**தமிழாசிரியர்** எனும்பெயரில் தமிழ்நாட்டில் பணிபுரியும் ஆசிரியர்கள் பெரும்பாலானோர்க்கே தமிழைக் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் தெரிவதில்லை; தெரிந்திட முன்வருவதுமில்லை.

எமக்குத் தெரிந்த ***தமிழாசிரியர் ஒருவரின் இல்லத் திருமண விழா*** விற்கான அழைப்பிதழ் வந்தது. ஓர் அழைப்பிதழின் விலை ஏறத்தாழ 10 உருவா முதல் 15 உருவா அளவுக்கு இருக்கும். அந்தளவு விளம்பரமாக ( ஆடம்பரமாக ) - பெரிய அளவினதாக இருந்தது. ஆனால், அவர்தம் வீட்டுக்குள் தமிழ் இல்லை - தமிழ்க்கடவுள் இல்லை.

அந்த அழைப்பிதழின் அட்டையில் இருந்தது பிள்ளையார் உருவப் படமும், உள்ளே இருந்தது திருப்பதி வெங்கடேசன் உருவப்படமும் தான். ( இறைப்பற்று இருக்கட்டும் ; அது அவர்களின் நம்பிக்கை. அதில் தமிழ்க்கடவுள் - தென்னகத்தான் எனப்படும் முருகன் படத்தையாவது போட்டுத் தொலைக்கலாமே..)

அழைப்பிதழைத் திறந்தால் உள்ளே எண்ணற்ற கலப்புச் சொற்கள் ; கலப்பு நடை. மணமக்கள் பெயர்களில் வடமொழி ( சமற்கிருத ) எழுத்து ; முன்னெழுத்தில் ஆங்கில எழுத்து. மணமகன் தொடங்கி, அதில் இடம்பெற்ற சுற்றத்தார் ஏறத்தாழ முப்பதின்மரின் பெயர்களிலும் இதே ஆங்கில - வடமொழிக் கலப்பே.

மணமக்களின் பாட்டன் - பாட்டி பெயர்களுடன் ***சாதிப்பெயர்*** ஒட்டுகள்.

தந்தை - தாய்க்கு ஆங்கில முன்னெழுத்து - ஆங்கிலத்தில் பட்டம். எல்லாக் கடவுள் பெயர்களுக்கு முன்னும் **ஸ்ரீ** என்னும் **நச்செழுத்து.**

திதி, நட்சத்திரம், யோகம், லக்கினம் - இப்படி அனைத்து மூடத்தனங்களும் நிரம்பி வழிந்தன அந்த அழைப்பிதழில். இத்தனைக்கும் அவர் தமிழாசிரியர் ; அவர் மகனான அந்த மணமகனும் அரசுப்பள்ளி ஆசிரியர்.

அனைத்தையும் விட - இவையெல்லாவற்றிற்கும் தலைமையாக இருந்தது, **"நிகழும் மங்களகரமான விரோதி வருடம் கார்த்திகை மாதம்..."** என்னும் வரிதான்.

**திருவள்ளுவர் ஆண்டு :**

திருமண அழைப்பிதழ்கள் அனைத்திலும் ***திருவள்ளுவர் ஆண்டினைப்*** பயன்படுத்த வேண்டும் – நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் எனத் தமிழக அரசே சட்டமியற்றி ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால், அரசு இயற்றியுள்ள அச்சட்டத்தையும் மதிக்காமல் – அதைப்பற்றி எண்ணியே பாராமல் – தாம் ஓர் அரசு ஊழியர் – தமிழாசிரியர் என்பதற்காகவேனும் அதனைப் பயன்படுத்த வேண்டும் என்றுகூடச் சிந்திக்காமல், திருவள்ளுவர் ஆண்டையே போடாமல் அந்த அழைப்பிதழ் அச்சிடப்பட்டுள்ளது. அவருடன் பணிபுரிகின்ற – பழகுகின்ற தமிழுணர்வாளர்களேனும் அவர்க்கு அதனை உணர்த்தியிருக்கலாம் ; அதுவுமில்லை.

இவர் ஒருவரை மட்டும் குறிப்பிடவில்லை ; தமிழ்நாட்டில் இவர்போன்றுள்ள எண்ணற்ற தமிழாசிரியர்களும் அரசுப்பணியாளர்களும் தான் இத்தவறினைச் செய்கின்றனர்.

இவர்களுக்கெல்லாம் அரசு ஊதியமும் சலுகைகளும் ஊக்கத் தொகைகளும் தருவது, இவர்கள் இப்படித் தாய்த்தமிழை மறப்பதற்கா – கொலை புரிவதற்கா ?

***பெயரைத் தமிழில் எழுதினால், அதன் முன்னெழுத்தையும் தமிழில் போடவேண்டுமென்ற ஓர் அடிப்படை கூடத் தெரியாதா இவர்களுக்கு ?***

அடிமட்டத்தில் உள்ள தனியார் ஊழியர் பலருக்கும், அன்றாடக் கூலித்தொழிலாளர் பலருக்கும் கூடத் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படை உண்மைகள் – சட்டங்கள், அரசு ஊழியருக்கு – பல்லாண்டுகள் பணியாற்றிய தமிழாசிரியருக்குத் தெரிந்திடாதா? தமிழாசிரியர் எனும் பெயரில் எதைத்தான் இவர்கள் கற்றனர் – எதைத்தான் இவர்கள் தம் மாணாக்கருக்குப் பயிற்றுவித்தனர்? இவர்களெல்லாம் தமிழைப்பற்றியோ – தமிழ் ஆண்டு பற்றியோ – தமிழர் திருமணங்கள் பற்றியோ அறிந்திருக்க மாட்டாரா – படித்திருக்க மாட்டாரா...? தமிழறிஞர்கள் – பகுத்தறிவாளர்களின் உரைகளைக் கேட்டிருக்க மாட்டாரா...?

அல்லது தெரிந்தாலும், “அது கிடக்கட்டும் நமக்கென்ன... நாம் எப்போதும் போல் வேலையைப் பார்ப்போம்...! இந்தச் சீர்திருத்தங்கள்

– மாற்றங்கள் எல்லாம் நமக்கெதற்கு ? நமக்குத் தேவை, சாமி – கடவுள் – கடவுளர் படங்கள் – ஆரியனை வைத்து அவனின் பீடைமொழியில் சடங்குகள் ! மொழி ( தமிழ் ) எக்கேடுகெட்டால் என்ன..." எனும் கீழ்ப்போக்கு எண்ணமா ?

போதாததற்கு, திருமணம் முழுக்கப் பார்ப்பானைக் கொண்டு, நெருப்புவைத்துப் புகைபோட்டு ஆரிய மந்திரங்களோடும் ஆரியனின் சடங்குகளோடும் நடந்தேறியது.

**அச்சகம் வைத்திருப்போர்க்கு....**

ஆசிரியர்கள் – தமிழாசிரியர்க்கு அடுத்து, மொழியைக் காக்க வேண்டிய – பிழையின்றி எழுதவேண்டிய கடமையும் உணர்வும் அச்சகம் வைத்திருப்போர்க்கும் அச்சுத்துறையில் பணிபுரிவோர்க்கும் இருக்க வேண்டும். அவர்கள்தான் அழைப்பிதழ்களாகட்டும் – நூல்களாகட்டும் அனைத்தையும் மக்களுக்குக் கொண்டுசெல்வதில் முதன்மைப் பங்காற்றுபவர்கள் எனலாம். அப்படிப்பட்ட இடத்திலுள்ள அவர்கள்தாம், தாம் செய்யும் பணியில் தமிழைப் பிழையின்றி அச்சிட வேண்டும்.

**திருவள்ளுவர் ஆண்டைப் பயன்படுத்த வேண்டும் என்னும் அரசின் ஆணையை அவர்களும் பின்பற்ற வேண்டும். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது அச்சகத்தார் இன்னும் அதனைப் பயன்படுத்தவே இல்லை. பகுத்தறிவாளர்கள் – திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வைத்திருக்கும் அச்சகங்களில் கூட இதே நிலைதான்.**

நாம் சொன்னாலோ, "வாடிக்கையாளரே ( மக்களே ) அப்படி எழுதச் சொல்வதில்லை ; நாம் எழுதினால் அதெல்லாம் போட வேண்டாமென மறுக்கின்றனர் " என்று பொதுமக்களின்மேல் பழிபோடுகின்றனர். இது தவறான பழி. ஏனெனில், நாங்கள் கூட அச்சகப்பணி செய்யும்போது, அழைப்பிதழ்களில் வடிவமைக்கும்போது திருவள்ளுவர் ஆண்டைப் போட்டால் பொதுமக்கள் அதைப்பற்றி – வேண்டாமென்று மறுப்புக் கூறுவதில்லை. மேலும், அதனைப் பற்றிய விளக்கம் தான் கேட்கின்றனர். அரசுதான் ஆங்கில ஆண்டுபோன்று, தமிழ்ஆண்டான திருவள்ளுவர் ஆண்டையும் பயன்படுத்த வேண்டுமெனக் கூறியுள்ளது – தமிழர்க்கென ஓர் ஆண்டுக்கணக்கு வேண்டுமல்லவா... அதுதான் இந்தத் திருவள்ளுவர் ஆண்டு என்று நாம்

கூறினால் பொதுமக்களும் புரிந்துகொள்கின்றனர். அவர்களும் தமிழர்கள்தானே...? அப்படியிருக்க, அவர்கள்மேல் குற்றம் சொல்லி அச்சகத் துறையினர் தப்பிக்கப் பார்க்கின்றனர்.

அதுமட்டுமின்றிப் பெரிய பெரிய அழைப்பிதழ் அட்டைகள், உறைகளில் எங்கு பார்ப்பினும் ***பிள்ளையார் உருவப்*** படத்தையே அச்சிடுகின்றனர். அட... தென்னாட்டுக் கடவுளாக நம்பிக்கொண்டுள்ள முருகன் படத்தையாவது போட்டுத் தொலை என்றால், அதையும் "மக்களுக்குப் பிடிக்காது – மக்கள் பிள்ளையார் படம்தான் கேட்கின்றனர் – பிள்ளையார் தான் முதற்கடவுள்" என்று வடநாட்டு ஆரியக் கடவுள் படங்களையே அழைப்பிதழ்களில் அச்சிடுகின்றனர்.

மேலும், இயல்பாகவே அணியமாக்கப்பட்ட – பலவண்ணங்களில் அச்சாகி விற்பனைக்கு இருக்கின்ற விலை உயர்ந்த அழைப்பிதழ் (முகப்பு) அட்டைகளில் கூட முருகன் படங்கள் இல்லை ; எல்லாவற்றிலும் பிள்ளையார், திருப்பதி ஏழுமலையான் படங்களே. ஓர் அழைப்பிதழில்கூட முருகனோ – நம்முடைய நாட்டுப்புற அம்மன் படங்களோ இல்லை...

ஊரில் – தம் வீட்டில் கருமாரியம்மனையும் மாரியம்மனையும் காளியம்மனையும் குலதெய்வங்களாய் வணங்கி வாழும் – எளிய மக்களுக்கும் கூட அழைப்பிதழ் என்றால் அங்குத் ' **தொந்திக் கணபதி** ' வந்து அமர்ந்து கொள்கிறார். இதனை அந்த எளியமக்களும் தம் அறியாமையால் விட்டுவிடுகின்றனர். இவற்றையெல்லாம் பார்க்கும்போது – நம் தமிழனை – தமிழகத்தை – முழுக்க முழுக்க வடநாட்டு – ஆரியப் பார்ப்பனப் பண்பாட்டினராகவே மாற்றிடத் திட்டமிட்டுச் செய்யும் வேலையாகவே தோன்றுகிறது.

நம் தாய்த்தமிழ் நாட்டிற்கு வரும் அனைத்து அழைப்பிதழ் படங்களும், ஒன்று – வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதாக இருக்கிறது ; அல்லது தமிழ்நாட்டிலேயே உள்ள வடநாட்டுப் பணியாளர்கள் அல்லது முதலாளிகளால் தூண்டப்பட்டு – அச்சிடப்பட்டு விற்பனைக்கு விடப்படுகிறது. அப்படியிருப்பதால் தான் தமிழ்நாட்டில் – தமிழன் வீட்டில் – தமிழன் அச்சிடும் திருமண அழைப்பிதழ்களில் எல்லாம் தமிழக் கடவுள்களோ – தமிழ்நாட்டின் நாட்டுப்புற மக்களின் குலதெய்வ வழிபாட்டுப் படங்களோ இல்லாமல் – ஆரியப் பார்ப்பானின்

வடநாட்டுக் கடவுள்களின் படங்கள் இடம்பெறுகின்றன.

நம் இளித்தவாய்த் தமிழினமோ (மேற்குறிப்பிட்ட தமிழாசிரியர் போன்று ) நம் அடிப்படை என்ன... சிறப்புகள் என்ன... நம் குலதெய்வங்கள் என்ன... என்பதைப் பற்றியெல்லாம் சற்றும் சிந்திக்காமல் திருமணம் முதலான விழாக்களிலெல்லாம் வடவனின் பண்பாட்டை - ஆரியனின் நாகரிகத்தை (?)த் தெரியாமல் பின்பற்றித் தொலைக்கின்றனர் ; தமிழப் பண்பாட்டைத் தாமறியாமலே படுகுழியில் புதைக்கின்றனர்.

**மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்களும் மாற வேண்டுமென்றால்...**

**1) அரசுத் துறையில் - ஆட்சித் துறையில் உள்ளவர்கள் - தமிழினப் பண்பாட்டின் மேல் அக்கறையும் பற்றும் உள்ள ஆட்சியாளர்கள் - அமைச்சர்கள் - முன்வந்து திருமண அழைப்பிதழ்களை வெளியிடுவதிலும் - திருமண அழைப்பிதழ்கள் அச்சிடும் முறைகள் பற்றியும் பொதுமக்களுக்கும் - அச்சுத் துறை சார்ந்தவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.**

**2 ) ஆங்கில ஆண்டைப் பயன்படுத்துவதற்கு முன்பு தமிழ்ப்புத்தாண்டு (திருவள்ளுவர் ஆண்டு ) வரிசை எண்ணையும் வடமொழியற்ற தூய தமிழ் மாதங்களையும் பயன்படுத்த ஆணையிட வேண்டும்.**

**3 ) குறிப்பாக அரசு ஊழியர்களுக்கும் - ஆசிரியப் பெருமக்களுக்கும் புரியும்படியாக - இடித்துரைக்கும்படியாக இச்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும். அரசு ஊழியர்கள் தமிழில்தான் கையெழுத்திட வேண்டும் என்று சட்டமியற்றி நடைமுறைப் படுத்தியதைப் போல் இதனையும் செயற்படுத்த வேண்டும்.**

கண்டிப்பாக இதில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுத்தால்தான், தமிழ்ப் பண்பாட்டை மறந்திடும் தமிழாசிரியர்களிடத்திலும் - தமிழர் நாகரிகத்தை மறந்து ஆரிய வடவனின் அடிமையில் சிக்குண்டுள்ள தமிழ் மக்களிடத்திலும் எச்சரிக்கையும் விழிப்புணர்வும் ஏற்படும்.

# 5. பிள்ளைகளைக் கெடுக்கும் தொ( ல் )லைக்காட்சி...!

தமிழர்தம் மொழி - இன - பண்பாட்டைக் கேடுறாமல் வளர்த்தெடுக்கும் பொறுப்பு இக்கால - எதிர்காலத் தமிழ்ப் பிள்ளைகளிடத்தே தான் பெருமளவு உள்ளது. இளைய குமுகாயமே நாட்டை ஏற்றம்பெறச் செய்யும் தூண்கள். குமுகத் தூண்கள் நான்கினில் ஒன்று இளைய தலைமுறையே.

அத்தகு பெருமைமிகு இளைய குமுகத்தினர் இன்று சென்றுகொண்டிருப்பது எங்கே...? அவர்களை அவர்களின் பெற்றோரகள் வளர்க்கின்ற முறை எப்படி...?

இன்றைய தமிழ்க்குழந்தைகளின் வாழ்வில் - உள்ளத்தில் அதிகளவு இடம்பெற்றுக் கெடுக்கின்ற வேலையைச் செய்வன இன்றைய திரைப்படங்களும் தொலைக்காட்சி முதலான ஊடகங்களுமேயாகும்.

அதிலும் தொலைக்காட்சிகளின் பங்கு பெரும்பங்கு.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

என்றார் வள்ளுவப்பெருமான்.

ஆனால், குழலிசை, யாழிசையைவிட இனிதான மழலைகள், இன்று மயங்கி - முடங்கிக் கிடப்பது தொலைக்காட்சிகளின் முன்னால். தொலைக்காட்சி விளம்பரங்களில் மூழ்கி, அவற்றை மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் அளவுக்குக் கேடுகெட்ட நிலைக்கு இன்றைய தமிழினத் தலைமுறை தள்ளப்பட்டிருக்கிறது.

இதைப்பற்றித் தமிழினத்திலுள்ள எந்தப் பெற்றோர்க்கும் கவலையிருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், அவர்களே அப்பிள்ளைகளை அதற்கு ஊக்குவிக்கிறார்கள்.

எங்கள் உறவினர் ஒருவர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அங்கிருந்த நான்கு அகவைச் சிறுவன், தொலைக்காட்சியை இயக்குவதில் அ முதல் ஃ வரை அறிந்துவைத்திருந்தான்.

தொலைக்காட்சி இயக்கியைக் ( ரிமோட் ) கையில் எடுத்தால் மளமளவென்று சொடுக்கி, அலைவரிசைகளை விரைவாக மாற்றிவிடுகிறான். அவன் என்ன செய்கிறான் என்று பக்கத்திலேயே இருந்து பார்க்கும் நமக்குப் புரியவேயில்லை. அவ்வளவு வேகமாக இயக்கிடக் கற்றுக்கொண்டுள்ளான்.

தொலைக்காட்சி கண்டறிந்த புதிதில் அது, செய்திகள் மூலம் உலகை அறிந்துகொள்ளப் பயன்பட்ட எவ்வளவு உயர்வான தொலைத் தொடர்புக் கருவி என்று எண்ணியிருந்தோம். அதற்கு நேர்மாறாக, அது இன்று உலகை – குடும்பத்தை – பிள்ளைகளைக் கெடுக்கின்ற ஒரு முட்டாள் பெட்டியாகவே திகழ்கிறது என்று சொன்னால் அதற்கு மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அந்தளவு கேடுகெட்டதாக இன்றுள்ள தொலைக்காட்சி அலைவரிசைகள் திகழ்ந்துவருகின்றன.

முன்பெல்லாம் நாங்கள் சிறுவராக இருக்கும்போது ஊரில் யாரேனும் ஓரிருவர் வீட்டில்தான் தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும். அதிலும் ஒளியும் ஒலியும், வயலும் வாழ்வும் என எப்போதாவது கிழமைக்கு ஒருமுறை – இருமுறைதான் அங்குசென்று தொலைக்காட்சி பார்க்க முடியும், அதுவும் வரிசையில் நின்று. எங்கள் ஊரில் ஒரு சில பார்ப்பனர் வீடுகளில் தான் தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும். அதைப்பார்த்திட 10 காசு, 25 காசு என்று நிகழ்ச்சிகளுக்கு ஏற்பக் கட்டணம் வாங்கித்தான் அவர்கள் அதனைப் பார்க்க விடுவர். என் சிறு அகவையில் நானே இதனை உணர்ந்திருக்கிறேன்.

அப்போதெல்லாம் தொலைக்காட்சி என்பது அரிதாக இருந்தது. அன்றிருந்த பிள்ளைகள், குழந்தைகள், பெண்கள் எவரும் அதில் மூழ்கிடாமல் இன்றுபோல் கிறுக்காகிப் போகாமல் இருந்தனர். ஆனால், இன்றுதான் எல்லார் வீட்டிலும் சமையலுக்கு அரிசி – பருப்பு இருக்கிறதோ இல்லையோ தொலைக்காட்சிப் பெட்டிகள் தவறாமல்

இருக்கின்றன. எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் மக்களைச் சோம்பேறிகளாக்கும் இலவயங்களைத் தருகின்றனர். அதன்பயனாக இன்று தெருவிலுள்ள எல்லாருடைய இல்லங்களிலும் அந்த முட்டாள் பெட்டிகள் முழங்கிக் கொண்டுள்ளன – நம் தமிழ்ப் பிள்ளைகள் அதில் முடங்கிக் கொண்டுள்ளன. அதன்மூலம் தமிழர் தம் முகவரிகளைத் தொலைத்துக் கொண்டுள்ளனர்.

அந்த 4 அகவைச் சிறுவன் தொலைக்காட்சியை அப்படி வேகமாக இயக்குகிறான். ஒவ்வோர் அலைவரிசை வரும்போதும் அதில்வரும் விளம்பரத்தை – அது ஒளிபரப்பாகத் தொடங்கும்போதே இவன் அதனை முழுமையாகச் சொல்லிவிடுகிறான்.

ஓர் அலைவரிசையில் **கையில் ஒரு கோடி – Are you Ready?** –என்று ஒரு சூதாட்ட நிகழ்ச்சி இப்போது ஒளிபரப்பாகி வருகிறது. அதனைத்தான் இன்றைய பிள்ளைகள் முதற்கொண்டு பெரியவர் வரை அனைவரும் விரும்பிச் சுவைத்துக் ( ? ) கண்டு களித்து ( ? ) வருகின்றனர்.

ஆம் ! வினா – விடை போல் காட்டிக்கொண்டு, விளம்பரங்களால் பெறுகின்ற பேரளவு வருவாயில் நம் நடுத்தர மக்களிடையே பணத்தாசையை உண்டாக்கி, ஏற்கெனவே உள்ள பொருளியல் சேர்க்கும் நோக்கத்தினை மேன்மேலும் மிகுதியாக்கிப் பணத்தைச் சேர்ப்பதையே குறிக்கோளாக்கும் பாழாய்ப்போன – அந்த நிகழ்ச்சியைப் பெரியவர்கள் மட்டுமின்றிப் பிள்ளைகளையும் பார்க்க வைக்கின்றனர் என்பதே நம் வருத்தம்.

இன்னும் சில அலைவரிசைகளில் இளம் ஆண்–பெண்களை மட்டுமின்றிச் சிறுவர் – சிறுமியரையும் அரைகுறை ஆடைகள் அணிந்து, மானாட மயிலாட வைக்கின்ற பண்பாட்டுக் குலைவான நிகழ்ச்சிகளையும் நம் தமிழினம், பிள்ளைகுட்டிகளோடு அமர்ந்து பார்த்துச் சுவைக்கின்றது.

இவற்றையெல்லாம் பார்க்கின்ற பிள்ளைகள், இவற்றில் வருகின்ற அருவெறுக்கத்தக்க பாடல் வரிகளையும் காட்சிகளையும் கேடான விளம்பரங்களையும் பார்த்து, அவற்றை மனப்பாடமாக ஒப்பிக்கின்றனர். இது ரசினி, இது விசய், இது வடிவேலு என்று நடிகர் – நடிகையரின் பெயர்களையும் சரியாகக் கூறுகின்றனர். பள்ளியில்

படிக்கும் பாடங்களைக் கூட அப்படி மனத்தில் பதித்திருக்க மாட்டார்கள்... அந்தளவு தொலைக்காட்சியில் ஒன்றிப் போயுள்ளனர் – இன்றைய பிள்ளைகள்.

அந்தச் சிறுவனிடம் ஒன்று, இரண்டு, மூன்று,..... எண்கள் சொல்லச் சொல்லிக் கேட்டால், "அப்படினா என்ன...?" என்று கேட்கிறான். ஆனால், ஆங்கிலத்தில் "One, Two, Three,..." என்று தெளிவாகச் சொல்லத் தெரிந்திருக்கும் அச்சிறுவனுக்கு அதன் தமிழாக்கம் தான் ஒன்று, இரண்டு, மூன்று என்பதைச் சொல்லத் தெரியவில்லை. ஏனென்றால் அவன் பெற்றோர்களோ – அவன் படிக்கும் ஆங்கிலவழிப் பள்ளியோ அதனை அவனுக்குச் சொல்லித் தரவில்லை. என்ன கொடுமை இது... எத்தனை அவலம் இது...? அதுபோல் A,B,C,D,.... தெரிகிறது ; அ, ஆ, இ, ஈ,........ தெரியவில்லை. அந்தப் பையனின் பெற்றோரிடம் கேட்டால், அவன் ஆங்கிலப் பள்ளியில் படிக்கிறான்; தமிழ் தெரியாது என்று வீண் பெருமை பிதற்றுகின்றனர்.

நம்முடைய தமிழ்வழிப் பள்ளிகளில் தமிழுடன் ஆங்கிலத்தையும் பிழையறக் கற்றுத் தருகிறோம். ஆனால், பணக் கொள்ளையடிக்கும் பதின்மப் பள்ளிகளில் எண்கள் முதற்கொண்டு அடிப்படையான செய்திகளைக் கூடப் பிள்ளைகளின் தாய்மொழியில் சொல்லித் தராமல் ஆங்கிலத்தில் மட்டுமே பயிற்றுவிக்கின்றனர். இதை நம் இளித்தவாய்த் தமிழ்ப்பெற்றோரும் தம்பிள்ளை ஆங்கிலம் பேசுவதை மட்டுமே ***மழலைச் சொல்*** என்று கருதி, அதையே ஊக்குவிப்பு செய்கின்றனர். அத்தோடு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் காண உரிமைதந்து, அவ்வழியிலும் பிள்ளைகளைப் பண்பாட்டுச் சீரழிவுக்கு உள்ளாக்குகின்றனர்.

தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரங்களும் பெரும்பாலான நிகழ்ச்சிகளும் பெரியவர்களான நம்மையே வீழ்த்தி, அடிமையுறச் செய்யும் கீழ்மையைப் புரிந்துவருகின்றன. இப்படியிருக்கையில் நம் எதிர்காலத் தலைமுறையினரான – மழலைச் செல்வங்கள் இவற்றைக் காண்பதால் இவையனைத்தும் அப்பிள்ளைகளின் மனங்களில் பதிந்து, தமிழரின் இனத்தை – பண்பாட்டை அடியோடு மறந்து அழித்திடச் செய்கின்றன.

சுட்டிகளாய் ஓடி விளையாடுவதை வழக்கமாகக் கொள்ளவேண்டிய குழந்தைகள், சுட்டி தொ.கா.வில் வரும் பொம்மைகளை வைத்தகண் வாங்காமல் பார்ப்பதைத் தான் வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

“கண்ணா ! இலட்டுத் தின்ன ஆசையா...” எனக்கேட்டு ஒரு விளம்பரம் வரும். உயிருக்கு – உடலுக்குக் கேடான ஒரு மாக்கட்டி ( சாக்லேட் ) விளம்பரமே இது. இதுமட்டுமா, குர்குரே, லேசு, பிங்கூசு, சாக்கோசு............ என்று உடலைக் கெடுக்கும் நொறுக்குத் தீனிகள் பலவற்றின் விளம்பரங்களும்தான்.

இவை போன்ற தின்பண்டங்களின் விளம்பரங்களையும் பெப்சி, கொகோகோலா போன்ற குளிர் குடிப்பு விளம்பரங்களையும் காணுகின்ற பிள்ளைகள் அவற்றைக் கட்டாயப்படுத்திக் கடையில் வாங்கிக் குடிக்கவேண்டுமென அடம்பிடிக்கின்றனர். பெற்றோர்களும் அதனை – அவர்கள் கேட்டதைக் காசுகொடுத்து வாங்கித் தருகின்றனர். இதன்மூலம் எத்தகைய கேட்டை விளைவிக்கின்றனர் தெரியுமா ?

இன்றைய பிள்ளைகளுக்கு இளநீரும் மாம்பழங்களும் சுவைக்கத் தந்தால் மறுத்துவிடுகின்றனர். மாறாக, ஆண்டுக்கணக்கில் புட்டிகளில் அடைத்துவைத்து, பிணப்பெட்டியாம் குளிர்ப்பெட்டியில் தங்கியிருக்கவைத்துத் தருகின்ற பெப்சிகளையும் புரூட்டிகளையும் தான் அவர்களால் சுவைக்க முடிகின்றன. இவையனைத்திற்கும் காரணம் தொலைக்காட்சிகளில் அவர்கள் காணும் விளம்பரங்களே !

கடைகளில் விலைக்கு வாங்கப்படும் தண்ணீர்ப் புட்டிகளிலேயே எவ்வளவோ கேடுகள் கலந்துள்ளன எனத் தெரியவரும்போது, மேற்கண்ட குளிர் குடிப்புகளில் எத்தகைய நச்சுகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் கலந்து, நம் தமிழ் மக்களை நோய்களுக்கு இட்டுச் செல்கின்றன என்பதை அறியாமல் இன்றைய தலைமுறையினர் அதனை விரும்பிக் குடிக்கின்றனர். இவற்றையெல்லாம் விளம்பரம் செய்துவரும் தொலைக்காட்சிகளும் அதில் இடம்பெறும் நடிகர்களும் தான் மனச்சான்றே இல்லாமல் – காசுக்காக – வருவாய்க்காக – இன அழிப்பைச் செய்து வருகின்றனர் என்றால் இதைப் பார்க்கும் தமிழின மக்களாவது சிந்திக்க வேண்டாமா... தம் அரும்பெரும் பிள்ளைகளுக்கு இவற்றைக் காட்டாமல் தவிர்க்க வேண்டாமா... எண்ணிப் பார்ப்பீர் தமிழ்மக்களே !

இவ் விளம்பரங்களில் இடம்பெறும் நடிகர்களும் விளையாட்டு வீரர்களும் இதைப் பயன்படுத்துகின்றனரோ இல்லையோ தெரியாது. ஆனால் நம் ஏதிலித் தமிழினம் மட்டும் தம் வரும்படியில் ஒரு பகுதியைச் செலவிட்டு, இவற்றை வாங்கித் துய்க்கின்றனர் ; வாழ்வைத் தொலைக்கின்றனர்.

அவ் விளம்பரங்களை ஒளிபரப்பாமல் கட்டுப்படுத்தவும் அந்தத் தொலைக்காட்சி அலைவரிசைகளைக் கண்டிக்கவும் நம் அனைவராலும் இயலாவிட்டாலும் நம் பிள்ளைகள் அவற்றைக் காணாமல் – அதில் மூழ்காமல் நன்முறையில் வளர்க்கும் பணியைக் கட்டாயம் நாம் செய்ய முடியுமல்லவா? அதற்கு, அவை போன்ற நிகழ்ச்சிகளை – விளம்பரங்களைக் காண்பதை நாம் முதலில் நிறுத்த வேண்டும். அப்போதுதான் நம் பிள்ளைகளை அவற்றிலிருந்து காக்க முடியும். நம் பிள்ளைகளைக் கெடுக்கும் தொ( ல் )லைக் காட்சிகளிலிருந்து இன்று அவர்களை விடுவித்தால் தான், எதிர்காலத் தமிழினம் நலமுற்ற – வளமுற்ற இனமாக வாழும் என்பதை நினைவில் கொள்வோம்.

# 6. தந்தை பெரியார் தமிழுக்கு எதிரியா...?

"**மொழித்தொல்லை**" - என்று ஓர் குறுநூல் - 16 பக்கங்களில். உடுமலைப்பேட்டை, "சுயமரியாதைப் பதிப்பகம்" என்னும் பதிப்பகத்தினர் அண்மையில் வெளியிட்டுள்ளனர். பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் வழி வந்த - அவர் தம் கருத்துகளை - அவர்தம் புரட்சிகளை - சீர்திருத்தத்தைத் தமிழரிடத்தில் பரப்பி - தமிழரை விழிப்புறச் செய்யப் போராடிவரும் எம்போன்ற எண்ணற்ற பெரியார் தொண்டர்களில் ஒரு சில அறிவுமிக்க (?) அறிவாளிகள் தான் இந்தக் குறுநூலை வெளியிட்டுள்ளனர். இந்த நூலை (மொழித்தொல்லை) வெளியிட இப்போது அவர்கட்கு என்ன தேவை வந்ததோ தெரியவில்லை.

பெரியாரின் எண்ணற்ற - குமுக விழிப்புணர்வுக் கருத்துகளில் - தமிழர் இனமீட்புக் கருத்துகளில் - மூடத்தன ஒழிப்பு - சாதிமறுப்பு - பெண்ணிய மீட்புக் கருத்துகளில் பல்லாயிரம் பல்லாயிரம் என எத்தனையோ இருக்க, அவற்றுள் மொழி பற்றி அவர் ஏதோ ஓர் காலத்தில் - ஏதோ ஓர் சூழலில் கூறியவற்றை - அவரின் நூல்களிலிருந்தே எடுத்து, வெட்டி வெட்டி, அவற்றையெல்லாம் ஒட்டி ஒட்டி, அதனையே **மொழித்தொல்லை** நூலாக்கி, உலவவிட்டுள்ளார்கள்.

தமிழரின் - தமிழினத்தின் அனைத்துவகைச் சிக்கல்களுக்கும் இன்று தெருவில் வந்து கொடிபிடித்துப் போராடும் **திராவிடத் தமிழ்த் தோழர்களுள் சிலர்** தான் இதையும் வெளியிட்ட தோழர்கள்.

பெரியார் சொன்னவற்றையெல்லாம் முழுமையாகப் புரிந்தவர்களென்றால் இப்படியெல்லாம் தொகுக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

நம் குடும்பங்களில் "தாம் பெற்ற பிள்ளைகளில் ஒரு பிள்ளை - தன் கவனக் குறைவாலோ, அறிவுக் கலக்கத்தினாலோ, நெறியற்ற பிறரின் கூட்டு நட்பாலோ ஏதோ சிறிது தவறு செய்துவிட்டால், அப்பிள்ளையை அத்தந்தை, "நீ உருப்பட மாட்டாய் ; நீ திருந்த மாட்டாய் ; நீ விளங்க மாட்டாய் ; எப்படியோ போ!" என்று எப்போதாவது சினத்தின் மிகுதியால் திட்டுவதைக் கண்டிருக்கிறோம் ; கேட்டிருக்கிறோம் ; ஏன் நம்முடைய இல்லங்களிலும் இது நடந்திருக்கும்.

அப்படித் திட்டுவதால் அப்பிள்ளை உண்மையிலேயே உருப்படாமல் போய்விடுவானா – போய்விடுவாளா ?

அல்லது அதே தந்தை அதே பிள்ளையைத் திருத்திடப் பாடுபடமாட்டாரா ? அல்லது அப்பிள்ளையே திருந்திபிறகு மீண்டும் அதே வசவுகளுடன் – திட்டுகளுடன் அப்பிள்ளையை – அத்தந்தை நடத்துவாரா ? இல்லை, அப்பிள்ளையை ஒதுக்கியே வைத்திடுவாரா...? கூறுங்கள்.

அப்படித்தான் – தந்தை பெரியார் அவர்கள், மொழியைப் பற்றி – தமிழைப் பற்றிக் கூறியுள்ள கருத்துகள். இதையேன் இத்தோழர்கள் புரிந்திடவில்லை என்பது மிகவும் வேடிக்கையாக உள்ளது.

**பெரியாரே சொல்லியுள்ளார் : என் கருத்துகளை – என் கொள்கை விளக்கங்களை முழுக்க முழுக்க அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் நீங்களே சிந்தியுங்கள் ; எனக்குப் பின்வரும் காலங்களில் என் கருத்துகளே பிற்போக்குத்தனமாகப் போகும்படி, முற்போக்கானவர்கள் உருவாகலாம். கருத்து மாற்றங்கள் – கொள்கைப் புரட்சிகள் உருவாகலாம் என்று. ஆதலால் காலத்திற்கேற்ப உங்கள் கருத்துகளை – சிந்தனைகளைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிச் சென்ற மாமாந்தர் தந்தை பெரியார்**.

அது மட்டுமின்றி, தமிழைப் பற்றியும் தமிழ்மொழியின் சிறப்பையும் அதை முறைப்படுத்தாமல் போனதால் தமிழர் ஏற்ற இழிவையும் தமிழில் வடமொழிக் கலப்பால் வந்த கொடுமையையும் பற்றி அதே பெரியார் தான் எழுதியுள்ளனர். இது ஏன் **மொழித்தொல்லை** – வெளியிட்ட தோழர்களின் கண்களுக்குத் தெரியவில்லை. இதை ஏன் அவர்கள் அக் குறுநூலில் வெளியிடவில்லை ?

இவர்களில் பலருக்கு மொழியையும் மொழிப் பற்றுள்ளோரையும் பிடிக்காது போலும் ; அதனால் தான் பெரியாரின் மொழிக் கொள்கை – தமிழுக்கு எதிரானதாக – இவர்கள் தொகுத்துள்ள நூல்வழியே காட்டுகின்றனர் என்றே எண்ணிடத் தோன்றுகிறது. இது என்ன ஞாயம் ? சரியான – நடுநிலையாளர்கள் என்றால் பெரியார் சொன்ன – மொழி பற்றிய கருத்துகளைத் துலைத் தட்டுகள் போல் இருபக்கக் கருத்துகளையும் அல்லவா எடுத்துத் தொகுத்துப் போட

வேண்டும். அதைவிட்டுவிட்டு, "தமிழ் மொழியால் பயனில்லை - தமிழ்ப்புலவர்கள் சோம்பேறிகள்" என்பன போன்ற, தமிழ் மொழிமேல் (தன் பிள்ளை மேல்) சினங்கொண்ட நேரத்தில் பெரியார் சொன்னதை மட்டும் எடுத்துப் போடுதல் என்ன ஞாயம் - எப்படிச் சரியாகும் ? தமிழை உயர்த்தி - வாழ்த்திச் சொன்னதையுமல்லவா அதனுடன் அச்சிட்டிருக்க வேண்டும் ?

"ஒரு மொழியழிந்தால் அதன் இனமழியும்" என்பது மேலைநாட்டு அறிஞரின் கூற்று. நம் தோழர்கள் தமிழரின் இனம் மீட்க, தமிழரின் நாடு மீட்கப் போராடுகின்றனர். அத்தகைய இனத்திற்கு அடிப்படையே மொழிதானே. அப்போ மொழி வேண்டாம். இனம் மட்டும் மீட்கப்பட வேண்டுமென்றால் எப்படி இயலும் ? மொழியில்லாமல் இனம் எப்படி மீளும் ?

ஏற்கெனவே, தமிழர் பலர் தந்தை பெரியார் தமிழ்மொழிக்கு எதிரானவர் - அவரால் தமிழுக்கு முன்னேற்றமில்லை என்றும் ஏன் - தமிழினத் தாழ்வுக்கும் அவர் காரணம் என்றும் எத்தனையோ வகையில் எழுதியும் பிதற்றியும் வருகின்றனர். இப்படியிருக்கையில் அவர்களுக்கெல்லாம் "வெறும் வாயில் மெல்லுவோர்க்கு அவல் கொடுத்தாற் போல்" இப்படியோர் **மொழித்தொல்லை - நூல்** கொடுத்தால் எப்படியிருக்கும் ? அவர்கள் இன்னும் எப்படியெல்லாம் பெரியாரைப் பகடி செய்வர் - இழிவுபடுத்த முயல்வர் தெரியுமா ?

**இந்த நூலை - இப்போது வெளியிட வேண்டிய தேவை என்ன வந்தது ? அதுவும் இப்படித் தொகுத்து வெளியிட என்ன கட்டாயம் ?**

இப்போது பெரியார் உயிருடன் இருந்திருந்தால் இதைச் சொல்லியிருப்பாரா ? அல்லது 60 ஆண்டுக்கு முன் தான் சொன்னதை இன்று மீண்டும் புதுப்பித்து, நூலாக்கி வெளியிட்டிருப்பாரா ? சற்று சிந்தியுங்கள் தோழரே !

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு."**

என்னும் குறள், திருக்குறளிலேயே பெரியாரை மிகவும் கவர்ந்த குறள். அவர்தம் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பிடத் தொடக்க வரிகளாக அமைந்த குறள். இதை அத்தோழர்கள் அறிந்திடவில்லையா ?

ஏன்... பெரியாரின் குடியரசு நாளேட்டில் ஒவ்வொரு நாளும் திருக்குறளை வெளியிட்டுத்தான் பிற உரைகளை - கருத்துகளை எழுதியுள்ளார். மேலும், திருக்குறளுக்கு மாநாடு நடத்திய பெருமைக்கும் உரியவரல்லவா நம் பெரியார் ? இதையும் அத்தோழர்கள் அறிந்திடவில்லையா ?

தமிழர் ஒவ்வொருவருக்கும் பகுத்தறிவு எவ்வளவு இன்றியமையாததோ அதே அளவிற்கு மொழி மானமும் - மொழியுணர்வும் - மொழிப் பற்றும் மிக மிக இன்றியமையாதவை.

சொல்லப்போனால் மொழியும் பகுத்தறிவும் மாந்தனுக்கு இரண்டு கண்களைப் போன்றவை.

தந்தை பெரியார் இன்றிருந்தால் கூட இதையே வலியுறுத்தியிருப்பார்.

வெறும் மேடைப் பேச்சாகவும் மக்களை ஏய்க்கும் அரசியலாளரின் அடுக்குமொழி உரையாடல்களாகவும் உள்ள பல ஏமாற்றாளரின் மொழிநடையை வேண்டுமானால் அவர் பகடி செய்திருக்கலாம். ஆனால், உண்மையான தாய்மொழியுணர்வுள்ளவனாக ஒவ்வொரு தமிழனும் இருந்திருந்தால் தந்தை பெரியார் கண்ட பகுத்தறிவுக் கனவை - தமிழின மீட்பு முன்னேற்றக் கனவை என்றோ நாம் நனவாக்கியிருக்கலாம். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

“புலவர்களைப், பொய்யர்கள்” என்றாராம் தந்தை பெரியார். ஆனால், எல்லாரையும் அவர் அப்படிக் குறிப்பிடவில்லை. தமிழை வெறும் இலக்கண இலக்கிய மொழியாக மட்டும் வைத்திருந்து, தமிழ்ச் செய்யுள்களை ஆய்ந்து ஆய்ந்து, அதற்குள்ளேயே குண்டுச் சட்டியில் குதிரையோட்டி, தமிழை அதற்குமேலுள்ள நிலைக்கு உயர்த்தப் பாடுபடாமல், அதன் மூலம் பிழைப்பு நடத்திய புலவர்களையே அவர் அப்படிக் குறிப்பிட்டிக்கிறார்.

பெரியாரின் வாழ்நாள் இறுதிக் காலங்களில், பெரியாருடனே இருந்த மதிப்பிற்குரிய பொறிஞர் **திரு.கு.ம.மருதநாடன் ஐயா** அவர்கள் போன்றோரெல்லாம் எங்களுடனான ஒவ்வொரு சந்திப்பிலும் இவற்றை எங்களிடம் கூறுவார். அவரும் புலவர் தானே ? இவரும் புலவர் குழந்தை போன்ற புலவரெல்லாம் தந்தை பெரியாரின் சிந்தனைகளை - முற்போக்குக் கருத்துகளைத் தமிழரிடத்தில் எந்த

மொழியில் கொண்டு சென்றனர் ? தம் தாய்மொழியான தமிழில் தானே?

ஏன், இன்று காசுக்காகவும் விளம்பரத்திற்காகவும், பொருள் – புகழ் தேடியும் மூடத்தனங்கள் பலவற்றைத் தம் எழுத்துகளில் பரப்பி, பகுத்தறிவோடு மொழியையும் குழிதோண்டிப் புதைக்கும் பாவலர்கள் – புலவர்களுக்கு நடுவில், பெரியாரின் கொள்கைகளை – பெரியாரின் முற்போக்குச் சிந்தனைகளை – மூடத்தன எதிர்ப்பைத் தம் பாடல்கள் வழி – கட்டுரைகள் வழி மக்களுக்குக் கொண்டு செல்லும் புலவர்கள் – பாவலர்கள் தோன்றவில்லையா ?

இவர்களையெல்லாம் பார்க்க இன்று பெரியார் இருந்திருந்தால் அப்படிக் கூறியிருப்பாரா ?

ஏன், என்னுடைய பா நூல்களிலெல்லாம் பகுத்தறிவையும் பெரியாரையும் முன்னிறுத்திப் பாட்டெழுதியுள்ளேன் என்று என் நூல்களை விற்பனை செய்துதர எந்தப் புத்தகக் கடைகளும் எடுத்துக் கொள்ளவில்லை – வாங்கியவுடன் ஒரு சில பக்கங்களைப் பார்த்தவுடனே இவற்றை எங்கள் கடையில் விற்பனைக்கு வைக்க முடியாதெனத் திருப்பித் தந்துவிட்டனர். என்போன்று இன்றுள்ள இளைஞர்களைப் பாவலர்களாக – புலவர்களாகக் கண்டால் பெரியார், "புலவர்களே பொய்யர்கள்" என்று கூறுவாரா ?

அன்றிருந்த சூழ்நிலையில் தமிழைக் கடவுளுக்காக மட்டுமே – கடவுள் புகழ் பாடும் இறைப் பாட்டாகவும் சோறுபோட்டுப் பரிசில் வழங்கும் அரசனையும் அரசையும் மட்டுமே புகழ்ப்பாட்டாகவும் கற்பனைகள் கலந்து, பாடிக் குவித்த புலவர்களைப் பார்த்து, அதனால் தமிழுக்கும் தமிழருக்கும் என்ன வளர்ச்சி – முன்னேற்றம் வந்தது என அவர் கேட்டிருக்கலாம்.

இப்படி என்றோ ஒருமுறை அவர் சொன்ன எல்லாவற்றையும் இன்றைய குமுகத்திற்குள் பொருத்திப்பார்ப்பதென்பது முறையாகுமா – சரியாகுமா ?

அன்று ஏட்டில் இருந்த தமிழ் இன்று இணையத்தில் ஏறிவிட்டதல்லவா ? எம்போன்ற எத்தனையோ பகுத்தறிவுப் பாவலர்கள் தோன்றி, மொழிவழியே பெரியாரின் கருத்துகளையும் குமுகப் புரட்சிகளையும் பரப்பி வருகின்றனரே... அவர்களுடைய மொழியும் இத்தோழர்களின் பார்வையில் "மொழித்தொல்லை" தானா ?

ஆரியப் பார்ப்பனர்களை இனம் வழியே நம் எதிரிகள் என எண்ணும் நாம், மொழி வழியேயும் மிகக் கடுமையான எதிரிகள் என்றே எண்ண வேண்டுமல்லவா ?

ஆடு பகை ; குட்டி உறவு என்பது போல் ஆரியன் வேண்டாம் – ஆனால் அவன் மொழியை மட்டும் ஏற்றுக்கொள்ளலாம் என்பதில் என்ன ஞாயமிருக்கிறது ? அப்படித்தானே இருக்கிறது இந்தக் குறுநூல் தொகுப்பும் ?

எனவே, தோழர்களே அருள்கூர்ந்து சிந்தியுங்கள் ! (நான் சொல்லவில்லை) இதுவும் தந்தை பெரியார் சொன்னதுதான்.

இப்போதிருக்கும் இன்றைய மொழிச்சூழலில் – தமிழுக்கும் தமிழ்வழிக் கல்விக்கும் சிறு இடரல்ல – பேரிடர் நேர்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இதுபோன்ற **மொழித்தொல்லை** நூல்களெல்லாம் தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் !

**தோழர்களே ! நீங்கள் “மொழித்தொல்லை” –என்று தொகுத்த நூலுக்குக் குறிப்பெடுத்த அதே நம் பெரியாரின் கருத்துத் தொகுப்பிலிருந்து, நான் மொழிக்குச் சார்பான கருத்துகளை எடுத்துத் தந்திருக்கிறேன் – படியுங்கள் பின்வருமாறு :**

“மொழி என்பது பற்றிப் பேச, சிறிதும் அதற்கான அறிவோ, ஆராய்ச்சியோ, ஆற்றலோ அற்ற நான், மொழி என்பது குறித்துப் பேசத் துணிந்தது, மொழி மெய்மத்திலுள்ள (தத்துவத்திலுள்ள ) என்னுடைய ஆசை மிகுதியின் பொருட்டேயாகும். நான் கூறப்போகும் மெய்மங்களை இலக்கண, இலக்கியச் சான்றுகளுடன் விளக்குவது என்பது எனது தகுதிக்கு மேற்பட்ட செயலாகும். அதற்கு வேண்டிய இலக்கண, இலக்கியங்களின் படிப்பினையோ ஆராய்ச்சியோ எனக்கில்லை. ஆராய்ச்சியாளர் மேற்கோள்களையும் என்னால் காட்ட இயலாது. எனக்குத் தோன்றிய, என் துய்ப்புக்கு ( அனுபவத்துக்கு ) எட்டிய செய்திகளைத் தான் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லப் போகிறேன். அவற்றில் பெரும்பாலும், உங்களுக்குக் குற்றமாகப்படலாம். ஆகவே, நான் கூறுவதை நீங்களும் உங்கள் அறிவையும் படிப்பினையையும் மற்றும் இதில் துய்ப்பும் ஆராய்ச்சியும் உள்ள பெரியோர்களின் கருத்தையும் கொண்டு சிந்தித்துப் பார்த்து, ஏற்கக் கூடியதை ஏற்றும் ஏற்கக் கூடாததைத் தள்ளியும் தெளிவு பெற வேண்டுகிறேன். (இவ் வரிகளைக் கட்டாயம் கூர்ந்து படிக்க வேண்டும், தோழர்களே !)”

"ஒரு மொழியை எவ்வளவுக்கெவ்வளவு எளிதாகக் கற்றுக் கொள்ள முடிகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது வளர்ச்சியடைவதும் எளிதாகிறது". **(-தந்தை பெரியார், மொழி-எழுத்து, 1936)**

"நம் தகைமைசால் தமிழைப் பற்றிச் சற்று விரிவாக ஆராய்ந்து பார்ப்போம்.

தமிழ் என்றால் என்ன ? மக்களா ? நாடா ? மொழியா ? நாட்டைப் பொறுத்து, மக்களைப் பொறுத்து - மொழிக்குத் தமிழ் என்கின்ற பேர் வந்ததா ? அல்லது மொழியைப் பொறுத்து நாட்டுக்கும் மக்களுக்கும் தமிழகம், தமிழ்நாடு, தமிழர் என்கின்ற பேர் வந்ததா ? என்ற கேள்விகள் தமிழைப் பொறுத்தவரை வித்து முந்தியதா ? மரம் முந்தியதா ? என்ற தருக்கத்தைப் போன்றதாகவே எனக்குத் தோன்றுகின்றன. எப்படி இருந்தாலும் தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி என்று மூன்று பண்டங்கள் இருக்கின்றன. இந்த மூன்றையும் முதல் பொருளாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், தமிழ், தமிழ்நாடு, தமிழ்மொழி என்கின்ற சொற்களைக் காண்பதற்கு முன்பிருந்தே, இவற்றைக் காணாதவர்களிடமிருந்து இந்த மூன்றையும் குறிக்கும்படியாக திராவிடம், திராவிடர், திராவிடமொழி என்பதாகச் சொற்கள் இருந்து வந்ததையும் வருவதையும் பார்க்கிறோம். தமிழ்மொழியும் அதன் சிதைவுகள் என்று சொல்லப்படும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளும், மக்களும் நாடுகளும் கூடத் தமிழைச் சேர்ந்ததே என்றும் அந்தக் கருத்தைக் கொண்டே **திராவிடம்** என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது என்றும் அகராதிகளும் ஆராய்ச்சி உரைகளும் கூறுகின்றன. நாட்டிலும் இதை வெகுகாலமாகவே ஒப்புக் கொண்டு வழக்கத்திலும் கொண்டு வந்திருக்கிறோம்.

வடமொழிச் சான்றுகளான இலக்கியம், பனுவல்கள் ( புராணம் ) ஆகியவற்றிலும் திராவிடர், திராவிடம் என்ற சொற்கள் தமிழ்மொழியையும் நாட்டையும் மக்களையும் குறிக்கப் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தேச வரலாறுகளிலும் திராவிடர், திராவிடம் என்ற சொற்கள் தமிழர், தமிழ்நாடு என்பவற்றிற்கு மாற்றாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறதைக் காண்கிறோம். ஆனால், தெலுங்கு நாட்டாராகிய ஆந்திரர்களும் கன்னட நாட்டாராகிய கன்னடியர்களும் மலையாள

நாட்டாராகிய மலையாளிகளும் இதை ஒப்புக் கொள்ளத் தயங்குகிறார்கள். தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பதுபோல் – தமிழும் ஒரு மொழி என்றுதான் சொல்கிறார்களே ஒழிய, இவை யாவும் தமிழ் தான் என்பதை ஒப்புக் கொள்ள வெட்கப் படுகிறார்கள். சிலர் மறுக்கவும் செய்கிறார்கள். காரணம், அவர்களது மொழிகளில் ஆரியச் சொற்கள் பெரும்பான்மையாகக் கலந்துவிட்டன. ஆதியில் ஒரே கூட்டமாக வாழ்ந்த திராவிட மக்கள், இட நெருக்கத்தால் பல பிரிவுகளாகப் பிரிந்து சென்று ஆங்காங்கு கூடிவாழவும் அந்த இடத்தின் தட்பவெப்ப (சீதோசண) நிலைக்கு ஏற்ப அவர்களின் மொழியில் சில நீட்டலும் குறுக்கலும் ஏற்படவும் அக்காலத்திய போக்குவரத்து வாய்ப்புக் குறைவு காரணமாக ஒரு பகுதிக்கும் மற்றோர் பகுதிக்கும் தொடர்பில்லாமல் போனதால், நாளடைவில் அந்தந்த இடத்தில் வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்கள் தம் மொழிக்குக் கடவுள் பேரால் பல சிறப்புகளை ( மகத்துவங்களை ) எடுத்துக்கூறி, அந்தந்தப் பகுதி மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வடமொழியை அதிகமாகப் பயன்படுத்தும்படி செய்து, அதன் மூலம் தம் கலை, பண்பாடு ( ஆச்சார, அனுட்டானம் ) ஆகியவற்றைப் புகுத்திவிட்டனர். அந்த வடமொழிக் கலப்புக் காரணமாகவும் அந்தப் பண்புகளினால் ஏற்பட்ட பற்றுதல் காரணமாகவும் அந்தந்த மக்களுக்குத் தம் மொழி தமிழ் அல்லாத வேறு மொழியாகும் என்ற கருத்தும் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், என் சிற்றறிவிற்கு, என் துய்ப்புக்கு, ஆராய்ச்சிக்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் தனித்தனி மொழிகளென்றோ அல்லது தமிழ் தவிர மற்ற மூன்றும் தமிழிலிருந்து பிரிந்த மொழிகளென்றோ தோன்றவில்லை. ஒரே மொழி – அதாவது தமிழ்தான் நான்கு இடங்களில் நான்கு வகையாகப் பேசப்பட்டு வருகிறது என்றே நான் கருதுகிறேன்."

"நான்கு மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற அறிஞர்களைக் கொண்டு, அந்தந்த மொழியிலுள்ள வடமொழிச் சொற்கள் அத்தனையையும் நீக்கிவிட்டுப் பார்த்தால், எஞ்சி நிற்கும் சொற்கள் அத்தனையும் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களாகவே இருக்குமென்று என்னால் அறுதியிட்டுக் கூறமுடியும் ; அகராதி கொண்டு மெய்ப்பிக்கவும் முடியும். தெலுங்கு வைணவர்கள் அண்மைக் காலம் வரை தமிழ்

ஒலியில் தான் நாலாயிரப் பிரபந்தத்தையும் திருப்பாவையையும் தெலுங்கு எழுத்தில் படித்துப் பாடி வந்திருக்கின்றனர். அந்தப் புத்தகங்கள் தெலுங்கெழுத்தில் தமிழ் ஒலியில் தான் அச்சிடப்பட்டிருக்கின்றன. கன்னடியர்களுக்கும் மலையாளிகளுக்கும் முதல் நூலே கிடையாது. வடநாட்டு ஆதிக்கமும் வடமொழி ஈர்ப்பும் ( மோகமும் ) குறையக் குறைய ஆந்திரர்களும் மலையாளிகளும் கன்னடியர்களும் தம் தாய்மொழி தமிழ்தான் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்துகொள்வார்கள் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. அந்தந்த மொழி வல்லுநர்கள், புலவர்கள் ( பண்டிதர்கள் ) சிலர் இன்று ஓரளவு இந்த உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்பது நமக்கு மேலும் நம் கருத்துக்கு வலிமை ஊட்டுகிறது. இத்தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்த ஒரு பெரிய இயக்கத்தை நான் நடத்தினேன். அதாவது, தமிழ்மொழி தாய்மொழியாக உள்ள இந்நாட்டில், இந்தியைப் புகுத்தக் கூடாது என்று கிளர்ச்சி செய்தேன்."

**"தமிழ், இந்நாட்டுத் தட்பவெப்ப நிலைக்கேற்ப அமைந்துள்ளது. இந்திய நாட்டுப் பிற எம்மொழியையும் விடத் தமிழ் நாகரிகம் பெற்று விளங்குகிறது. தூய தமிழ் பேசுவதால் – மற்ற வேற்றுமொழிச் சொற்களை நீக்கிப் பேசுவதால் நம்மிடையேயுள்ள இழிவுகள் நீங்குவதோடு, மேலும் மேலும் நன்மையடைவோம் என்பதோடு, நம் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப நம் மொழி அமைந்திருக்கிறது. வேறு மொழியைப் புகுத்திக் கொள்வதன் மூலம் நம் அமைப்புக் கெடுவதோடு, அம் மொழியமைப்பிலுள்ள நம் நலனுக்குப் புறம்பான கருத்துகள், கேடுபயக்கும் கருத்துகள் நம்மிடைப் புகுந்து, நம்மை இழிவடையச் செய்கின்றன என்பதால் தான்."**

"வடமொழியில் நம்மை மேலும் மேலும் அடிமையாக்கும் தன்மை அமைந்திருப்பதால் தான் அதையும் கூடாதென்கிறேன்."

"நமது மேன்மைக்கு, நமது தகுதிக்கு, நமது முற்போக்குக்கு ஏற்ற மொழி, தமிழைவிட மேலான ஒரு மொழி இந் நாட்டிலில்லை என்பதற்காகவே தமிழை விரும்புகிறேனே தவிர, அது அற்புத அதிசயங்களை விளைவிக்கக் கூடியது என்பதற்காக அல்ல."

"அற்புத சக்திகள் நிறைந்த மொழி என்று பிடிவாதம்

செய்வது அறியாமைதான். அது தமிழ்ப் பண்பும் அல்ல. தமிழில் அதிசயம், மந்திரம், சக்தி முதலிய சொற்களே இல்லை."

"தமிழ்மொழியின் வடமொழித் தொடர்பால் நமக்கேற்பட்டுள்ள – ஏற்படப் போகும் கெடுதல்களைப் பார்ப்போம். நம்மிடையேயுள்ள சாதிச் சிக்கலை எடுத்துக் கொள்வோம். சாதி என்ற வடமொழிச் சொல்லைத் தமிழிலிருந்து எடுத்துவிட்டால் அதற்குச் சரியான தமிழ்ச் சொல் ஒன்று கூறுங்களேன் ! புலவர்கள் தான் கூறட்டுமே, சொல்லே இல்லையே ! ஆதலால், நம் மக்களிடையே ஆதியில் சாதிப் பிரிவினை இல்லை என்பதும் இது வடநாட்டுத் தொடர்பால் தான் ஏற்பட்டது என்பதும் தெரிகிறதா இல்லையா ? அந்தச் சொல்லே இல்லாவிட்டால் சாதி உணர்ச்சி அற்றுப் போகுமா இல்லையா ? கூறுங்களேன். இதேபோல் திவசம், திதி, கல்யாணம், வைகுந்தம், சொர்க்கம், மோட்சம், நரகம், சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சிய என்ற இச் சொற்கள் தமிழா? வடமொழியா? இச் சொற்களின் தொடர்பால் நம் அறிவு தெளிந்ததா ? இருந்த அறிவும் போனதா ? சிந்தித்துப் பாருங்கள்."

"தாரா முகூர்த்தம், கன்னிகாதானம் என்ற பேர்கள் வந்த பிறகுதானே நம் பெண்கள் கணவனின் கைப்பொம்மைகள் ஆனார்கள் ? கன்னிகாதானம் என்பதற்குத் தமிழ்ச் சொல் ஒன்று கண்டுபிடியுங்களேன்."

"**திருவள்ளுவர் வாழ்க்கைத் துணை என்றுதானே கூறுகிறார். அதாவது கணவனும் மனைவியும் நண்பர்கள் என்றுதானே அதற்குப் பொருள்.** எவ்வளவு கருத்து வேறுபாடு பாருங்கள். மோட்சம் என்பதற்குத் தமிழில் சொல் ஏது ? மோட்சத்தை நாடி எத்தனை தமிழர் காலத்தையும் கருத்தையும் பொருளையும் வீணாக்குகிறார்கள், கவனியுங்கள். மதம் என்பதற்குத் தமிழில் மொழியேது ? மதம் என்ற சொல்லால் ஏற்பட்டதுதானே மதவெறி ! நெறி – கோள் – என்றால் – வெறி ஏது ?"

"தமிழ்நாட்டு மக்களின் வழக்கங்கள் யாவும் பெரிதும் ஆண், பெண் இருபாலார்க்கும் சம உரிமை என்ற அடிப்படையின் மீதும் பகுத்தறிவு என்ற அடிப்படையின் மீதும் அமைந்திருக்கக் காண்கிறோம்."

**"நம் நாட்டுத் தட்பவெப்ப நிலையைப் பொறுத்தும் கருத்துகளின் செழுமையைப் பொறுத்தும் நமக்குத் தமிழ்தான் உயர்ந்த மொழியாகும். வடநாட்டானுடைய ஆச்சாரங்கள், தருமங்கள், ஆசாபாசங்கள் முற்றிலும் நமக்கு மாறுபட்டவை. அவற்றிற்கேற்ப அமைக்கப்பட்டுள்ள அவர்களின் மொழி, அவர்களுக்குத் தாழ்வானதாகவும் தோன்றுவது இயல்பு. ஆனால், நாமும் அவர்கள் போல் நம் மொழியை மட்டம் என்று கருதிவிடலாமா ? அப்படிக் கருதி, வடமொழியை ஆதரிக்கப் புகுந்ததுதானே நாம் பல மூட நம்பிக்கைகளுக்கும் பல இழிவுகளுக்கும் ஆட்பட்டுத் தவிக்கிறோம்."**

**"தமிழும் ஒரு காலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. இன்று அது வடமொழிக் கலப்பால் இடதுகை போல் பிற்படுத்தப்பட்டுவிட்டது. இந்நோய்க்கு முதன்மைக் காரணம், மதச்சார்புடையோரிடம் தமிழ்மொழி சிக்கிக் கொண்டதுதான். மதத்திற்கும் சான்றாகயிருந்து வருவனவெல்லாம் வடமொழி நூல்களே ஒழிய, தமிழ்மொழி நூல்களில் இப்போது நம்நாட்டில் இருந்துவரும் மதத்திற்கு எவ்வகைச் சான்றும் இல்லையென்பது இங்குக் கவனிக்கத்தக்கது."**

"தமிழில் ஆரியம் புகுந்ததால்தான், மற்ற மக்களெல்லாம் காட்டுவிலங்காண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கப்பலோட்டி வாணிகம் நடத்திய தமிழர் மரபில் – இன்று, ஒரு நியூட்டன் தோன்ற முடியவில்லை ; ஒரு எடிசன் தோன்ற முடியவில்லை ; ஒரு மார்க்கோனி தோன்ற முடியவில்லை என்பதை அறிந்துகொள்ள வேண்டும். பழமையிலுள்ள ஈர்ப்பை முதலில் விட்டொழிக்க வேண்டும். தமிழைப் புதுமொழியாக்க அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டும்."

**"கலைச்சொல் உருவாக்கக் குழு கண்டுபிடித்துள்ள சொற்களைப் பாருங்கள்...** Electrolysis, Hydrogen, Disinfectant **என்பவற்றிற்கு, முறையே வித்யுக்தி – யோகம் – ஆப்ஜனகம் – பூதிநாசினி என்று புது சொற்களைத் தோற்றுவித்துள்ளனர். இதைவிட சென்னைத் தமிழ்ச் சங்கத்தார் கண்டுபிடித்துள்ள, முறையே மின்பருக்கை – நீரகம் – நச்சு நீக்கி என்ற சொற்களே சிறந்தனவாக இருக்கின்றன. காரணம் சென்னைத் தமிழ்ச் சங்கத்தாருக்குள்ள தமிழ்ப்பற்று, கலைச்சொல் உருவாக்கக் குழுவினருக்கு இல்லாமற் போனதுதான்."**

**“தமிழ் ஒன்றுதான் இன்றுவரைக்கும் வடமொழிக் கலப்பை ஓரளவுக்காவது எதிர்த்து வந்திருக்கிறது. வேற்றுமொழிக் கலப்பின்றித் தனித்துச் சிறப்புடன் வாழக்கூடிய தன்மையைத் தமிழ் பெற்றிருக்கிறதென்று மேனாட்டு மொழிவல்லுநர்களே எடுத்துக்காட்டியுள்ளார்கள்.”**

**“தனித்தமிழ்க் கட்டுரைகள்**

இப்பெயர் கொண்ட பொத்தகமொன்று வரப்பெற்றோம். இஃது பல்லாவரம், வித்தியோதயா மகளிர் கல்லூரியின் தமிழாசிரியர் திருமதி.நாகை நீலாம்பிகை அம்மையாரால் எழுதப்பட்டது. தமிழ்மொழியின் வளர்ச்சி நாளுக்குநாள் குறைந்துகொண்டு வரும் இக்காலத்தில் வடமொழி கலவாது, தனித்தமிழில் கட்டுரைகள் வரையப்பட்டு, அதுவும் ஓர் புத்தக வடிவமாக வெளிவந்திருப்பது தமிழுலகுக்கு ஓர் நல்விருந்தென்றே கூறுவோம். **இத்தகைய புத்தகங்களே தமிழ் வளர்ச்சிக்கு உற்ற கருவிகளாகும்.** நமக்கு அனுப்பப்பட்டுள்ள இப்புத்தகத்தின்கண் வடமொழிச் சொற்கள் எங்கணும் கண்டோமில்லை. அதன் அருமை பெருமையை நன்கு விளக்குவான் வேண்டி, **தமிழில் வடமொழி கலத்தல் ஆகாது** என்னும் கட்டுரையை இதனடியில் வெளியிட்டிருக்கின்றோம். இப்புத்தகத்தின் விலை ஒரு உருவா நான்கணாவாகும். இத்தகைய பல புத்தகங்களை இவர் வெளியிடவேண்டும்.” **( –தந்தை பெரியார் குடிஅரசு இதழில் – 31.01.1926** அன்று எழுதிய நூல்மதிப்புரை.)

இவையெல்லாம் பெரியாரின் தமிழ்மொழிக் கொள்கைக்குச் சான்றில்லையா ?

ஆங்கிலம் முதலான பிறமொழிகளைக் கற்றல் என்பதும் தெரிந்துகொள்ளுதல் என்பதும் தேவைதான் – அதை நாம் மறுக்கவில்லை. அனைத்து மொழிகளையும் கற்றறிந்ததால் தான் தேவநேயப் பாவாணர் **மொழிஞாயிறு** ஆனார். அவற்றைக் கற்றதால் தான் தமிழ் அனைத்து மொழிகளின் தாய் என்பதை அறுதியிட்டு உரைத்தார். அதையே மேல்நாட்டு மொழியியல் வல்லுநர்களும் மொழிந்தனர். இன்றுவரை அவர்கருத்தை மறுப்பதற்கிடமில்லை. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பக்கத்துவீட்டு அம்மாவை மதிப்பது என்பது தவறல்ல ;

நம்மைப் பெற்ற அம்மாவைப் புறந்தள்ளிவிட்டு, ஒதுக்கிவிட்டு, இழிவு செய்துவிட்டு, தூக்கியெறிந்து விட்டுப் பக்கத்து வீட்டு அம்மாவை உயர்வென்று சொல்வதுதான் தவறென்று சொல்கிறோம்.

"தமிழ்ப் பைத்தியத்தை விட்டொழியுங்கள்.." என்று அன்று பெரியார் கூறியுள்ளதாகத் தோழர்கள் இன்று இந்நூலில் கொடுத்துள்ளனர். ஆனால், பெரியார் இன்றிருந்தால் "தமிழன் உருப்பட வேண்டுமென்றால் தமிழ் மொழியைப் படிக்க வேண்டும் ; எதையும் தமிழ் மொழியில் படிக்க வேண்டும்" என்றுதான் சொல்லியிருப்பார்.

இந்த ஆய்வு இத்துடன் நில்லாமல் பொறிஞர் **கு.ம.மருதநாடன் ஐயா** அவர்களும் **பெரியாரும் பெருந்தமிழும்** என்னும் தலைப்பில் புலவர் **பெ.சயராமன் ஐயா** ( முன்னாள் மாவட்டக் கல்வியலுவலர் ) அவர்களும் தத்தம் பார்வையில் தந்தை பெரியாரின் தமிழ்மொழி பற்றிய கருத்துகளை மிக விரிவான பார்வையில் ஆழ்ந்து நோக்கி எழுதும் கருத்துகளை நாங்களே வெளியிடவுள்ளோம்.

பெரியாரின் எதிரிகள் மட்டுமல்ல – பெரியாரின் கொள்கை பரப்பும் பெரியார் தொண்டர்களுமே பெரியாரைப் புரிந்துகொள்ளும் படியான நூல்கள் விரைவில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியாரைப் பேசுகின்றோம் ;
பெரியாரை வாழ்த்துகின்றோம் ;
பீடுதாங்கப் பெரியாரைப் பாடுகின்றோம் ;
பெரியார் நூல் கற்கின்றோம் – பீற்றிக் கொள்வோம் !
உரியாரைப் போற்றுவதின்
அவருரைத்த பலவற்றுள் ஒன்றையேனும்
"**சரியாக**"க் கடைப்பிடித்தால்
அடடா இத் தமிழ்நாடும்
சரியாதம்மா !

என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார், தந்தை பெரியார் பற்றி எழுதிய பாடல் வரிகளைச் சரியாகப் படித்துப் பார்ப்பவர்க்குப் புரியும். தந்தை பெரியாரின் கருத்துகளுள் ஒன்றைக் கடைப்பிடித்தாலும் அதனைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

# 7. அரசுப் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகள், அரசுப் பள்ளியில் படிக்கின்றனரா ?

நல்ல அறிவு வளர்ச்சிக்கும் நலமான வாழ்க்கைக்கும் தாய்மொழியான தமிழ்மொழி வழியே மழலையர்க்குக் கல்விபுகட்ட *மாங்கு மாங்கென்று* நாளெல்லாம் – ஊரெல்லாம் நாம் கருத்துப்பரப்பல் செய்தும் போராடியும் வருகின்றோம். எத்தனை அரசுகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் நிலையான – உறுதியான – மாறாத சட்டமாகத் தமிழ்வழிக் கல்விச் சட்டத்தை இயற்ற வக்கில்லாமல், இத்தமிழினம் அடிமைப்பட்ட இனமாகவே இத் தமிழகத்தில் வாழ்ந்து வருகிறது. தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்திட இனி அரசுகளையும் அரசியலாரையும் நம்பிப் பயனில்லை. என்னதான் சமச்சீர் கல்வி என்பது எல்லாப் பள்ளிகளிலும் செயற்படுத்தப் பட்டாலும் நம் தாய்மொழிவழிக் கல்வியை இன்னும் செயற்படுத்த முடியவில்லை.

தமிழராய்ப் பிறந்த ஒவ்வோர் மாந்தரும்தாம் தம் வீட்டிலிருந்தே இதனைத் தொடங்க வேண்டும். ஆனால், நம் தமிழர்கள் செய்யும் செயல் என்ன ?

தமிழ்வழிக் கல்வி கற்பிப்பதென்பது கண்டிப்பாக *மெட்ரிக்* எனப்படும் பதின்மப் பள்ளிகளிலோ ஆங்கிலப் பள்ளிகளிலோ இயலாது. காசுக்கு மாரடிக்கும் அவர்களிடையே அதனை நாம் எதிர்பார்க்க முடியாது. கல்வியையே கடைச் சரக்காக்கி – வணிகப் பொருளாக்கிக் கொள்ளையடிக்கும் அக்கூட்டத்திடம் தமிழ்வழிக் கல்வியை நம் பிள்ளைகள் பெற முடியாது.

ஆங்கிலவழிப் பள்ளிகளுக்கு மேலான தரத்துடனும் குறைவான கட்டண நெறிகளுடனும் நடைபெறுகின்ற – நம் தமிழார்வலர் பலர் நடத்துகின்ற தாய்த்தமிழ்ப் பள்ளிகளில் நாம் விரும்புகின்ற தாய்மொழிவழிக் கல்வியுடன் ஆங்கிலம் முதலான பிறமொழி அறிவும் சிந்தனை அறிவும் ஒழுக்க நெறியும் கட்டாயம் கிடைக்கின்றன. ஆனால், எல்லா ஊர்களிலும் எல்லாராலும் தாய்த்தமிழ்ப் பள்ளிகளை நடத்த முடிவதில்லை. அதற்கு அரசினரும் அரசியலாரும் ஆங்கிலப் பள்ளி உரிமையாளர்களும் தருகின்ற இடர்ப்பாடுகளும் தொல்லைகளும் எண்ணற்றவை.

இப்படியிருக்கையில் அரசே நடத்துகின்ற அரசு தொடக்க, நடுநிலை, மேனிலைப் பள்ளிகள் தான் எல்லா ஊர்களிலும் பல்கிப் பெருகி உள்ளன. ஆனால், அப் பள்ளிகளில் பயிலும் குழந்தையர் எல்லாரும் பொருளியலில் பின்தங்கியும் வறுமையில் உழன்றும் அன்றாடக் கூலித் தொழிலாளர்களாகவும் உள்ள தமிழர்களின் பிள்ளைகளே. மற்ற நடுத்தரக் குடும்பத்தினரோ அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் - பதவிகளில் பணிபுரிவோரோ தம் பிள்ளைகளை இந்த அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதில்லை.

இவர்களை விட அந்த அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களே தங்களின் பிள்ளைகளைத் தனியார் ( பதின்மப் ) பள்ளிகளில் தான் படிக்க வைக்கின்றனர்.

அரசுப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிலையான பணியும் அதன்மூலம் கைநிறைய ஊதியமும் பஞ்சப்படி, பயணப்படி, மருத்துவப்படி போன்ற பல்வேறு படிகள் - விடுமுறை வாய்ப்புகள் முதலான ஏந்துகளும் ( வசதிகளும் ) மட்டும் வேண்டும். ஆனால், அந்த அரசு தரும் கல்வி மட்டும் வேண்டாம். அதற்கு மட்டும் தனியார்ப் பள்ளிகள். இது என்ன ஞாயம் ?

பணம் இருப்பதாலும் பெருமளவு வருமானம் கிடைப்பதாலும் இவர்களால் தம் பிள்ளைகளைத் தனியார் பள்ளிகளில் கொள்ளைக் கட்டணம் கொடுத்துப் படிக்க வைக்க முடிகிறது. பணம் இல்லாத குடும்பத்தினரால் இது இயலுமா ? எப்படித் தனக்குப் பணிமட்டும் அரசுப் பள்ளியில் வேண்டும் என்று நினைக்கின்றனரோ அதே அரசுப் பள்ளியில் தங்கள் பிள்ளைகளையும் படிக்க வைக்க வேண்டும் என்பதையும் அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் தாய், தந்தை இருவரும் அரசுப் பள்ளியில் ஆசிரியராக இருந்துகொண்டு, அவர்களின் பிள்ளைகளைத் தனியார் பள்ளிகளில் பயிற்றுவிக்கின்றனர். இதைக் கேட்டால், அரசுப் பள்ளிகளில் நடத்தும் ஆசிரியர்களும் பாடங்களும் சரியில்லை என்பது அவர்களின் குற்றச்சாட்டு. ஏன் இவர்களும் அதே அரசுப் பள்ளி ஆசிரியர்கள் தானே ? இவர்களும் இவர்கள் நடத்தும் பாடங்களும் சரியாகவும் நேர்மையாகவும் இருந்தால் இவர்கள் பள்ளியிலேயே இவர்களின் பிள்ளைகளைச் சேர்த்து, இவர்களே கற்றுக்கொடுக்கலாமே...?

யார் பெற்ற பிள்ளைகளோ தம்மிடம் எப்படிப் படித்தால் என்ன, தம் பிள்ளைகள் பிற நல்ல பள்ளிகளில் – நல்ல ஆசிரியர்களிடம் படித்தால் போதும் என்ற தன்னலப் போக்குத்தானே...?

ஏன் இப்போதுதான் ஆங்கிலப் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகளிலும் பாடங்களும் பயிற்றுவித்தலும் வந்துவிட்டனவே... பிறகென்ன...?

ஒவ்வொருவரும் மற்றவரைக் குற்றம் சொல்வதை விட, தாம் சரியாக உள்ளோமா என்று பார்க்கின்றனரா ? பிறரைக் குற்றம் கூறும்முன் தம் பிள்ளைகளைத் தாங்கள் பணிபுரியும் அரசுப் பள்ளியில் படிக்க வைத்துத் தரமாகவும் நேர்மையாகவும் பயிற்றுவித்து முன்னேற்றலாமே...? இப்படி ஒவ்வோர் ஆசிரியரும் செய்தால் அரசுப் பள்ளிகளின் தரம் உயராமல் போகுமா ? இந்த ஆசிரியர்களைப் பார்த்துப் பிற பெற்றோர்களும் தம் பிள்ளைகளை அரசுப் பள்ளியில் சேர்ப்பார்கள் அல்லவா...? புற்றீசல்களாய்ப் பெருகியுள்ள ஆங்கில, பதின்மப் பள்ளிகளை மக்கள் அதன்பிறகு நாடுவார்களா ? அரசுப் பள்ளி ஆசிரியர்களே ! சற்றேனும் சிந்தியுங்கள்...!

எடுத்ததற்கெல்லாம் மக்கள்நலம் பேணும் அரசு என்று சொல்லிக் கொள்ளும் இன்றைய ஆட்சியாளர்களும் அரசும் இதனைக் கவனத்திற் கொள்ள வேண்டும்...

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளைச் செப்பமாய் நடத்தவேண்டுமானால், முதலில் அப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரிய – ஆசிரியைகள் தங்கள் பிள்ளைகளைத் தொடக்கப் பள்ளி முதல் மேனிலைக் கல்வி வரை அரசுப் பள்ளிகளிலேயே பயில்விக்க வேண்டும் என்று சட்டமிட வேண்டும். அரசுப் பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்காத ஆசிரியர்களுக்கு அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் வாய்ப்போ அதன்மூலம் கிடைக்கின்ற படிகள், ஏந்துகள் முதலானவையோ கிடையாது என ஆணையிட வேண்டும்.

முதலில் இந்த ஆசிரியர்கள் திருந்தினால் போதும். இவர்களைப் பார்த்துப் பிற அரசு ஊழியர்களும் அதனைத் தொடர்ந்து பொதுமக்களும் தானாகத் திருந்துவர். செய்யுமா இந்த அரசு...? உணர்வார்களா இந்த அரசுப் பள்ளி ஆசிரியர்கள்...?

# 8. கூலியின் குறியீடு தாலியா...?

## ( திருமணத்தில் தாலி தேவையா...? )

தன்மானமுள்ள தமிழர்களே ! **திருமணம்** என்பது என்ன ?

அன்பினால் கலந்த அழகிய ஈருள்ளங்கள், உறவாகி இணைந்திடும் பிரிவற்ற ஓர் சொந்தம் **திருமணம்.**

**திருமண விழா** என்பது பருவமடைந்த ஆணொருவனும் பெண்ணொருத்தியும் இணைந்து வாழ்ந்திடத் தொடக்கமாக அமைகின்ற **வாழ்க்கைத் தொடக்க விழா.**

**மங்கலம் என்ப மனைமாட்சி...** என்பார் நம் ஆதிப் பேராசான் திருவள்ளுவர்.

இருபால் இனத்தவராய் இருந்து, தங்களுக்குள்ளான எதிரெதிர் பாலின ஈர்ப்பாலும் இனப்பெருக்கத்திற்கான வழிமுறையாகவும் - வரைமுறையின்றி, நெறிமுறையின்றி, சிந்திக்கும் திறனின்றித் தோன்றியவாறெல்லாம் இனக்கலப்பு செய்துகொண்டு, காட்டுவிலங்காண்டிகளாய் வாழ்ந்த முற்கால - கற்கால - மக்கள், பல்லாயிரம் ஆண்டுகட்குப் பிறகு,

கால வளர்ச்சியாலும் தத்தமக்கு ஏற்பட்ட படிப்பினைகளாலும் மெல்ல மெல்ல அறிவுத் தெளிவு பெற்று, ஒருவருக்கொருவர் சார்ந்து, அணுகி, அன்பு செலுத்தி, குமுகாயமாகக் கூடி வாழ்ந்து, விலங்குகளிடமிருந்து வேறுபட்ட அறிவுசால் வாழ்வை, தன் கட்டுப்பாடு கொண்ட நாகரிகவாழ்வை வாழ்ந்திடத் தொடங்கியபோதுதான் ஆணொருவனும் பெண்ணொருத்தியும் சேர்ந்து வாழ்வதற்கான, சீரான நெறிமுறைகளும் வரையறைகளும் தோன்றியிருக்க வேண்டும்.

தங்களுக்கு ஏற்பட்ட அறிவு முன்னேற்றத்தின்பிறகே இந்தச் சேர்ந்துவாழும் இல்லற வாழ்க்கைக்கான அடிப்படையான - நேரிய நெறிமுறைகளை அம் மக்கள் உணர்ந்து, அதன்பின்னரே **திருமணம்** என்னும் அமைப்பும் வரையறையும் குமுகத்தில் தோன்றியிருக்கக் கூடும்.

அப்படி - அதற்காகத்தோன்றிய திருமண முறைகள், பழங்காலத் தமிழரின் வாழ்வையும் நாகரிகத்தையும் பொறுத்தவரையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அனைத்து

நிலைகளிலும் சமநிலை வழுவாத தன்மையுடையனவாகவே இருந்திருக்கின்றன.

இருபால் இனத்தவர், ஒருவரையொருவர் கூடி, இன்புற்று, நல்லறம் மிக்கதாய் இல்லறம் நடத்தி, மகவுகளை ஈன்று, குடும்பமாகிக், குமுகநலம் மேம்படச் சிறப்பானதொரு வாழ்வை வாழ்கையில் அக் குடும்ப வாழ்வில் சரிபங்காற்றுபவராய் ஆண், பெண் இருவருமே இருந்திருக்கின்றனர். அப்படிச் சரிபங்காற்றி வாழ்ந்த ஆண், பெண் இருபாலரிடையே வாழ்விலான இன்ப-துன்ப, நல்ல-கெட்ட, ஈடு-இழப்பு நிகழ்வுகள் அனைத்தும் சமமாகவே இருந்திருக்கும்.

அப்படிப்பட்ட சமநிலை வாழ்க்கையில் ஆணுக்கு மட்டும் ஒரு நெறி என்றும் பெண்ணுக்கு ஆணைவிடக் குறைவான உரிமை தருகின்ற வேறுபட்ட பிறிதொரு நெறி என்றும் அக்காலத் தமிழர் வாழ்விலே வேறுபாடு இருந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியிருக்கையில், ஒருவரையொருவர் கூடி வாழ்ந்திடத் தொடக்கமாக அமைந்த ***திருமணம்*** என்னும் நிகழ்விலும் ஆண் தாலி கட்ட வேண்டும், பெண் அதனைக் கழுத்தை நீட்டி வாங்கிக் கொள்ள வேண்டும் என்னும் ஒருசார்புநிலை இருந்திருக்கவும் வாய்ப்பில்லை.

"*இக்காலத்தில் திருமணத்தின்போழ்து, அரசாணைக்கால் நடுதல், சாலுங்கரகம் வைத்தல், தீ வளர்த்து அவிசொரிதல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் தீவலம் வருதல்,* ***தாலி கட்டுதல்*** *முதலியன பண்டைத்தமிழர் அறியாதவை. தாலி என்பது பண்டு ஆண்குழந்தைக்கு, பிறந்த ஐந்தாம் நாள் அணிந்த ஓர் அணிகலன் ஆகும். ஆகவே, அன்று ஆணுக்குப் பெண் அடிமை என்பதற்கு அறிகுறியாகத் தாலி அணியப்பெறவில்லை*" என்று *பண்டைத் தமிழர் வாழ்வியல் வரலாறு* என்னும் நூலில் திரு. வி.பொ.பழனிவேலனார் குறிப்பிடுகிறார்.

எனவே, இந்த ஏற்றத்தாழ்வு - பெண்ணடிமைச் செயல் நம் நாட்டில் ஆரியப் பார்ப்பனர் வருகைக்குப் பின்னே தான் நிகழ்ந்திருக்கின்றது. எப்படி ஆதியில் இல்லாத சாதிப் பாகுபாடும் சாதி வேற்றுமையும் - பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பித்தலும் ஆரியப் பார்ப்பனரின் வரவால் இந்நாட்டில் நுழைந்ததோ, அதுபோன்றே பெண்ணடிமைத்தனமும் ஆணாளுமையும் ஆரியரால்தான் இங்கு

திணிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கொரு சான்றுதான் திருமணத்தில் ஆணுக்கில்லாமல் பெண்ணுக்கு மட்டும் தாலி கட்டும் ஓர் மூடத்தனமான அறிவிலிச்செயல்.

**தாலி என்ற ஒன்றைக் கட்டுவதன் மூலமாகப் பெண் தன் கணவன் வீட்டிற்குக் கூலியில்லாத ஓர் வேலையாளாகக் கூட்டிச் செல்லப்படுகிறாள். அவள் அங்கு செய்யும் சமையல், துவையல் உள்ளிட்ட பணிப்பெண் வேலைகளுக்காக அவளுக்குத் தரப்படும் கூலிபோன்றதே அத் தாலி. ஆம் ! கூலியின் குறியீடுதான் தாலி.**

***கட்டாயமாக ஆணுக்குப் பெண் அடிமை*** என்பதற்காக மட்டுமே தாலி என்னும் சடங்கு புகுத்தப்பட்டிருக்கிறது. அடிமை நிலையின் தொடக்கமாக அமையும் தாலிகட்டும் சடங்கினால், அதனைத் தொடர்ந்து வழிவழியாக நிகழும் எண்ணற்ற மூடச்சடங்குகளால் பெண் அந்த ஆணால் மேலும் மேலும் அடிமைப்படுத்தப்படுகின்றாள்.

அதனால்தான் ஆரியப்பார்ப்பனர் கற்பித்த இந்து மதத்தில், ஆணாகிய கணவன் இறந்ததும் பெண்ணாகிய மனைவியின் தாலியைக் கழற்றுகின்ற ஒரு சடங்கு நிகழ்வையும் புகுத்தியிருக்கிறார்கள்.

கணவன் இறந்ததும் பெண்ணின் கை வளையலை உடைத்து, நெற்றிப்பொட்டை அழித்து, மெட்டி – கால் கொலுசு போன்றவற்றைக் கழற்றும் இந்துக் குமுகம் மனைவியிறந்த ஆணுக்கு என்ன செய்கிறது?

ஆணுக்கும் அத்தாலியைக் கட்டிக் கொள்ளும் முறையை வைத்திருந்தால் அவனுக்கும் மனைவி இறந்ததும் – கதறக் கதற அதனைக் கழற்றுகின்ற சடங்கு தோன்றியிருக்க வேண்டும். ஏன் அப்படியில்லை?

ஆக, இவ் இழிவுக் குமுகத்தில் தான் – பெருமை மிக்கதாகக் கூறிப் பார்ப்பனரால் பறைசாற்றிக்கொள்ளப்படும் – இவ் இழிவு மதத்தில் தான் பெண்களுக்கு மட்டும் இத்தகைய கொடிய அடிமைத்தனங்கள் நிகழ்கின்றன.

"*உண்மையில் **புராண இதிகாசங்களும்** மத வகைப்பட்ட சிந்தனைகளும் மத – மடாலயங்களும் எங்கெல்லாம் உயர்வாக ( புனிதமாக )க் கருதப்படுகின்றனவோ அங்கெல்லாம் தான் பெண்களின் துயரங்களும் பெருக்கெடுத்து ஓடுகின்றன. பெண்களுக்கு எதிரான குமுகாய அமைப்பையும் சட்டங்களையும் எதிர்த்துப் போர்தொடுக்க*

*வேண்டுமானால் பெண் முதலில் மதவகைப்பட்ட மயக்கங்கள், சாய்க்கடைகள் சிந்தனைகளிலிருந்து தன்னை விடுதலை செய்துகொள்ள வேண்டும்*" என்றார் தந்தை பெரியார்.

இப்படி மத வகைப்பட்ட சாய்க்கடைச் சிந்தனைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் பெண்கள் முதலில் – திருமணத்தில் தாலியைப் புறக்கணிக்க வேண்டும். வழிவழியாக அடிமைத்தனத்தைத் தமக்குத் தெரியாமலே நுகர்ந்து வாழ்ந்து வந்த நம் பெண்களிடையே தாலியைப் புறக்கணிக்க வைத்தல் என்பது அவ்வளவு எளிதான செயலன்று ; கடினமானது தான். ஆனால், அதை நாம் செய்துதான் ஆகவேண்டும். தன்மானமுள்ள தமிழர் அனைவரும் செய்தாக வேண்டும்.

முதலில் இவ் அருஞ்செயலைப் பகுத்தறிவுடன் கூடிய பெண் விடுதலைக்காகக் காலமெல்லாம் பாடாற்றிய தந்தை பெரியாரின் வழிவந்த தொண்டர்களேனும் தம் இல்லங்களில் நிகழும் திருமணங்களில் புரிய வேண்டும். தந்தை பெரியாரின் கொள்கைவழிப் பற்றாளர்கள் – தொண்டர்கள் பெரும்பாலோரின் இல்லத் திருமணங்களில் இந்து மதத்தின் மூடச் சடங்குகள், பார்ப்பன மந்திரங்கள், அறிவுக்குப் புறம்பான இன்ன பிற நிகழ்வுகள் ஏதும் இடம்பெறாமல் திருமணங்கள் நிகழ்ந்தாலும் ***பெண்ணுக்குத் தாலிகட்டுதல்*** மட்டும் இன்றும் பல திருமணங்களில் நிகழ்ந்துகொண்டுதான் உள்ளது.

இப்படியோர் சூழலில்தான் என் திருமணத்தைத் தந்தை பெரியார் வழியில் பகுத்தறிவுத் திருமணமாக – மூடச் சடங்குகளற்ற – இந்துமதப் புளுகுகள் இல்லாத – தாலி மறுப்புத் திருமணமாக நடத்திட வேண்டும் என விரும்பி, நானும் அதற்கு முயன்றேன், முனைந்தேன். ஆனால், எங்கள் மணவிழாவிற்கு முன் என் துணைவியாரின் தாயார் என்னிடம், **வேறு சடங்குகள் இல்லாவிட்டாலும் தாலியை மட்டுமாவது என் மகளுக்கு நீங்கள் கட்டவேண்டும்** என்று கட்டாய வேண்டுகோள் வைத்ததால், அந்தத் தாயுள்ளத்தை மதித்திட, வேறுவழியின்றித் தாலியை மணமகளுக்குக் கட்ட ஒப்புக்கொண்டேன். அப்போதும் தாலியை மஞ்சள் கயிறாய் இல்லாமல் பொன்னாலான தொடரி ஒன்றால் தான் அணிவிப்பேன் என்றும் அப்படி அணிவிக்க

வேண்டுமென்றால் மணமகளும் எனக்கு அதேபோன்று தொடரியாலான தாலியை அணிவிக்க வேண்டுமென்றும் நானும் ஓர் வேண்டுகோள் வைத்து, அதைச் செயற்படுத்தவும் செய்தேன். ***மணமகளும் மணமகனுக்குத் தாலி*** கட்ட வேண்டும் எனும் புரட்சியை விளக்கியதோடு அதனை என் திருமணத்தில் ***தழல் தேன்மொழியம்மையார்*** அவர்கள் தான் நடத்திவைத்தார்கள்.

தாலி என்பது தேவையற்றது என்பது நம் கருத்து. ஆனால் தமிழர் அனைவரும் அதை உணரவேண்டும் - குறிப்பாகப் பெண்கள் அதை உணரவேண்டும். அதுவரையில் தாலி இருவருக்கும் தேவை.

**கிறித்தவ மதத்தினர் செய்துகொள்ளும் திருமணங்களில் கணையாழி( மோதிரம் ) என்னும் விரலணியை ஆண், பெண் இருவருமே ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்கின்றனர். அப்போது அங்கு இருவரும் சமம் எனும் நிலை, தானே - இயல்பாகவே தோன்றிவிடுகிறது. ஆனால், இந்து மதத்தில் மட்டும் தாலியெனப்படும் கயிறு ஏன் பெண்ணுக்கு மட்டும் ?**

உறுதி செய்யப்படும் ஒரு திருமணத்தில் தனக்குத் தாலிகட்டத் தான் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று பெண் சொன்னால் அதைமீறி ஆண், தாலி கட்டுவேன் என்றால், அப்போது பெண், தானும் ஆணுக்குத் தாலி கட்டுவேன் என வீரத் துணிவுடன் முனைய வேண்டும். அதேபோல், ***நாம் இருவரும் சமமாக வாழத் தொடக்கமாக அமையும் வாழ்க்கை ஒப்பந்த விழாவில் நான் மட்டும் உனக்குத் தாலி கட்டி உன் நிலையைத் தாழ்த்திட நான் விரும்பவில்லை*** என மணமகன் கூறும்போது, இல்லையில்லை நீங்கள் எனக்குத் தாலி கட்டித்தான் ஆகவேண்டும், நான் அந்த அடிமைக் குறியீட்டைச் சுமந்து தான் ஆகவேண்டும் என்று மணமகள் கூறினால், அப்போது ***அப்படியானால் நானும் அந்த அடிமைக் குறியீட்டை உன் கையால் கட்டிக்கொண்டு சுமக்க வேண்டும், அது தான் சமமானது, சரியானது*** எனக்கூறி, மணமகள் கையால் தாலி கட்டிக்கொள்ள ஆணாகிய மணமகனும் முன்வரவேண்டும்.

தந்தை பெரியார் அவர்களின் எண்ணற்ற பகுத்தறிவுக் கருத்துகளுள் ஒன்று, ***பெண் தன் அடிமை நிலையிலிருந்து மீள வேண்டுமானால் திருமணத்தில் பெண்ணுக்குத் தாலிகட்டும்***

***பிற்போக்குத் தனம் முதலில் ஒழிய வேண்டும் என்பதே. அப்படித் தாலி கட்டியே ஆகவேண்டுமென்றால் பெண்ணும் ஆணுக்குத் தாலிகட்டி, இருவரும் சமம் என்பதை நிலைநிறுத்த வேண்டும்*** என்றும் கூறியுள்ளார் தந்தை பெரியார். அந்தக் கருத்தைத் தான் நான் என் திருமணத்தில் செயற்படுத்தினேன்.

மேலும், பெண் மட்டும் தாலியைக் கட்டிக்கொண்டிருந்து அதனைக் கழற்றினால் தானே கணவன் இறந்ததாகப் பொருள். ஆணும் அப்படிச் செய்தால் அதுவெறும் அடிமைக் குறியீடுதான் என்றும் உயிரற்ற வெறும் சடப்பொருள் தான் என்றும் விளங்கிக்கொள்ளலாமல்லவா ?

திருமணத்திற்குப் பின்னும் நான் கழுத்தில் தாலியையும் கால்விரலில் மெட்டியையும் அணிந்துகொண்டுதான் உள்ளேன். காரணம், என் துணைவியார் இன்னும் அந்தத் தாலியெனும் அடிமைக் குறியீட்டைக் கழற்றிட முன்வரவில்லை. அதனால் நானும் அவர்க்கு இணையாக அக் குறியீட்டைச் சுமந்துகொண்டுள்ளேன். இதைப் பார்த்த பெரியார் தொண்டர் – தோழர் ஒருவர், பெண்கள் அடையாளமாகத் தாலி அணிவதே பகுத்தறிவுக்குப் பொருத்தமற்றது என்று கூறும் நாம், ஆண்களும் தாலி அணிய வேண்டும் என்று கூறுவது பகுத்தறிவுக்கு முரணாக இல்லையா ? பொதுஇடங்களில் நீங்கள் ( ஆண் ) தாலியுடனும் காலில் மெட்டியுடனும் இருப்பதைப் பார்ப்பவர்கள் புரட்சித் திருமணம் என்று எண்ணுவார்களா ? இவர்கள் சாதி வழக்கப்படி ஆண்களும் தாலி, மெட்டி அணிவார்கள் போலும் என்று எண்ணுவார்களா ? குமுகாய வழக்கத்தை மாற்ற மறுக்கும் பெண்களுக்குப் புரிய வைத்து, அவர்களை மாற்றுவதற்கு மாற்றாக, ஆண்களும் தாலி அணிய வேண்டும் என்ற புதியதொரு பழக்கத்தை நாம் ஏற்படுத்த வேண்டுமா ? எனக் கேட்டார். அவர் போன்ற தோழர்களைப் பார்த்து நான் கேட்கிறேன்...

பெரியார் தொண்டர் எனச் சொல்லிக் கொள்வோரில் எத்தனைபேர் இன்னும் தன் திருமணத்திலோ – தங்கள் வீட்டுத் திருமணங்கள் அனைத்திலுமோ முழுமையாகத் தாலியை மறுத்துள்ளனர் கூறுங்கள் ! மிகச் சிலரே இருப்பர். மீதியுள்ள அனைவரும் தாலியுடன்தானே நடத்துகிறார்கள் ? சிலர் அதற்குச் சில

விளக்கங்களும் தருகின்றனர் - வீட்டில் ஒப்புக்கொள்ளவில்லை, அதனால் செய்யவேண்டியதாகிவிட்டது என்று. அல்லது மாப்பிள்ளை வீட்டார் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் ; அதனால் தாலியைத் தவிர்க்க முடியாமல் போய்விட்டது என்கின்றனர். அப்படியிருக்கையில், பெண் தாலி கட்டிக் கொள்வது கட்டாயமானால், ஆணும் பெண் கையால் தாலி கட்டிக் கொள்ள வேண்டும் என்னும் தந்தை பெரியாரின் கூற்றுப்படிதான் நானும் என் இணையர் கையால் தாலி கட்டிக் கொண்டுள்ளேன்.

அந்தத் தாலியை இன்னும் தொடர்ந்து நான் அணிந்து கொண்டிருப்பது ஏனென்றால், என் அருமைத் துணைவியார், தான் கட்டிக் கொண்டுள்ள தாலியால் எந்தப் பயனும் இல்லை - அது ஓர் அடிமைச் சின்னம் என்பதை உணர்ந்து அதைக் கழற்ற வேண்டும் என்பதற்காக - அவர் பார்வையிலேயே இருக்குமாறு நானும் என் கழுத்திலுள்ள தாலியைக் கழற்றாமல் வைத்துள்ளேன். நண்பரே ! தாங்கள் கூறியதைப் போன்று, நம்மைப் பார்க்கும் பிற மாந்தருக்காக நாம் நம் வாழ்வில் எதையும் செய்வதில்லை ; செய்யப் போவதில்லை. அப்படிப் பார்ப்பதானால் நாம் புரிகின்ற - பிற எண்ணற்ற பகுத்தறிவுச் செயல்களையும் அல்லவா அந்தப் பிறர் பார்க்க வேண்டும் ? மேலும், தாங்கள் கூறியது போல் நம் தமிழகத்தில் எந்தச் சாதிப் பிரிவினரிலும் எந்த வகுப்பினரிலும் ஆண்கள் தாலியையும் மெட்டியையும் தொடர்ந்து அணிந்துகொண்டிருப்பதில்லை என்பதை அறிவுள்ள தமிழர் அனைவரும் அறிவர். ஆதலால், என்னைப் பார்க்கும் பிறர் எவரும் இவருடைய சாதி வழக்கம் இதுவென்று எண்ணுவதற்கு இடமில்லை.

அதுமட்டுமின்றி, தாலி அணிந்துகொள்வது வேண்டுமென்றால் பகுத்தறிவுக்கு ஒவ்வாத வீண் செயல் எனலாம். ஆனால், மெட்டி அணிந்துகொள்வதையும் அணிந்துகொள்ளாததையும் பற்றி நம் வெண்தாடி வேந்தர் - பெரியார் எந்த முரண் கருத்தையும் தெரிவிக்கவில்லை. ஏனென்றால், மெட்டி அணிவதென்பது இந்துமதக் கருத்து இல்லை ; அது இந்துமதம் இங்கு புகுமுன்னரே தமிழர்தம் ஆதிகாலப் பழக்கமாக இருந்து வந்த ஒன்று. வெள்ளியால் அணியும் மெட்டியால் உடல் நலனுக்கு நன்மை கிடைக்கின்றது. அது பெண்ணுக்குத் திருமணமாகியதற்கு அடையாளமாக அணியப்படுவதெனும் கருத்தைப் பிற்காலத்தில் புகுத்திவிட்டனர்.

ஆனால், தாங்கள் உட்பட இன்றைய தமிழகத்தில் உள்ள ஆண்கள் எவரையும் அவர்களுக்குத் திருமணமாகி விட்டதா இல்லையா என்று கண்டறிவதற்கு இப்போதுள்ள இந்தக் குமுகத்தில் எந்த அடையாளமும் இருப்பதில்லை. நான் அப்படியிராமல் எனக்குத் திருமணமாகிவிட்டது என்பதைப் பிற பெண்டிர்க்கு அடையாளப் படுத்திக் காட்டுவதற்கும் அந்த வெள்ளிப் பொருளால் நானும் என் உடல்நலத்தைப் பேணிக் கொள்வதற்கும் தான் நான் அந்த மெட்டியையும் அணிந்து கொண்டுள்ளேன். மற்றபடி வெள்ளியால் அணிகின்ற அந்த மெட்டியில் பகுத்தறிவுக்கு முரணான – மூடத்தனமிக்க வேறெந்தக் காரணமும் இல்லையென்று என் அறிவிற்கெட்டிய வரையில் மிகத் தெளிவாகச் சிந்தித்து உணர்ந்த பிறகே அதை அணிந்துள்ளேன்.

மேலும், தாலியின் தேவையின்மையை என் துணைவியார்க்குப் புரியவைத்தபிறகு, ஆன்றோர், சான்றோர், உற்றார், உறவினர், தோழர், நண்பர் ஆகியோர் முன்னிலையில் மணவிழா அமைத்துத் தாலியை எப்படி இருவருமே ஒருவருக்கொருவர் கட்டிக் கொண்டோமா – அதே போன்று ஓர் விழா எடுத்து, அவ் அனைவர் முன்னிலையிலும் இருவரும் ஒருவருக்கொருவர் பொருளற்ற அத்தாலியைக் கழற்றிக் கொள்ளுவோம் ; இதன் மூலம் மனமொத்த இல்வாழ்வுக்கு, உயிரற்ற தாலியெனும் வெறும் பொருள் தேவையற்றது என்பதை அவ் அனைவருக்கும் உணர்த்துவோம். இதை அத்தோழர்க்கு மட்டுமல்லாமல், இதுகுறித்து ஐயம் எழுப்பும் – வினாத்தொடுக்கும் அனைவருக்குமான விடையாகவே தெரிவிக்க விரும்புகிறேன்.

எனவே, தமிழர்தம் திருமண வாழ்வில் தாலி என்பதான ஒன்று எவ்வகையிலும் அறிவுக்குப் பொருந்தாத – தேவையற்ற ஒன்று. அதுவெறும் அடிமைக் குறியீடுதான் என்பதை இந்த இளந்தலைமுறையினர் உணர்ந்து, ஆணாகினும் பெண்ணாகினும் எண்ணிப் பார்க்க வேண்டும். தாலி என்பதை மறுக்க வேண்டும். பெண்ணுக்கு மட்டும் தாலி என்பதைக் கட்டாயம் மறுக்க வேண்டும். அதுவே இன்னும் நாம் ஆரியப் பண்பாட்டிற்கு அடிமையில்லை என்று எதிர்காலத் தமிழ்க் குமுகத்திற்கு உணர்த்திட உதவும்.

# 9. தீயினில் தள்ளும் திரைப்பட ஈர்ப்பு...!

திருவிழாக் காலங்கள் (பண்டிகைகள்) என்று காரணங்காட்டிப் புதிய திரைப்படங்கள் போட்டுவிட்டால் போதும், அவை வெளியான அன்றே பார்த்துவிட வேண்டுமென்று ஒரு சில கூட்டங்கள் காத்துக்கொண்டிருக்கின்றன.

அப்படங்களில் என்ன பொருள் உள்ளது - அவை இக் குமுகத்திற்கு ஏற்றவையா - இக் குமுக மக்களை - இத் தலைமுறையைச் சிந்திக்கச் செய்கின்றனவா - பகுத்தறிய வைக்கின்றனவா... என்பவற்றையெல்லாம் சிறிதும் எண்ணாமல் இளைஞர் கூட்டம் அங்கு குவிகின்றது.

அதிலும் எண்ணற்ற கோடிகளைக் கூலிகளாய்ப் பெற்றுக் கொண்டு, செல்வக் களிப்பிலும் புகழின் உச்சியிலும் இருக்கின்ற பல முன்னணி நடிகர்களின் படங்கள் என்றால், அதில் என்ன குப்பைக் கதைகளைச் சொல்லியிருந்தாலும் (கதையே இல்லாவிட்டாலும்) அது தமிழினத்திற்கே முரணான, தமிழினத்தையே இழிவுபடுத்தும் கதைகொண்டதாக இருந்தாலும் அதுபற்றியெல்லாம் கவலையுறாது நம் இளித்தவாய்த் தமிழின இளைஞர்கள் அத் திரைப்படங்களுக்கு 100, 150, 200 உருவா எனக் கட்டணம் கொடுத்து, விழுந்தடித்துக் கொண்டு பார்க்கின்றனர்.

இன்றைய நாளில் இளைஞர் கூட்டம் தான் இத்தகைய திரைப்படங்களை - உடல் வருத்தி, பெற்றோரின் பொருளியற்சூழலை வருத்திச் சென்று கூடுதல் தொகை கொடுத்துப் பார்க்கின்றனர் என்றால் எதிர்கால இளைய தலைமுறையாகத் திகழவுள்ள இன்றைய குழந்தைச் செல்வங்களையும் இவைபோன்ற அடிமைத்தனங்களில் வைத்துக் கொண்டிருப்பதை எண்ணும்போது மனத்திற்கும் வருத்தத்தையும் சினத்தையும் உண்டுபண்ணுகிறது.

ஆம் ! அண்மையில் நாம் ஓர் திரைப்படத்திற்குச் சென்றிருந்தோம். குறைந்தளவு சீட்டு உரு.40தான். ( நம் போன்ற உணர்வாளரெல்லாம் இன்றைய திரைப்படங்களைப் பார்க்கும் கண்ணோட்டமே வேறு. நாம் பார்ப்பதற்கு முழுமுதற்கரணியம், அவற்றில் நமக்கு - நம் தமிழினத்திற்கு - நம் தமிழ்க்குமுகத்திற்கு, பகுத்தறிவுக்கு முரணாக என்ன - எதைச் சொல்லியிருக்கின்றனர் என்று பகுத்தாய்ந்து, அவற்றைப் பிற எளிய மக்களுக்குப் புரியும் வகையில் எடுத்துரைத்துக் கருத்துப் பரப்பல் செய்திடவே. அதுமட்டுமன்றி, நாமெல்லாம் திரைப்படம் பார்க்கச் செல்வது - திருவிழாக் கொண்டாட்டங்கள் முடிந்து, சில - பல நாள்கள் கழித்து, அந்தப் படத்தின் உச்சக் கட்டணங்களெல்லாம் குறைக்கப்பட்டு, அடிமட்டக் கட்டணம் ( இவை போன்ற படங்களுக்கு இந்தக் கட்டணமே அதிகம். ) மட்டுமே பெறுகின்ற காலக்கட்டத்தில்தான் நாமெல்லாம் செல்ல வேண்டும். ஏனென்றால் நாம் கருத்தைத் தெரிந்து கொள்ளத்தான் செல்கிறோம் ; கண்ட கருமங்களையெல்லாம் தெரிந்து, நம் மொழி,இன,பண்பாட்டைக் குழியில் போட்டுப் புதைப்பதற்கு அன்று. )

நாம் சென்ற அத் திரைப்படமும் முன்னணி நடிகர் ஒருவர் நடித்ததுதான். எங்களுக்கு அருகிலுள்ள இருக்கையில் 8 முதல் 10 அகவை மதிக்கத்தக்க சிறுவனொருவன் அமர்ந்திருந்தான், தன் தாத்தாவுடன் வந்திருப்பான் போலும். திரைப்படம் போட்டது தொடங்கி, படம் முடியும் வரையிலும் அந்தப் படத்தின் நாயகன் வந்துசெல்லும் போதெல்லாம், ஒவ்வொரு காட்சிக்கும் சிரிப்பும் கைதட்டலும் தான். அந்த நடிகன் என்ன செய்கிறானென்றே தெரியாமல் அந்தச் சின்னஞ்சிறுவன் அதில் மூழ்கிப்போய் அவனைத் தன் மூளைக்குள் - தன் கருத்தின் கதைநாயகனாகத் தங்க வைத்துக்கொள்கிறான். தன்

தாய், தந்தை, ஆசிரியரைக் கூட அப்படி எண்ணுவானா என்பது அரிதுதான்.

இப்படித்தான் நாம் இன்றைய குழந்தைகளைத் திரைப்பட நடிகனுக்கு விசிறியாக்கி, பித்தனாக்கி, பிறகு அந்நடிகனையே அரசியலுக்கு வரவழைத்து, அமைச்சனாக்கும் வரையிலும் **ஆ...**வென வாயைப் பிளந்தபடி அவனைப் பார்த்துக் கைதட்டி, ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம்.

எண்ணிப் பாருங்கள் தமிழர்களே ! இன்றைய நம் தமிழ்க் குழந்தைகளுக்கு மிகச் சிறு அகவையிலேயே எதைப் பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறோம்...? நம் நாட்டுக்கு, நம் மொழியினத்துக்குத் தொண்டாற்றிய அறிஞர் பெருமக்களை அறிமுகம் செய்தோமா...? நம் குமுகாயத்தின் நன்மைக்குப் போராடிய குமுகத் தொண்டாளர்களை அடையாளம் காட்டினோமா...?

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, மிகச் சிறிய ( 2முதல் 10வரையிலான ) அகவையிலேயே நாம் அவர்களுக்குச் சொல்லி அறிமுகப் படுத்தி, அவர்களின் மூளைக்குள் பதியச் செய்வது, “இவர் இரசினி, இவர் கமல், இவர்தான் விசய், இவர்தான் சிம்பு, இவர் அசித், இவர்தான் வடிவேலு...” என்று திரைப்பட நடிகர் பட்டாளத்தைத் தானே...? இதை ஊக்குவிப்பது போன்றே இன்றைய தொலைக்காட்சி முதலான ஊடகங்களும் உள்ளன.

சற்றேனும் சிந்தியுங்கள் தமிழர்களே ! நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம்...? நம் எதிர்காலத் தமிழினத்தை - எதிர்கால இளைஞர் குமுகாயத்தைப் புதைகுழியில் தள்ளும் வேலையை இன்றே மெல்ல மெல்லச் செய்துகொண்டிருக்கிறோம்.

குழந்தைகளிடம் நாட்டின் அறிஞர்கள், சான்றோர்கள், அவர்களின் செயற்பாடுகளைப் புகுத்திச் சீராக்கிட வேண்டிய நாம், ஒப்பனைகளிட்டுப் பெண்களுடன் ஆட்டமாடிக் கொண்டும், ஒற்றையாள் பத்துப் பேரை அடிப்பதுபோலும் அரிவாளால் வெட்டுவதுபோலும் துளி வீரமுமின்றி வீரமிக்கவன் போலும் காட்டும் அட்டைக்கத்திகளாய்த் திகழும் திரைப்பட நாயகர்களைக் காட்டிக் குழந்தைகளைச் சீரழிப்பது சரியாகுமா... முறையாகுமா...?

இன்றைய பெரியவர்கள் அலுத்துக்கொண்டு சொல்லும் ஒரு வீண் சொல்... "எங்கள் பிள்ளை - திரைப்படம் பார்த்துக் கெட்டுப் போய்விட்டான்..." என்பது. அவர்களைக் கெட வைத்தது யார் ? நாம் தானே?

எங்கள் வீட்டுக்கு வந்த உறவினர் மகன் ஒருவன் ( அகவை 6க்குள் இருக்கும்), வீட்டுக்குள் நுழைந்து நுழையாததற்குள் ***துப்பாக்கி*** திரைப்படத்திற்குச் செல்லவேண்டுமென்று குதிக்கிறான். அவனுடன் சேர்ந்து அவன் தாத்தாவும் தான்.

வாழ்வின் பல கோணங்களையும் இன்ப-துன்பங்களையும் நெளிவு-சுழிவுகளையும் கண்ட அந்தப் பெரியோர்களாவது நம் பெயரப் பிள்ளைகள் - எதிர்காலச் செல்வங்கள் எவ்வெவற்றை அறிந்திட வேண்டும், எவ்வெவற்றை அறிந்திடக் கூடாது என்று சிந்தித்து, அவற்றைக் காட்டவேண்டாமா ?

அதுதான், நம்மைச் சீரழிப்பதற்காகவே, நம் தமிழினத்தைச் சிந்திக்க விடாமல் முன்னேறச் செய்ய விடாமல் தடுப்பதற்காகவே திட்டம் போட்டுக்கொண்டு செயலாற்றி வருகின்றன - இன்றைய பெரும்பாலான திரைப்படங்களும் தொலைக்காட்சி முதலான ஊடகங்களும். இதையறிந்தும் நாம் நம் குழந்தைகளுக்கு நாமே வலியச் சென்று, காசு செலவழித்து இவற்றைக் காட்டலாமா ?

இந்தச் சிறு அகவையில் இவையெல்லாம் அவர்கள் மனத்தில் பசுமரத்தாணியாய்ப் பதிகின்ற கரணியத்தால் தான் எதிர்காலத்தில் இத் திரைப்பட நடிகர்களையே நாட்டுக்குத் தலைவனாக்கிடச் செய்து ***வாழ்க !*** போட வைக்கின்றன.

எனவே, தமிழர்களே ! தேவையற்ற வீண் விளம்பரங்களைக் கண்டு, நம் வீட்டுக் குழந்தைகளை - இளஞ்சிறார்களைத் திரைப்படங்களுக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்குள் திரைநாயகர்களைப் பதியச் செய்து, அவர்களைக் கெடுக்கின்ற வேலைகளைச் செய்யாதீர் ! இன்றைய குழந்தைகளைக் கல்வியில் கவனத்தைச் செலுத்தத் தூண்டாமல் - ஓய்வு நேரங்களை விளையாட்டிலும் இன்னபிற உடற்பயிற்சிக் கலைகளிலும் செலுத்திட வைத்திடாமல், பெரியவர்கள் நாமே அவர்களிடம் திரைப்பட நடிகர் -

நடிகையரைக் காட்டி, அவர் போலச் செய், இவர் மாதிரி நட, அவரைப் போலப் பேசு என்று வீணான போலிக் கற்பனைகளை உருவாக்காதீர்கள் !

ஏறத்தாழ ஐம்பதாண்டுக் காலமாக – கடந்த 2 தலைமுறையாக இந்த வேலைகளைத்தான் தமிழ்நாட்டில் தமிழர்கள் நாம் செய்துவந்தோம். அதன் விளைவாகத்தான் – இன்று நாம் நம் தமிழரின் மொழி–இன–பண்பாட்டின் அடையாளங்களைத் தொலைத்தோம் – நம் மக்களின் கல்வி, விடுதலை, தன்மதிப்பு உரிமைகளையும் இழந்தோம்.

பிள்ளைகள் செப்பமாக வளர்வதற்கு விதையூன்றி, உரமிடவேண்டிய பிஞ்சு அகவையிலேயே திரைப்பட ஈர்ப்பை – திரைப்பட நாயகன் மீதான பற்றுதலை ஊன்றி, அவர்களின் மூளையிலே, தேய்ந்துவரும் நம் தமிழின மீட்புச் சிந்தனைகளைத் தூவாமல் – விதைக்காமல் விட்டுவிட்டதன் பயனைத்தான் இன்று நாம் அறுவடை செய்துகொண்டுள்ளோம்.

இதன் பயன்தான், இன்றைய நம் தலைமுறையில் ஈழப்போரைப் புரிந்துகொள்ளாமல் எதிர்ப்போரும் கூடங்குளத்தை எதிர்க்காமல் ஆதரிப்போரும் இருக்கின்றனர் என்பதோடு இன்னபிற தமிழின எதிர்ப்புச் சான்றுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

எனவே, வேடம் போட்டு, ஒப்பனைகளிட்டு, நம் முன்னே ஓர் மாயையை – மாயக் காட்சிகளைச் சுழலவிட்டு, நம்மையே கவிழ்ந்துவிழச் செய்திடும் திரைப்பட ஈர்ப்பை (மோகத்தை) இனிவரும் நம் பிள்ளைகளுக்காவது விதைக்காமல், அவர்கள் ஒரு குறிப்பிட்ட பருவம் – இளம் பருவத்தை எய்தும் வரை, அவர்கள் தானாகச் சிந்தித்து முடிவெடுக்கும் திறன் பெறும்வரை அவர்கள் கண்களுக்கும் மனத்துக்கும் மூளைக்கும் இன்றைய கேடான திரைப்பட நிகழ்வுகள் எட்டா வண்ணம் பார்த்துக் கொள்ளல் நன்று.

இதுவே நம் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கும் நம் மொழி–இன–நாட்டின் எதிர்கால நலமான மீட்புக்கும் பேருதவியாய்த் திகழும்.

# 10. எச்சரிக்கை கொள்வோம்... இனங்கெடுக்கும் ஆரியரிடம் !

முன்பின் எமக்கு அறிமுகமில்லா - ஆரியப் பார்ப்பனர் ஒருவரை அண்மையில் உறவினர் ஒருவரின் மூலம் அவரின் வீட்டில் சந்திக்க நேர்ந்தது. அவரைப் பற்றி எம் உறவினர் சொல்லும்போது, "அவர் ஒரு பார்ப்பனராக இருந்தாலும் அவரும் உங்களைப் போல் பகுத்தறிவு - முற்போக்குச் சிந்தனை உடையவர் தான். அவருடைய அப்பா - தந்தை பெரியாருக்கு உற்ற நண்பராம் ; திராவிடர் கழகத் தற்போதைய தலைவர் இங்கு வரும்போதெல்லாம் தவறாமல் அவர் வீட்டுக்கு வந்து, தங்கிச் செல்வாராம்" என்றெல்லாம் எம்மிடம் சொல்லியிருந்தார். நாமும் அதே எதிர்பார்ப்புடன் அவரின் வீட்டுக்குச் சென்றோம்.

அவர் வீட்டின் உள்ளே நுழைந்ததும் முன்னறையில் எதிர்ப்பட்டது தங்கமுலாம் பூசப்பட்ட பிள்ளையார் உருவப்படம் - நெஞ்சுள் ' சுருக் ' கென்றது எமக்கு. என்னடா, சிறந்த பகுத்தறிவாளர் என்றார்; தந்தை பெரியாரின் நண்பர் மகன் என்றார் ; ஆரியரிலும் திருந்திய ஆரியர் என்று எண்ணினோமே... என்று குழப்பம் பிறந்தது.

உள்ளே நுழைந்து, இருக்கையில் அமர்ந்து, ஏறத்தாழ 2 மணிநேரம் உரையாடல் நிகழ்ந்தது. ஒருமுறை கூட - மறந்தும் கூடத் ***தேநீர் குடியுங்கள்*** என்றோ ***உணவுண்ணுங்கள்*** என்றோ ஒரு வெறுஞ்சொல் கூடச் சொல்லவில்லை. இது கண்டிப்பாகத் தமிழினப் பண்பாக இருக்க முடியாது. ஒருவேளை இதுதான் ஆரியப்பண்பாக (!) இருக்குமோ என்னவோ ?

அவரிடம் பேசிக்கொண்டிருந்த அந்த 2 மணிநேரத்தில் - பல்வேறு செய்திகளில் - பல்வேறு இடங்களில் அவர், தான் ஒரு பார்ப்பனர் தான் - ஆரியர் தான் என்பதை மெய்ப்பிக்கும்படியாகவே அவரின் உரை அமைந்திருந்தது.

அவரிடம் நாங்கள் கையில் கொண்டு சென்றிருந்த தமிழ்த் திங்கள் இதழ் ஒன்றைக் கொடுத்தோம். அதில் இடம்பெற்றிருந்த **திருக்குறள் பா உரை** பக்கத்தைப் பார்த்தார் - படிக்கவில்லை. பார்த்தவுடனே, திருக்குறளில் பிற்போக்குக் கருத்துகள், பெண்ணடிமைக் கருத்துகள் நிறைய இருக்கின்றன என்றார். **தெய்வந் தொழாள்...** எனத்

தொடங்கும் குறளுக்கு அந்த இதழில் எழுதப்பட்டிருந்த பா உரையைப் படிக்காமல், இவரே ஒரு கருத்தைச் சொல்லி, " இந்தக் காலத்தில் பெண்ணிடம் கணவனைத் தொழச் சொன்னால் தொழுவாளா... அவள் சொன்னால் மழை பெய்யுமா..?" என்று வினாக் கேட்டார். அந்த இதழில் எழுதியிருந்த விளக்கமோ,

**தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.** – திருக்குறள் : 55

பா உரை :
கண்போலே காத்தொழுகும்
கணவன்வழிச் செல்பவள்
மண்வேண்டும் நொடிபொழியும்
மழைபோலே உயர்வாவாள் !

என்பது. அதைப் பற்றிச் சொல்லாமல், திருக்குறளுக்கு அவரின் முன்னோரான பரிமேலழகர் முதலான ஆரியர்களின் உரைப்படியே பொருள் எடுத்துக்கொண்டு, அதையே எம்மிடமும் கூறினார்.

மேலும், அதே திங்கள் இதழில் அடுத்த பக்கத்தில் ***தினமலர் என்பது தீது*** என்னும் தலைப்பிலான **வெண்பா அரங்கம்** பார்த்துவிட்டு, " இதெல்லாம் தேவையா? தினமலரைப் பிடிக்கலைன்னா விட்டுடணும், அதுக்காகத் தினமலர் தீது என்றெல்லாம் எழுதக்கூடாது.... அவங்கவங்க தன்னோட சிறப்பைத்தான் எடுத்துச்சொல்லணும் ". அப்படியென்றால், " என் (ஆரிய) இனத்தான் எப்படி வேண்டுமானாலும் – எதை வேண்டுமானாலும் எழுதி உன் மக்களைக் கெடுப்பான் ; மூடப் புதைகுழியில் தள்ளுவான் ; உனக்குப் பிடித்தால் படி; பிடிக்கா விட்டால் விட்டுவிடு, படித்துக் கெடுகின்றவனைப் பற்றி நீயேன் கவலைப்படுகிறாய் ? " என்று கேட்கிறார், அப்படித்தானே பொருள் ? படித்துக் கெடுகின்றவன் என் அண்ணன் தம்பியடா, அவனுக்கு எம் இனப் பகைவனை நானின்றி வேறெவன் அடையாளம் காட்டுவான் ?

அதுமட்டுமின்றி, " தமிழ்மொழி வளர்ச்சியடையலைன்னா இதுதான் காரணம் ; தன்னோட சிறப்பைப் பற்றிச் சொல்லாம, மற்றவங்களைத் தாழ்த்திப் பேசுவதால் தான் " என்றும் கூறினார் அவர். இருக்கும் எல்லா நேர்மையான இனங்களையும் புறந்தள்ளிவிட்டுக், கேடுகெட்ட தன் ( ஆரிய ) இனத்தையே முன்னேற்றிக்கொள்ள என்னவேண்டுமானாலும் செய்யத் துணியும் ஆரியப் பார்ப்பனம் தான்

அதனைச் செய்கிறது. நாங்கள் அவ்வினத்தின் இழிசெயலைப் பற்றி எடுத்துச் சொல்லி விழிப்புணர்வூட்டி எம் மக்களைக் காக்க வேண்டாமா? சிறப்பைப் பற்றிச் சொன்னபோதெல்லாம் – அதை எங்கே வாழவிட்டீர்கள் நீங்கள் ? அதை அடியோடு வேரறுக்கத் தானே அன்று முதல் இன்றுவரை துடித்துக் கொண்டுள்ளீர்கள்?

ஆகமொத்தம், தன் இனமான ஆரியத்தின் நாளிதழான தினமலரைப் பற்றிப் பேசியதால் ஓர் ஆரியனுக்குச் சினம் பொத்துக் கொண்டு வருகிறது. எந்தவோர் இடத்திலும் தமிழராகவோ நம் போன்ற ஓர் மாந்தராகவோ அவர்களை நாம் மாந்த நேயத்தோடு எடுத்துக்கொள்ள – நடத்திச் செல்ல எண்ணினாலும்,அவர்கள் “ நாங்கள் ஆரியப் பார்ப்பனரே... எங்கள் குணம் இதுவே...” என்று தனித்துக்காட்டி, மெய்ப்பித்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

அவர் பேசும்போது, அவரின் இந்தக் கருத்துகள் எவற்றுக்கும் எம்மை மறுவிடை கூறவே விடவில்லை. தொடர்ந்து அவரே பேசிக் கொண்டிருந்தார் – தலைப்புகளை மாற்றி மாற்றி. தமிழைப் பற்றிப் பேசும்போது, “தமிழில் பிற சொற்களைக் கலப்பதில்லை ; அதனால் தான் அது வளர்ச்சியடையவில்லை. ***தனித்தமிழ்... தனித்தமிழ்...*** என்று பலர் பேசிக்கொண்டிருக்கின்றனர். வேறு சொற்களைக் கலந்திடாதிருந்தால் தமிழ்மொழி எப்படி வளர்ச்சியடையும் ?” என்றார். இவர்களைப் போன்றவர்களெல்லாம் தம் ( ஆரிய ) இனத்திலும் ஆரிய மொழியிலும் வேண்டுமானால் கலப்படம் வைத்துக் கொண்டு நாறிப் போய்த் தங்களைக் காத்துக்கொள்ளட்டும். தனக்கென்றே தனிப்பெரும் தன்மையும் – பழமையும் வளமையும் உடைய என் தாய்த்தமிழ் எதற்கடா உனைப்போல் கலவை மொழியில் பேசி ( எழுதி ) த் திரிய வேண்டும் ? உம்மைப்போல் நாங்களும் அவ் இழிவினைச் செய்து, எம் தனித்தன்மையை இழந்து, தெருவிலே திரியவேண்டுமா? நீ மேலும்மேலும்அரியணை ஏறவேண்டுமா?

தனித்தமிழ் என்றதும், மறைமலை அடிகளார் பற்றித் தொடங்கினோம்... உடனே அவர், “ அவரும் அப்படித்தான், மேடையில் – மக்களிடையே தனித்தமிழில் பேசுவார் ; வீட்டுக்குப் போனால் தன் மனைவி – மகளிடம் கலப்பு மொழியில் பேசுவார் ” என்றுசொல்லிவிட்டு, “ இச்செய்தியைக் ***கல்கி*** யில் ஒருமுறை படித்தேன் ” என்று தன் கருத்துக்கு ஒப்புக்குச் சான்றொன்றும் சொன்னார். இவர்

நேரில் சென்று பார்த்தாரா அல்லது அன்று கல்கியில் எழுதியவர் நேரில் சென்று பார்த்தாரா...? ஆனால், இவர்களின் குணம், தமிழனை - தமிழினத்தை முடிந்தவரை மட்டந்தட்டித் தனக்குக்குக் கீழ் - தன் ஆளுமையின் கீழ் வைத்துக் கொள்ள முயல்வதே.

தேவநேயப் பாவாணர் தனித்தமிழ் பேசி வாழ்ந்தாரே... என்று நாம் சொன்னதும், " ஆம். தேவநேயப் பாவாணர் ஒரு கிறித்தவர். அவர் மதம் மாறாமல் தமிழ் வளர்த்தார்... " என்று அவரைப் பற்றிச் சொன்னவர்க்கு அவர்மீது சொல்வதற்குக் குறை ஏதும் கிடைக்கவில்லை போலும்.

இங்கே மிகவும் குறிப்பிடத்தக்க செய்தி என்னவெனில்....

அவர் தம் பேச்சுக்கிடையே அடிக்கடி ***இராமசாமி நாயக்கர் .... இராமசாமி நாயக்கர் ....*** என்று அப்பெயரைச் சொல்லிக் கொண்டிருந்தார். நெடுநேரம் எமக்குப் புரியவில்லை. ஏதோ, எங்கள் ஊர்ப்புறத்தில் இருக்கும் ஒரு குறிப்பிட்ட மாந்தரைப் பற்றிச் சொல்கிறாரென்று எண்ணிவிட்டோம். மீண்டும் சிலமுறை சொன்னபிறகே புரிந்தது - அவர் சொன்னது ***தந்தை பெரியாரின் பெயர் தான்*** என்று. தூக்கிவாரிப் போட்டதுபோல் உணர்ந்தோம்.

தமிழ்நாட்டில் - இந்தியத் துணைக்கண்டத்தில் - ஏன், உலக அளவில் பெயர் பெற்ற ஓர் குமுகாயத் தலைவரை - பகுத்தறிவுத் தந்தையை - சிந்தனைச் செம்மலை - சாதியை விரட்டிச் சமநிலைத் தமிழகத்தை உருவாக்க வாழ்நாளெல்லாம் பாடுபட்டு - வாழும்போதே தீர்வுபல கண்ட வரலாற்று நாயகனை நாமெல்லாருமே ( ஏன், உலகமெல்லாமே ) **பெரியார்** என்றும் **தந்தை பெரியார்** என்றும் சொல்லி அழைக்கும்போது (அவரைப் பற்றி முழுமையாகத் தெரியாமல் - புரியாமல் இருக்கும் தமிழர் சிலர் கூட, அவரைப் **பெரியார்** என்றே குறிப்பிடும்போது) அவரின் **இராமசாமி நாயக்கர்** எனும் பெயரே வெகுசிலர்க்கு மறந்திருக்கும் வேளையில் - அந்தப் பார்ப்பனர் இந்தப் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறாரே என்று கடுஞ்சினம் பொங்கி வந்தது. ஆரியப் பார்ப்பனர் இன்னும் எப்படியெல்லாம் இருக்கின்றனர் பாருங்கள் !

தினமலர்க்காரனோ, அறிஞர் அண்ணாவை இன்றும் **அண்ணாத்துரை** என்றே தான் எழுதுகிறான். பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பிட்டதுபோல், சென்னையில் உள்ள **அண்ணா**

**சாலை**யை துக்ளக் சோ இன்னும் **மௌண்ட் ரோடு** என்றே சொல்லிவருகிறார்.

இப்படி ஆரியர், நாம் எந்தத் துறையில் – என்ன நிலையிலிருந்து முன்னேறி வந்தாலும், நம்மையோ நம் அடையாளங்களையோ அழித்து – ஒழித்து – மறைப்பதிலேயே குறியாக உள்ளார் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. மேலும், ஆரியரை – ஆரியனின் சூழ்ச்சியை வெறுக்கும் நம்முள் பலரும் ஆரிய மொழியை (சமற்கிருதத்தை) மட்டும் கலந்துபேசித் தூக்கிக் கொண்டு திரிகிறோம். கேட்டால், " தனித்தமிழில் பேசினாலோ – எழுதினாலோ மக்களுக்குப் புரியாது" என்னும் சப்பைக்கட்டு. அதெப்படி அவன் நம் எதிரி என்று சொல்லிவிட்டு, அவன் மொழியை மட்டும் ஏற்றுக், கலந்து, களிப்பது? ஆடு பகை ; குட்டி உறவா ? மக்களுக்குப் புரியாது என்று ஒன்று இல்லை. வருசம்... வருசம்... என்று முன்பிருந்து நம்மிடையே அவன் சொல்லிக் கொண்டே இருந்ததால்தான் நம் மக்களுக்கு வருசமும் வருசப்பிறப்பும் தொற்றிக் கொண்டது. நாம் அதை மாற்றி ஆண்டு... ஆண்டு... என்று சொல்லிப் பழக்கினால் ஆண்டும் ஆண்டுப்பிறப்பும் வாராதா? அவர்களை மாற்ற முடியாதா? அடிமைத்தனத்திலிருந்து மீளவே முடியாது என்ற நிலையில் நாமிருந்தபொழுதுதான் பெரியார் வந்தார். அவர் வந்ததற்குப் பின் நாமெல்லாம் உணரவில்லையா? மீளவில்லையா? நாம் மீண்டுவிட்டோம் ; நம்மக்களையும் நம்மைப்போல் மீட்கவேண்டுமல்லவா ?

மொழி மேலே விழி வைத்தே
முடிமன்ன ராண்ட தமிழ்நாடு – வட
மொழி யான ஆரியத் தால்
அழியாத கலை வாழும் தமிழ்நாடு !

என்று ***உடுமலை நாராயணகவியார்*** பாடிய தமிழ்நாடும் தமிழும் இன்று ஆரியப் பார்ப்பனரின் கைப்பிடியில் அல்லவா சிக்கித் திண்டாடுகின்றன.

போதாக்குறைக்கு நம்மைப் புறக்கணிக்கும் ஆரியனை நாமே தூக்கிப் பிடிப்பதுபோல் ***தீபாவளி*** என்னும் விளக்கணிவிழா வேறு. முழுக்க முழுக்க ஆரியப்பண்பாட்டையும் தமிழின அழிப்பையும் முகாமையாகக் கொண்ட இவ்விழாவைக் கொண்டாடிய மடத்தமிழர் மிகப் பலர். படித்தவர் – படிக்காதவர், ஏழை – பணக்காரர் என்று எல்லாநிலையில் இருப்போரும் கொண்டாடி, வெடித்து, இனித்துக்

களித்துத் தீர்த்துவிட்டார். அதிலும் முன்பெல்லாம் ***பலகாரம்*** என்று தமிழில் சொல்லிய நம் தமிழவாய்களும், இப்போது ***பட்சணம்*** என்று அவாளின் மொழியிலேயே சொல்லிக்கொண்டு திரிகின்றன.

எத்தனையோ தமிழர்க்குக் குறுஞ்செய்தி மூலமும் நேரிலும் எடுத்துச் சொன்னாலும் புரிந்தபாடில்லை. தமிழனைக் கொன்ற ஆரியனின் விழா என்று வாய்வலிக்கச் சொல்லி விளக்கினாலும், கடைசியில் "ஆண்டுக்கொரு நாள் தானே, கொண்டாடினால் என்ன ?" என்று ஓர் எதிர்க்கேள்வி. கேரளத்திலோ கருநாடகத்திலோ இன்னும் பிற தென்மாநிலங்களிலோ எவரேனும் இதனை இந்த அளவு சிறப்புறக் கொண்டாடுகின்றனரா... இல்லையே ! நம் தமிழ்நாட்டில் மட்டும் இழவினைக் கொண்டாடி மகிழ்வதில் தமிழனுக்கு நிகர் தமிழனே ! அந்தளவு நம் தமிழருள் கலந்து பரவிக், கலப்படம் செய்து, விளங்கித் திரிந்து, நம்மை மாற்றியுள்ளனர் ஆரியப் பார்ப்பனர்கள்.

இங்கெல்லாம் – இந்த நாட்டு மக்களையெல்லாம் ***தீபாவளி*** – மூடத்தனத்தில் புரட்டிக் குளிப்பாட்டியது போதாதென்று அமெரிக்க நாட்டில் ஒபாமாவின் வெள்ளை மாளிகைக்குச் சென்று அங்கேயும் இந்தக் கேட்டினை அரங்கேற்றியுள்ளனர். ஆரியனின் திரிபினை அறிந்திராத ஒபாமாவின் வெள்ளை மாளிகையிலும் **தீபாவளி** எனும் பெயரில் பகுத்தறிவுக்கொவ்வாத மூடச் சடங்குகளைச் செய்து, அங்கும் தன்னுடைய ஆரியப்பண்பை நிலைநாட்டியுள்ளனர்.

ஆக, ஆரியப் பார்ப்பனரைப் பொறுத்தமட்டில் தங்களுடைய இழிந்த பண்பாட்டையும் – நாகரிகத்தையும் – மூட நாற்றங்களையும் பிற இனத்தினரிடையே பரப்பி – அதன் மூலம் தம்மை அவர்களிடையே உயர்ந்தோர் போலவும் வணங்கத் தக்கோர் போலவும் உருவகித்து, மெல்ல மெல்லத் தன் ஆளுமையைச் செலுத்திப் பிறரைப் பின்தள்ளி முன்னேறுவதே அவர்களின் முகாமையான நோக்கும் போக்குமாக அன்றும் இன்றும் என்றும் இருக்கும் என்பதை அறிவுள்ள நம் தமிழர் யாரும் மறந்துவிடுதல் கூடாது. அவர்களிடம் மிக மிக எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும்.

## 11. மொழிக் கொலை புரியலாமா...?

உலகிற்கே பண்பாட்டையும் நாகரிகத்தையும் உருவாக்கித் தந்த தமிழினம், இன்று தன்னுடைய பண்பாட்டையும் நாகரிகத்தையும் இழந்துவருகிறது. பண்பாட்டுச் சீர்குலைவுக்கும் நாகரிகப் பின்னடைவுக்கும் முழுமுதற்கரணியம், தமிழர்தம் மொழியை மறந்து வருவதே - மொழிக் கொலை புரிந்து வருவதே !

**என் சேட்டன்-சேட்டி, ஓட்டன்-ஓட்டி, பாட்டன் - முப்பாட்டனாரும், பாட்டி - முப்பாட்டியரும் தம் வீடுகளில் - வயல்வெளிப் பணியிடங்களில் - சுற்றுப்புறங்களில் - அக்கம்பக்கத்தில் தாய்த்தமிழிலேயே பேசினர்.**

ஆரியக்கலப்பு - வடமொழிக்கலப்பு - கோயில்களில், வழிபாட்டுத் தலங்களில் கலந்திருந்தாலும் மக்கள்தம் உரையாடற் பழக்கங்களில் செந்தமிழே பெரும்பான்மை பெற்றிருந்தது. அதனால் தான் நம் பைந்தமிழ் பன்னெடுங் காலங்களாய் மாறாது, மறையாது, ஒளிர்ந்து, திகழ்ந்து வருகிறது.

**எனக்குத் தெரிந்து என் அப்பாயி (அப்பாவின் ஆயி = அப்பாவின் அம்மா), என் அம்மாயி (அம்மாவின் ஆயி) ஆகியோருடன் 20 - 25 ஆண்டுகள் வாழ்ந்துள்ளேன். அவர்களின் பேச்சு வழக்குச் சொற்கள் எல்லாம் செந்தமிழில்தான் இருந்தன. (ஏதோ இன்றுதான் நாம் (நாம் மட்டும் ) தூய தமிழில் பேச முயல்கிறோம் என்று எண்ணி, மற்றவர்களைப் போல் இயல்பாகப் பேசுங்களே, தனித்தமிழிலேயே பேசாவிட்டால் என்ன... என்று கிண்டல் செய்கின்றனர் மொழியுணரா மாக்கள் சிலர்.)**

என் தாத்தாவும் பாட்டியும் தைப்பொங்கலைப் புத்தாண்டு என்று சொல்லித் தந்தனர். அவர்கள் ஒன்றும் கருணாநிதி சொன்னாரென்றோ செயலலிதா சொன்னாரென்றோ தமிழ்ப்புத்தாண்டு தை எனக்குறிக்கவில்லை. தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொன்னவர்களும் அவர்களே. ஆனால் இன்றுள்ள தமிழ்ப் பகைவர் சிலர் தமிழ்ப்புத்தாண்டை மாற்றி மாற்றிக் குழப்பி, மக்களை

மூடர்களாக்கப் பார்க்கின்றனர். தமிழரின் பண்பாட்டை மறைக்க - அழிக்க முயலும் ஆற்றல்களில் இதுவும் ஒன்று.

அதே போல், **பண்டுவம்** எனும் சொல்.

இப்பொழுது எந்த மகன் - மகள், எந்தப் பெயரன் - பெயர்த்தி இதைப் பயன்படுத்துகின்றனர், சொல்லுங்கள் ! இது தூயதமிழ்ச் சொல் என்று அறிந்த தமிழுணர்வாளர்களே - தமிழறிஞர்களே இதனை இன்றும் பயன்படுத்துகின்றனர். ஆனால், என் தாத்தா பாட்டி - அவர்கள் பிறந்தது முதல் இப்போது வரை ( ஏறத்தாழ 90 - 95 ஆண்டுகள் இதனை ( இதுபோன்ற பெருமளவு சொற்களை )ப் பயன்படுத்தி வருகின்றனர்.

"மேலுக்கு நல்லால்லையா...?, பண்டுவம் பார்த்தயா...? " என்று, இதுதான் அவர்களின் பேச்சுத்தமிழ். ( உடலை மேனி - மேல் என்று கூறுவது நம் முன்னோர் மரபு. ) ஆனால், இன்று நம் தமிழ்ப் பிள்ளைகளின் வாயில் வடமொழி வந்து, ஆங்கிலம் வந்து, இன்னும் என்னென்னவோ இறந்துபோன மொழிகளெல்லாம் வந்து தாய்த்தமிழைக் கொலையே செய்கின்றனர்.

" Fever ஆ?" "Cold ஆ?"

" Treatment எடுக்கலையா ? " என்று.

இன்னும் சிலர், தமிழாக்குகிறேன் என்று எண்ணி,

"ஜுரமா...?, ஜலதோசமா...?, டாக்டர்ட்ட போகல...? "

" Back Pain ஆக இருக்கு. Stomach Pain வேற..."

"அறுவை சிகிச்சை பண்ணலையா...?"

என்று தமிழையும் முழுமையின்றி, ஆங்கிலத்தையும் தெளிவின்றி மென்று துப்புகின்றனர்.

(ஏன் முடிந்தால் - திறமை இருந்தால் முழுவதையும் ஆங்கிலத்திலேயே சொல்லுங்களேன்... அதென்ன நுனிநாக்கு ஆங்கிலம் ? தாய்மொழியையும் சிதைத்து, ஆங்கிலத்தையுமல்லவா சிதைக்கிறீர்கள்..?)

ஒரு பேருந்து நிறுத்தத்திலோ - உணவகத்திலோ - திருமண வீட்டிலோ " **தண்ணீர் கொடுங்க...!**" என்று கேட்பதில் என்ன கேடு வந்திடப் போகிறது...? " Water கொடுங்க... Water ஊத்துங்க..." என்று சொன்னால் தான் நம் நீர்வேட்கை தீருமா..? அப்பொழுதுதான் ஆங்கிலப் பெருமை பீற்ற முடியுமா ? அங்கு வேலைசெய்யும்

மாந்தர்களுக்குத் தமிழில் கேட்டால் புரியாதா... அல்லது தமிழில் கேட்டால் தண்ணீர்தான் தர மாட்டார்களா?

எங்கள் குடியிருப்பு அருகில் உள்ள பெண், இளநீர் வணிகரிடம் இளநீரை வாங்கும்போது, "Cut பண்ணிக் கொடுங்க..." என்கிறார். ஏன் வெட்டிக் கொடுக்கச் சொன்னால் அவருக்குப்புரியாதா...? அவர் ஓர் அன்றாடத் தமிழர் தானே...? அவருடைய தாய்மொழியும் தமிழ் தானே...? இயல்பாகப் பேசுங்கள்... என்று சொல்வோரே...! இது இயல்புத் தமிழ் தானே... ஏன் இதைச் செய்ய மறுக்கிறீர்கள்...?

" பீட்ரூட் " என்று இன்றும் நம்மில் பெரும்பாலானோர் சொல்லிக் கொண்டு திரியும் ஒருவகைக் கிழங்கு உணவை என் பாட்டி, இன்றும் " **சிவப்புக் கிழங்கு** " என்றுதான் சொல்கிறார்கள். நம்மில் ( இத்தலைமுறையில் ) எத்தனைபேர் இப்படி மொழியைச் சிதைவின்றிப் பேசுகிறோம்..?

**தமிழர்களே ! இப்படிச் சின்னச் சின்ன அன்றாட நிகழ்வுகளிலெல்லாம் அயல்மொழிக்கலப்பால் நாம் நம் தமிழை மறந்து – இழந்து போய்க்கொண்டிருக்கிறோம், அதன்மூலம் நாம் இறந்துபோய்க் கொண்டிருக்கிறோம்.**

மொழியை முறையாகப் பயிற்றுவிக்க வேண்டிய பெருங்கடமை கொண்டுள்ள பள்ளிகளில் – அரசுப் பள்ளிகளில் இன்றைய நிலை என்ன...? ( ஆங்கில–பதின்மப் பள்ளிகளில் தான் பள்ளி வளாகத்தினுள் கூட ஆங்கிலமின்றித் தமிழில் பேசினால் தண்டத்தொகையும் தண்டனையும் விதிக்கின்ற வெட்கக்கேடான – இழிவான செயல்கள் நடக்கின்றன... ) ஆங்கிலப் பள்ளிகளுக்கு இணையாகச் சொல்லித் தருகிறேன் என்று கூறித் தமிழ்வழி அரசுப் பள்ளிகளிலும் அதன் ஆசிரியர்கள் பெரும்பாலானோர் இத்தகைய மொழிக்கலப்பை – தமிழ்மொழிக் கொலையைப் புரிகின்றனர். நாங்கள் பள்ளிப் பருவத்திலிருந்தபோது இதே அரசுப் பள்ளியில் பயிலும்போது "பள்ளிக்கூடம் போகிறோம், பள்ளிக் கூடம் விட்டாச்சு..." என்றுதான் சொல்லிப் பழக்கம். இன்றோ " School "தான் வருகிறது... எல்லா ஆசிரியர்களின் வாய்களிலும். "Sir " உம் " Teacher " அல்லது " Madam" உம் தான் வருகின்றன, ஒருவர் கூட **ஐயா** என்றோ **அம்மா** என்றோ சொல்வதில்லை (பெரும்பான்மைத் தமிழாசிரியர்கள் உட்பட). தம் தாய்மொழியைத் தாமறியாமலேயே கொலை செய்கிறோம்

என்பதை இவர்கள் உணர்வதே இல்லை.

எங்கள் ( கொழுமம் ) ஊரில் ஓடும் ஆற்றுக்கு அந்தப் பக்கம் ஓர் ஊர், இந்தப் பக்கம் எங்கள் ஊர். இரு ஊர்களுக்கும் நடுவே தான் அந்த ஆறு ஓடுகிறது. இன்றும் நான் வெளியில் – ஊருக்குப் பேருந்தில் சென்றுவந்தால் என் பாட்டி கேட்பார், " அக்கரைக்குப் போய் வந்தாயா...? " என்று. அதாவது, அவர்கள் காலத்திலிருந்து அந்த ஊரை அவர்கள் அக்கரை ( அந்தக் கரை = ஆற்றின் அந்தக் கரை ) என்றும் எங்கள் ஊர் இருப்பது இக்கரை என்றும் அவர்கள் கூறிவருகிறார்கள். ஆனால், ( எங்கள் ஊர் – குழுமம் – கொழுமம் ஆகிவிட்டது, இதுகூடத் தாழ்வில்லை.) அந்த ஊரின் பெயரை இன்று என்னென்ன சொற்களில் திரிக்க முடியுமோ அந்தளவு திரித்து, மாற்றிக், கெடுத்து, அழைத்து வருகின்றனர் என்பது தான் வெட்கக்கேடான செய்தி. ஆற்றின் அக்கரையிலுள்ள **குமணனூர்** ( குமணன் ஆண்ட பகுதி ) என்னும் அவ்வூர் குமணலிங்கம் ஆகி – குமரலிங்கம் ஆகி – இப்போது கொமரலிங்கம் என்றாகிவிட்டது. லிங்கம் என்பதன் இழிபொருள் என்ன என்பது தமிழ் கற்றோருக்குப் புரியும். இப்படிக் கெடுத்துத் திரித்து தமிழ்க் கொலை புரிவதற்கு, **அக்கரை** என்னும் சொல் ( பெயர் ) எவ்வளவோ சரியான தமிழில்லையா...?

இதேபோல், " ரவ்வுல கண்ண முழிச்சுப் படிக்காத, விடியக் காலைல எழுந்து படி...! " என்பார் என் பாட்டி.

இரவைத் தான் பேச்சு வழக்கில் பேசும்போது **இ** மறைந்து **ரவ்வா**கத் தெரிகிறது. ஆனால், இன்று நம் பிள்ளை குட்டிகள்...? " நைட்ல பிலிம் பார்த்துட்டு, லேட் நைட்டா வந்து, மார்னிங்ல தூங்கறயா...? " என்று சரமாரியாகக் கொல்கின்றனர். (இவர்களுக்கெல்லாம் காசி ஆனந்தன் ஐயா சொன்னது போல், இரவை நைட் என்றாய், விடியாது உன் வாழ்க்கை... என்று தான் சொல்ல வேண்டும்.)

விரைவா வா... விரைசலா வா... என்பர் நம் தாய் தந்தை., நாம் அதைக் கொலைசெய்து, இன்று "Quick" ஆக்கி விட்டோம்.

" சோறு ஆக்கியாச்சா ? ", " **பருப்புஞ்சோறும் செய்யவா, கூட்டாஞ்சோறு உண்ணலாமா...?** " என்று பாட்டி சொன்ன தமிழெல்லாம் போய் (இப்போது சோறு என்றாலே தமிழ்நாட்டில் இழிவென்று ஆக்கி விட்டனர். ஆனால் சோற்றை மலையாளத்தான் மறவாமல் சொல்லுகின்றான். அவன் தின்பது சோறு, நாம் தின்பது வேறோ...?) இப்போது "பருப்பு சாதம் " வந்து, "

லெமன் சாதம், புளி சாதம், தயிர் சாதம் " என்றெல்லாம் பல்கிப் பெருகி விட்டது. உணவகத்தில் போய் நின்றால் ஒரு "வாய்" கூடச் சோறு கேட்பதில்லை, எல்லாப் புடுங்கிகளும் "சாதம்" தான். அதிலும் "White Rice" கேட்கின்ற **நாறைவாய்கள்** இங்கு மிக அதிகம். அது என்ன "White Rice" ? வெள்ளை அரிசி என்றுதானே பொருள்... சோற்றுக்கு மாற்றாக அரிசியையே கொண்டு வந்து கொடுக்கச் சொல்கின்றனரா...? அப்படித்தானே பொருளாகிறது. அரிசிக்கும் Rice, சோற்றுக்கும் Rice ஆ?

" ராஜ் " என்றும் " ராஜ் " என்றும் பெயர் வைத்துக் கொண்டு பெருமை என்கின்றனர். ராசா என்று கூப்பிட்டால் மானக்கேடாம். ஆனால், என் தாத்தா – பாட்டி என்னை ராசா என்றுதான் அழைத்தனர். பெயர் வேறாக இருந்தாலும் அழைக்கும்போது " ராசா " என்றுதான் அழைத்தனர். " ராசா " என்றால்....? அரசன்... ராசன் ஆகின்றது... அரசா என்று அவர்கள் அழைப்பது ராசா என்று நமக்குக் கேட்கிறது. (இங்கு ஒலிப்பில் அ மறைந்து வருகிறது.) உடனே இதை ஆரியர்களும் – வடமொழிப் பண்டிதர்களும் ( ? ) ராசாவை ராஜாவாக்கி, ராஜ் என்று வைத்துவிட, அதை நம்மூர்த் தமிழன்களும் அப்படியே சொல்லிக் கொண்டு திரிகின்றனர். இது தாய்மொழியைக் கொலைசெய்யும் கேடுதானே...?

( யார் யார் வீடுகளில் தாத்தாமார் – பாட்டிமார் இல்லையோ அவர்களும் மொழிக்கொலை புரிகின்ற கொடுஞ்செயலைச் செய்கின்றனர். )

**புதுமனை புகுவிழாவை** – இன்றும் நம் தமிழர்களின் வாய்கள் " **கிரகப் பிரவேசம்** " என்றுதானே பலுக்குகின்றன.

பேசுவதில் மட்டுமா...? பெயர்களில் – பலகைகளில் – சுவர்களில் – அழைப்பிதழ்களில் – செய்தித்தாள்களில் – ஏடுகளில் எழுதுவதிலும் தமிழைத் தாறுமாறாகக் கொலைபுரிகின்றனரே...?

**" இங்கு மீன் வறுவல் கிடைக்கும் " என்னுமிடத்தில் வறுவலுக்கு மாறாக "வருவல்" இருக்கிறது.**

**" மணப்பாறை முறுக்கு" என்றெழுதப்பட வேண்டிய உறையில் முறுக்குக்கு மாறாக "முருக்கு" என்று இருக்கிறது.**

**" சரியான சில்லறை தரவேண்டும் " எனக்கேட்கும் பேருந்துகளில் சில்லறைக்கு மாறாக " சில்லரை " தான் எழுதிக் கேட்கின்றனர்.**

**" கம்பங்கூழ் " விற்கும் தள்ளுவண்டியில் " கம்பங் கூல் " தான் எழுதப்பட்டிருக்கிறது.**

இவையனைத்தும் வேறு மாநிலங்களிலோ வேறு நாட்டிலோ வேற்றுக் கண்டத்திலோ இருக்கவில்லை. தமிழ் பிறந்து வளர்ந்த, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட – நம் தமிழர்நாட்டிலே – நம் தமிழர்கள் நடுவே தான் இத்தனை தமிழ்க்கொலையும். சற்றேனும் இதைப் பற்றி யாரும் சிந்திக்கின்றனரா...? இதை இப்படி எழுதலாமா என்று யாரிடமாவது கேட்டு எழுதுகின்றனரா ? ( ஆங்கிலச் சொல் அல்லது சொற்றொடர் ஒன்றை எழுதும்முன் ஆயிரம் முறை கேட்கின்றனர், இதை இப்படி எழுதலாமா... இந்த இடத்தில் "E" வருமா... "A" வருமா...? என்று. ஆனால், தமிழில் எழுதும்போது மட்டும் ஏன் இதுபற்றிச் சிந்திப்பதில்லை...? தமிழ்த்தாய் மன்னித்துவிடுவாள் என்ற எண்ணமா ? அல்லது அவள் எதையும் கேட்காமல் பெருமிதமாய் விட்டுவிடுவாள் என்ற குருட்டாம்போக்கா...?

தமிழர்களே ! மொழித் தூய்மை காக்காமல் வழிவழி வந்த பண்பாட்டையும் மரபையும் காப்பதென்பது என்றும் இயலாதது. மூத்தோர் சொல்லும் முதுநெல்லிக் கனியும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும் என்னும் நன்மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம். நம் மூத்தோர் – முன்னோர் நம்முடன் வாழ்ந்த வரை – வாழும் வரை நம்முடைய பல்வகைச் செல்வங்களுள் மொழிச் செல்வமும் காக்கப்பட்டது. அவர்களைப் பிரிந்தபின்பு அச் செல்வம் சிறுகச் சிறுகத் தேய்ந்து, குறைந்து வருகிறது. இப்படியே மொழிக்கொலை புரிந்தோமானால் அச்செல்வம் நம்மிடம் இல்லாமலே போய்விடும் சூழல் உருவாகிவிடும். பிறகு, நம் பிறங்கடைகளுக்கு, நம் பெயரன் – பெயர்த்திகளுக்கு நாம் யாரென்ற அடையாளமோ நம் மொழி – இன அடையாளமோ இல்லாமல் (60 வடமொழி ஆண்டுகளுள் இன்னமும் ஆரியன் கூறிக்கொண்டுள்ளதுபோல் ) நம் வரலாற்றின் சுவடே நம் பின்னவர்க்குத் தெரியாமல், மறைந்தழிந்து விடும்.

எனவே, தமிழர்களே ! புதிதாக நாமொன்றும் செய்யச் சொல்லவில்லை. இதுவரை இருந்ததை, நம் பாட்டன்–பாட்டி பயன்படுத்தியதைத் தான் தொடரச் சொல்கிறோம். பேசும் தாய்மொழியைத் தவறின்றிப் பேசுவோம், மொழிக்கொலை புரியாமல் காப்போம் ! எதிர்காலத் தமிழினத்திற்கு நம் மொழிச் செல்வத்தைக் கொடுத்துச் செல்வோம்...!

# 12. ஈழம் மீளும்...!

ஆற்றல்மிகு படையுடன் ஆர்த்திடும் வீரத்துடன்
அன்றைக்கு வென்றான் சிங்களத்தைச் சோழன் !
நேற்றுவரை ஈழத்தில் நிகழ்ந்தவை அறிந்தும்
நிலையுணரா திருக்கின்றான் இன்றைக்குத் தமிழன் !
வேற்றினத்தான் முன்னேநம் வேய்தமிழர் இனங்காக்க
வேழமெனப் போர்புரிந்த சோழமகன் புகழெங்கே ;
தோற்றிடுமே தம்கட்சி, தொலைந்திடுமே பதவியெனத்
தொடர்கின்ற கூட்டணியில் அரசியலார் இழிவிங்கே !

ஆம் ! பதவி மட்டுமே நோக்காய்க் கொண்ட பண்பிலா அரசியலார் சிலர்க்கு கடந்த சில ஆண்டுகள் தொடங்கி, இன்றும் பகடைக்காயாய்ப் பயன்படும் செய்தி ஈழச்சிக்கல்.

இத்தகையோரெல்லாம் பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுபவர்கள். ஈழத்தில் நடைபெற்ற அத்தனை பெரிய இனப்படுகொலையைத் தடுத்திடவும் எதிர்த்திடவும் சரியான வாய்ப்புகளும் நன்னிலையும் இருந்த காலக்கட்டத்தில் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தாது பதவி அரசியல் செய்த கூட்டங்கள் இன்று திடுமென ஈழத்தை ஆதரிப்பது போன்று பேசிக்கொண்டும் அறிக்கைவிட்டுக்கொண்டும் இருக்கின்றனர்.

எங்கே, ஈழமென்னும் ஓர் நாடு - தமிழனுக்கென்று அமைந்துவிட்டால், அதில் சரியான - நேர்மையான அரசாட்சியைத் தமிழன் செய்துவிட்டால், தமக்கெல்லாம் இங்கே - இந்தத் தாய்த்தமிழ்

நாட்டில் இப்படிக் கேடுகெட்ட அரசியல் செய்ய முடியாமல் போய்விடுமோ, தம்முடைய ஏழேழு தலைமுறைக்கான பணத்தாசை, பதவியாசை எல்லாம் மண்ணோடு மண்ணாகப் புதைந்திடுமோ என்றெல்லாம் அஞ்சிக்கொண்டுதான் இந்தக் கல்நெஞ்சக்காரர்கள் எல்லாம் கனிந்துவரவேண்டிய அந்தத் தமிழீழத்தைக் காயோடு வெட்டிவீழ்த்துவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றி வந்துள்ளனரோ என்று நமக்கெல்லாம் எண்ணத்தோன்றுகிறது.

சிங்களவனை விடுங்கள், அவன் நமக்கு நேர் எதிரி. இந்தியத்தையும் விடுங்கள், அதுவும் தமிழனுக்கு எதிரி என்பது தந்தை பெரியார் காலத்திலிருந்தே ஆண்டாண்டு காலங்களாய் அறிந்த ஒன்று. ஆனால், வழிவழியாய் – ஒவ்வோர் தேர்தலிலும் நம்மிடம் – நம் தமிழரிடம் ஒப்போலை வாங்கி வாங்கி, மாறி மாறி வெற்றிபெற்று, ஆட்சிக்கட்டிலில் அமர்ந்து சுவைகண்ட நம் தமிழ்நாட்டுக் கட்சிகள் நினைத்திருந்தால் – அவை உண்மையான தமிழர் நலத்தோடு செயற்பட்டிருந்தால் நமக்கு என்றைக்கோ ஈழம் கிட்டியிருக்கும். ஆனால், அவை அப்படிச் செயற்படவும் இல்லை அப்படி நினைக்கவுமில்லை.

அதுமட்டுமின்றி, கால்நூற்றாண்டுகளுக்கும் மேலாய்க் கட்டுப்பாட்டுடனும் நேரிய ஒழுக்கத்துடனும் போராடிய அந்தத் தமிழீழப் போராளிகளை – தமிழீழ மக்களை இந்தியப் பெரும்படையின் துணையோடு சிங்களக் காடையன் அழித்தொழித்தபோது, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததோடு மட்டுமல்லாது முத்துக்குமரன் போன்றவர்களின் உயிர் ஈகத்தின் மூலம் கிளர்ந்தெழுந்த மக்கள் எழுச்சியையும் அடக்கி ஒடுக்கி, மூலையில் அமர வைத்தனர்.

தலைவர் கதிர்க்கையன் ( பிரபாகரன் ) அவர்களின் இளைய பிள்ளை பாலச்சந்திரனைக் கொடுமையாகக் கொன்றழித்த சிங்கள நரிச்செயல், ஊடகங்களின்வழியே வெளிவந்தபின்பு இப்போது அண்மையில் எழுந்த மாணவர் அலையும் அவர்தம் உண்ணா நிலையும் நெடுங்காலத்திற்குப் பிறகு தமிழினத்திற்குள் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டமாய் நாமெல்லாம் பெருமையுடன் எண்ணிக்கொண்டிருந்தோம். அதுவும் இளைய தலைமுறையின் எழுச்சிமிகு போராட்டம் உலகெங்கும் வாழும் தமிழர் அனைவருள்ளும்

புதிய உணர்ச்சிக் குருதியைப் பாயச் செய்திருந்தது. ஆனால், அதனையும் வளரவிடாமல் இங்கு ஆளுகின்ற அரசுகள் அந்த இளங்குருத்துகளை அச்சுறுத்தி, அப்படியே திசைதிருப்பி, அடக்கிவிட்டனர்.

ஆதலால், வாழ்நாள் முழுதும் உண்ணாநிலை இருந்தாலும் அமைதியான இந்தப் போரினால் அழகான ஈழத்து விடுதலையை அவ்வளவு எளிதில் பெற்றுவிட முடியாது.

ஐயா பிரபாகரன் அன்றைக்கு எடுத்த முடிவு தான் சரி. ஆம், வாளை வீழ்த்திட வாளைத்தான் எடுக்க வேண்டும். கருவிப் படையை எதிர்த்திட இன்னொரு கருவிப்படை எடுத்துத்தான் ஆகவேண்டும்.

அன்று இந்திய விடுதலையைப் பெற மோகனதாசு அவர்களின் அமைதிப்போரை ( சத்தியாகிரகத்தை ) விட, சுபாசு சந்திரபோசு அவர்களின் கருவியேந்திய போரே அதிகப் பங்காற்றியது என்னும் பேருண்மையை வரலாறு சொல்லும். அது எக்காலத்தும் – எத்தகைய விடுதலைப் போராட்டத்துக்கும் பொருந்தும். அந்த வகையில்,

நம் சொந்த மண்ணான தமிழீழம் விடுதலை பெற, நம் சொந்த மக்களான ஈழத்தமிழர் மீண்டும் நல்வாழ்வு காண, இன்னொரு கருவிப்படை – புலிப்படை புறப்பட்டு வரும், நம் தலைவர் பிரபாகரன் மீண்டும் வருவார். ***வருவான்டா பிரபாகரன் மறுபடியும் – அவன் வரும்போது சிங்களவன் கதைமுடியும்*** – என்னும் உணர்ச்சிப்பாவலரின் வரிகள் உண்மையாகும். எம் தலைவர் மீண்டு(ம்) வருவார்.

உண்டு கொழுத்த பன்றியாய் இங்கெமை உயிருடன் தின்னும் குடுமிக் கூட்டம்போல், மென்று மிதித்தே எம்மின விடிவை மீளவிடாமல் – எந்தமிழ் மக்களைக் கொன்று புதைத்தே கொண்டாடும் சிங்களனைக் குழியில் தள்ளாமல் போகாது எம்படை ! வேண்டும் உரிமையை வீறுடன் மீட்டு வெற்றி கொள்ளாமல் வீழாது தமிழ்க்குடை !

இன்தமிழ்ப் போர்ப்படை சிங்களத்தைச் சூழும் ;
எந்தமிழ்ப் பேரினம் தன்னாட்டை ஆளும் !
ஈழம் மீளும்...! ஈழம் மீளும்...! ஈழம் மீளும்...!

# 13. தமிழ்வழிக் கல்வி....?

தமிழ்வழிக்கல்வி...யின் நிலை இனி வினாக்குறியாகி விடும்போல் இருக்கிறது.

அரசுப் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வி முறை செயற்படுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. ஏற்கெனவே ஆங்கிலத்தாக்கம் - ஆங்கிலவெறியாக மாறிப்போகுமளவுக்கு, நம் தமிழ்ப்பிஞ்சுகளின் இயல்பான தாய்மொழியை மறக்கடித்து, ஆங்கிலவழிக் கற்றால் மட்டுமே, என்னமோ பெரிய அறிஞர்களாக ( மேதைகளாக ) ஆகிவிடுவர் என்று குருட்டுப்போக்காய் எண்ணிக்கொண்டு, அரும்பாடுபட்டேனும் அல்லல்பட்டேனும் தம் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றனர். இதன்மூலம் தாய்மொழியாம் தமிழ்வழிக்கல்வியை அடியோடு புறக்கணித்து, தம்மையறியாமல் தமிழ்மொழியைக் கொன்றுபுதைக்கின்ற வழியில் சென்றுகொண்டிருக்கின்றனர்.

இது போதாதென்று,

செல்வமில்லா வறியவர்களின் பிள்ளைகள் கற்கின்ற அரசுப்பள்ளியெனும் தமிழ்ப் பள்ளிகளின் மூலம் தான் தமிழ்வழிக் கல்வி வாழ்ந்து கொண்டிருக்கிறது. சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி - என்கின்ற கதையாய், அவர்களையும் சேர்த்துக் கெடுப்பதுபோல், அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆங்கிலவழிக் கல்வி கொடுக்கிறேனென்ற பெயரில் அரசுப்பள்ளியிலும்

தமிழைச் சிதைத்து, இனிவரும் தலைமுறையையே தாய்த்தமிழை மறக்கச் செய்து, மழுங்கடிக்கச் செய்யப் போகிறதா அரசு ?

மக்கள், ஆங்கிலவழிக் கல்விதான் கேட்கிறார்கள். அப்போதுதான் தனியார் பள்ளிகளை விட்டு, அரசுப் பள்ளிகளில் மக்கள்தம் பிள்ளைகளைச் சேர்ப்பார்கள் என்று விளக்கம் வேறு கூறுகின்றனர். ஆடு நனைகின்றதே என்று ஓநாய் வருந்தியதாம்...

மக்கள் விருப்பத்தை அரசு நிறைவேற்ற வேண்டுமென்றால், தனியார் பள்ளிகளுக்கு இணையாக, இன்னும் சொல்லப்போனால் தனியார் பள்ளிகளுக்கு மேலான தரத்துடன் – ஒழுங்குடன், செம்மையாக – நேர்மையாக அரசுப் பள்ளிகளைச் செயற்படச் செய்தாலே போதும். மக்கள் அனைவரும் தம் பிள்ளைகளைத் தாமாக அரசுப் பள்ளிகளில் கொண்டுவந்து சேர்ப்பர். குழந்தைகளைக் கட்டுப்பாட்டுடன் நெறிப்படுத்திக், கல்வி கற்றுக் கொடுப்பதிலும் பள்ளி வளர்ச்சிக்கென அரசு தருகின்ற தொகைகளை – செலவினங்களை, நேரிய வழியில் பள்ளிக்கெனச் செலவிட்டுப் பள்ளியை மேம்படுத்துவதிலும் பணிபுரியும் ஆசிரியர் அனைவரும் தாம் வாங்கும் ஊதியத்திற்கும் தம் பதவிக்கும் இரண்டகம் செய்யாமல், தம் கடமையைச் சரியாகச் செய்தாலே போதும். அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகளை விட உயர்ந்த தரத்திற்குச் செல்லும்; மக்களும் அரசுப் பள்ளிகளைத் தேடிவருவர். அதைவிடுத்து,

தென்னை மரத்தில் தேள்கொட்டினால் பனைமரத்தில் நெறி கட்டியதாம் என்பதைப்போல், தரத்தை உயர்த்துவதை விட்டு, தாய்மொழிவழிக் கல்வியை மாற்றுவது என்பது அடிமடியில் கைவைப்பது போன்றது. ஆம் ! தாய்மொழிவழிக் கல்வியைப் புறந்தள்ளுவது, மரத்தை வெட்டுவது போன்றதல்ல, மரத்தின் ஆணி வேரையே இனிமேல் தளிர்க்காமல் – முளைக்காமல் பிடுங்கி எறிவதற்குச் சமமாகும்.

மற்ற நாடுகளிலெல்லாம் தத்தம் தாய்மொழியைப் படித்தால் தான் வேலை. அருகிலுள்ள கருநாடகம், கேரளம், ஆந்திரத்திலும் கூட அப்படித்தான். ஆனால், இந்த நாட்டில் தான் தாய்மொழி வழியில் படிக்காவிட்டால் மட்டுமல்ல, தாய்மொழியை ஓர் மொழிப்பாடமாகக் கூடப் படிக்காமல் இருந்தாலும் பிழைக்கலாம் ; குப்பை கொட்டலாம். கேட்பாரில்லை!

ஆங்கிலவழிக் கல்வி இருந்தாலும் தமிழ் ஓர் மொழிப்பாடமாக இருக்கும் என்று சப்பைக்கட்டுக் கட்டுகின்றனர். ஏற்கெனவே அரசு ஏற்பிசைவு வழங்கிய தனியார் – பதின்மப் பள்ளிகளில் இப்படித்தான் மொழிப்பாடமாகத் தமிழைக் கட்டாயப்படுத்தாமல் தமிழும் எடுத்துக்கொள்ளலாம் என வைத்துள்ளனர். ஆனால், அதற்கு மாற்றாக (Eithor or) இந்தி, பிரெஞ்சு போன்ற இன்னபிற மொழிகளை அத் தனியார் நிறுவனங்கள் வைத்துவிடுகின்றன. நம் அறியாமை மக்களோ – வேற்றுமொழியில் முகிழ்ந்த மக்களோ மொழிப்பாடமாகத் தமிழைப் புறந்தள்ளி அந்தப் பிறமொழிகளைத் தம் பிள்ளைகளுக்குத் தேர்வு செய்கின்றனர். ( என்னமோ இதையெல்லாம் கற்றவுடன் அந்த மொழியுள்ள நாடுகளுக்குச் சென்றுவிடலாம் என்பதுபோலவும் அங்கு தம் பிள்ளைகளுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது என்பதுபோலவும் மூடத்தனமாக எண்ணிக்கொள்கின்றனர்.) இதனால், தாம் பிறந்த – தம்முடைய இனம், பண்பாடு, நாகரிகம் எல்லாம் மறைக்கப்பட்டு, சிதைக்கப்படுகிறதே என்பதைச் சிறிதும் சிந்திக்காமல் இப்படி முடிவெடுக்கின்றனர்.

ஆங்கிலவழியில் கல்வி கற்பிக்கப்பட்டாலும் தமிழும் ஓர் மொழிப்பாடமாக இருக்கும் என்கின்றனரே, அதையே நாம் திருப்பிக் கேட்போம் – ஏன், தமிழ்வழிக் கல்வியை வைத்துவிட்டு, ஆங்கிலத்தை ஓர் மொழிப் பாடமாக மட்டும் வைத்தால் என்ன ?

பள்ளியில் நாம் ஆங்கிலமொழி வேண்டாமென்று சொல்லவில்லை. ஆங்கிலவழியிலான கல்வியைத் தான் மறுக்கிறோம். உலகில் எந்த நாடுகளிலும் எந்த இனங்களிலும் ஏன் அமெரிக்கா உட்பட அனைத்து மேலைநாடுகளிலும் தாய்மொழிவழிக்கல்வியே அன்றும் இன்றும் இப்பொழுதும் வழங்கப்பட்டு வருகிறது.

அந்நாடுகளில் போர்க்கருவிகள் ( ஆயுதங்கள் ) செய்யும் தொழிற்சாலைகள் கூடத் தனியாரிடம் இருக்கின்றன. ஆனால், கல்விச் சாலைகளைத் தனியாரிடம் விடாமல் அரசுகள் தான் எடுத்து நடத்துகின்றன. அங்கெல்லாம் தொடக்கக்கல்வி முதல் உயர்நிலைக்கல்வி வரை தாய்மொழிவழியில்தான் கல்வி தரப்படுகிறது. எந்த நாடும் தாய்மொழியை, தாய்மொழிவழிக் கல்வியைப் புறக்கணித்து முன்னேறியதாக வரலாறே இல்லை.

ஆங்கிலம், ஆங்கிலம் என்று ஆங்கிலம் கற்று வெளிநாடு

சென்றவரெல்லாம் இலக்கக்கணக்கானபேர் வேலையின்றிச் சுற்றிக்கொண்டுள்ளனர்.

இவர்கள் சொல்வதுபோன்று, ஆங்கிலவழிக் கல்வியை அரசுப் பள்ளிகளிலும் கொண்டுவந்தால் இன்னும் பத்து ஆண்டுகளில் எந்தக் குழந்தைக்கும் தமிழ் மொழியே தெரியாத கேடான நிலைக்கு இந்நாடு தள்ளப்பட்டுவிடும். பாரதி, பாவேந்தரையும் கூட யாரும் படிக்க முடியாது. திருக்குறளைக் கூட மறந்திடுவர். தமிழை எழுத்துக்கூட்டிப் படிக்கவே தடுமாறுவர். இப்போதே பெரும்பாலான தமிழர்களுக்குத் தமிழில் பிழையின்றி எழுதக்கூடத் தெரிவதில்லை. இந்த நிலையில் ஆங்கிலவழிக் கல்வியைக் கொண்டுவருவது தமிழர்தம் தாய்மொழிவழிக் கல்விக்கும் தாய்மொழிக்கும் தமக்குத்தாமே எரியூட்டிக் கொள்வதுபோலத்தான்.

மேம்போக்காக - மேலோட்டமாகப் பார்க்கும் இன்றைய நம் தமிழ்ப் பெற்றோர்களுக்கு இது ஓர் நல்ல திட்டமாகவும் வரவேற்கத் தகுந்ததென்றும் எண்ணிடத்தான் தோன்றும். ஆனால், இதிலுள்ள தீமைகளைப் பற்றி - எதிர்காலத் தமிழினம் அடையப்போகும் கெடுநிலை பற்றி இதை ஆழ்ந்து நோக்குவோரும் சிந்திப்போருமே அறிய முடியும். எனவே, தமிழ் மக்களே, சற்றேனும் சிந்திப்பீர்.... தமிழன் என்று ஒருவன் இருந்தான் – தமிழ் என்றொரு மொழி இருந்தது என்று எதிர்காலத் தலைமுறை பேசுமளவுக்கு, தமிழின் – தமிழினத்தின் உயர்தன்மை ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து மண்ணாய்ப் போகுமளவுக்கு இந்தக் கல்விநிலை நம்மைக் கொண்டுசேர்த்துவிடும் என்பதை உள்ளார்ந்து சிந்தித்துச் செயற்படுங்கள் !

இதிலுள்ள உண்மையை உணர்ந்து, தமிழ் மக்களாகிய நாம்தான் செயற்படவேண்டும். இனிவரும் தேர்தல்களில், தமிழ்வழிக்கல்வி தராதவர்க்கு இனி எங்கள் ஒப்போலை இல்லை என்ற முழக்கத்தைத் தமிழ் மக்கள் முன்வைக்க வேண்டும். அப்போதுதான் இங்கு ஆண்ட - ஆளுகின்ற அரசுகள் இனியேனும் தமிழ்வழிக்கல்வியில் கைவைக்காமலிருக்கும் ; அதைப் புறக்கணிக்கும் முயற்சியைக் கைவிடும்.

# 14. பெரியார் எனும் பெருமாந்தர்

கடந்த மார்ச்சுத் திங்களில் சென்னையில் நிகழ்ந்த பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் **கனிச்சாறு** பாடல்தொகுப்பு வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டேன்.

அங்கு நிகழ்வரங்கின் நுழைவாயிலில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த நூல்களுள் நாம் வெளியிட்ட **தூயதமிழ்ப்பெயர்கள்** - நூலினையும் விற்பனைக்கு வைத்திருந்தோம். மேற்பார்வைக்கு எம்முடன் வந்த சிறுவன் ஒருவனை அமர்த்தியிருந்தேன். அந்தத் தூயதமிழ்ப் பெயர்கள் நூலின் முன்அட்டையில் திருவள்ளுவர் படமும் பின்அட்டையில் பாவாணர், பாவேந்தர், பாவலரேறு படங்களுடன் பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் படமும் அச்சிட்டிருந்தோம். அந்த நூலைப் பார்த்த தோழர் ஒருவர், அதிலிருந்த பெரியாரின் படத்தைப் பார்த்து, "இவனைப் போட்டிருப்பதால் தான் இதை வாங்க யோசிக்கிறேன்..." என்றாராம். நிகழ்வின் இறுதியில் நாங்கள் புறப்படும்போதுதான் இதை அந்தச் சிறுவன் எங்களிடம் கூறினான்.

இப்படி ***அவன் இவன் என்று ஒருமையில் பேசுமளவுக்கு***ப் பெரியார் இவர்களுக்கு என்ன இரண்டகம் செய்துவிட்டார் - என்ன இடையூறு செய்துவிட்டார் ? இவர்களெல்லாம் எந்த அடிப்படையில், என்ன எண்ணத்தில் இப்படியெல்லாம் பிதற்றுகின்றனர் ? எதிரியைக் கூட மதிக்கின்ற பண்புடையவன், நாகரிகமுடையவன் தமிழன் என்றெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் நம் தமிழினத்தில் பிறந்த இவர்கள், இப்படிப் பேசும் இழிபண்பை எங்கிருந்து கற்றார்கள்...?

தாழ்த்தப்பட்டு, இழிந்து, நைந்த இம் மக்களின் விடிவுக்காக - வாழ்வுக்காக - முன்னேற்றத்திற்காகத் தம் தொண்ணூற்று நான்கு அகவை வரை பாடாற்றிய ஒரு மாபெரும் தலைவரை இப்படியெல்லாம் பேசுவதற்கு இவர்களுக்கு எப்படி மனம் வருகிறது ? இதை இவர்கள் எந்தப் பள்ளிக்கூடத்தில் கற்றார்கள் ? பாவாணரை - பாவலரேறுவைப்

போற்ற வந்ததாகச் சொல்லும் இவர்கள் பெரியாரை இப்படி இகழ்வது, பாவாணரையும் பாவலரேற்றையும் இகழ்வதற்கே ஒப்பாகாதா...?

**பெரியார் நம்மிடைப் பிறந்திரா விட்டால்**
**நரியார் நாயகம் இங்கே நடந்திடும் !**
**திரியாத் தமிழ்க்கும் திகழ்நா டதற்கும்**
**உரியார் நாமெனும் உண்மை, பொய்த் திருக்கும் !**

என்னும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கூற்றை இவர்களெல்லாம் அறிந்திருக்கவில்லையா...?

நூல் விற்பனை செய்து கொண்டிருந்த ஒரு சின்னப் பையன் முன்பு – ஓர் எதிர்காலத் தலைமுறை முன்பு இப்படி ஒரு தரங்கெட்ட சொல்லைச் சொல்லலாமா – ஒரு முரண்பட்ட கருத்தை அச் சிறுவன் மனத்தில் விதைக்கலாமா...? –என்னும் அடிப்படை அறிவு வேண்டாமா...? இப்படி ஒரு கருத்தைக் கேட்ட அந்தச் சிறுவன் மனத்தில் இது பதிந்தால், அது எப்படிப்பட்ட இழிவான பதிவாக அமைந்திடும்...? இந்தளவுக்கு இவர்களுக்கு என்ன கேட்டைச் செய்துவிட்டார் பெரியார் ?

இதுமட்டுமன்று. மேலும், கடந்த 2012 செப்டம்பர் 17 பெரியாரின் பிறந்தநாள் சார்பாக, கோவையிலுள்ள பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவை நிகழ்த்திய ***தந்தை பெரியாரின் 134ஆம் பிறந்த நாள் விழா – எழுச்சிப் பாவரங்கம்*** என்னும் நிகழ்வின் துண்டறிக்கை – அழைப்பிதழை இணையத்தில் மின்னஞ்சல்வழி ( 06.10.2012 ) நாம் அனுப்பியதற்கு, தமிழ்ச்சிந்தனையாளர் பேரவை என்னும் அமைப்பைச் சேர்ந்த தோழர் ஒருவர் எமக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினார்... என்ன தெரியுமா...? (அவர் அனுப்பியதை அப்படியே எழுதுகிறேன்...)

08.10.2012 – ***பாவலரேறு அவர்களின் உண்மையான மாணவன் இப்படியெல்லாம் கூத்தடிக்க மாட்டான். அறிவுகெட்ட முண்டமே...!***

அன்றே நாங்கள், "***நீர்தான் அறிவுகெட்ட முண்டமே...உண்மையான நன்றியுள்ள தமிழன் உம்மைப்போல் இப்படியெல்லாம் கூத்தடிக்க மாட்டான்...***" என்று விடைதந்தபோது,

09.10.2012 – "***செருப்படி... ஒரு சமூகம் மீண்டெழும்போது இரண்டகம் செய்யும் உம்மைப் போன்றோர் தண்டனைக்குறியவர்கள். நீர் என்ன ஒரு தெலுங்கனா ? அறிவுகெட்ட முண்டமே ! தமிழகம்***

***உம்மைப் போன்றோரை எதிர்கொள்ளத் தயாராகிக் கொண்டுள்ளது.***" என்று ஒரு வரைமுறையின்றி, தகாத சொற்களால் திட்டி விடையனுப்பினார். தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை என வைத்துக்கொண்டு, இவரைப்போன்றோர் இப்படித்தான் சிந்தனை செய்துகொண்டுள்ளனரா...?

இப்படித் தகாத சொற்களால் விடை தந்தவருக்கு **Tamil Chinthanaiyalar Peravai <tcpu2007@gmail.com>** என்னும் மின்னஞ்சல் முகவரி மட்டுமே இருந்தது. இதைப்பற்றி விளக்கமாகப் பேச வேண்டுமென்றால் நேரில் வாருங்கள் அல்லது உங்கள் கைபேசி எண்ணைத் தாருங்கள்..!. என்று நாம் கேட்டதற்கு அத்தோழர் விடை தரவேயில்லை.

பாவலரேற்றின் மாணவன் என்றால் பெரியார் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடாமல் இருக்க வேண்டுமா...? அல்லது, பாவலரேற்றின் மாணவன் என்பவன் இப்படியெல்லாம் தகாத சொற்களால் தம்மினத்தாரையோ பிறரையோ வசைபாடுபவனா....?

தமிழ்ச் சிந்தனையாளர் பேரவைத் தோழரே...! நீங்கள் முதலில் பாவலரேறுவையும் – பாவலரேறுவின் வரலாற்றையும் அவர்தம் சிந்தனைகளையும் படியுங்கள்...!

**பெரியார் உரைகளும் பெறற்கருந் தொண்டும்**
**உரிய பொழுதில் உதவிட விலையெனில்**
**தமிழினம் விழித்திடும் தகைவுநேர்ந் திருக்குமா ?**
**தமிழ்மொழி பிழைத்துத் தலைமைபெற் றிருக்குமா ?**
**ஆரியச் சேற்றினுள் அழுந்தித் தமிழன்**
**வீரியம் குன்றி மூச்சு விளர்ந்து**
**புதைக்கப் பட்டுப் போயிருக் கானா ?**
**சிதைக்கப் பட்டிருக் காதா அவன் இனம் ?**

என்று பாவலரேறு பெரியாரைப் போற்றியதைப் படித்துவிட்டு வாருங்கள்... முதலில் மாந்தனை மாந்தன் மதித்துப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள்...தோழர்களே !

மூடத்தனமும் சாதிக்குப்பையும் அடிமைத்தளையும் புரையோடிக் கிடந்த இத் தமிழ்க் குமுகத்தில் குமுக விழிப்புணர்வு

ஏற்படுத்திடவே தன் வாழ்நாளெல்லாம் போராடிய பெருந்தலைவர் தந்தை பெரியார். தன் சீர்திருத்தங்களுக்கு நடுவே - தான் உள்ளார்ந்த பற்று வைத்துள்ள இத் தமிழக மக்கள் இப்படித் தன்மதிப்பையும் தன்மானத்தையும் இழந்து - ஆரியனுக்கு அடிமையாகி எல்லாவற்றிலும் தன்னுடைய தனிச்சிறப்பை - மாண்பை இழந்து கிடக்கின்றனரே என்ற ஆற்றாமையில் தமிழ் மொழியில் எழுதப்பெற்றுள்ள பெரும்பாலான இலக்கியங்களில் மூடக் குப்பைகளும் தமிழ்க்குமுகத்திற்கே கேடு விளைவிக்கும் ஏற்றத்தாழ்வு இழிவுகளும் இடம்பெற்றிருப்பதைக் கண்டு பொறுக்காமல் வெம்பிப்போய், ஒரு தாய் தன் பிள்ளையர் தவறு செய்துவிட்டால் எப்படி அந்த நேரத்தில் தன் சினத்தை வெளிப்படுத்தி அவர்களைத் திட்டுவாளோ அப்படிக் கடிந்து பேசினார். இந்த மானங்கெட்ட தமிழன் திருந்தட்டும் என்றுதான் உழைத்தார்.

தமிழையும் திருக்குறளையும் ஆய்ந்தறிந்த பேரறிஞராம் நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களே தந்தை பெரியாரின் செயற்பாடுகளை - குமுகத் தொண்டுகளைப் போற்றிப் பாராட்டியுள்ளார். இதனை ஏன் மேற்கண்ட தோழர்கள் புரிந்திடவில்லை...?

**கருகிப்போய்க் கிடந்தஇந் நாட்டிடை வந்தே**
**உருகி உருகி உயிரைத் தேய்த்தே**
**ஒளியைப் பரப்பிய ஊழித் தலைவராம்**
**அளிசேர் எங்கள் *அருமைப் பெரியார்***
**பேசிய பேச்சுகள் நச்சுகள் என்றால் -**
**ஊசிய கருத்தை உரைத்த புராணங்கள்,**
**வேத அழுக்குகள், பொய்ம்மை விளக்கங்கள் -**
**ஊதை உளுத்தைகள் நச்சிலா உரைகளா ?**

**சேற்றில் புழுக்களாய் - சிற்றுயிர் இனங்களாய் -**
**மாற்றிட இயலா மந்தை ஆடுகளாய் -**
**வழிவழிப் பார்ப்பனர் வந்து புகுத்திய**
**ஆரியக் கொடுநச் சரவம் கொத்திச்**
**சீரிய மொழியையும் சிறந்தநல் லறிவையும்**

**ஆயிரம் ஆயிரம் அறிவுநூல் தொகையையும்**
**ஏயுநல் லிலக்கிய இலக்கண இயல்பையும்**
**நாகரி கத்தையும் நல்லபண் பாட்டையும்**
**ஆகிய அரசையும் ஆட்சி நலத்தையும்,**

**ஒருங்கே அழித்துக் கொண்டஓர் இனத்தைப்**
**பெருங்கொள் கையினால் பிழைக்க வைத்த –**
**தன்மான ஊற்றினைத் தகைமைத் தலைவனை,**
**மண்மானங் காத்த மாபெரும் மீட்பனை,**
**அரியாருள் எல்லாம் அருஞ்செயல் ஆற்றிய**
***பெரியார்* என்னும் பெரும்பே ரரசனை –**

**இழிப்புரை சொல்வதா ? சொல்லியிங் கிருப்பதா ?**
**பழிப்புரை வந்துநம் செவிகளிற் பாய்வதா ?**

**நச்சு விதைகளா, நயந்துஅவர் சொன்னவை ?**
**பச்சிலை மருந்தன்றோ, எமக்கவர் பகர்ந்தவை ?**

**பார்ப்பனப் பதடிகள் எம்மைப் படுத்திய**
**ஆர்ப்பொலி அடங்கியது அவரினால் அன்றோ ?**

**ஆரியக் குறும்பர்கள் ஆக்கிய கொடுமையின்**
**வேரினைத் தீய்த்தது அவர்வினை யன்றோ ?**

*( தென்மொழி - இதழ் சுவடி-18, ஓலை-8, 1982. பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுதிய* ***பெரியார்****-எனும் நூலிலிருந்து... )*

என்னும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கூற்று மெய்யன்றோ !

பாவலரேற்றின் மேற்கண்ட பாடலடிகளையெல்லாம் இவர்களைப் போன்ற தோழர்கள் படிக்கவில்லையா... அல்லது படித்தாலும் அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் பெரியாரை எதிர்ப்பதையும் திட்டுவதையுமே இவர்கள்தம் குறிக்கோளாகக் கொண்டு திரிகின்றனரா..?

“பெரியார் ஒரு குமுகாயச் சீர்திருத்தக்காரர்; ஒரு பச்சை இறைமறுப்புக்காரர் என்பது எல்லாருக்கும் தெரியும். எதையும் அறிவியல் கண்ணோட்டத்துடனும் பொருள் முதல் தருக்கக் கொள்கையுடனும் அணுகும் அவரின் வேகமான

உணர்வுகளுக்கிடையில், அவர் உள்ளத்தில் வளர்ந்திருந்த தூய்மையான நல்லுணர்வுகளும் மாந்தப் பண்பின் மீமிசை வளர்ச்சி நலன்களும் நம்மை வியப்படையச் செய்கின்றன. அவர்போலும் கூர்மையான அறிவு வளர்ச்சி பெற்ற பேரறிஞர் பலர் பலவகையான தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி, உள்ளத்தின் செழுமையையே இழந்து விட்டிருக்கின்ற நிலைகளை நாம் வரலாறுகளில் பார்த்திருக்கின்றோம் ; படித்திருக்கின்றோம். ஆனால், பெரியாரிடைப் பூத்துக் குலுங்கிய மனவளமை அவரையொத்த வேறு மக்கள் தலைவர்களிடையிற் பார்ப்பது அரிதினும் அரிது. அவரிடம் வலுவான கொள்கைப் பிடிப்பு இருந்ததைப் போலவே, பண்பும் ஒழுக்கமும் தூய்மையான அன்பும் தம்மினும் பல மடங்குத் தாழ்ந்தவர்களையும் மதித்துப் பாராட்டும் பெருந்தன்மையும் நிறைந்த சான்றாண்மையும் அவரிடம் சிறந்து விளங்கிக் காணப்பெற்றன. அத்தகைய தனிச்சிறப்பியல்புகளால் அவர் எதிரிகளையும் கவர்ந்தார். பகைவர்களும் மதித்துப் போற்றும் உயர்ந்த நிலையை எய்தினார். அவரின் புறக்கொள்கைகளுக்கு மதிப்பளித்துப் போற்றிப் பின்பற்றும் நாம், அவரின் அக நலன்களையும் போற்றிப் பின்பற்றுதல் வேண்டும். குறிப்பாக அவரைக் கட்சியளவில் பின்பற்றும் கொள்கைப் பற்றாளர்களிடம் இத்தகைய அரும் பண்புகளும் வளர்தல் வேண்டும்." என்று தென்மொழி இதழில் ( சுவடி-5, ஓலை-4, 1978 ) எழுதியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

பாவலரேற்றின் மாணாக்கர் என்று சொல்லிக் கொள்ளும் தகுதி எங்களுக்கு இருப்பதாலும் நன்றிமறவாத் தமிழராக நாங்கள் இருப்பதாலும்தாம் அவரால் மதிக்கப்பட்ட பகுத்தறிவுப் பேரறிஞரை நாங்களும் மதிக்கிறோம். இப் பேரறிஞரை இழிவுபடுத்துவோர்க்குத்தான் பாவலரேற்றின் மாணாக்கர் எனச் சொல்லிக்கொள்ளும் தகுதியில்லை.

இதை அத்தோழர்கள் மட்டுமன்று, இவர்களைப் போன்று பெரியாரை இன்று தரக்குறைவாகவும் இழிவாகவும் பேசும் அனைத்துத் தமிழர்க்கும் தான் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பணியைச் சுமந்த உடலென்றும்
பெரும்புகழைச் சுமந்த உயிரென்றும்
பெரியாரைப் போற்றியவர் நம்ஐயா –
பெருஞ்சித்திர னாரென்றால் அதுபொய்யா ?

அருந்தமிழர் இனமீட்கத் தம்வாழ்வில்
ஒருநொடியும் ஓயாது உழைத்திறந்த
பெருமாந்தர் பெரியாரை இன்றுபலர்
புரியாமல் இகழ்கின்றார் இதுசரியா ?

குருடான ஒருபூனை விட்டத்திலே
மதியின்றித் தாவியதாம் ; அதுபோலே
பொருந்தாப்பல குற்றங்களைப் பெரியார்மேல்
புறங்கூறிப் பிதற்றுகிறார் இதுமுறையா ?

பெருமையுடன் செய்யுள்பல படைத்தளித்துப்
பேரளவில் இலக்கணங்கள் வடித்தளித்துப்
பெருகியுள புலவர்பலர் தமிழ்நாட்டில்
பெயருக்கு வாழந்தனரே தம்பாட்டில் !

பெரும்பேயாய்ப் பீடையென தமிழினத்தைப்
பிடித்தாட்டிப் பிழைப்புற்ற பார்ப்பனியம்
நொறுங்குறவே செயலாற்றி உயிர்விட்ட
நுண்மாந்தர் பெரியார்தான்; நினைவிலையா?

அருகிவந்த தமிழினத்தின் விடுதலைக்கே
அயராது தமைவருத்திப் பாடாற்றி –
குறுகுமன ஆரியரைக் குலுங்கவைத்த
கூர்மதியர் பெரியாரின் பணிதவறா ?

திருக்குறளைத் தமிழர்க்குப் புரிவிக்க,
இறைப்பற்றுத் தமிழர்தம் நலன்காக்க
சிறைப்பட்டார் பெரியாரும்; அதுபிழையா ?
**செய்ந்நன்றி மறந்திடுதல் தமிழ்மறையா ?**

–*உண்மை*–திங்களிருமுறை (செப்டம்பர் 16–30,2012)இதழில்
வெளிவந்த என் பாடல்.

# 15. தொடர்களா...? இடர்களே...!

இன்றைய தமிழக மக்கள் பெரும்பாலும் குழுமியிருப்பது தொலைக்காட்சித் தொடர்கள் முன்புதான். அதிலும் சிறியவர் - பெரியவர் என்ற அகவை வேறுபாடு இன்றி, படித்தவர் - படிக்காதவர் என்ற தகுதி வேறுபாடு இன்றி, எல்லாருமே இதில் மூழ்கியிருக்கின்றனர். குறிப்பாக, நம் வீடுகளிலுள்ள பெண்கள் - பெண்ணினம் இத் தொடர்களைப் பார்ப்பதை ஒரு பொழுதுபோக்காக மட்டுமல்லாமல் அன்றாட வாழ்க்கையின் ஓர் பகுதியாகவும் ( சில வீடுகளில் முழுப் பகுதியாகவும் ), வீட்டில் உள்ள அன்றாட வேலைகளைச் செய்கின்றனரோ இல்லையோ நாள்தவறாமல் தொடர்களில் மூழ்குவதில் கட்டாயமாக நேரத்தைச் செலவிடுகின்றனர். நம் வீட்டுப் பெண்டிரின் இந்தத் தொலைக்காட்சி ஈர்ப்பை - ஏமாளித்தனத்தைப் புரிந்துகொண்டு, வணிக அடிப்படையிலான எல்லாத் தொலைக்காட்சிகளும் எண்ணற்ற தொலைக்காட்சித் தொடர்களை ( அதில் கருத்து உள்ளதோ இல்லையோ, அது முன்பே படமெடுக்கப்பட்ட கதையோ இல்லையோ, அது இந்தக் குமுகத்தில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துகிறதோ இல்லையோ என்பதைப் பற்றிய கவலைகள் ஏதுமின்றி ) அன்றாடம் ஒளி-ஒலி பரப்பி வருகின்றன.

இங்கு நாம் கூறவருவது என்னவென்றால், இந்தத் தொடர்களில் ஏறத்தாழ தொண்ணூறு விழுக்காடு - இந்தத் தமிழரை - தமிழ்க்குமுகத்தை மூடத்தனத்திற்குக் கொண்டு செல்வதாகவும் பிற்போக்கு நிலைக்குத் தள்ளி, இவர்களின் அறிவை மழுங்கடித்து, முன்னேற்றத்தை அடைய விடாமல் வெறும் அடிமாடாக வைக்கும் நிலைக்குக் கொண்டுசெல்வதாகவுமே அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டாக, ஒரு தொலைக்காட்சித் தொடரில் கதையின் நாயகனும் நாயகியும் ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கின்றனர். இந்தத் தலைமுறையைச் சேர்ந்த - படித்த - கல்வியறிவுள்ள அந்த நாயகன் முந்தைய நாள் குழந்தையைப் பார்த்துச் சென்றதால் தான், தான் தொழிலில் திடீர் முன்னேற்றத்தைக் கண்டதாகக் குறிப்பிடுகிறான். அதே இளைஞன் அதற்கு அடுத்தநாள் அக்குழந்தையின் முகத்தைப் பார்த்துவிட்டு அலுவலகம் சென்றதால் தான் தன்னுடைய தொழிலில் **உருவா 25 இலக்கம்** இழப்பு ( நட்டம ) ஏற்பட்டதாகக் கூறி ஒப்பாரி வைக்கிறான். அந்தக் குழந்தையின் ***ஓரை (இராசி)*** சரியில்லை ; இனி அக்குழந்தையை என் கண்ணில் காட்டாதீர்கள் ; என் கண்முன்னே கொண்டுவராதீர்கள் என்று சினந்து கொப்பளிக்கிறான். என்ன அவலம் பாருங்கள்...!

மற்றுமொரு தொடரில் ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடக்காமைக்கு மூடக் காரணம் ஒன்றைச் சொல்லி, அதுதான் அவள் விதியென்று ஒரு சோதிடன் உரக்கக் கூறிட, அதைக் கேட்டு அப் பெண்ணின் பெற்றோர் - குறிப்பாக அவள் அம்மா அழுது அரற்றுவார். ஆனாலும் அந்தச் சோதிடன் சொல்வது தான் உண்மையென்பதுபோன்று அந்தத் தொடரில் அந்தக் காட்சி முடியும்.

இதுபோன்ற தொடர்கள், இப்படிப், படித்த - இந்தக்கால இளைஞர்களிடையே இதுபோன்ற மூடத்தனமான பிற்போக்குச் சிந்தனைகள் இருப்பதாகக் காட்டி, இவையெல்லாம் உண்மையென்பதுபோன்ற மாயத் தோற்றத்தை நம் அன்றாடத் தமிழரிடையே உருவாக்குகின்றன. சும்மாவே ஆடும் குரங்குக்குக் கள்ளையும் ஊற்றிவிட்டு மயக்கத்தில் ஆடவிடுவதைப் போல் இல்லையா இச் செயல்கள்...? ஏற்கெனவே பழைமையான பிற்போக்காளர்களின் சொற்பேச்சைக் கேட்டும் ஆரிய நரிப்பயல்களின் தீயவழிகாட்டுதல்களைப் பின்பற்றியும் தத்தம் இல்லங்களிலும் தெருக்களிலும் தொழிற்கூடங்களிலும் எண்ணற்ற மூடச்செயல்களைச் செய்து, நேர வீண், பொருள் வீண், பண வீண் ஆகியவற்றைச் செய்வதோடு தன் வாழ்வையும் தன் பிறங்கடையினர் வாழ்வையும் பொருளற்ற - அறிவற்ற பாதைக்குக் கொண்டுசென்று கொண்டுள்ள இத் தமிழரும் தமிழினமும் மென்மேலும் அறிவிற்சிதைந்து, முன்னேறாமல் கெட்டொழிந்து போகவேண்டுமென்ற நோக்கத்தில்

தானே இதைப்போன்ற செயல்களை இல்லங்களைத் தேடிவந்து நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர்.

தன்னுடைய அயராத உழைப்பாலும் தன்னிகரில்லா ஈகத்தாலும் சலிப்பில்லாத குமுகத் தொண்டாலும் தமிழினத்தை முற்போக்குப் பாதைக்கு அழைத்துச் சென்ற **தந்தை பெரியார்** வாழ்ந்த காலத்தில் அவர்தம் ஒப்பற்ற கருத்துகளை - பகுத்தறிவுத் தீப்பொறிகளைத் தம் நாடக மேடைகளில் அரங்கேற்றி - மக்களை விழிப்புணர்வுக்கு இட்டுச்சென்ற **எம்.ஆர்.இராதா** என்னும் நாடக - திரைப்படப் பகுத்தறிவுக் கலைஞரின் பிறங்கடையான - அவர்தம் மகள் **இராதிகா** என்னும் நடிகையும், தான் பணம்போட்டு, நடித்து, ஒளிபரப்புகின்ற தொடர்களில் அளவற்ற மூடத்தனங்களை அரங்கேற்றுகிறார். இது அவர்தம் தந்தையின் பகுத்தறிவைப் பரப்பலை - விழிப்புணர்வு நாடக மேடைகளைப் பகடி செய்வதாய் இல்லையா ? தன் தந்தையின் செயற்பாடுகளை இவர் கண்டதில்லையா, கேட்டதில்லையா, படித்ததில்லையா ? அல்லது எல்லாம் தெரிந்தாலும் இந்தத் தமிழ மக்களை அவர்களின் மூடத்தனத்துக்குள்ளேயே வைத்துக்கொண்டு, அவர்களிடமிருந்து பொருளீட்டும் வணிக நோக்கத்துடன் இதைப்போன்ற காட்சிகளைத் தொடர்களாக்குகிறாரா...? அவருக்குத்தான் தெரியும்.

இதேபோன்று மாமியார் - மருமகள் இடையிலான உறவு, விரிசல் மிகுந்ததாகவும் அவர்கள் எல்லா வகையிலும் ஒருவருக்கொருவர் முரணுடையவர்களாகவுமே ஏறத்தாழ அனைத்துத் தொடர்களிலுமே காட்டுகின்றனர். இவர்கள் காட்சிப்படுத்தும் இந்த நிகழ்வுகளையும் கதைமாந்தர்களையும் பார்க்கின்ற நம் தமிழின மக்களின் இல்லங்களில் இவை இப்படியே எதிரொளிக்கத் தவறுவதில்லை. ***மாமியார் - மருமகள் பற்றி எத்தனை நெடுந்தொடர்கள் ( மெகா சீரியல் ) எடுத்தாலும் திருந்த மாட்டீங்களா...?*** என்று நடிகர் விவேக் சொல்வதுபோல் ஒரு திரைப்படத்தில் காட்சி ஒன்று உண்டு. ஆனால், மாமியார் - மருமகள் பற்றியதான தொடர்களைக் காண்பதால், நடைமுறை வாழ்வில் மாமியார் - மருமகளிடையே விரிசல்களும் பூசல்களும் இன்னும் அதிகரித்துக் கொண்டுதான் போகின்றன. குடும்பங்களில் இன்னும் சண்டைகளும் மனவேறுபாடுகளும் பெருகியபடிதான் உள்ளன.

திருந்துவதாக ஒன்றும் தெரியவில்லை.

இவையனைத்தையும் விடக் கொடுமையாக,

ஒரு தொலைக்காட்சியில் **இராமாயணம்** தொடராக இன்றும் ஒளிபரப்பாகி வருகிறது. இந்தக் கதை ஒருவருக்கும் தெரியாததா...? தொலைக்காட்சி என்ற ஒன்று தமிழகத்தில் வந்த காலந்தொட்டு, இந்த இழவெடுத்த தொடரை மாற்றி மாற்றி ஒளிபரப்பிக் கொண்டுதான் இருக்கின்றன இந்த ஊடகங்கள். நம் முட்டாள் தமிழினமும் இதைப் பார்த்துக்கொண்டுதான் உள்ளது இன்றும். தமிழரையும் தமிழர் பண்பாட்டையும் தமிழர்தம் சிறப்பையும் இழிவு செய்து, தமிழனை அரக்கனாகவும் கொடுங்கோலனாகவும் காட்டி, ஆரியப் பார்ப்பனியத்தையே மேலானதாக நிலைநாட்டிடச் செய்யும் இந்த **இராமாயணக்** கதையை மீண்டும் மீண்டும் பல்வேறு வகைகளில் பல வடிவங்களில் காட்டிக் காட்டி இன்னும் நம் தமிழினத்தை அடி முட்டாள்களாக ஆக்கிக் கொண்டுள்ளனர். நம் பண்டைத் தமிழர் வீரத்தைச் சொல்கின்ற எத்தனை புறநானூற்று, அகநானூற்றுக் கதைகள், பண்பாட்டுப் படைப்புகள் நம்மிடையே உள்ளன ; அவையெவற்றையும் ஒருமுறையாவது இப்படித் தொடர்களாக்கிக் காட்டிட இந்த ஊடகங்கள் எண்ணியதுண்டா...? முயற்சித்ததுண்டா...? இல்லை.

ஆரிய மாயையால் தமிழருக்கு எதிரான ஒரே கதையை இப்படி ஆள் மாற்றி ஆள் நடித்து, இடம் மாற்றி இடம் காட்சிப்படுத்தி, ஊடகம் மாற்றி ஊடகம் வெளியிட்டு, நம் தமிழரை இன்னும் புதைகுழிக்குள்ளேயே வைத்துக் கொண்டுள்ளன இன்றைய தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள். இதைப் பற்றிச் சிறிதும் அறிந்திடாமல் எண்ணிடாமல் நம் இளித்தவாய்த் தமிழர்கள் - நம் வீட்டுப் பெண்கள் இதனைப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் பெரும் வருத்தத்திற்குரிய செய்தி.

இந்த இராமாயணம் - தொடர் பற்றிய இந்தக் கொடுமையை, **புறத்தே தள்ளடா புளுகுக் கதைகளை...** என்னும் தலைப்பில் ஒரு பாடலாக்கி, கடந்த ஆண்டு திண்டுக்கல்லில் உள்ள ***தமிழன்னை திருக்கோயில்*** என்னும் அரங்கில் நிகழ்ந்த மாநாடொன்றில் நான் அரங்கேற்றியபோது, இதைக் கண்ணுற்ற, செவிமடுத்த ஏராளமான தமிழ் மக்கள் நடுவே, ஆரியப் பார்ப்பனப் பெண் ஒருவரும் இருந்தார்.

என் பாப்பொழிவை முன்வரிசையில் அமர்ந்து, மிகக் கூர்மையாகக் கவனித்த அந்த அம்மையார் முகத்தில் தொடர்ந்து இறுக்கம் தென்பட்டது.

பிறந்தது முதலே பார்த்து வருகிறான்
பேதைத் தமிழரை மடமைய ராக்கும்
பேரிழ வான 'இராமா யண'த்தை
பீடைப் பொருள்தரும் 'பார த'த்தை !
மறந்தே போய்இம் மந்தைத் தமிழன்
மாறிப் போனால் - மானம் உணர்ந்தால்
பறந்திடும் தம்நல வாழ்வென் றெண்ணும்
பார்ப்பனக் கும்பலின் பழிமிகு கதையைப் (பிறந்தது முதலே...)

தொலைவுச் செய்தியைச் சொல்ல மறப்பினும் -
தொன்மைத் தமிழைச் சொல்லாமற் போயினும்
அளவுக் கதிகமாய் 'அவா'ளின் செய்திகள்
அள்ளித் தெளித்து எம்மினம் துடிக்க,
அழுகைத் தொடர்கள் ஆயிரம் கொண்டு
அடிமை விலங்கில் பெண்களைப் பூட்டும்
தொ(ல்)லைக் காட்சி எல்லாம் சேர்ந்து
தொடர்ந்து காட்டும் சொள்ளைக் கதையைப்(பிறந்தது முதலே..)

புகவே அல்லாப் பொய்க்கதை மாந்தர்கள் ;
புளுகுகள் நிறைந்த புண்மைக் காட்சிகள் !
அகம்புறம் எல்லாம் கூசச் செய்து
அருவெறுப் பாக்கிடும் ஆரியக் கூத்துகள் ! - என்
அகவை ஐந்தில் அன்றும் காட்டினான்
ஆறைந் தாகியும் இன்றும் காட்டு(கி)றான் !
பகைவன் அவனின் பகல்வேட மறியாமல்
பார்த்துக் குலைந்திடும் பைந்தமிழ்ப் பெருங்குடி (பிறந்தது முதலே..)

இல்லறப் பெண்ணின் இயல்புகள் சொல்லும்
சொல்லறம் மிக்க 'சிலம்பினை' இன்னும்
எள்ளள வேனும் காட்டிட வில்லை ;
எந்தமிழ் இனத்தை மீட்டிட வில்லை !
வல்லிய துறவியாம் 'மேகலை'ப் பெண்ணின்

வாழ்வறம் சொல்லும் நன்னெறி தன்னை
உள்ளநம் தமிழர்க் குணர்த்திடச் செய்யாமல்
உதவாக் கதைகளாம் ஆரியக் 'காதை'யை (பிறந்தது முதலே...)
மறத்தமிழ் மாந்தர்தம் மானஞ் சொல்லும்
மாபெரும் வீரப் பாங்கினைப் பகரும்
'குறுந்தொகை'க் காட்சிகள் 'நானூற்று'க் கதைகள்
'கொன்றை வேந்தன்' 'சிந்தா மணி'யெனும்
அறநெறி விளக்கி, அருந்தமிழ் போற்றியே
அடித்து விரட்டடா ஆரியக் கயவரை !
புறத்தே தள்ளடா புளுகுக் கதைகளைப் ;
போட்டு உடையடா அத்தொ(ல்)லைக் காட்சியை !

என்று என்னுடைய பாவின் ஒவ்வொரு வரிக்கும் அந்த அம்மையாரின் முகம் போன போக்கை நான் கவனிக்கத் தவறவில்லை. பாப்பொழிவு முடிந்த சிறிது நேரத்தில் அந்த அம்மையார் என்னை அழைத்துக் கேட்டே விட்டார். "***என்ன கவிதை நீங்க படிச்சீங்க... எதுக்கெடுத்தாலும் ஆரியர் - பார்ப்பனர் என்று பேசிக் கொண்டேயிருக்கீங்க...?***" என்று சினத்துடன் கேட்டார். அதற்கு நானும் தோழர் மலரினியனும் "**ஆமாம்... அம்மா..! இன்னும் இன்றுவரைக்கும் இந்தக் கதைகளை மட்டுமே காட்டி, எம் தமிழகத்து மக்களை - எம் வீட்டுப் பெண்களை இன்னும் அடிமைத்தளையிலிருந்து விடுபட விடாமல் தானே வைத்துள்ளீர்கள்...**" என்றபோது, "**நான் ஒன்றும் என் பெண்ணை அப்படி வளர்க்கவில்லை ; என் பெண், பெரிய பெண் ஆனபோது, பூப்புநீராட்டு எனும் சீர்கூட நான் செய்யவில்லை ; எங்கள் பெண்களை நாங்கள் நன்றாகத்தான் வளர்க்கிறோம்**" என்றார் அவர். அதற்கு நாங்கள், "**நீங்கள் சரியாகத்தான் உள்ளீர்கள்; தெளிவாகி விட்டீர்கள்; ஆனால், எங்கள் வீட்டு அன்னையரும் அக்கா தங்கையரும் இன்னும் இதுபோன்ற தொடர்களை - கருமங்களைத் தானே பார்த்துக் கொண்டு, தன்னிலை உணராமல் இருந்துகொண்டுள்ளனர் ; அவர்களைப் பார்த்துத் தான் அறிவுரை சொன்னோம்**" என்றோம்.

அந்தப் பெண்மணியோ, "***அந்த இராமாயணத்தை ஒளிபரப்பிக் கொண்டிருப்பது என்ன பார்ப்பனரா ? அவர்களும் தமிழர்கள் தானே... அந்தத் தொலைக்காட்சியும் தமிழ்த்***

***தொலைக்காட்சி தானே...***" என்று ஏட்டிக்குப் போட்டியாகக் கேட்டுக்கொண்டேயிருந்தார். "**ஆமாம்... அம்மா... அவர்களைப் பார்த்துத் தான் நான் கேட்கிறேன்... உங்களுக்கு ஏன் சினம் வருகிறது...? எங்கள் நாட்டுக்குள் - எங்கள் வீட்டுக்குள் - எங்கள் வரவேற்பறைக்குள் வந்து இருந்துகொண்டு எங்களின் காசை வாங்கிக் கொண்டு, எங்களை - எங்கள் இனத்தை - எங்கள் பண்பாடுகளை அழித்தொழிக்கும் வேலையைச் செய்துகொண்டுள்ள - எங்கள் கையை வைத்தே எங்கள் கண்களைக் குத்திக் கொள்ளச் செய்கின்ற அவர்களைப் பார்த்துத்தான் நாங்கள் கேட்கின்றோம்... இந்த இழவுகளை மீண்டும் மீண்டும் ஏன் ஒளிபரப்பி, எம் மக்களைச் சேற்றிலிருந்து எழ விடாமல் அந்தச் சேற்றையே மணக்கிறது மணக்கிறது என்று சொல்லவைத்து, அதில் புரண்டு திரிய வைத்துள்ளீரே... என்று அவர்களையும் பார்த்துத்தான் கேட்கிறோம்...**" என்றோம்.

இப்படி, நம் தமிழர்கள் தாம் இருந்த நிலையும் இன்று இருக்கும் நிலையும் என்னவென்றே தெரியாத அளவுக்கு இதுபோன்ற தொடர்களில் - கேளிக்கைகளில் ஆழ மூழ்கியிருக்கின்றனர். தமிழினப் பகைவர்களும் எதிரிகளும் இவைபற்றிய தெளிவான புரிதலுடன் தான் தங்கள் காய்களை நகர்த்துகின்றனர். ஆனால், புரியாத நம் தமிழ மக்கள் தான் ஆரியச் சூழ்ச்சியை அறியாமல் இன்னும் இவற்றில் வீழ்ந்து கிடக்கின்றனர். நம் தமிழர்கள் - தமிழ்ப் பெண்கள் சற்றேனும் மாறுபட்டுச் சிந்தித்தால் இக் கொடுமைகளிலிருந்து மீளலாம்.

இதுபோன்ற தொடர்களை வடிவமைக்கும் ஊடகங்களிடமிருந்து நம் மக்களை மீட்டெடுக்க வேண்டும். இவற்றை உணர்ந்த முற்போக்குச் சிந்தனையுள்ள தமிழர்கள் தத்தம் இல்லங்களிலுள்ள பிறர்க்கு இவற்றை அவ்வப்போது எடுத்துக்கூறி உணர்த்த முற்பட வேண்டும். சிந்திக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் பண்பாட்டு அடிப்படையில் இத் தமிழினம் தன்னை உணர்ந்து செயற்படத் தொடங்கும்.





# 16. பேருந்துகளில்...

தோழர்களே! இங்கே காணுகின்ற (பொம்மைப்) படங்கள் எல்லாம் எங்கு மாட்டப்பட்டிருக்கின்றன என்று தெரிகின்றதா...? இவை மாட்டப்பட்டுள்ள இடம் : சாதி, மத வேற்றுமையில்லாமல் அனைத்து மக்களும் பயணம் செய்திடக்கூடிய பேருந்து. அரசுப் பேருந்து ( முதற்படம்), தனியார் பேருந்து (இரண்டாம் படம்) என்று பெரும்பாலும் அனைத்துப் பேருந்துகளிலும் இந்த பொம்மைப் படங்கள் – அதாவது இந்துக் கடவுள்கள் என்று சொல்லப்படும் படங்கள் தொங்குகின்றன.

"இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு ; இங்கு அனைத்து மதங்களும் அனைத்துக் கடவுள்களும் சமம்" என்று சொல்லப்படுகின்ற இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள இந்தத் தமிழ்நாட்டில் தான் – பொதுமக்கள் எல்லாருக்கும் பொதுவான இடமான – எல்லாரும் பயணம் செய்கின்ற பேருந்துகளில்தான் இப்படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன.

சில பேருந்துகளின் உள்ளே "எண்ணத்தில் சிவனை வைத்தால் எடுத்த காரியம் வெற்றியாகும்" என்று எழுதப்பட்டு, சிவன்உருவம் (இலிங்கம்) பொறிக்கப்பட்ட ஒட்டிகளும் ஒட்டிவைக்கப்பட்டுள்ளன.

பேருந்து, அரசு அலுவலகங்கள், அரசுப் பணியிடங்கள் என்பவை என்ன...? சாதி, மத வேறுபாடின்றி அனைவரும் வந்து போகும் பொதுவான இடங்கள் தானே...! அந்தப் பொதுவான இடங்களில் இப்படி, குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சார்ந்த கடவுள் உருவங்களை (பொம்மைகளை) மாட்டி வைப்பது எந்தவகையில் சரி?

இந்தநாடு, இந்தக் குமுகம், இந்தப் பேருந்து ஆகியவை இந்து எனப்படும் ஒருபிரிவினர்க்கு மட்டும் சொந்தமா...? வேற்று மதத்தைத் தழுவியவரோ வேறு இறையை வணங்குபவரோ அல்லது

இறைமறுப்புக் கொள்கையுடையவரோ இதுபோன்ற பொதுஇடங்களில் பயணம் செய்ய வேண்டாமா ? அப்படிப் பயணம் செய்யும்போது, அவர்கள் மனங்களை எல்லாம் புண்படுத்துவனபோல் இவை அமையாதா...? என்ன நயன்மை (ஞாயம்) இது...? இவர்களுக்கு ஒரு நயன்மை... மற்றவர்க்கு ஒரு நயன்மையா...? மதச்சார்பற்ற நாடு என்று சொல்லிக்கொண்டு, ஒரு மதத்தை( ? ) மட்டும் சார்ந்த செயல்களைப் புரிவது எப்படி நேர்மையாகும்...?

இப்படிச் செய்யக்கூடாது என்று அரசாணை ஒன்றும் உள்ளது. ஆனாலும் அதையறியாமலோ (அல்லது அதையும் மீறியோ ) இப்படிச் செய்திடும் அரசு அலுவலர்கள், அதிகாரிகள், பேருந்து நிருவாகத்தினர் மீது நம்மில் யார் - என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம்...? சிந்திப்பீர்....!

தமிழ்நாட்டரசில் இதே பேருந்துகளில் - அரசுப் பேருந்துகளில் காலங்காலமாகத் திருக்குறட் பாக்கள் எழுதப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பேருந்தின் உள்ளேயும் ஓட்டுநர் இருக்கைக்கு இடப்புறமோ அல்லது அதற்குப் பின்புறமோ திருவள்ளுவரின் படம்போட்டு, அருகிலேயே திருக்குறளின் ஏதேனும் குறட்பா ஒன்று எழுதப்பட்டிருக்கும். ஆனால், அதையெல்லாம் இப்போது ஏனோ தானோ என்று வெறும் கடமைக்குத் தான் எழுதிப் போட்டுள்ளனர். ஏனிப்படிச் சொல்கிறோமென்றால், பல பேருந்துகளில் திருக்குறளைத் தவறாக எழுதி விடுகின்றனர். திண்டுக்கல் - பழனி வழித்தடத்திலான பேருந்து ஒன்றில் இத்தவறினை நாமே கண்கூடாகப் பார்த்தோம்.

1330 திருக்குறட்பாக்களில் ஒன்றைத் தவறாக எழுதிவைத்தால் யாருக்கு எப்படித் தெரியப் போகிறது... யார் கேட்கப் போகிறார்கள்... என்ற குருட்டாம்போக்கு எண்ணமோ அல்லது எழுதிய பேருந்து நிறுவன அலுவலர்களுக்கே எழுதியது சரியா தவறா என்று தெரியாத அளவு அறியாமையோ... என்னவென்று எமக்கு விளங்கவில்லை. ஆனால், வெறும் கடமைக்காகத்தான் இதை எழுதி வைக்கின்றனர் என்பது மட்டும் தெளிவாக விளங்குகிறது.

தொடர்புடைய அதிகாரிகள் இதனைக் கவனிக்க வேண்டும்.

மேலும், ஒரு முகாமையான செய்தி என்னவென்றால், பேருந்துகளில் திருக்குறளுடன் அதற்குரிய பொருளையும் சேர்த்து

எழுதிவைக்க அரசு ஆணையிட வேண்டும். குறளின் ஈரடிகளோடு, அதன் கீழே அதன் பொருளையும் ( 2 முதல் 3 வரிகளுக்குள் ) எழுதப்பட்டு இருந்தால் அது அனைவருக்கும் நலம் பயக்கும். என்றைக்கோ மாணவப் பருவத்தில் – பள்ளியில் – மனப்பாடப்பகுதிக்காக – தேர்வில் மதிப்பெண் பெறுவதற்காகப் பயின்றதை, அன்றைக்கே காற்றோடு விட்டுவிட்டு அகவையானதும் திருக்குறளையும் அதன் பொருளையும் உணராமல் அதைப்பற்றிய கவலையே இராமல் பயணம் செய்கின்ற பொதுவான மக்களுக்கு இப்படிப் பொருளோடு குறள்களை எழுதினால் படித்துப் புரிந்துகொள்ளவும் சிந்திக்கவும் வாய்ப்பாக இருக்குமன்றோ? அப்போது, இப்படித் தவறாக எழுதப்பட்டிருந்தால் அக்குறட்பாக்களை யாரும் எளிதில் அடையாளம் கண்டுபிடித்துத் திருத்திடவும் இயலுமன்றோ...?

தமிழ்நாட்டரசின் ஆட்சிகள் மாறும்போதெல்லாம் காட்சிகளும் மாறிவரும். அப்போது பேருந்துகளினுள்ளே எழுதப்படும் காட்சிகளும் (அறிவுரைகளும்) மாறிக் கொண்டே வரும். ***அம்மா*** ஆட்சி வந்தால் ***ஐயா***வின் அறிவுரைகள் அழிக்கப்பட்டுவிடும் ; ***ஐயா*** ஆட்சி வந்தால் ***அம்மா***வின் அறிவுரைகள் அழிக்கப்பட்டுவிடும். இது காலங்காலமாய் நடந்துவருகிறதென்பதை நாமறிவோம். தம்முள் யார் ஆட்சிக்கு வந்தாலும் நல்லதை நல்லதாக எண்ணி, விட்டுவைப்போமே என்றெல்லாம் எண்ணாமல் ஏறியவுடன் இதை முதலில் அகற்றி விடுவர். ஆனால், இன்னும் வியப்பாக உள்ளது எதுவென்றால், **திருக்குறளை நீக்காமல் இருப்பதும் "ஊனமுற்றோர்"** – என்னும் சொல்லுக்கு மாற்றாக ***"மாற்றுத் திறனாளிகள்"*** என்று வைத்ததை மாற்றாமல் – அழிக்காமல் வைத்துள்ளதும்தாம். இதற்காக அவர்களை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

எனவே, எழுதியுள்ள திருக்குறளைப் பிழையின்றி எழுதிப் போட வேண்டும். அரசுப்பேருந்துகளில் மட்டுமின்றி, தனியார் பேருந்துகளிலும் திருக்குறளை எழுதிப்போடுவதைக் கட்டாயமாக்கிட வேண்டும். இதை அரசாணையாகவும் கொண்டுவரவேண்டும். கண்ட கண்ட மத அடையாளங்கொண்ட பொம்மைப் படங்களையும் நடிகர் – நடிகையர் படங்களையும் தொங்கவிடுவதைத் தவிர்த்து, ஒரு மதத்தையும் சாராத ஒரு பிரிவினையையும் உருவாக்காத,

ஒருவருக்குள்ளும் வேற்றுமையைத் தோன்ற வைக்காத உலகப்பொதுமறையான திருக்குறளைத் தனியார் பேருந்துகளிலும் எழுதிப் போட வேண்டுமென்பதை அரசு வலியுறுத்தி, அதைச் செயற்படுத்தவும் செய்ய வேண்டும்.

முதலில் இப்போதுள்ள பொம்மைப்படங்களை அகற்றிட அரசு இப்பேருந்து நிறுவனங்களுக்கு ஆணையிட வேண்டும். அது அரசுப் பேருந்தானாலும் சரி, தனியார் பேருந்தானாலும் சரி. நயன்மை ( நீதி ) என்பது அனைவருக்கும் ஒன்றுதான். இதைச்சொன்னால் உடனே அவர்கள், "அது எங்கள் உரிமை ; எங்கள் விருப்பம் ; எங்கள் பேருந்தில் நாங்கள் என்ன வேண்டுமானாலும் எழுதுவோம் ; எந்தப் படம் வேண்டுமானாலும் வைப்போம் ; அதைக்கேட்க உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது; பொதுமக்களுக்கு என்ன உரிமையிருக்கிறது...?" என்கின்ற வகையில் அவர்கள் கேட்கக்கூடும். "உரிமை இருக்கிறது ; பொதுமக்களாகிய எங்களுக்குத் தான் உரிமையிருக்கிறது. ஆம். பொதுமக்களாகிய நாங்கள் தான் உங்கள் பேருந்தில் பயணம் செய்கிறோம். நாங்கள் பயணம் செய்தால் தான் உங்களுக்கு வருமானமே...! எங்கள் பயணத்தில் தான் உங்கள் பகட்டு வாழ்க்கையை - செல்வங்கொழிக்க வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்... ஆகவே, நாங்கள் கேட்காமல் வேறு யார் கேட்பார்கள்..." என்று பொதுமக்களாகிய நாம் அவர்களைக் கேட்க வேண்டும்.

அரசு ஆணையிட வில்லையெனில் மக்களாகிய நாம் ஆணையிட வைப்போம் ; உரிமையைப் பெற்றிடப் போராடுவோம். ஏதேதோ அறிவிலிச் செயல்களுக்கு உயர்த்தும் தோளை இதற்கு உயர்த்தினால் என்ன..? திரைப்பட நடிகர்களுக்குப் பதாகை கட்டுவதிலும் அவர்களின் வெட்டுரு (கட்-அவுட்) வைத்து, அதைக் குடம் குடமாகப் பால் ஊற்றிக் குடமுழுக்கு செய்வதிலும் முனைப்புக் காட்டும் தமிழிளைஞர்களே இதைச் செய்தால் என்ன...? ஒரு நடிகனின் திரைப்படம் வெளிவரவில்லை என்று, வீண் ஆர்ப்பாட்டங்கள் செய்து, சாலைகளை மறித்து, திரையரங்குகளின் முன் போராடும் தமிழினமே... இதுபோன்ற உரிமைகளுக்காக - மக்களின் விழிப்புணர்வுக்காக ஏன் உங்கள் போராட்டங்கள் அமையக்கூடாது...? இன்று நாம் இதை எதிர்க்காவிடில், தமிழர்களாகிய நாம் இழந்துவருகின்ற உரிமைகளுள் இதுவும் ஒன்றாக அமைந்திடக்கூடும். செந்தமிழரே, சிந்திப்பீர் !

# 17. எண்ணும் எழுத்தும் எம்மினச் சொத்து !



தமிழர்களே, பாருங்கள் !

நம் நாட்டில், நம் ஊரில், நம்முடனே உள்ள ஆரியன் - தினமலம் தன்(இலவயக்) கிழமை இதழான வாரமலர்(22.08.2010) இதழில் வெளியிடப்பட்டுள்ள (சாரி... கொஞ்சம் ஓவர்...) மடல் உரையையும் அதற்கு அவன் கொடுத்துள்ள உரு.1500 பரிசையும் பாருங்கள் !

உயிரோடுள்ளவர்களைச் செத்து விட்டதாகவும், உயிரில்லாத, கண்ட 'கருமாந்திர'க் கடவுள்களை உயிருள்ளதாகவும் எழுதி, இத்தமிழினத்தை ஏமாற்றிக் காசுபறித்துப் பிழைக்கும் இவன் சொல்கிறான், தமிழ் எண்களை வண்டியில் எழுதுவது 'கொலைவெறி' என்று.

'இது உங்கள் இடம்' எனும் பகுதியில் இவன் வெளியிடும் அனைத்துமே நம் தமிழ மக்கள் எழுதியனுப்பியதாக இருக்காது ; பலவற்றை இவனே தன் சொந்தக் கற்பனையில் உருவாக்கி ( எப்படி ஆயிரத்தெட்டுக் கடவுள் உருவங்களையும் கருமக் கதைகளையும் உருவாக்கி உலவ விட்டுள்ளானே அதுபோல ) அதைத் தன் சோரம்போன இதழில் வெளியிட்டும் விட்டு, அதன்கீழே ஒப்புக்காக ஒருவரின் பெயரையும் ஊரையும் போட்டு விடுவான். அதிலும் தமிழுக்கும் தமிழினத்திற்கும் எதிராகவும் ( தமிழர்க்கே தெரியாமல் ) இரண்டகமாகவும் எழுதுவது என்றால் இவனுக்குச் சர்க்கரைப் பொங்கல் உண்பது போன்று தித்திக்கும். அவ்வளவு விரைவாய் - யாரும் எளிதில் ஏமாந்திடும் வகையில் காதில் பூச்சுற்றி எழுதி வெளியிடுவான் !

*"உலக மயமாக்கலால் வெகுவேகமாகத் தாக்கும் மேற்கத்தியக் கலாச்சாரத்திற்குப் பலியாகாமல் தமிழ்மொழியை, பண்பாட்டைக் காப்பது, நம் இயல்பு வாழ்க்கையில் இருக்கிறது. அதற்காக, காபியைக்*

*குழம்பி என்பதும் பதிவு எண்ணைத் தமிழ் எண்களில் எழுதுவதும் ரொம்பச் சின்னப்புள்ளத்தனமாக இருக்கே !"*

என்று போட்டுள்ளான். மேற்கத்தியப் பண்பாட்டுக்குப் 'பலி'யாவதை விட, முதலில் நாம் இவனின் ஆரியப் – பார்ப்பனப் பண்பாட்டுக்குத் தான் 'பலி'யாகாமல் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்.

'இயல்பு வாழ்க்கையில் இருக்கிறது...' என்று சொல்கிறான்... என்ன இயல்பு வாழ்க்கை ? அன்றாடம் இயல்பாய்ப் பயன்படுத்தும் பொருள்களில் தமிழ் இருப்பது தானே இயல்பு வாழ்க்கை என்பது. தேநீர், குளம்பி, சோறு, சாறு, இனிப்பு, பலகாரம் என்பவற்றை அப்படியே கூறுவதுதானே இயல்பு வாழ்க்கை. இது எப்படிச் 'சின்னப்புள்ளத் தனமாக' இருக்கும்? ( குளம்பி என்பதைச் சரியாக எழுதக்கூடத் தெரியாமல் குழம்பி என்று எழுதி வெளியிட்டுள்ளான் மானங்கெட்ட ஈனநாய்.) இதை உண்மையாகவே மடலாகவே ( ஒருவேளை எழுதியிருந்தால் ) எழுதிய அந்த நேயராகட்டும், அல்லது இந்தக் கரும இதழ்களைப் படிக்கும் நம் தமிழ் நெஞ்சங்களாகட்டும் இதைச் சரியென்று எண்ணி ஏற்றுக் கொள்ளத்தானே செய்வார்கள் ! எத்தனைத் தமிழர்களை ஏமாற்றுகிறான் பாருங்கள் இந்த மலப் பயல் !

அப்போ, வண்டியில் பதிவு எண்ணைத் தமிழில் எழுதுவதெல்லாம் 'சின்னப் புள்ளத் தனமா' இவனுக்கு ? அவனவன் நாட்டில் அவனவன் மொழியில் அனைத்தையும் கற்பவனுக்கு அன்றாடச் செயல்முறைகளும் இயக்கங்களும் அவனவன் மொழியில் தானே இருக்கும் (அவன் உண்மையான உணர்வாளனாக இருந்தால் ) ? இவனுக்கு வேண்டுமானால் நிலையானதொரு நாடோ – நிலையானதொரு மொழியோ இல்லாமல் ஏதிலிப் பையனாக இருக்கலாம். ஆனால் நாம்...?

கன்னட நாட்டில் வெண்கல்லூர் ( பெங்களூர் ) வண்டியில் அவன் கன்னடத்தில் தான் எண்களை எழுதுகிறான் ; ஆந்திரத்தில் தெலுங்கில் தான் எழுதுகிறான். இவையிரண்டு வண்டிகளையும் தமிழகத் தலைநகரான சென்னையில் கடற்கரைச் சாலையில் நாமே கண்டோம். நம் ஊர்ப் பகுதியிலும் ஒரு வெண்கல்லூர்ப் பேருந்து **முழுக்க முழுக்கக் கன்னடத்தில் எண்கள் எழுதப்பட்ட பேருந்து வந்திருந்ததைக் கண்டோம்.** ஆந்திரனும் கன்னடனும் 'சின்னப் புள்ளத்

தனமாக' த்தான் இருக்கிறார்களா? அங்கெல்லாம் போய் இவன் இப்படித் தன் 'மேதை(?)'த் தனத்தைக் காட்ட முடியுமா... இதுபோன்று அங்கு வெளியிட்டு இவன் பிழைக்க முடியுமா... அவர்கள் இந்தத் 'தினமலத்தை' அங்கு வாழ விட்டு விடுவார்களா? நம் தமிழ மக்களுக்குத்தான் சூடு, சுரணையே இல்லையே... அதனால் தானே இன்னும் இந்த - இழிவாக எழுதுகின்ற இவனையெல்லாம் விட்டு வைத்துக் கொண்டு இதையே வாங்கிப் படிப்பேனென்று அடம்பிடித்து வாங்கித், தங்களைத் தாங்களே பேரிழிவுக்கு ஆட்படுத்திக் கொள்கிறார்கள்.

ஒருவேளை இவன் சொல்வதுபோல், தமிழ் எழுத்துகள் எத்தனை என்று தெரியாமலும் பிழையில்லாமல் தமிழ் எழுதத் தெரியாமலும் ழ, ல, ள ஒலிப்பு வேறுபாடு தெரியாமலும் கூட அந்தத் தமிழர் இருக்கட்டும், அதற்காக எண்ணைத் தமிழில் எழுதக் கூடாதா ? தமிழ் எண்களை மட்டும் நன்கு அறிந்தவராய் அவர் இருக்கக் கூடாதா ? எந்தளவுக் கிண்டல் செய்து இறக்குகிறான் பாருங்கள் ! இப்போது ஆங்கிலத்தில் எழுதிடும் - பேசிக் கிழிக்கும் 'மேதாவி'கள் எத்தனை பேருக்கு முழுமையாக ஆங்கிலத்தை - ஆங்கில மொழியைப் பற்றித் தெரியும் ? ஆங்கிலத்தை ஆங்கிலேயன் போன்றே சரியாக - ஒழுங்காக ஒலிக்கத்தான் தெரியுமா ? நம்மாள்கள் பலர் பேசும் ஆங்கிலத்தை ஆங்கிலேயன் கண்டால் சிரித்துக் காறித் துப்புவான். அவ்வளவு தப்பும் தவறுமாக ஆங்கிலத்தில் பேசியும் எழுதியும் இருக்கும் அவனெல்லாம் செய்வது என்ன 'பெரிய புள்ளத் தனமா' ?

அதுமட்டுமின்றி, இந்தக் குடுமிக்கார ஆரியப் பார்ப்பானின் சமற்கிருத (வட) மொழி என்ன நம் இயல்பு வாழ்க்கை மொழியா ? நம் வீட்டுக் குழந்தைகளுக்கு அவனின் மொழியில் - அவனின் (ஸ, -, ஜ, ஹ) எழுத்துகளில் பெயர்வைக்கச் சொல்லி, நாள்தோறும் தினமலத்தில் பட்டியல் வேறு போடுகிறான். அதில் அவன் போடும் எழுத்தையெல்லாம் எந்தமிழ் மக்கள் எங்கே- எப்போது அறிந்துள்ளார்கள் ? முன்பிருந்து அவர்களின் இயல்பு வாழ்க்கையில் அந்த எழுத்துகளையெல்லாம் இன்னும் எங்கள் தாத்தனும் பாட்டியும் அவனின் அந்தக் கொச்சை எழுத்துகளைத் தங்களின் தமிழ் மொழிநடைக்கு மாற்றித் தான் படிப்பார்கள்.. சான்றுக்கு... 'விஜய குமார்' என்றிருந்தால் 'விசயகுமார்'

என்றும் ஜெயச்சந்திரன் என்பதைச் செயச்சந்திரன் என்றும் விஷ்வா என்பதை விசுவா என்றும் ஹரீஷ் என்பதை அரீசு என்றும் க–ாயம் என்பதைக் கசாயம் என்றும் பஜனைக் கோயில் என்பதைப் பசனைக் கோயில் என்றும் சொல்லித்தான் இயல்பாகப் பேசுவார்கள். அப்படியிருந்த மக்களிடையே இந்த ஆரிய நரிப்பயல் தான் வலுக்கட்டாயமாகக் கொண்டுவந்து வடமொழி எழுத்துகளையும் வடமொழிப் பெயர்களையும் திணிக்கிறான்.


இன்றுள்ள இந்தத் தலைமுறையில் மெத்தப் படித்த தமிழன்தான் இவனுடைய இந்தத் திணிப்பை( முட்டாள்தனமாக )த் தாங்களும் ஏற்றுக்கொண்டு, தங்களின் முந்தைய இயல்பான தமிழர் வாழ்க்கையை மாற்றி மழுங்கடித்துக் கொண்டு வருகின்றான். இப்படி இவனுடைய ஈனத்தனமான வழக்கிற்கு மாற்றிய இவனின் செயல்தானே 'சின்னப் புள்ளத் தனம்'?

இதுமட்டுமா ? 'ஓவர் ஆக்டிங்' என்று வேறு கூறியுள்ளான் உட்பூசலை உண்டுபண்ணுபவன் !
வண்டி எண் பலகையைத் தமிழில் எழுதினால் அது 'ஓவர் ஆக்டிங்'ஆ...?

இதைப் படித்து, உணர்ந்த ஒவ்வொரு தமிழரும் ஓர் உள்நாட்டு உறையிலோ அஞ்சல் அட்டையிலோ ஓர் கண்டிப்பு மடலை – அந்தத் தினமல இதழுக்குக் கட்டாயம் போட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இல்லையேல் அவனுடைய திருட்டுத் தனங்கள், திணிப்பு வேலைகள், தமிழரின் பண்பாட்டுச் சிதைவுகளை எல்லையின்றித் தொடருவான். செய்வீர்களா தமிழர்களே ?

இவன் போன்ற எதிரிகள் இப்படி நம்மை இழிவு செய்வதற்கு ஏற்றாற்போலவே தான் நம் தமிழர்களின் செயற்பாடுகளும் உள்ளன. நம் ஊரில் தமிழ் எண் பலகை கொண்ட நம் இருசக்கர ஊர்தியில் கடந்த 8 ஆண்டுகளாக நாம் சென்றுகொண்டிருக்கிறோம். ஒருமுறை ஓட்டுநர் உரிமம் உள்ளதா என ஆய்வு செய்வதற்காக நம் வண்டியை நிறுத்திய போக்குவரத்துக் காவலர் ஒருவர், ***என்ன வண்டி எண்ணை இப்படியெல்லாம் எழுதியிருக்கீங்க...? இப்படியெல்லாம் எழுதக்கூடாது....*** என்று அதட்டினார். ***ஐயா தமிழில் எழுதியுள்ளேன்... கீழே ஆங்கிலத்திலும் உள்ளதே..*** என்று நாம் சொன்னபோது, ***உங்க***

***தமிழ்ப் பற்றையெல்லாம் வேறு செயல்களில் வைத்துக்கொள்ளுங்கள் ; இதில் காட்டக்கூடாது. வண்டி எண் முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் மட்டும் தான் எழுதப்படவேண்டும்....*** என்றார். அப்போது அவரிடம் சான்றாகக் காட்டுவதற்கு **இது குறித்த அரசாணையின் படி** என்னிடம் இல்லை. சடுத்தமாக ( அவசரமாக ) அப்போது வந்துவிட்டேன். அன்றுமுதல் **வண்டியில் தமிழெண்கள் எழுதுவதற்குரிய அரசாணையைப் படியெடுத்து வைத்துக் கொண்டுள்ளேன்.** ஏனென்றால், நம் ஊர்க் காவல்துறை அலுவலர்களுக்கே இப்படியோர் ஆணை இருப்பது இன்னும் தெரியாமல் உள்ளது. அதனால் தான் அந்தக் காவலர் நம்மிடம் அப்படி நடந்துகொண்டுள்ளார். தமக்குத் தெரியவில்லை என்பதற்காக எல்லாவற்றையும் தவறு என்றால் எப்படி? இதற்கும் அந்த ஆந்திரப் பேருந்தைப் போலவே கருநாடகப் பேருந்தைப் போலவே ஆந்திர, கருநாடக எண்களில் எழுதியிருந்ததைப் போன்று தமிழ் எண்களில் கூட நாம் எழுதவில்லை. தநா 40 ழ 1234 என்று TN என்பதையும் Y என்பதையும் தான் மாற்றித் தமிழில் எழுதியிருந்தோம். இதுவே புரியவில்லை என்று கூறி மாற்றச் சொல்கின்ற தமிழகக் காவல்துறை அலுவலர்களே.... அன்பர்களே... அரசாணையை முதலில் படியுங்கள். அதேபோல், அண்டை மொழி நாடுகளை (மாநிலங்களை) உற்றுநோக்குங்கள்.



நம் தமிழ் எண்ணும் எழுத்தும் எப்படித் தோன்றின... எப்படிச் சிறந் திருந்தன.... இன்று எப்படி அவை மறைக்கப்பட்டுள்ளன என்பவற்றையும் சிந்தியுங்கள். தமிழக அரசே ! நீயாவது இதை இவர்களுக்கு உணர்த்து. தமிழ் எண்கள் தான் அரபு எண்களாக உருமாற்றம் பெற்றுள்ளது என்ற பேருண்மையையும் இத்தமிழகமும் தமிழனும் எப்போது உணரப் போகிறார்கள்...?

# 18. தந்தையும் தம்பியும்...

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் பகுத்தறிவு, தன்மானப் புரட்சியை உண்டாக்கித் தமிழர் மனங்களை ஆண்டவர் தந்தை பெரியார் என்றால் இதே இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழீழத்தில் ஒரு மாபெரும் இனமீட்புப் போரை நடத்தி, ஈடிணையற்ற வீரனாக உலகத்தமிழர் நெஞ்சங்களை ஆண்டவர் தம்பி பிரபாகரன் ஆவார்.

ஒரே குருதி கொண்ட மாந்தராய் ஒற்றுமையுடன் வாழ்ந்த தமிழர்கள், எங்கிருந்தோ வந்த ஆரியனுக்கு அடிமைப்பட்டு, ஈராயிரம் ஆண்டுகளாய்ச் சொந்த மண்ணிலேயே சாதி எனும் பேயாலும் மதப் பிரிவினைகளாலும் வேற்றுமைப்படுத்தப்பட்டு, விலங்கினும் கீழாய் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வுகளால் மாந்தனை மாந்தன் அடிமைப்படுத்தி, மாந்தத்தன்மையே இழந்து திரிந்த தமிழகத்தில், ஈரோட்டுக் கதிரவனால் ஓர் விடியல் பிறந்தது. ஐந்தறிவு உயிரினங்களில் கூட இல்லாத மேல்-கீழ் வேற்றுமைகள், சாதிய ஏற்றத்தாழ்வுகள், அவற்றிற்கு அடிப்படையான கடவுள்- மத நம்பிக்கைகள், அதன் தொடர்ச்சியான மூட நம்பிக்கைகள் - இவையனைத்தும் சேர்ந்த மொத்த இருளையும் கிழித்தெறியும் பேரொளியாய்த் திகழ்ந்த அந்த விடியல் தான் வெண்தாடிக் கிழவனாம் தந்தை பெரியார்.

தமிழ்நாட்டில் தந்தை பெரியாரின் புரட்சி, பண்பாட்டு மறுமலர்ச்சியை உருவாக்கியதென்றால், தமிழீழத்தில் தம்பி பிரபாகரனின் புரட்சி, இனவிடுதலை எழுச்சியை உருவாக்கியது.

ஆண்டாண்டு காலங்களாய்த் தீண்டாமைக் கொடுமையினால் தாழ்த்தப்பட்டுக்கிடந்த அடித்தட்டு மக்களும் அம் மக்களுக்கும் கீழாய் மதிக்கப்பட்டு வந்த பெண்ணினமும் விழிப்புற்று மீளக் காரணமானவர் தந்தை பெரியார்.

தமிழினத்தை மீட்கவந்த ஒப்பற்ற விடிவெள்ளி
தமிழ்ப்பகையாம் ஆரியத்தை எதிர்த்தெரிக்கும் தீக்கொள்ளி !
தமிழர்க்குத் தந்தையவர் பெரியார்தான் ; மிகையில்லை !
தலைதூக்கும் பிறரெவரும் சொல்லும்படி வகையில்லை !
'ஜாதி'யெனும் சொல்கூடத் தமிழில்லை என்றுரைத்து,
சாய்க்கடையில் கிடந்தநமை விழிப்பிக்க நின்றுழைத்து,

வீதியெலாம் பகுத்தறிவுப் போர்முழக்கம் செய்திட்டு,
விடியலுக்(கு) எதிர்நின்ற வீணர்களைக் கொய்திட்டு,
மூடத்தின் முதுகுத்தோல் உரித்தெடுத்து,
முட்டாள்தனச் செயலொழித்து,
வேடத்தன ஆரியத்தால் வீழ்ந்ததமிழ் நாட்டை,
வென்றெடுக்கப் பாடுபட்டவர் தந்தை பெரியார்.

கோயில்நுழைவுப் போராட்டம், குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம், பனுவல் (புராண) எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, இட ஒதுக்கீடு, குழந்தைத் திருமண எதிர்ப்பு, சடங்கு மறுப்பு மற்றும் சாதி மறுப்புத் திருமணம், தன்மதிப்பு (சுயமரியாதை)த் திருமணம், கைம்பெண் திருமணம் போன்றவற்றுக்காகப் போராடி, அவற்றைத் தம் வாழ்நாளில் நிகழ்த்திக் காட்டியவர் தந்தை பெரியார்.

தமிழ்நாட்டில் தந்தை பெரியாரின் புரட்சி, பண்பாட்டுப் புத்தெழுச்சியை உருவாக்கியதென்றால், தமிழீழத்தில் தம்பி பிரபாகரனின் புரட்சி, இனவிடுதலைப் பேரெழுச்சியை உருவாக்கியது.

ஆரியனின் வழிவந்த சிங்களப் பேரினவெறி அரசுகளால், ஆண்டாண்டு காலங்களாய் அடக்கி, ஒடுக்கப்பட்டுக் கிடந்த தமிழீழத் தமிழ் மக்கள், இனவிடுதலை பெற்று, விடுதலைக் காற்றை நுகரப் பாடாற்றியவர் தம்பி பிரபாகரன்.

பெரியாருக்கு எதிரி பார்ப்பனியம் என்றால் பிரபாகரனுக்கு எதிரி சிங்கள அரசு.

தமிழ்நாட்டில் தமிழர்க்கெதிராக ஆளுமை செலுத்திய இந்துமத – பார்ப்பனிய ஆற்றலை – அதன் ஆணிவேரை அசைத்து, ஆட்டி, நடுங்க வைத்து, ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர் பெரியார் என்றால்,

தமிழீழத்தில் தமிழர்க்கெதிராக ஆளுமை செலுத்திய புத்தமத – சிங்கள அரசை எதிர்த்துக் களம்கண்டு, சிறுபான்மைத் தமிழ்மக்களின் இனமீட்புக் கதிரவனாக விளங்கியவர் பிரபாகரன்.

**தந்தை, தம்பி இருவ1ருமே தன் சொந்தநலம் கருதாது, தன் குடும்பநலம் கருதாது, அரசியல் பதவி – பணம் – புகழ் – இன்பம் நாடாது, தன்நாட்டு மக்களுக்காகவே – தன் மக்களின் மீட்சிக்காகவே வாழ்ந்து உழைத்த பெருமக்களாவர்.**

தமிழ் மக்களின் இழிவுக்கும் அடிமைத்தளைக்கும் தாழ்த்தப்பட்ட நிலைக்கும் காரணமானவை தீண்டாமையும் சாதிய வேரும் எனவுணர்ந்த தந்தை பெரியார் அவர்கள், தம் இறுதி மூச்சுள்ளவரை அவற்றைக் களையவும் அறுத்தெறியவுமே பாடுபட்டார்.

அதேபோன்று, தம்பி பிரபாகரன் அவர்களும் தமிழீழ மக்களின் விடுதலைக்காகக் கட்டமைத்து வழிநடத்திய தம் அமைப்பில், சாதி – மத வேற்றுமைகள் பாராது, ஆண்-பெண் வேறுபாடுகள் பாராது அனைவரையும் சமமாக நடத்தினார். அமைப்பிலுள்ள அனைத்துப் போராளிகளிடையேயும் சாதி-மத வேற்றுமையையும் பாலின வேற்றுமையையும் ஒழித்து, சமநிலை வாழ்வை வகுத்துத் தந்தவர் அவர்.

சிங்கள இனவெறி அரசுக்கு எதிராகத் தமிழீழ விடுதலைக்கு முப்படைகள் அமைத்து இயக்கிய தம்பி பிரபாகரன் அவர்கள், புலிகள் அமைப்பைக் கட்டுக் கோப்பாகக் கட்டமைத்தார். மேலாண்மை ( நிருவாகம் ), காவல், வணிகம், மருத்துவம் எனப் பல துறைகளை அமைத்து வழிநடத்தினார்.

தந்தை பெரியார், தன்னுடைய கொள்கை வாழ்வை – போராட்ட இலக்கைத், தான்மட்டும் கைக்கொள்ளாமல் தன் குடும்பத்தில் – தன் இணையரையும் அதில் பங்கேற்கச் செய்து, தெருவிலிறங்கிப் போராடச் செய்தவர்.

அதேபோல், தமிழீழத்தில் மக்களோடு இடையறாது உறவோடு இருந்த பிரபாகரன் அவர்கள், தம் குடும்ப உறுப்பினர்களையும் படை அமைப்பில் பங்கேற்கச் செய்து, களம் காணச் செய்தவர்.

சிங்கள அரசுக்கு எதிரான அவரின் தாக்குதல்களும் போராட்டங்களும் உலகம் முழுவதும் ஈழச்சிக்கலைப் பேசும்படி செய்தது.

ஆம்...!

தமிழனைத் தமிழருக்கு உணர்த்தியவர் தந்தை பெரியார்

தமிழனை உலகுக்கு உணர்த்தியவர் தம்பி பிரபாகரன்.

அதேபோல், பெண்ணுரிமைக்கும் பெண் விடுதலைக்கும் ஓய்வின்றிக் குரல் கொடுத்தவர், போராடியவர் தந்தை பெரியார். அதைத் தன் வீட்டிலேயே இணையர் நாகம்மையார் மூலம்

செயற்படுத்திக் காட்டினார். இன அடிப்படையில் தமிழியத்திற்கும் பெரியாரியத்திற்கும் எதிரானது ஆரியப் பார்ப்பனியம் என்றாலும் பெண்ணினத்தில் பார்ப்பனப் பெண்களாலும் கூட நன்றி செலுத்தப்பட வேண்டியவர் தந்தை பெரியார் என்றால் அது மிகையில்லை. அந்தளவு பெண்ணுரிமை மீட்புக்கான கருத்தியலை - நடைமுறைகளை - செயற்பாடுகளைச் செய்துகாட்டியவர் பெரியார்.

இதே போன்றே, தம்பி பிரபாகரன் அவர்களும் தம் அமைப்பிலும் தம் குடும்பத்திலும் பெண்ணுக்கு மிக மேலான இடமளித்துப் பெண்விடுதலை போற்றியவர். தம் அமைப்பிற்குள் ஆணுக்கு நிகரான வீரராகவும் போராளியாகவும் பெண்களையும் வழிநடத்தி, இயக்கி, வெற்றி கண்டவர் அவர்.

*சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகச் சாதி ஒழிப்பும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக தேசிய விடுதலையும் தீர்வாக அமைகின்றன. தந்தை பெரியார் சாதி ஒழிப்பையும் தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தையும் முன்வைத்தார். இது இந்திய ( இந்து ) தேசியத்தின் உயிர்நிலையில் கொள்ளி வைப்பதாக அமைந்தது.*

இந்து - பார்ப்பனியத்திற்கு எதிராகக் களமாடிய பெருந்தொண்டர், இந்து - பார்ப்பனியத்தைத் தொடைநடுங்கச் செய்த மாவீரர் பெரியார் என்றால், தமிழீழத் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக, சிங்கள இனவெறி அரசை எதிர்த்துக் களம் கண்டதோடு, தம் படைத்திறனாலும் மக்கள் திறனாலும் தனித் தமிழீழ அரசு அமைத்து ஆட்சி நடத்தியவர் தம்பி பிரபாகரன் அவர்கள்.

எனவே,

தமிழனைத் தமிழருக்கு உணர்த்தியவர் தந்தை பெரியார் -
தமிழனை உலகுக்கு உணர்த்தியவர் தம்பி பிரபாகரன் !
தந்தை பெரியாரோ மறைந்தும் வாழ்கிறார் !
அண்ணன் பிரபாவோ மறைந்து வாழ்கிறார் !

தந்தையும் தம்பியும் காட்டிய வழியில் நேர்நின்று, தன்மானத்தோடும் இனமானத்தோடும் பகுத்தறிவோடும் முற்போக்கோடும் பண்டைத்தமிழ் வீரத்தோடும் சாதி-மதம் கருக்கிய தமிழ்த்தேசிய உணர்வோடும் நாம் களம்கண்டு போராடினால் தமிழரின் இருநாடுகளிலும் தமிழரின் கொடி பறந்திடும் என்பது திண்ணம்.

# 19. திருக்குறளூர் திருவிழா

தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் மட்டுமன்று – ஏன் – மாந்தராய்ப் பிறந்த ஒவ்வொருவருமே போற்றிப் பாதுகாத்து, படித்து, உணர்ந்து, பின்பற்றிப், பரப்ப வேண்டிய ஒரே நூல் நம் திருவள்ளுவப் பேராசான் எழுதிய திருக்குறள் ஒன்றே ! அதனால் தான் அது உலகப் பொதுமறை என அழைக்கப்படுகிறது. அத்தகைய ஒப்பற்ற – அரிய – எவ்வுலகிலும் காணாத பொதுமைக் கருத்துகள் நிரம்பிய – ஈடிணையற்ற – மேன்மை மிகுந்த – திருக்குறளைப் போற்றி ஓர் விழா ஆண்டுதோறும் நிகந்துவருகிறது ; அதுதான் ***திருக்குறள் திருவிழா.***

ஆம் ! ஒவ்வோராண்டும் தமிழ்ப்புத்தாண்டு தொடங்குகின்ற சுறவம் (தை) 1க்கு அடுத்த நாளான சுறவம் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாளாகத் தமிழர் அனைவரும் கொண்டாடி வருகின்றோம். ஆனால், திருவள்ளுவரோடு இணைத்துத் திருக்குறளையும் போற்றும் வகையில் **திருக்குறள் திருவிழா**, உலகின் முதன் மாந்தனாம் தமிழன் பிறந்த இடமான தமிழகத்தின் தென்கோடியிலுள்ள கன்னிக்குமரியில் கடற்கரையோரம் ஆண்டுதோறும் விடை (வைகாசி)த் திங்கள் முதல் நாளன்று நிகழ்ந்து வருகிறது.

இந்த ( தி.ஆ.2045 ) ஆண்டும் விடைத் திங்கள் முதல்நாளில் ( 15.05.2014 வியாழக்கிழமை) நிகழ்ந்த திருக்குறள் திருவிழா நிகழ்வில் எண்ணற்ற தமிழறிஞர்கள், தமிழன்பர்கள், திருக்குறட்தொண்டர்கள், மகளிர், மாணவ–மாணவியர் என நூற்றுக்கணக்கானோர் உடன் நாமும் சேர்ந்து, அதிகாலை 5:55 மணிக்குக் குமரிமுனையில் கூடித், திருவள்ளுவர் சிலை முன்பு, விண்சுடர் எழும்போது ஒண்சுடர் ஏற்றித், திருக்குறள் முற்றோதல் செய்தோம்.

வந்து பங்கேற்ற அனைவர் கைகளிலும் திருக்குறளின் 133 அதிகாரங்களுள் அதிகாரத்திற்கு 3 குறட்பாக்கள் கொண்ட திருக்குறட் தொகுப்பு நூல் வழங்கப்பட்டது. பங்கேற்ற அனைவரும் ஒவ்வொருவராய்ச் சென்று திருக்குறளை இசைவடிவில் பாட, அதைப் பின்பற்றி மற்றவர்களும் அதனைப் பாட, இப்படி ஒரு மணிநேரம் திருக்குறள் முற்றோதல் நிகழ்வு நடைபெற்றது. கடற்கரையில்

அதிகாலை எழும் விண்சுடரைக் காண அலை அலையாய் வந்திருந்த பொதுமக்களுள் பலரும் இந்தத் திருக்குறள் முற்றோதலையும் ஒண்சுடர் ஏற்றும் நிகழ்வையும் கண்டு, தாங்களும் வந்து பங்கேற்றுத் திருக்குறளைப் போற்றினர்.

திருக்குறள் முற்றோதல் நிகழ்வு முடிந்ததும் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. உணவுண்ட பிறகு, அனைவரும் குமரிக்கடலின் நடுவில் அமைந்திருக்கும் 133 அடி உயரத் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்குச் சென்று மலர்தூவி வழிபடும் நிகழ்வுக்காகப் படகுத்துறையில் ஒப்புகைச் சீட்டு வாங்கிட வரிசையில் நின்றிருந்தோம். நம்மைப்போன்றே படகில் சென்றிட, குமரிமுனைக்குச் சுற்றுலா வந்த பொதுமக்கள், வெளிநாட்டினர் என ஆயிரக்கணக்கானோர் அந்த இளங்காலை வேளையிலும் வரிசையில் நின்றுகொண்டிருந்தனர்.

ஆனால், கால்கடுக்க நின்றிருந்த நம்மிடம் படகுத்துறையினர், ***திருவள்ளுவர் சிலை உள்ள பாறைக்கு இப்பொழுது செல்ல முடியாது ; கடல்நீர் மட்டம் குறைவாக இருப்பதால் அந்தப் பகுதிக்குப் படகில் செல்ல இப்போது இயலாது ; நண்பகல் வாருங்கள்*** எனக் கூறிவிட்டனர். ஆனால், விவேகானந்தர் மண்டகம் உள்ள பாறைக்கு மட்டும் போய்வர இயலும் என்றனர். வரிசையில் நின்றிருந்த ஆயிரக்கணக்கான மக்களோ விவேகானந்தர் பாறைக்குச் சென்றால் போதும் என்ற எண்ணத்தில் தங்கள் வரிசையைத் தொடர்ந்தனர். இப்படித்தான் நம் தமிழரின் பண்பாடும் அடையாளங்களும் அடையாளச் சின்னங்களும் பொதுமக்களிடமிருந்தும் வெளிநாட்டாரிடமிருந்தும் மறைக்கப்பட்டு, ஒளிக்கப்பட்டு, நம்முடைய வரலாறுகளே நம் மக்கட்குத் தெரியாமல் சிதைக்கப்பட்டு வருகின்றன.

படகுத்துறையினரிடம் நெடுநேரம் போராடிப் பார்த்துப் பயனின்றி, அங்கிருந்து திரும்பி, தங்கியிருந்த விடுதிக்கு வந்து காத்திருந்து, பகலுணவு முடித்து மீண்டும் 2 மணிக்குச் சென்றோம். அப்போது திருவள்ளுவர் சிலைக்குச் செல்ல இசைந்து, படகுச் சீட்டு வழங்கினர். தண்ணீர் மட்டம் கூடிவிட்டதனாலா அல்லது இந்தக் கூட்டம் மீண்டும் மீண்டும் வராமல் விடாதுபோலிருக்கிறது என அஞ்சினதாலா எனத்தெரியவில்லை. ஆனால், காலையில் நின்றிருந்த பொதுமக்கள் கூட்டம் பிற்பகலில் அவ்வளவாய் இல்லை.

படகில் ஏறிய நாம், விவேகானந்தர் மண்டகம் உள்ள நிறுத்தத்தில் இறங்காமல், திருவள்ளுவர் சிலை உள்ள பாறைக்கு அருகில் படகு சென்றபோது இறங்கி, சிலை உள்ள இடத்திற்கு நடந்து சென்றோம். தரைத்தளத்திலிருந்து திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டுள்ள மேல் தளத்திற்குச் சென்று, சிலைக்கு மலர் தூவி வணங்கினோம். 133 அடி உயரத்தில் பேருருவாய் அமைந்திருக்கும் மிகச் சிறப்பு வாய்ந்த இந்தப் பெருஞ்சிலையை வடிவமைத்த, மறைந்த திரு. கணபதி தச்சரை எண்ணிப் பெருமிதங் கொண்டோம். சிலை நிறுவப்பட்ட தி.ஆ.2031 (கி.ஆ.2000) ஆண்டு முதல் பலமுறை வந்து, பார்த்துச் சென்றிருந்தாலும், அப்போதும் இப்போதும் எப்போதும் எனப் பார்க்கும்போதெல்லாம் பெருவியப்பையும் உவகையையும் நமக்கு உண்டாக்கிடும் அச் சிலையைக் கண்டு உளமாற நெகிழ்ந்து போற்றினோம். படக்கருவியில் எண்ணற்ற ஒளிப்படங்களும் காணொளிப் பதிவுகளும் செய்து திரும்பினோம்.

திருக்குறள் திருவிழாவின் அடுத்த கட்டமாக, கன்னிக்குமரி அருகிலுள்ள சிற்றூரான திருக்குறளூர் ( இலீபுரம் ) சென்று, அங்கு திருவள்ளுவர் சிலை ஊர்வலம் நிகழ்த்தப்பட்டது. திருக்குறட்பாக்கள் இசைவடிவில் ஒலிபெருக்கியில் முழங்க, தமிழே விழி, குறளே நெறி என்று திருக்குறள் அன்பர்கள் முழக்கமிட, ஊர்வலம் முதன்மைச் சாலையில் தொடங்கி, 2 கல் தொலைவிலுள்ள திருக்குறளூர் வரை சென்றது. கலந்து கொண்டு, முழக்கமிட்டு, திருக்குறளைப் போற்றிய நம் ஒவ்வொருவர் நெஞ்சிலும் நீக்கமற நிறைந்த விழாவாக அவ்வூர்வலம் அமைந்திருந்தது.

ஊர்வலத்தின் தொடக்கத்திலும் இடையிடையேயும் தமிழரின் வீர விளையாட்டான சிலம்பாட்டம் நிகழ்ந்தது. சென்னையைச் சேர்ந்த மலர்-சிவா செல்வியரான தமிழரசி, பூவரசி ஆகிய உடன்பிறப்பினர் நிகழ்த்திய சிலம்பாட்டம் உளநெகிழ்வையும் வீரச் செறிவையும் நமக்கு ஊட்டியது. அவர்கட்கு நம் பாராட்டுதலையும் நூல்தொகுப்புகள் கொண்ட பரிசினையும் தந்து வாழ்த்தினோம்.

ஊர்வலத்தின் இடையே கா. அரசகோவலன் எனும் திருக்குறளன்பர் ஒருவர், திருக்குறள், திருவள்ளுவர் தொடர்பான செய்திகள் அடங்கிய அச்சுப்படிகளை அனைவருக்கும் ஒவ்வொன்று கொடுத்து வந்தார். ***திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு***

***1812, திருக்குறள் இதுவரை 35 மொழிகளில் வெளிவந்துள்ளது, திருக்குறளுக்கு முதன்முதலில் உரை எழுதியவர் மணக்குடவர், பத்தாவது உரையாசிரியர் தான் பரிமேலழகர், பரிமேலழகரின் உரைகளில் 96 குறட்பாக்களுக்கான உரைகள் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல, மனு, வடமொழிநூல், வருணாசிரம - சனாதான தருமம், சமயச்சார்பு ஆகிய கருத்துகள் கையாளப்பட்டுள்ளதால், அவை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல, திருக்குறளில் தமிழ் எழுத்துகள் 247இல் 37 எழுத்துகள் மட்டும் இடம்பெறவில்லை, திருவள்ளுவர் உருவம் பொறித்த தங்க நாணயங்களை முதலில் 1819ஆம் ஆண்டு எல்லீசு பிரபு என்பவர் வெளியிட்டார்*** என்பன போன்ற அரிய செய்திகள் அடங்கிய தொகுப்பாக அவர் தந்த அச்சுப்படிகள் அமைந்திருந்தன.

ஊர்வலம் முடிந்து மாலை 5மணிக்குமேல் திருக்குறளூரில் மேடை நிகழ்வாகத் திருக்குறட் கருத்துகளை விளக்கும் நாடகங்களும் திருக்குறள் தொடர்பான நொடிக்கொரு வினா - விடைகள் நிகழ்வும் நடந்தன. திருக்குறள் கவனகர் **திரு. எல்லப்பன்** அவர்களின் ***திருக்குறள் கவனக நிகழ்வு*** உண்மையில் வெகு சிறப்பு. பள்ளி ஆசிரியராகிய அவரும் அவருடன் வந்த மாணவ மாணவியரும் திருக்குறட்பாக்களை எப்படிக் கேட்டாலும் சொல்லும் திறன்களை வெளிப்படுத்தினர். வரிசை எண் சொன்னால் திருக்குறளைச் சொல்வது, குறளின் முதல் சொல், குறளின் ஈற்றுச் சொல் இவற்றைச் சொன்னால் அது எந்தக் குறள், எத்தனையாவது குறள், எந்த அதிகாரம், இந்தச் சொல்லில் தொடங்குவன எத்தனைக் குறட்பாக்கள், இந்தப் பொருள் கொண்ட குறட்பா என்ன இப்படி யார்-எப்படிக் கேட்டாலும் சரியாக விடையளித்ததோடு, திருக்குறளைத் தலைகீழாகவும் மனப்பாடம் செய்து, எழுத்துகளை இறுதியிலிருந்து குறளின் முதல் எழுத்துவரை திருப்பிச் சொல்லும் திறனும் பெற்றிருந்தனர். நிகழ்வைக் காணக் காண, கேட்கக் கேட்க, அறிவுக்கு விருந்தாகவும் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஒருவகை நெகிழ்வும் மகிழ்வும் பெருகுவதுபோலும் உணர்ந்தோம். அக்குழுவினர்க்கும் நம் நூல்களைப் பரிசாக வழங்கிப் பெருமைப்படுத்தினோம்.

கன்னிக்குமரி, திருவள்ளுவர் அறக்கட்டளையினர் ஏற்பாடு செய்திருந்த இந்தத் திருக்குறள் திருவிழாவின் நிறைவாக, திருக்குறள் தொண்டில் சிறப்பாகச் செயற்படுகின்ற அமைப்புகட்கும் திருக்குறள்

தொண்டாற்றும் சான்றோர்கட்கும் விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. விருது வழங்குவோர் வாழ்த்துரைகளையும் விருது பெற்றோர் ஏற்புரைகளையும் நிகழ்த்திட, இரவுச் சிற்றுண்டியுடன் விழா இனிதே நிறைவடைந்தது.


திருவாளர்கள். மா.செ. தமிழ்மணி, த.இ. தாகூர், தி.த. கரிகாலன், மருத். விமனா மூர்த்தி, கதிர். முத்தையன், குமர. தன்னொளியன், அ.கண்ணம்மாள், ந.அரணமுறுவல், ஆ.நெடுஞ் சேரலாதன், தமிழ். முகிலன் உள்ளிட்ட பொறுப்பாளர் பலரைக் கொண்டு செயற்படும் **திருவள்ளுவர் அறக்கட்டளை**யின் சார்பில் நிகழ்ந்த இந்தத் திருக்குறள் திருவிழா இதே போன்று ஒவ்வோராண்டும் இந்தக் குமரி முனையில் தொடர்ந்து நிகழ்ந்திட தமிழர்களான நம்மால் இயன்ற உதவி களைச்செய்வோம் ; நாமும் பங்கேற்று விழாவினைச் சிறப்பிப்போம்!

திருவள்ளுவர் அறக்கட்டளையினரைப் புரந்து, போற்றி, வாழ்த்துவோம் ! அடுத்து வரும் ஆண்டுகளில் ( விடை (வைகாசி)த் திங்கள் 1) நம் புகழ்ச்செல்வி அன்பர்கள் அனைவரும் இத் திருவிழாவில் பங்கேற்றுத் திருக்குறளைப் போற்றி வணங்கிட இன்றே உறுதியேற்போம் !

நம் ஊரில் மாரியம்மனுக்கும் காளியம்மனுக்கும் குலதெய்வங்கள் என்னும் பெயரில் இன்னும் பிற என்னென்னமோ கற்சிலைகளுக்கும் ஆண்டாண்டுகளாக விழா எடுத்து, கம்பம் நட்டு, ஊரில் சோறின்றி ஏழையர் பலர் இருந்தும் பாலும் தேனும் பருப்பும் நெய்யும் சோறும் அந்தச் சிலைகட்கு இட்டுத் தேவையில்லாமல், மூடத்தனத்துடன் நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான விழாக்களைப் புறந்தள்ளிவிட்டு,

நம் தமிழர்க்கும் உலகுக்கும் வாழ்க்கையைச் செம்மையுடன் – ஒழுக்கத்துடன் – அறத்துடன் வாழ்ந்திடப் பேரரும் கருத்துகளை – சிந்தனைகளை வழங்கிய திருவள்ளுவப் பேராசான் எழுதிய திருக்குறளைப் போற்றும் இதுபோன்ற **திருக்குறள் திருவிழா**க்களை நாமும் நம் ஊர்களில் நம் சிற்றூர்களில் நிகழ்த்தி, நாம் தமிழினத்தில் பிறந்ததன் அடையாளத்தை – பயனை உலகத்திற்கு உரைப்போம் !

# 20. கல்லூரிகளில் கறைபடும் தமிழ் !



அன்புத் தோழர்களே ! மேற்காணும் படங்களைப் பார்த்தீர்களா? கல்லூரியில் மெய்யியல் இளமுனைவர் (எம்.ஃபில்) தமிழ்ப் பட்டப்படிப்புப் பயிலும் மாணவர் ஒருவரின் தமிழ் உரைநடையைத் தான் நீங்கள் பார்க்கிறீர்கள் ! ஆம் ! அவர் தான் ***விளக்கும்*** என்பதை ***விழக்கும்*** என்றும் ***அவற்றிற்கு*** என்பதை ***அவற்றிக்கு*** என்றும் ***காணும்*** என்பதைக் ***கானும்*** என்றும் ***செல்வாள், அழித்தாள், விட்டாள், இழந்தவள்*** என்பவற்றைச் ***செல்வால், அழித்தால், விட்டால், இழந்தவல்*** என்றும் தமிழைக் கொலைசெய்யும் முகமாகத் தன் இளமுனைவர் பட்ட ஆய்வேட்டை எழுதியுள்ளார். இதுமட்டுமின்றி, ஒற்றெழுத்து ( ப், க், ச் ) போடவேண்டிய இடங்களில் போடாமலும் போடக்கூடா இடங்களில் ஒற்றெழுத்துகளைப் போட்டும் இப்படி எழுதியுள்ள மாணவர் தமிழர்தான். அம் மாணவர் நம்மிடம் தட்டச்சு செய்துதரக் கொண்டுவந்த ஆய்வேட்டின் சில பக்கங்கள் தாம் இவை. அவர் எழுதிக் கொண்டுவந்த ஆய்வேட்டின் எல்லாப் பக்கங்களிலும் இப்படி எண்ணற்ற பிழைகளே இருந்தன. பள்ளிக் கல்வி முடித்து, கல்லூரிக் கல்வியிலும் தமிழ்த்துறையில் பயின்று இளங்கலை,

முதுகலையில் தமிழ்ப் பட்டம் பெற்று, தமிழில் இளமுனைவர் பட்டமும் பெறப்போகின்ற ஒரு மாணவர் தான் இத்தனை பிழைகளோடு தமிழை எழுதியுள்ளார். பார்ப்பதற்கும் கேட்பதற்கும் தமிழர்களாகிய நமக்கே வெட்கக்கேடாக இல்லை....?

இந்த மாணவருக்குக் கற்பித்த தமிழாசிரியர்கள் என்ன தான் கற்பித்தார்கள்...? தொடக்கக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை சொல்லித்தந்த தமிழாசிரியர்களுள் ஒருவர் கூட இவரை முழுமையாகத் திருத்தவில்லையா...? அப்படித் திருந்தாத இவரை எப்படி வகுப்புக்கு வகுப்பு இடம்பெயர்த்து, இன்று கல்லூரி முனைவர் பட்டம் வரை எப்படி நகர்த்திக் கொண்டு வந்தனர் ? மொழி எக்கேடுகெட்டால் என்ன, எப்படியோ மாணவன் அந்தந்த வகுப்பு இருக்கையைக் காலிசெய்து விட்டுப் போனால் சரி - என்று அந்த ஆசிரியர்களும், தமிழை எப்படியெழுதினால் என்ன, எப்படியோ தாம் மேல்வகுப்புக்குப் போனால் சரி - மொழியைத் தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ படித்துப், பட்டம் பெற்றால் சரி – வேலைக்குப் போய்க் கைநிறைய பணம் ஈட்டினால் சரி என்று அந்த மாணவரும் தமிழ்மொழி சிதைவதைக் கண்டுங் காணாமல் விட்டுவிடுவதால் வரும் வினைதானே இது ?

இதைப்போன்று வரும் மாணவர்கள் பெரும்பாலும் சிற்றூர்ப்புறத்திலிருந்தும் ஏழை - எளியவர் வீட்டிலிருந்தும் வரும் காரணத்தால் இவர்களின் இந்தப் பிழைகளை முடிந்தளவு ( ஆய்வு நெறியாளரை விட ) நாமே சரியாகத் திருத்தித் தட்டச்சு செய்து, ஒழுங்குபடுத்தித் தருகிறோம். அவர்தம் கட்டுரைகளில் - ஆய்வேடுகளில் வரும் ஒற்றுப்பிழைகளைத் திருத்தியும் பிறமொழிச் சொற்களைக் களைந்து, அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களைப் போட்டும் நம்மால் இயன்றவரை செம்மைப்படுத்தித் தந்தாலும், அதை அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. அந்த மாணவரோ அல்லது அவரை நெறிப்படுத்தும் ஆய்வுநெறியாளரோ ( பேராசிரியர்கள் ) பெரும்பாலும் நாம் திருத்தம் செய்துதருபவற்றை ஏற்பதில்லை. சான்றாக... ***மனிதர், சமுதாயம், பூமி, வித்தியாசம், விதம், சம்மதம்*** என்பன போன்ற (வட)வேற்றுமொழிச் சொற்களை மாற்றி ***மாந்தர், குமுகாயம், புடவி, வேறுபாடு, முறை, இசைவு*** என்னும் தமிழ்ச் சொற்களை இட்டு நிரப்பிச் சரிப்படுத்தித் தரும்போது, அந்த மாணவரை

விட ஆய்வின் நெறியாளர் எனப்படும் கல்லூரிப் பேராசிரியர்கள்தாம் இவற்றை ஒப்புக்கொள்வதில்லை.

எங்கள் பகுதியிலுள்ள தமிழுணர்வான ஒரே ஒரு பேராசிரியர் மட்டும் தம் மாணாக்கரை ஆய்வேடு தட்டச்சு செய்ய எம்மிடம் அனுப்பும்போது நாம் திருத்தங்கள் செய்வதை ஏற்றுக்கொள்வார். இவரைத் தவிரப் பிற நெறியாளர் ( பேராசிரியர்கள் ) பெரும்பாலும் இப்படித் தமிழ்ச்சொற் திருத்தங்களை ஏற்பதில்லை.

மனிதரை மாந்தர் எனத் தமிழில் தட்டச்சு செய்து தந்ததற்கு ஒரு பேராசிரியர் சொன்னது என்ன தெரியுமா...? ***மக்களுக்குப் புரியாது, மக்களுக்குப் புரிந்த எளிய நடையில் தான் ஆய்வேடு இருக்க வேண்டும்...*** என்று தட்டிக்கழித்திருக்கிறார். நாம் கேட்பது என்னவென்றால், மக்களுக்குப் புரியாதா இல்லை இந்தப் பேராசிரிய ம(ா)க்களுக்குப் புரியாதா..? (மன்னிக்க வேண்டும், அனைத்துப் பேராசிரியர்களையும் குறிக்கவில்லை.) ***மாந்தர்*** என்றால் மனிதரைத் தாம் குறிக்கிறோம் என்பது மக்களுக்குத் தெரியாதா....? இதே ஆய்வேடுகளில் புதினங்களை ஆய்வு செய்யும்போது ( புதினத்தையும் நாவல் என்று ஆங்கிலச் சொல்லில்தான் இன்னும் எழுதிக் கொண்டிருக்கின்றனர்.) அதில் இடம்பெறும் ***கதைமாந்தர்*** என்று அங்கு மாந்தர் என்னும் சொல்லை (ஆதிகாலந் தொட்டு, வழக்குச் சொல்லாக)ப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தக் **கதைமாந்தரில்** வரும் மாந்தர் மட்டும் மக்களுக்குப் புரிகிறதாம், வெறும் ***மாந்தர்*** என்றால் மட்டும் மக்களுக்குப் புரியாதாம்... எப்படியிருக்கிறது பாருங்கள், இவர்களின் விளக்கங்கள்....?

இப்படிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலரே தமிழில் ஆய்வேடுகளில் எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள், மொழிப் பிழைகளைப் பாராததால் ஆய்வு மாணவர்களே தப்பும் தவறுமாக **ர வுக்கு ற, ல வுக்கு ள, ழ வுக்கு ல** என்று தமிழைக் கண்டபடி குதறி வைக்கின்றனர். இந்த மாணவர், ***மழை***யைக் கூட ***மலை*** என்று எழுதுமளவுக்கு ழகர லகர வேறுபாடு தெரியாமல் தமிழ்த்துறையில் பயின்றுவந்திருக்கிறார். பேசும்போதுதான் இந்த வேறுபாடுகள் தெரியாமல் பேசி, மொழியை இழிவுசெய்கின்றனர் என்றால், இப்படி எழுதும்போதும் இதையேதான் செய்கின்றனர்.

இவற்றையெல்லாம் - இந்த ஆய்வேடுகளையெல்லாம் பல்கலைக் கழகங்களோ கல்லூரிகளோ குற்றம் சொல்வதாக நமக்குத் தெரியவில்லை. முழுமையாகப் பார்க்கிறதா, பிழைதிருத்தம் செய்கிறதா என்பதும் நமக்குத் தெரியவில்லை.

ஆனால், முனைவர் ( பிஎச்.டி.,), இளமுனைவர் ( எம்.ஃபில்.) பட்டப் படிப்புகள் பயிலும் நம் உணர்வாளர் – நம் தோழர் எவரேனும் நம் இனம் சார்ந்த – நம் மொழி சார்ந்த ஆய்வுகளை – ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்தளிக்கும்போது, அவர்களை வாய்மொழித்தேர்வுக்கு அழைக்கும்போது, அவர்களிடம் மட்டும் தொடர்பில்லாத – சிக்கலான பல வினாக்களைத் தொடுத்து, விடைகூற இயலாத அளவுக்குத் திக்குமுக்காடச் செய்கின்றனர்.

சான்றாக.... நம் தோழியர் ஒருவர் ஈழத்தமிழரின் வாழ்வியல் நிலை, அவர்தம் உரிமைப் போராட்டம் தொடர்பான புதினம் ஒன்றை இளமுனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்தார். அந்தப் புதினம், ஈழத்தமிழ் மக்களின் தொடக்கக் கால வாழ்நிலை, இன ஒடுக்குமுறை, இன்னல்கள், போராட்டங்கள், அறவழிப் போராட்டங்கள் தொடங்கிக் கருவியேந்திய போராட்டத்திற்கு அவர்கள் ஆளாகும் காலம் வரையிலான அனைத்துச் சிக்கல்களையும் எடுத்துரைப்பதாக அமைந்த புதினம். இந்தப் புதினத்தைத் தம் இளமுனைவர் பட்டத்திற்காக ஆய்வு மேற்கொண்ட நம் தோழியர், இதுகுறித்த வாய்மொழித்தேர்வுக்குச் சென்றபோது, நேர்காணலில் பங்கேற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பல்வேறு வினாக்களைத் தொடுத்துள்ளனர்.

இப்படியோர் சிக்கலான செய்தியை எடுத்து ஆய்வு செய்வதற்கு உங்களுக்கு அச்சமாக இல்லையா...? உங்களை யாரும் அச்சுறுத்தவில்லையா...? என்றும், ஈழத்தில் அவனவன் சோற்றுக்கே வழியின்றித் தவித்துக் கொண்டிருக்கும்போது உரிமை என்ன வேண்டிக்கிடக்கிறது... போராட்டம் என்ன வேண்டிக் கிடக்கிறது...? என்றும் கேட்டுள்ளனர். அதாவது அவர்கள் வேண்டுமென்றே கேட்டார்களோ... அல்லது இப்படி இப்படித்தான் வாய்மொழித் தேர்வில் கேட்க வேண்டும் என்ற விதிமுறைகளின் அடிப்படையில் கேட்டார்களோ... அல்லது இப்படியொரு மாறுபட்ட ஆய்வைச் செய்த இவரின் திறனை ஆய்வு செய்வதற்காக இத்தகைய வினாக்களைக்

கேட்டார்களோ என்பது நமக்குத் தெரியாது. ஆனால், நம் தோழியரோ அனைத்து வினாக்களுக்கும் தக்க விடைகளைக் கொடுத்துத்தான் வந்துள்ளார்.

நாம் கேட்பது என்னவென்றால், இப்படியெல்லாம் குடைந்து குடைந்து வினாக்களைக் கேட்போர் இருந்தும் கூட, மேற்கண்ட மாணாக்கரைப் போன்றோரின் ஆய்வேடுகளில் மொழிப்பிழைகளைக் களைந்து சரிசெய்யாமல் விட்டது ஏன்...? இளமுனைவர் பட்ட ஆய்வேட்டிலேயே இப்படியென்றால் அவர்தம் முதுகலை (எம்.ஏ.)ஆய்வேட்டில் தமிழின் நிலை எப்படியிருந்திருக்கும்...?

எனவே, கல்லூரி இளநிலை, முதுநிலையிலோ அல்லது அதைத்தொடர்ந்து பட்ட மேற்படிப்பிலோ தமிழைக் கற்க விரும்பும் மாணவர்களும் சரி, தமிழ்த்துறை விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் சரி, தமிழைப் பிழையின்றி, தமிழைத் தமிழாகக் கற்றிட – கற்பிக்க எண்ணி, ஆழ்ந்த ஈடுபாட்டோடு முழுமனத்தோடு செய்திட வேண்டும். ஏதோ ***எனக்கு வேறு பாடங்களில் சேர்ந்திடக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லையென்பதால் நான் தமிழைத் தேர்ந்தெடுத்தேன்*** என்று ***ஒப்புக்கு சப்புக்கு*** என்பதுபோல் தமிழைத் தேர்ந்தெடுத்துவிட்டுப் பிறகு இப்படித் தமிழைத் தாறுமாறாகக் கொலைசெய்வது பெருங்கேடானது ; கொடுமையானது. கல்லூரிப் பாடத்தில் தமிழைக் கற்கும் மாணவர்களும் சரி, கற்பிக்கும் விரிவுரையாளர்களும் சரி, தமிழை – தமிழ் மொழியின் அடிப்படையை – ஆணிவேரைத் தெரிந்து வைத்துக் கொண்டும் தமிழ்ச்சொல் – வேற்றுச்சொல் குறித்து மொழிஞாயிறு பாவாணர், சொல்லாய்வறிஞர் அருளியார் போன்றோரின் பல்வகை ஆய்வுகளையும் ஆய்வுநூல்களையும் கற்றுத் தெரிந்துகொண்டும் செயற்பட்டால் மட்டுமே மேற்காண் பிழைகளை அடியோடு தவிர்த்திடலாம். கல்லூரி மாணாக்கர்கள் – பேராசிரியர்கள் – விரிவுரையாளர்கள் செய்வார்களா...?

# 21. நான்கு பதினான்குகள்

***சனவரி 14 = தமிழர் திருநாள்***
***பிப்பரவரி 14 = காதலர் நாள்***
***ஏப்பிரல் 14 = அம்பேத்கர் நாள்***
***ஆகத்து 14 = வெள்ளையன் வெளியேறிய நாள்***

தோழர்களே ! நம் தமிழின வரலாற்றிலேயே பொன்னேட்டில் பொறிக்கப்படவேண்டிய நாள்கள் என்று பல உள்ளன. அவற்றுள் ஆங்கில ஆண்டில் சனவரி, பெப்பரவரி, ஏப்பிரல், ஆகத்து ஆகிய நான்கு மாதங்களிலும் வரும் 14ஆம் பக்கல்கள் ( தேதிகள் ) குறிப்பிடத்தக்கவை. ஆம் ! சனவரி 14, பெப்பரவரி 14, ஏப்பிரல் 14, ஆகத்து 14 ஆகிய நான்கு 14களும் தமிழன் கொண்டாடப்பட வேண்டிய நாள்கள் ; தமிழன், புறந்தள்ளப்படவேண்டிய நாள் நவம்பர் 14.

**சனவரி 14** – சுறவம் ( தை ) முதல் நாளாக வருகிறது. இது, தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவருமே – ஏன் மாந்தராய்ப் பிறந்த ஒவ்வொருவருமே கொண்டாடி வந்த, கொண்டாடி வருகின்ற, கொண்டாடி வரவேண்டிய திருநாள் – தமிழர் திருநாள் – உழவர் திருநாள்.

விதைத்துப் போற்றி வளர்த்த நெற்பயிரை அறுத்துக் கரைசேர்த்து, உலகுக்கு உணவு படைத்துத் தானும் உண்டு, ஊர்செழிக்க – உலகம் செழிக்கப் பாடாற்றும் உழவன் தன்னைச் சிறப்பிக்கக் குறிப்பிடப்படும் நாள். ஆண்டின் பிற மாதங்களை விட, தை பிறந்தால் வழிபிறக்கும் என்னும் பழமொழி தோன்றியதும் இதனடிப்படையில் தான். இதன் கரணியமாகத்தான் தமிழருக்குப் புத்தாண்டும் இந்தச் சுறவ(தை)த் திங்களில் தொடங்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நம் ஆன்றோரும் சான்றோரும் முடிவுசெய்து, அறுதியிட்டு உரைத்தனர். இப்படி ஊருக்கே – உலகுக்கே முன்சான்றாகத் திகழும் இந்த சுறவம் : 1 ( சனவரி 14 ), தமிழர்கள் நாம் முதன்மை நாளாக – முகாமை நாளாக வைத்துக் கொண்டாட வேண்டிய நாளன்றோ ?

அடுத்து, **பெப்பரவரி 14** ; காதலர் நாள். உலகெங்கும் உள்ள காதலர்கள் கொண்டாடி வரும் நாள். சாதி, மத வேற்றுமையைக் கடந்து

போற்றிவரும் நாள். கிறித்தவத் தந்தையொருவரான வேலண்ட்டைன் என்பாரின் நினைவு நாளையே காதலர் நாளாகக் கொண்டாடி வருவதாகக் கூறுகின்றனர்.

ஆனால், சாதி - மதம் கடந்த, கருத்தொருமித்த காதல்கள் - காதல் மணங்கள் நம் தமிழினத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்துள்ளன.

உலகில் தோன்றிய மூத்த முதற்குடியாம் நம் தமிழினத்துள் - உலகிற்கே மொழியைத் தந்த, உலகிற்கே பண்பாட்டைத் தந்த, உலகிற்கே நாகரிகத்தைத் தந்த, உலகிற்கே அறிவியலைத் தந்த, உலகிற்கே மருத்துவத்தைத் தந்த, உலகிற்கே கலைகளைத் தந்த, உலகிற்கே நயன்மையை, நேர்மையை, நல்லொழுக்கத்தை, நன்னெறிகளைத் தந்த - நம் தமிழினத்துள் பாதியில் நிகழ்ந்த ஆரியப் படையெடுப்பால் நம்மின் கலை, பண்பாடு, நாகரிகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுச் சிதைவுகளும் திரிபுகளும் நேர்ந்து விட்டன.

அப்படி இடையிற்புகுந்த ஆரிய இனத்தாலும் வெவ்வேறு சமயவழிபாடுகளாலும் தமிழினத்தின் உண்மையான, தொன்றுதொட்ட பண்பாடுகளிலும் விழாக்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அப்படிப் புகுந்த ஆரிய - இந்து மதந்தான், பிறப்பினால் சாதி வேறுபாடுகளைப் புகுத்தியும் இந்திந்தச் சாதிக்கு இந்திந்த *சாமி* என்று அமைத்து, மாந்தருள் உயர்ந்தவர்-தாழ்ந்தவர்-தீண்டத்தகாதவர் என்னும் வேற்றுமைகளைத் தோற்றி வளர்த்தும் பெருங்கேடுகளை இத் தமிழினத்திற்குச் செய்துவிட்டது.

ஆனால், நம்மிடையே - நம் தமிழரிடையே தொடக்கத்தில் தோன்றி வளர்ந்த, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் சமன்மைக் கருத்து, கடல்கடந்து வெளிநாடுகளுக்குச் சென்று பரவி, அங்குள்ள மக்களிடமெல்லாம் மாந்தர் யாவரும் சமம் என்ற உண்மையை விதைத்ததன் விளைவால், அந்நாடுகளிலெல்லாம் இளமையை எட்டிய எந்த ஆணும் எந்தப் பெண்ணும் தம்முள் மனமொத்துக் காதலிக்கலாம் ; இதில் சாதி, மத வேறுபாடு இல்லை ; ஏற்றத்தாழ்வில்லை -என்னும் உயர்கருத்தை விளக்கும் முகமாக **பெப்பரவரி 14** என்னும் **காதலர் நாள்** தோன்றியது. அந்த நாளைத்தான் தமிழராகிய நாமும் இப்போதெல்லாம் கொண்டாடி

வருகிறோம். இது வரவேற்கத் தக்க, மகிழ்வான செய்தியே!

இன்று, இதை விரும்பாத இந்துத்துவம் பேசும் கூட்டம், மாந்தனுக்கு மாந்தன் பிறப்பினால் உயர்வுதாழ்வு கொண்டவன் என்னும் வேற்றுமையை வலியுறுத்திடும் முகமாய் - அதன்மூலம் பிழைப்பைத் தேடும் இந்துத்துவக் கூட்டம் **பெப்பரவரி 14**ஐயே வேண்டாமென்கிறது ; அந்த நாளில் வேற்றுமைகளின்றிப் பறந்து திரியும் இளங்காதலர்களைக் கண்டால், காணுமிடங்களிலெல்லாம் அவர்களை மானக்கேட்டுக்கு உள்ளாக்குகின்றனர் ; ஐந்தறிவு விலங்கான கழுதைக்கும் கழுதைக்கும் மாலைகளை அணிவித்து, இவையும் காதலர்கள் தான் என்னும் அறிவிப்புடன் அவற்றைத் தெருக்களிலே அழைத்துவந்து, ஆறறிவு மாந்தரான காதலர்களை இழிவுபடுத்துகின்றனர் ! இப்படி இவர்கள் செய்வதன்மூலம் அந்தக் காதலர்களை அச்சுறுத்தி, அதன்மூலம் சாதியால் இழிந்த இந்தக் குமுகாயத்தின் ஆணிவேரை மென்மேலும் வலுப்படுத்துகின்றனர். ஆனால், உண்மையான மாந்தர் - உண்மையான தமிழர் இந்நிலையை உணரவேண்டும். சாதி - மதமற்ற சமநிலைக் குமுகத்தை உருவாக்க விதைபோடும் இந்தக் காதலர்நாளைத் தமிழர் ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டாட வேண்டும் ; ஊருக்குள் பரப்ப வேண்டும்.

அடுத்து, **ஆகத்து 14 = வெள்ளையன் வெளியேறிய நாள்**. ஆங்கிலேய வெள்ளையனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நாம், விடுதலைக்காற்றை நுகரத் தொடங்கியது ஆகத்து 14இல் அவன் வெளியேறிய பின்தான். இரவில் வாங்கினோம்... விடியவேயில்லை... என்னும் ஒரு பாவலனின் அடிகளுக்கேற்ப, ஆகத்து 14இல் ஆங்கிலேயன் வெளியேறினாலும் அடுத்த நாளான ஆகத்து 15 இன்னும் நம் தமிழர்களுக்கு விடியவில்லை. இந்தியத் துணைக்கண்டத்துக்குக் கிடைத்த விடுதலை, இன்னும் நம் தமிழனுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. அதனால்தான் தந்தை பெரியார் ஆகத்து 15ஐ, துயர நாள் - வருத்த நாள் எனச் சொன்னார். அவர் காலத்திலும் சரி, இன்றும் சரி இன்னும் அந்த விடுதலை தமிழருக்கு வரவில்லை. எனவே தான், ஆகத்து 14இல் ஆங்கிலேயன் வெளியேறிய நாளை மட்டும் நாம் கொண்டாடுவோம் !

அடுத்து 14, **ஏப்பிரல் 14**ஆம் நாள். தாழ்த்தப்பட்ட,

பிற்படுத்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி, சட்டஅறிஞர் அம்பேத்கர் அவர்கள் பிறந்த நாள். இந்தியத் துணைக்கண்டத்தின் ஈடிணையற்ற மாபெரும் சிந்தனையாளர், புரட்சியாளர் அம்பேத்கர் ஆவார்.

***தமிழ் அல்லது திராவிடர் என்ற மொழி தென்னிந்தியாவில் மட்டும் பேசப்பட்ட மொழியல்ல ; ஆரியர்களின் ஊடுருவலுக்கு முன் அனைத்திந்திய அளவிலும் காட்மீர் முதல் கன்னிக்குமரி வரை பேசப்பட்ட மொழியாகும். உண்மையில் இம்மொழி, இந்தியாவெங்கிலும் வாழ்ந்த நாகர்களின் - திராவிடர்களின் மொழியாக இருந்தது*** என்னும் பேருண்மையை, உறுதியாகச் சொன்னவர் புரட்சியாளர் அம்பேத்கர்.

ஆனால், இன்று நம் தமிழனுக்கு நவம்பர் 14 சென்று சேர்ந்த அளவுக்கு ஏப்பிரல் 14 சென்று சேரவில்லையே ; சேர விடவில்லையே, இன்றைய மானங்கெட்ட அரசியல் !

எங்கோ வடக்கே இருந்துகொண்டு, தென்னவனுக்கு - தமிழனுக்குத் தீங்கிழைப்பதையே தொழிலாகக் கொண்டு, தான், தன் பிள்ளைகள் - தன் அடிவருடிகள் என அனைவரும் தின்று கொழுத்து, என்றும் பதவி - பணத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பேராயக் கட்சியின் இன்றைய தலைவர், நேற்றைய தலைவர், அவருடைய அம்மா, அவருக்கு அப்பா என்று தலைமுறை தலைமுறையாக நம்மை ஆண்டு கொண்டிருக்கும் அவர்களின் பெயர்களும் பிறந்த நாள்களும் இந்தத் தாய்த்தமிழகத்தில் பரவலாகச் சென்றடைந்த அளவுக்கு, நம் புரட்சியாளர் அம்பேத்கரின் அருஞ்செயல்களும் அவர்தம் பிறந்தநாளும் சென்றடையவில்லையே என்றெண்ணும்போது தமிழர் நாமனைவருமே வெட்கித் தலைகுனிய வேண்டும்.

நேரு யார் ? அவருக்கும் நமக்கும் என்ன உறவு ?அவர் நம் தமிழினத்தவரா...? தமிழினத்தின் மீட்புக்குப் போராடியவரா...? இல்லை ; இல்லவே இல்லை. தமிழரை – தமிழ்நாட்டைத் தம் கட்சிக்கும் தம் குடும்பத்துக்கும் அடிமையாக்கி தம் பிறங்கடைகளாலும் நம்மை ஆளச்செய்து இன்று அவரின் பெயரன், கொள்ளுப்பெயரன், எள்ளுப்பெயரன் வரை - ஏதோ மன்னராட்சி வழி போன்று - நம்மை ஆளவைத்து, நம் தமிழ்நாட்டு வளங்களைச் சுரண்டிப் பிழைத்து வந்த ஓர் ஆரியவழிச் சொந்தக்காரர். அவரைப் போய் நம் குழந்தைகளை

மாமா என்றழைக்க வைத்து, அவர் பிறந்தநாளைக் குழந்தைகள் நாளாக நாம் கொண்டாடுவது வெட்கமில்லையா... தமிழனுக்கு இழிவு இல்லையா...? இதுபோன்று எந்தத் தமிழ்த் தலைவன் - தேசத் தொண்டன் பிறந்தநாளையாவது வடநாட்டானோ அல்லது வேற்றுநாட்டானோ கொண்டாடுகிறானா..? தமிழர்கள் சிந்தித்திட வேண்டும்.

நேருவின் பிறந்தநாளான நவம்பர் 14ஆம் நாளைக் கொண்டாடும் பெரும்பாலான தமிழர்கள், பீமாராவ் ராம்சி அம்பேத்கர் என்னும் நம் அரும்பெருந்தலைவரை - குமுகச் சீர்திருத்தவியலாளரை மறந்திடலாமா ?

***சாதி ஒன்றே குமுகமானால் வீசும் காற்றில் நஞ்சு ( விசம் ) பரவட்டும்*** என்று முழங்கி,

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அனைத்து மக்களின் விடிவுக்கும் பாடுபட்டு, சட்ட அறிஞராகி, விடுதலை பெற்ற இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் சட்டத்தையே இயற்றித் தந்து, முதல் சட்ட அமைச்சராகி, மிகச்சிறந்த பொருளியல் அறிஞராக விளங்கி, அரசியல் மெய்யியலறிஞராகத் திகழ்ந்து, வரலாற்று ஆசிரியராகவும் விளங்கியவர். பீ.இரா. அம்பேத்கர் அவர்கள் ஓர் எழுத்தாளர், பேச்சாளர், பகுத்தறிவுச் சிந்தனையாளர். இழிந்து - நைந்த இந்தக் குமுகத்தின் மீட்புக்காகத் தம் வாழ்நாள் முழுக்கப் போராடிய மாபெரும் சான்றோராம் அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளான **ஏப்பிரல் 14**ஐ இனியேனும் நம் தமிழர்களுக்கு உணர்வித்து, மறவாமல் கொண்டாட வேண்டும் ; மக்களிடையே நிலவும் சாதீய ஏற்றத்தாழ்வுகளைப் பொசுக்க வேண்டும்.

எனவே, தமிழர்களே ! திரையில் வீரன் வேடமிட்டு, வெளியில் கோழையாகி, அனைத்தும் அறிந்தவன் போல் காட்டி, அறியாத் தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் நடிகர் - நடிகையரின் பிறந்தநாள்களைக் கொண்டாடுவதைக் கைவிட்டு, மானமிக்க - பகுத்தறிவு மிக்க மாந்தர்களாய் இந்தப் பதினான்குகளைக் கொண்டாடுவோம் ; புரியாத் தமிழர்களுக்குப் புரிவிப்போம் !

# 22. வீணாகும் விடுமுறைகள்...

ஏப்பிரல் – மே என்றாலே கோடைக் காலம் என்பதைவிட, பிள்ளைகளுக்கு விடுமுறைக் காலம் என்பது தான் சட்டென்று நம் நினைவுக்கு வரும். ஏனென்றால், இன்றைய பிள்ளைகள் மட்டுமன்று ; நாம் பிள்ளைகளாக இருந்தபோதிருந்தே நாம் இதனை உணர்ந்து வருகிறோம். பள்ளி விடுமுறை நாள்கள் வருகின்றன என்றாலே ஓரிரு மாதங்களுக்கு முன்பிருந்தே அதனை எண்ணிக்கொண்டிருப்போம். மனத்தின் எண்ணத்தாலும் சரி, நாள்களின் எண்ணிக்கையாலும் சரி, எண்ணிக்கொண்டே இருப்போம். ஏனென்றால், விடுமுறை என்றாலே அத்தனை ஆர்வம் ; அத்தனை ஆவல் ; அத்தனை மகிழ்வு.

இந்தக்காலப் பிள்ளைகளுக்கும் அதே ஆர்வமும், பள்ளி விடுமுறை விட்டுவிட்டார்கள் என்ற துள்ளலும் கொண்டாட்டமும் ஒவ்வொரு பிள்ளைக்கும் கட்டாயம் இருக்கும். ஆனால், அந்தக்காலப் பிள்ளைகளாக இருந்த இன்றைய பெற்றோர்கள் இன்று – இந்தக்காலப் பிள்ளைகளுக்குச் செய்வது என்ன....?

தம் பிள்ளைகளை இந்த விடுமுறைக்காலங்களைக் கொண்டாட விடுகின்றனரா என்று கேட்டால், பெரும்பாலும் இல்லை என்றே விடை சொல்லவேண்டி வரும். ஆம் ! பள்ளிக்காலங்களில் தான், தம் பிள்ளைகளைப் ***படி படி*** என்று படிப்பில் மட்டும் கட்டாயப்படுத்துகின்றனர் என்றால், பள்ளி முடிந்து வரும் விடுமுறைக்காலங்களிலும் அதனையே பின்பற்றுகின்றனர். விடுதலைப் பறவைகளாக அப் பிள்ளைகள் சுற்றித்திரிய நாம் வாய்ப்பளிப்பதே இல்லை.

படிப்பு என்பது இந்நாட்டில் வயிறு வளர்ப்பதற்காகவே பயன்படுத்தப்படுகிறது ; படிப்பின் பயனெல்லாம் அறிவு பெறுவதற்காகவே இருக்க வேண்டும் என்றார் தந்தை பெரியார். ஆனால் இன்று, அதிக மதிப்பெண் பெறுவது என்னும் ஒரே இலக்கை நோக்கியே இன்றைய கல்விமுறை சென்றுகொண்டிருக்கிறது. பள்ளி நாள்களில் தான் எந்நேரமும் படிப்பு படிப்பு என்றால், பள்ளி முடிந்த விடுமுறை நாள்களிலும் அப்பிள்ளைகளை ஓய்வெடுக்க விடுவதில்லை. கூடுதல் திறன்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற பெயரில் ***இந்தி வகுப்புக்குப் போ... பாட்டு வகுப்புக்குப் போ... நடனப் பயிற்சிக்குப் போ...*** என்று பிள்ளைகளைச் சக்கையாகப் பிழிந்திடுகின்றனர்.

ஏற்கெனவே, படிப்பு என்ற பெயரில் பத்துத் திங்கள் கசக்கிப் பிழிகிறார்கள்... அது முடிந்து வந்து 2 திங்கள் விடுதலையாகச் சுற்றித் திரிந்து, ஓய்வெடுக்க வழங்கப்பட்ட விடுமுறைக் காலத்திலும் பிள்ளைகளை அதைச் செய் ; இதைச் செய் ; அதைப் படி ; இதைக் கற்றுக்கொள் என்று தொடர்ந்து வற்புறுத்தி, அப் பிஞ்சு மனங்களைப் பொறிகளைப் போல் எண்ணி இவற்றைத் திணித்து, அவர்களைப் பித்துப்பிடிக்கச் செய்கின்றனர்.

மீறிக் கேட்டால், வெளியே எங்கும் போகாமல் வீட்டிலேயே உட்கார்ந்து ***சுட்டி டி.வி. பார் ; போகோ டி.வி.பார்*** என்று அவர்களை தொலைக்காட்சிப் பெட்டி முன் அமரச்சொல்லி, அவர்களின் சுட்டித்தனங்களை – சுறுசுறுப்புகளைத் தொலைக்கச் செய்கின்றனர்.

நமக்கெல்லாம் பள்ளி விடுமுறையாக உள்ள ஏறத்தாழ அந்த ஒன்று முதல் ஒன்றரை மாத காலங்கள் வரையிலும் நம் மனங்கள், நம் உடல்களின் மகிழ்ச்சிக்கு அளவே இராது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விளையாட்டாய் ஆடிக்கொண்டு, ஊர் நண்பர்கள் ஒருவர் விடாமல் சேர்த்துக்கொண்டு, ஊரைச் சுற்றித் திரிந்து, ஒவ்வொரு நாளும் ஊரோரம் உள்ள ஆற்றில் குளித்துக் கும்மாளமிட்டு, ஆற்றங்கரையிலுள்ள நாவல் மரத்தில் கொத்துக் கொத்தாகக் காய்த்துக் கனிந்து தொங்கிக் கொண்டிருக்கும் நாவல் பழங்களைப் பறித்துத் தின்று.... இப்படி முற்பகல் சென்று நண்பகல் முடிந்து, பிற்பகலும் முடிந்து, மாலையில் இருட்டும் வரைக்கும் வீடு திரும்பாமல், எந்தக் கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங்களும் இன்றி, விடுதலையாகச் சுற்றித்

திரிந்த காலங்கள் இன்றைய நம் பிள்ளைகளுக்கு வாய்த்ததா....? இனியும் வாய்த்திடுமா...?

ஊர் சுற்றிக் களித்தது போக, சில நாள்கள் தத்தம் தாத்தா - பாட்டி ஊர்களுக்கோ உறவினர் இல்லங்களுக்கோ நம்மை அழைத்துச் செல்வர் ; அங்குள்ள தோழமைச் சிறுவர் சிறுமியருடன் உள்ளக் களிப்புடன் விளையாடித் திரிந்து, கொண்டாடித் திரும்புவோம். அதனையாவது இன்று செய்கின்றனரா என்றால், அதுவுமில்லை.

இப்படிச் சிட்டுக்குருவிகள் போல் பறந்து திரிய வேண்டிய பிள்ளைகளுக்குக் கட்டுப்பாடுகளிட்டுப் பொறிகளைப் போல் இயக்கிடும் அடிமைத்தன்மையைப் பெற்றோர்கள் கைவிட வேண்டும். அவர்கள் நம்மை விட அறிவிலும் திறனிலும் சிறந்தவர்கள் ; நம்மைவிடச் சிந்திக்கும் திறன் மிகுந்தவர்கள். ஆதலால், அவர்களின் விடுதலைத் தன்மைக்கு முட்டுக்கட்டை போடாமல், அவர்களை ஓய்வாக இருக்க விடுங்கள். படிக்கவேண்டிய நேரத்தில் படிப்பு ; அதேபோல விளையாட வேண்டிய நேரத்தில் விளையாட்டு ; ஓய்வுகொள்ள வேண்டிய நேரத்தில் ஓய்வு. இதை மட்டும் நாம் அவர்கட்கு வகுத்துக்கொடுத்தால் போதும். இன்றைய குழந்தைகள் நாளைய அறிஞர்களாய் ஆகிடுவர்.

சப்பான், சீனா போன்ற நாடுகளில் மக்கள் தங்களின் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி யார் யார் என்று அவர்களைப் பற்றிய குறிப்புகளை எழுதிப் புத்தகமாக அச்சிட்டுத் தம் பிள்ளைகளுக்குத் தந்து செல்கின்றனராம். இப்படி 40 தலைமுறை வரைக்கும் அவர்கள் தொகுத்து வைத்துள்ளனராம். நாம்? நாம் என்ன செய்து வைக்கின்றோம் நம் எதிர்காலத் தலைமுறையினர்க்கு ? புதிதாக எதையும் செய்யாவிட்டால் கூட, இருந்ததையாவது - இருப்பதையாவது சேர்த்துவைத்து, அவர்களுக்கு வழங்க வேண்டாமா...?

வெறும் காசு, பணத்திற்காகவும் பொருளீட்டும் நோக்கிலும் போய்க்கொண்டிருக்கின்ற இன்றைய கல்விமுறையினை மட்டுமே நம் பிள்ளைகள் மூளையில் மனத்தினில் திணிக்காமல், நாம் வாழ்ந்த வாழ்வினை - நாம் துய்த்த விடுதலைத் தன்மையை - நாம் இருந்த மனநிறைவினை நம் பிள்ளைகளுக்கும் வழங்குதல் நம் கடமையன்றோ ? பெற்றோர்களே ! சிந்திப்பீர் !

# 23. அலைபேசியும் சாலைநேர்ச்சியும்

அறிவியலின் ஆக்கங்கள் அனைத்தும் மாந்த குலத்திற்குப் பேருதவி புரிந்து வருகின்றன. அதேநேரம் அதனால் விளையும் கேடுகளும் தீமைகளும் மாந்த குலத்திற்கே பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவிடுகின்றன.

சட்டைப் பையில் வைத்துக்கொள்ளும் அளவுக்கு, கம்பியில்லாக் கருவியொன்று பின்னாளில் கண்டுபிடிக்கப்படும் என்று அன்றைக்கே தந்தை பெரியார் சொல்லிச்சென்றார். 50, 60 ஆண்டுகளுக்குப் பின்பு, காலமும் வந்தது ; அந்தக் கண்டுபிடிப்பும் வந்தது.

ஆனால், அந்த அறிவியற் கருவி இன்று ஆக்கத்திற்குப் பயன்படுவதோடு அழிவிற்கும் பயன்பட்டு வருகிறது. ஆம் ! கைபேசி எனப்படும் அலைபேசிக் கருவியைத் தான் சொல்கிறோம்.

அலைபேசி வந்தபிறகு தொலைபேசியில் பேசுவது ஏறத்தாழ ஒழிந்தேவிட்டது எனலாம்.

இன்றைய காலக்கட்டத்தில் அலைபேசியில் பேசுவோரின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது ; அதன்மூலம் அதனால் வரும் தொல்லைகளுமே அதிகமாகியுள்ளன. இந்த அலைபேசிகளில் எந்த அளவுக்கு நன்மைகள் உள்ளனவோ அதனைப்போன்று இரண்டு

மடங்கு தீமைகளும் மிகுந்துள்ளன. இந்த அலைபேசிக் கதிர்வீச்சினால் மூளை தன் செயலை இழந்திடும் பெரும் கொடுமையே நிகழ்கிறது. ஒருநாளில் 30 நிமயங்களுக்கு மேல் இந்த அலைபேசியைப் பயன்படுத்துவோருக்கு, இதிலிருந்து வரும் கதிர்வீச்சினால் புற்றுநோய்க் கட்டிகள் உண்டாவதற்குரிய வாய்ப்புகள் இருப்பதாக வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இது நம் உயிருக்கே ஊறுவிளைவிக்கும் என்று சொன்னால் நம்ப முடிகிறதா ? ஆனால், அதுதான் உண்மை. அமெரிக்காவில் ஒரு பெண்மணி தன்னுடைய அலுவலகத்தில் தொடர்ந்து அலைபேசியைப் பயன்படுத்தியதால் மூளைப் புற்றுநோய் ஏற்பட்டு, இறந்துள்ளார்.

அலைபேசியை அதிகம் பயன்படுத்துவதால், அது வெளியேற்றும் மின்காந்த அலைகளால், நினைவிழப்பு, புற்றுநோய், மூளைக்கட்டி, கவனமின்மை, பார்வைக் கோளாறு, தோல் புற்றுநோய், குருதிப் புற்றுநோய், வலிப்புநோய், காதுகேளாமை, தூக்கமின்மை உள்ளிட்ட ஏராளமான நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் மாந்தகுலம் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதை உணரமுடிகிறது.

ஏழு அகவைக்கு உட்பட்ட குழந்தைகள், மகப்பேறு உண்டாகி உள்ள ( கர்ப்பிணிப் ) பெண்கள் ஆகியோர் கைபேசியைக் கட்டாயம் தவிர்த்தல் நல்லது. இதனால் அவர்கள் மிகப் பெரும் கதிர்வீச்சுக் கொடுமையிலிருந்து தப்பலாம்.

அலைபேசியை அதிகமாகப் பயன்படுத்தும் ஆண்களுக்கு ஆண்மைக்குறைவு ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளதாகத் தெரியவருகின்றன.

அலைபேசிக் கோபுரங்களைச் சுற்றி வாழும் மாந்தர்கள், விலங்குகள், பறவைகள், பூச்சியினங்கள் கடுமையாகத் தாக்கப்படுவதாக வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இன்றைக்கு மிகுந்து வருகின்ற அலைபேசிக் கோபுரங்களால் சுற்றுச்சூழலும் பெரிதளவு தாக்கப்படுகின்றது.

நம் ஊர்களில் சிட்டுக்குருவி என்னும் ஓர் குருவியை இப்பொழுது நாம் காணமுடிகிறதா ?

பன்னெடுங்காலமாய் நாம் பார்த்துவந்த, பட்டாம்பூச்சிகள், தும்பிகள், சிட்டுக்குருவிகள் போன்ற பறவையினங்கள் இப்போது அக்

கோபுரங்கள் உள்ள பகுதியில் அடியோடு ஒழிந்துவிட்டதாகச் சான்றுகளுடன் மெய்ப்பிக்கின்றனர். அனைத்திற்கும் காரணம் கைபேசியிலிருந்து உண்டாகும் கொடிய கதிர்வீச்சு.

அலைபேசியைப் பயன்படுத்தும்போது ஏற்படும் அதிர்வலைகள் குழந்தைகளை, மகப்பேற்றுப் பெண்மணிகளைத் தாக்குகிறது. நரம்புக் கோளாறு நோய்கள், மூளைக்குக் கெடுதல் ஆகியன ஏற்படுவதோடு மனவளமும் குன்றுகிறது.

முன்பெல்லாம் நம் எண்ணங்களை, நம் வீட்டு நிகழ்வுகளை நம் உறவினரிடமும் நண்பர்களிடமும் பரிமாறிக்கொள்ள - பகிர்ந்துகொள்ள மடல்தாளிலும் அஞ்சலட்டையிலும் மடல்களை எழுதியனுப்புவோம் ; இப்போது மடல் எழுதுவதே பலருக்கு மறந்துவிட்டது ; இன்றைய தலைமுறையினர் பலருக்கு மடல் எழுதுவதென்றால் என்னவென்றே தெரியாது. அனைத்திற்கும் காரணம் அலைபேசிகளின் வருகையே. நினைத்தவுடன் பொத்தானை அழுத்தினால், மறுநொடியே நினைப்பவருடன் குறுஞ்செய்தியில் தகவலைத் தெரிவித்திடலாம் ; அழைப்பின் மூலம் செய்தியைப் பகிர்ந்திடலாம் ; இது வியப்பே ; முன்னேற்றமே ! ஆனால், இந்த முன்னேற்றம் மாந்தனின் உடலுக்கு - உயிருக்குக் கேடு ஏற்படுத்தா வண்ணம் வைத்துக்கொள்ள வேண்டுமல்லவா ? குதிரையை விற்று, சாட்டை வாங்கிய கதையாக ஆகிவிடக் கூடாதல்லவா ?

அலைபேசி எனும் கைபேசியினால் ஏற்படும் மற்றொரு பெருங்கேடு, சாலை நேர்ச்சிகளும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளுமே !

***ஊர்திகளில் செல்லும்போது அலைபேசியை எடுக்காதே... அழைப்பது எமனாகக் கூட இருக்கலாம்....!*** என்னும் எச்சரிக்கை வரிகள் சாலையெங்கிலும் எழுதிப் போடப்பட்டிருந்தாலும் வண்டிகளில் - ஊர்திகளில் போகும்போது அலைபேசியைப் பேசிக்கொண்டே போவோர் இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர். குறிப்பாக, இருசக்கர ஊர்திகளில் பயணம் செய்வோர் அலைபேசி மணியடித்தால் போதும் ; வண்டியை நிறுத்தாமல் கூட உடனே கைபேசியைத் தேடியெடுத்துப் பேசியவண்ணமே வண்டியை ஓட்டுகின்றனர். இதனால் பெரும்பாலானோர் தன் நிலை மறந்து,

தடுமாறி, எதிரே வரும் ஊர்திகள் அல்லது மாந்தர்கள் மீது மோதி, கடும் நேர்ச்சிக்கு உள்ளாக நேரிடுகிறது. இன்றைக்கு இந்நாட்டில் ஏற்படும் சாலை நேர்ச்சிகளில் பெரும்பாலானவை குடிபோதையினால் ஏற்படுவதும் அதற்கு அடுத்தபடியாக அலைபேசியில் பேசிக்கொண்டே வண்டி ஓட்டியதால் ஏற்படுவதுமே ஆகும்.

பள்ளிக் குழந்தைகள், கல்லூரிப் பிள்ளைகள் கைகளில் தவழும் அலைபேசிகளால் அவர்தம் வாழ்க்கைப் பாதைகள் திசைமாறிச் செல்கின்றன. கைபேசி வழியே வீண் அரட்டை, கணிப்பொறி விளையாட்டு, வீணான குறுஞ்செய்திப் பரிமாற்றங்கள், உடலையும் மனத்தையும் கெடுக்கும் கேடுகெட்ட படங்களை, செய்திகளைப் பார்த்தல், பரப்புதல், படிக்க வேண்டிய பருவத்தில் மனத்தில் கிளர்ச்சியைத் தூண்டும் திரைப்படக் காட்சிகளைப் பார்த்தல், அவற்றைப் பகிர்தல் போன்ற எண்ணற்ற இழிவுகளை இக் கைபேசிகளால் அப் பிள்ளைகள் அறிய நேரிடுகிறது. மாணவக் குமுகாயத்தைக் கெடுக்கும்படியான செய்திகளும் கொடுமைகளும் இந்த அலைபேசிகளில் நிறைந்துள்ளதால் மாணாக்கரிடையே இந்த அலைபேசிகள் தவழுவதைக் கட்டாயம் தடைசெய்ய வேண்டும்.

மாந்த இனத்திற்கும் இயற்கைச் சூழலுக்கும் பிற உயிரிகளுக்கும் நன்மைகளை விட அதிகமான கேடுகளையும் இழப்புகளையும் உடல் நோய்களையும் நேர்ச்சிகளையும் ஏற்படுத்திவரும் இந்த அலைபேசிப் பயன்பாட்டை மிக மிகக் குறைத்துக்கொண்டால், அது நாம் நம் மாந்த உயிர்களுக்கும் உள்ளத்திற்கும் செய்யும் மிகப்பெரும் தொண்டாகும்.

முடிந்தவரை தவிர்த்திடுவோம் ! முழுவாழ்நாள் அடைந்திடுவோம் !

# 24. தத்தளிக்கும் தாய்த்தமிழ்ப் பள்ளிகள்...

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு ;
மாடல்ல மற்றை யவை. (திருக்குறள் : 400)

என்று மாந்தனுக்கு என்றென்றும் அழியாத செல்வமாய் இருப்பது கல்வி தான் என்றார் நம் ஆதிப்பேராசான் திருவள்ளுவர். அத்தகைய கல்வியை மக்களுக்கு வழங்குவதில் நம் தமிழ்நாடு இன்று எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது...?

அரசின் மேலாண்மையில் செயற்பட்டு வரும் அரசுப் பள்ளிகளில் பல பள்ளிகளில் மேலாண்மைச் சீர்கேட்டாலும் கடனே என்று பணியாற்றும் ஆசிரியர் பலராலும் அங்கு தம் பிள்ளைகளைச் சேர்த்துப் படிக்க வைக்கவே பெரிதும் விரும்பாத பல பெற்றோர்கள் அதன் காரணமாகவே எப்பாடுபட்டேனும் தாம் ஈட்டும் குறைந்தளவு வருமானத்திலேனும் கல்விக்கென அதிகச் செலவு செய்து, பிள்ளைகளைத் தனியார் – ஆங்கிலப் பள்ளிக் கொள்ளையரிடமே கொண்டு சேர்க்கின்றனர். மிகுந்த வறுமையிலும் அன்றாடக் கூலி வேலை செய்தும் பிழைப்பு நடத்தும் அடித்தட்டு மக்கள்தாம் வேறுவழியின்றித் தத்தம் ஊரிலேயே – சிற்றூர்ப்புறங்களிலேயே உள்ள அரசுப் பள்ளிகளில் தத்தம் குழந்தைகளைச் சேர்க்கின்றனர்.

இதனைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக்கொண்டு, தனியார் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றும் கல்விச் செல்வத்தைப் பெரும் வணிகமாகவே நடத்தி, கல்வியின் மூலம் தமக்கான செல்வத்தைத் தான் சேர்த்து ( கொள்ளையடித்து ) வருகின்றனர். அரசுப் பள்ளி இப்படி உள்ளதே என்று... அதிலிருந்து பிள்ளைகள் தப்பிப்பதாக – பிள்ளைகளை மீட்பதாகச் சொல்லிக்கொண்டு, தனியார் நடத்தும் ஆங்கிப்பள்ளியெனும் பாழும் படுகுழியில் சென்று நம் தமிழ் மக்கள் வீழ்வதா ? இஃது அறிவுடைமையாகுமா ?

இந்தநிலையில் தான், இந்தக் கல்விக் கொள்ளையிலிருந்து தமிழ் மக்களை மீட்கும் பொருட்டும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தரமான – வளமான – தாய்மொழிவழிக் கல்வியை வழங்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்திலும் தமிழகத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் தாய்த்தமிழ்ப்

பள்ளிகள் தொடங்கப்பட்டுக் கடந்த 20 ஆண்டுகளாக இயங்கி வருகின்றன. கல்விக் கொள்ளை நடத்தும் தனியார் பள்ளிகளைக் காட்டிலும் இப்பள்ளிகள் சிறந்த கல்வித்தரமும் கற்பித்தல் முறையும் மிக்கதாக விளங்குகின்றன.

சொல்லப்போனால், குடிமக்களின் நலன் விரும்பும் அரசு – நேர்மையான அரசு – நல்ல அரசு செய்ய வேண்டிய – செய்திருக்க வேண்டிய வேலையையே இந்தத் தாய்த்தமிழ்ப் பள்ளிகள் செய்து வருகின்றன. அதுவும் கடும் தொல்லைகள் பட்டும் துயரங்கள் பட்டும் இப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. அடர்ந்த முள்காட்டின் நடுவே அழகான பூஞ்சோலைகளாய் இந்தத் தாய்த்தமிழ்ப் பள்ளிகள் இத் தமிழ்நாட்டில் செயற்படுகின்றன.

எண்ணற்ற இடர்ப்பாடுகளுக்கிடையிலும் பல தனியார்க் கல்வி நிறுவனத்தாரின் மறைமுகமான தொல்லைகளுக்கு நடுவிலும் பல தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் பாதியில் மூடப்படும் நிலையை எய்திவிட்டன. அந்தப் புயல் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாமல் தாக்குப் பிடித்துச், செடியாயிருந்து இன்று ஓர் மரமாக வளர்ந்து பல பிள்ளைகளுக்குத் தரமான கல்வி தரும் ஆலமரமாய் வளர்ந்துள்ள பள்ளிகளில் – விரல் விட்டு எண்ணக்கூடிய சிலவற்றில் ஒன்றுதான் தமிழகத்தில் திருப்பூர் மாவட்டம் – திருப்பூர், வெள்ளியங்காடு என்னும் ஊரில் வள்ளலார் நகரில் கடந்த தி.பி.2026 ( கி.பி.1995) முதல் செவ்வனே செயற்பட்டு வரும் தாய்த்தமிழ் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி.

இப் பள்ளியில் மொட்டு வகுப்பு, மலர் வகுப்பு தொடங்கி ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலும் இந்த ஆண்டு 350 மாணவ மாணவியர் பயில்கின்றனர்.

இங்கு பயிலும் பிள்ளைகள், மிகச் சிறந்த ஒழுக்க நெறிகளும் போற்றத்தகு உயர் பண்புகளும் நல்லறிவும் வீரமும் உடையவர்களாகத் திகழ்கின்றனர்.

எப்படிப்பட்ட தமிழ் இந்த நாட்டில் துளிர்க்க வேண்டும் – வளர வேண்டும் என்று பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்றோர் அரும்பாடுபட்டார்களோ அப்படி அவர்கள் போற்றி வளர்த்த, வரவேற்ற தனித் தமிழ் – தூய்தமிழ் இந்தப் பள்ளிகளில் தான்

பயிற்றுவிக்கப்படுகின்றது. ***கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்*** என்பதுபோல இப்பள்ளியிலுள்ள ***கட்டடத்தின் தூண்கள் கூடத் தனித்தமிழ் பேசும்*** என்றால் அது மிகையாகாது.

தமிழ் என்றால் தமிழ் மட்டும்தான் இங்கு கற்றுத்தருவர் ; நம் பிள்ளைகளால் பிற ஆங்கிலப் பள்ளிப் பிள்ளைகள் போன்று ஆங்கிலத்தில் சரளமாகப் பேச இயலாது என்று உடனே எண்ணிவிட வேண்டாம்.

பிறமொழி கலவாமல் தமிழில் எப்படி – தமிழில் மட்டும் எப்படிப் பேசுகின்றனரோ அதேபோன்று, அதற்கிணையாக (சொல்லப்போனால் பிற ஆங்கிலப் பள்ளிக் குழந்தைகளை விடத்) தெளிவாக, மிகச் சரியாக ஆங்கிலத்தில் மட்டும் பேசுகின்ற தனித்தன்மையும் இந்தத் தாய்த்தமிழ்ப்பள்ளிக் குழந்தைகளிடம் காணப்படுவதே இப்பள்ளியின் கூடுதல் சிறப்பு. ஏனெனில், இப்பள்ளியில், தமிழோடு ஆங்கிலமும் பிழையின்றிக் கற்றுத் தரப்படுகின்றது. மொழிப்பாடம் தவிர கணிதம், அறிவியல் உள்ளிட்ட பிற பாடங்களும் தமிழ்வழியிலேயே மிகச் சிறப்பாகக் கற்றுத்தரப்பட்டு, மாணவப் பிள்ளைகள் கல்வியில் கைதேர்ந்த பிள்ளைகளாக உருவாக்கப்படுகின்றனர்.

கடந்த பத்தொன்பது ஆண்டுகளாகச் செயற்பட்டு வரும் இப்பள்ளியில் தொடக்கக் கல்வி பயின்று வெளிவந்த மாணவ மாணவியர், உயர்நிலை மற்றும் மேனிலைக் கல்வியையும் அதைத் தொடர்ந்து பொறியியல், மருத்துவஇயல் போன்ற கல்லூரிக் கல்வியையும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருவழிகளிலும் திறம்படப் படித்து, மிகச்சிறந்த வல்லுநர்களாகவும் திகழ்ந்து வருகின்றனர். தாம் மேல்நிலைக் கல்விகளில் திறம்பட விளங்கிடக் காரணம் தாம் தொடக்கப் பள்ளியில் கற்ற தரமான – சிறந்த கல்வியே என்பதை அம் மாணாக்கர்கள் இன்றும் நினைவுகூர்கின்றனர். பள்ளி என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று, தமிழ்நாட்டிலேயே மிகச் சிறந்த பள்ளிக்கு எடுத்துக்காட்டாக இப்பள்ளி திகழ்ந்துவருகிறது.

இப்பள்ளியின் மாணாக்கர்கள் மொட்டு வகுப்பு முதலே கல்விப் பாடம் மட்டுமின்றி, நம் தமிழரின் பண்பாடு சார்ந்த கலைப்பாடங்களிலும் மிகுந்த தேர்ச்சியுடன் விளங்குகின்றனர். இந்தப் பள்ளியின் ஒவ்வோர் ஆண்டு விழாவிலும் ***உடுமலைப்பேட்டை,***

***பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறை***யின் சார்பில் நாங்கள் பங்கேற்றபோது இந்த அரிய செயற்பாடுகளைக் கண்டோம்.

இப்பள்ளியின் 19ஆம் ஆண்டுவிழா அண்மையில் (கும்பம் 21, 2045 (05.03.2014)அன்று ) இப்பள்ளி வளாகத்தில் ***குழந்தைகள் கலைவிழா***வாக நடைபெற்றது. பிற தனியார் பதின்மப் ( மெட்ரிக் ) பள்ளிகளில் இடம்பெறுவதுபோல், கண்ட கண்ட திரைப்பாடல்களுக்குச் சின்னஞ்சிறு குழந்தைகளை மேடையில் ஏற்றி, அப்பாடல்களை அப்பிள்ளைகளுக்கு மனப்பாடமாக்கி, வாயசைக்க வைத்துக், குத்தாட்டம் போடவைத்துத் தமிழர் கலைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் இழிவான நிகழ்வுகள் இந்தப் பள்ளியில் நிகழவில்லை. பொருள்புரியாத பாடல்களை - பெண்களை இழிவுசெய்து ஆட்டம் போடும் பாடல்களை ஏற்றாமல் - ஏன் திரைப்படப் பாடல் ஒன்றைக்கூட இடம்பெறச் செய்யாமல் தமிழரின் நாட்டுப்புறக் கலையிசைப் பாடல்களையும் தமிழர் மொழி, இன முன்னேற்றம் சார்ந்த தமிழிசைப் பாடல்களையுமே ஒலிக்கவிட்டு அவற்றுக்கே இந்தத் தாய்த்தமிழ்ப்பள்ளிக் குழந்தைகள் நடனமாடியது அருமையிலும் அருமையாக இருந்தது.

***அன்னை மொழியே... அழகான செந்தமிழே...*** என்னும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்துப் பா தொடங்கி, கதை, கும்மி, ஆடல்-பாடல், ஆங்கிலத்தில் குறுநாடகம், அறிவியல் செயல் விளக்கங்கள் , கரகாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், சிலம்பாட்டம், பறையாட்டம், குடை நடனம், சக்கைக் குச்சி ஆட்டம், ஓக இருக்கை ( யோகா ) - அப்பப்பா பார்க்கப் பார்க்க வியப்பூட்டுவனவாக இருந்தன ஒவ்வொரு நிகழ்ச்சிகளும். குறிப்பாகப் பறையிசையை மிகச் சரியாக அடித்து முழக்கிக் கொண்டு நடனமாடிய (ஆண் - பெண் இருபாலரும்) ஒரு பத்துப் பிள்ளைகளின் பறையாட்டம், நம் உடலையும் உள்ளத்தையும் சிலிர்க்கச் செய்து உடற்குருதியைச் சூடேற்றச் செய்வதாக அமைந்திருந்தது. அதேபோன்று, திருக்குறட்பாக்களையும் பாவேந்தர், காசிஆனந்தன் பாடல்களையும் இசைவடிவில் ஒலிக்கவிட்டு, நடனமாடினர். பாவலரேறு ஐயாவின் ***எப்படியேனும் இத்தமிழகத்தை முப்படி உயர்த்திடல் வேண்டும்....*** என்னும் இசைப்பாடலுக்கு நடனமாடிய குழந்தைகள், வீறார்ந்த உணர்வைக்

கண்முன் கொணர்ந்து நிறுத்தினர். அதுபோன்று ஓக இருக்கை செய்து காட்டிய நிகழ்வும் வெகுசிறப்பு. பெரியவரைக் காட்டிலும் குழந்தைகளிடம் எண்ணற்ற - அரும்பெரும் திறமைகள் உள்ளன, நாம் தான் அவற்றைக் கண்டறிந்து வெளிக்கொணர வேண்டும் என்னும் எண்ணம் அக் குழந்தைகளின் நிகழ்வுகளைக் கண்ட ஒவ்வொருவரின் நெஞ்சிலும் தோன்றியது.

கல்வியில் மட்டுமின்றித் தமிழரின் மறைந்துகொண்டிருக்கின்ற அரும்பெரும் கலைகளிலும் பண்பாட்டு நிகழ்வுகளிலும் குழந்தைகளைக் கைதேர்ந்து சிறந்து விளங்கச் செய்கின்ற இந்தத் தாய்த்தமிழ்ப்பள்ளிகளை ஊக்குவிக்க என்னசெய்தன இங்கு ஆண்ட, ஆளுகின்ற அரசுகள் ? இப்பள்ளிகளை வளர்த்தெடுக்கவும் முன்னேற்றவும் என்ன முயற்சிகள் செய்தன - என்ன உதவிகள் செய்தன ? அல்லது பொதுமக்கள்தான் என்ன செய்தனர் ? தொடங்கிய காலம் தொட்டு இன்றுவரை இப்பள்ளிகள் - இங்கு பயிலும் மாணாக்கரில் ஒருசிலரின் பெற்றோர்கள் உணர்வார்ந்து செய்யும் நன்கொடை உதவிகள் மூலமே இன்னும் தட்டுத்தடுமாறி மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றன.

பிற பொதுவான மக்கள் இப்பள்ளிகளுக்கு என்ன உதவிகளைச் செய்தனர் ? ஊருக்கு ஊர் - தெருவுக்குத் தெரு கல்லுப் பிள்ளையாரையும் இன்னபிற உயிரற்ற கற்சிலைகளையும் வைத்து, அதைச்சுற்றிக் கட்டடம் எழுப்பி, அன்றாடம் அதற்குப் படையலிட்டு முழுக்காட்டுவதிலே இலக்கக் கணக்கில் - கோடிக்கணக்கில் பணத்தையும் நேரத்தையும் கொண்டு கொட்டிக்கொடுத்திடும் பெரும்பாலான தமிழ் மக்கள், எதிர்காலத் தலைமுறையினரை உணர்வுள்ள - அறிவுள்ள - மானமுள்ள மக்களாக ஆக்கிடக் கல்வித் தொண்டாற்றி வரும் இதைப்போன்ற தாய்த்தமிழ்ப் பள்ளிகளைக் கண்டுகொள்ளாதது ஏன் ? தலைநிமிர்ந்து பார்த்திராமல்கூட இருப்பதேன் ? தம் பிள்ளைகளின் கல்விக்கென ஆண்டுக்கு ஆண்டு தனியார் - பதின்மப் பள்ளிகளின் வாயில்களில் சென்று, அடிமைகள் போல் வரிசையில் நின்று, வாயைக்கட்டி - வயிற்றைக்கட்டி, ஒரு எளிய மொட்டு (LKG) வகுப்பில் சேர்வதற்கென்று ஆயிரக்கணக்கில் - ஏன் இலக்கக்கணக்கில் பணத்தைக் கொட்டி, படிப்புக்கென்று இடம்வாங்கிடும் பெற்றோரே சற்றேனும் சிந்திப்பீரா ? வேறு எந்த நாட்டிலேனும்

அண்டை மாநிலங்கள் எவற்றிலேனும் இத்தகைய இழிநிலை இருக்கிறதா ? கல்வியைக் காசாக்கி, எண்ணிப்பார்க்கவே இயலாத விலைக்கு இப்படி விற்கப்படுகிறதா - அதில் அவரவரின் தாய்மொழி சிதைக்கப்படுகிறதா ? நம் மக்கள் சிறிதாவது சிந்திக்க வேண்டாமா ?

அறிவுள்ள - உணர்வுள்ள மக்களாயின் இனியேனும் எண்ணிப்பார்க்க வேண்டும். நம் பிள்ளைகளின் அறிவுநலனையே - ஒழுக்கநலனையே குறிக்கோளாகக் கொண்டு, ஊசிமுனையில் நிற்பதுபோல் நின்று, அன்றாடம் போராடிக் கொண்டிருக்கும் இந்தத் தாய்த்தமிழ்ப் பள்ளிகளை இனியேனும் நாம் ஊக்குவிக்க வேண்டும். இங்கு நம் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும். அவர்களின் வருங்காலம் வேனிற்காலமாகிட அவர்களை நாம் இப்பள்ளியில் சேர்த்து, அவர்களின் அறிவை விரிவு செய்திட வேண்டும். அதுமட்டுமின்றி, இப்பள்ளிகளுக்கு நம்மாலான அனைத்து உதவிகளையும் பணத்தளவிலோ பொருளளவிலோ இன்னபிற வழிகளிலோ கட்டாயம் செய்திட வேண்டும். கற்பித்தல் என்ற பெயரில் கொள்ளையடிக்கின்ற கூட்டங்களுக்கு நடுவே கற்பித்தலைக் கொள்கையாகக் கருதிக், கற்றுத்தருகின்ற இத் தாய்த்தமிழ்ப்பள்ளிகள் வளர தமிழ் மக்களாகிய நாம் தான் உதவிக்கை நீட்டிச் செயலாற்ற வேண்டும்.

தமிழ்நாடு அரசின் பதிவுபெற்று, இப்பள்ளியின் சார்பில் இயங்கும் ***திருப்பூர் தாய்த்தமிழ்க் கல்வி அறக்கட்டளை*** (பதிவெண் - 272/2004) யின் குறிக்கோள்களாகக் கீழ்க்காண்பவற்றை அறிகிறோம்.

1. தாய்மொழியில் அனைத்து நிலைகளிலும் சமயச் சார்பற்ற கல்வி அளிப்பது. இதற்காகத் தாய்த்தமிழ்ப்பள்ளிகள், கல்லூரிகள் நிறுவுதல்.
2. இந்த அறக்கட்டளைக்கெனச் சொந்தமாக இடம் வாங்கி, பள்ளி, கல்லூரி, நூலகம், விடுதி, மருத்துவமனைகள் மற்றும் பிற குமுகப் பணிகள் செய்தல்.
3. தமிழ்க் கலைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்
4. மொழி, இன, நாட்டு மேம்பாட்டிற்குப் பாடுபடும் அறிஞர்களின் கருத்துகளை நூல்கள், கருத்தரங்கம் வாயிலாக வெளிக்கொண்டுவர வழிவகை செய்தல்.
5. அறக்கட்டளையானது தன்ஈட்டு (இலாப) நோக்கமற்றது.

தொடக்கத்தில் பல ஆண்டுகள், கூரைக் கொட்டகைகளின் கீழே

இயங்கி வந்த இந்தத் திருப்பூர்த் தாய்த்தமிழ்ப்பள்ளி, இப்பள்ளியின் தாளாளர் ***திரு. கு.ந. தங்கராசு*** அவர்களின் தொடர்ந்த – கடுமையான உழைப்பாலும் இப்பள்ளி வளர்ச்சிக்கெனப் பல்வேறு வகைகளிலும் பொருளுதவி செய்த – உயர்ந்த, கொள்கை உள்ளங்கொண்ட உணர்வாளராலும் கற்கட்டடமாக மாறிக் கடந்த 9 ஆண்டுகளாக வெகு சிறப்பாகச் செயற்பட்டுவருகிறது.

இருப்பினும் இப்பள்ளியில் மிகக் குறைந்த கட்டணத்தில் மிகுந்த தரத்தில் கல்வி கொடுக்கப்படுவதால் அவ்வப்போது ஏற்பட்ட சிறுசிறு பொருளியல் குறைபாடுகள் – இப்போது ( பள்ளியோடு சேர்த்துப் பொருட்சுமையும் ) பெரியஅளவில் வளர்ந்து, மாளாக் கடன்சுமையில் இப்பள்ளியின் இப்போதைய நிலை இருப்பதால், அவற்றைச் சிறிதளவேனும் தீர்க்கும்பொருட்டு, இப்பள்ளியின் சார்பில் சென்ற ஆண்டு ஒரு ***கல்வி மலர்*** வெளியிடப்பெற்று, அதன் விற்பனைத் தொகை ***உருவா நூறு*** (உரு.100) என்ற விலை வைத்து வெளிவந்தது. இப்பள்ளியின் அறக்கட்டளை வெளியிட்ட இந்தக் கல்விமலரை நாம் வாங்கியதோடு தொண்டுள்ளம் கொண்ட நம் நண்பர்கள், உணர்வாளர்கள் அனைவருக்கும் இதை அறிமுகம் செய்து அவர்களையும் வாங்கச் செய்து, இதன்வழி நம்மால் இயன்ற பொருளுதவியை இப்பள்ளிக்குச் செய்தோம்.

இதுபோன்று தன்னலம் கருதாது தமிழர் நலம் கருதும் – பிஞ்சுப் பிள்ளையர் நலம் கருதும் தாய்த்தமிழ்ப் பள்ளிகள், இத் தமிழ்நாட்டில் மொத்தம் 24 இடங்களில் செயற்பட்டு வருகின்றன. அதன் பட்டியலும் அவர்களின் தொடர்பு எண்களும் இக் கட்டுரையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளன. நாமெல்லாரும் உண்மையான, மாந்தநேயமுள்ள, நேரிய சிந்தனையுள்ள தமிழர்கள் எனில், இந்தத் தாய்த்தமிழ்ப்பள்ளிகளை மேன்மேலும் வளர்ச்சிப்பாதையில் செல்ல ஊக்குவிக்கவேண்டும்.

நமக்கு விருப்பமான – நாம் செய்ய நினைத்த – நம் கொள்கை சார்ந்த ஒன்றை – நம்மால் செய்யமுடியாத ஒன்றை – நம்கண்முன் செய்து கொண்டிருக்கின்ற – நம் எதிர்காலத் தலைமுறையினரான மழலைச்செல்வங்களை மிகச்சிறந்த – போற்றத்தக்க தலைமுறையினராக உருவாக்கிக் கொண்டிருக்கின்ற – குமுகத் தொண்டாற்றுகின்ற, இத் தொண்டுள்ளங்களை ஆதரித்து, உதவிகள் செய்து, வளரச்செய்தல் உண்மையான தமிழரின் கடமையன்றோ ?

# தமிழ்நாட்டில் தாய்த்தமிழ்ப் பள்ளிகள் உள்ள இடங்களும் நடத்துவோரின் தொடர்புஎண்களும்

1. சென்னை - அம்பத்தூர், தோழர் தியாகு அவர்கள்........... 89391 54752
2. சென்னை-மேடவாக்கம், இறை. பொற்கொடியம்மையார், 98416 33927
3. திருப்பூர் - வள்ளலார் நகர், கு.ந. தங்கராசுஅவர்கள்..... 98439 44044
4. ஈரோடு - கோபி, கோ.வெ. குமணன் அவர்கள்..... 98422 95915
5. திருப்பூர் - பாண்டியன் நகர், 94437 02444
6. மேட்டூர் அணை - மாதையன்குட்டை, 94432 50476
7. திருநெல்வேலி-சங்கரன்கோவில், 94435 55918
8. பொள்ளாச்சி, கள்ளிப்பாளையம்புதூர், 9865 107 107
9. திண்டிவனம், உரோசனை, 94426 22970
10. ஈரோடு, கவுந்தப்பாடி, பாவானி சாலை, 99946 61940
11. பல்லடம், மங்கலம் சாலை, தெற்குப்பாளையம், 98422 93736
12. புதுக்கோட்டை, வடகாடு, ஆலங்குடி வழி, 74027 34327
13. பட்டுக்கோட்டை, முத்துப்பேட்டை சாலை, 98655 77449
14. புதுக்கோட்டை, இராசகோபாலபுரம்(அஞ்.), 94420 43330
15. புதுக்கோட்டை, பெருஞ்சுனை (அஞ்.), 94420 43330
16. பொள்ளாச்சி, சூளேசுவரன்பட்டி, 97885 52061
17. புதுக்கோட்டை, கிளிக்குடி (அஞ்.), 98650 38581
18. திருப்பூர், வீரபாண்டி (அஞ்.), கலைவாணர் நகர், 98947 71195
19. செஞ்சி வட்டம், கோட்டப்பூட்டி அஞ்., சங்கிலிக்குப்பம், 94442 96547
20. அரியலூர், செயங்கொண்ட சோழபுரம், 80126 32505
21. கோவை, பேரூர், பேரூர் தமிழ்க்கல்லூரி, 98947 61125
22. பழனி, கொடைக்கானல் சாலை, திண்டுக்கல் மாவட்.,04545-24244
23. ஈரோடு, கோபிசெட்டிபாளையம், 98422 95915

**உயர்நிலைப்பள்ளிகள் :**

24. கோபி, கொளப்பலூர் அஞ்., 98422 95915
25. திருப்பூர், மாதப்பூர் அஞ்., சிங்கனூர், 98947 71195
26. ஒட்டன்சத்திரம், தேவத்தூர், மணிமேகலை இளங்கோ, 97866 16262
27. சென்னை-குன்றத்தூர், சேக்கிழார்நகர், பாவேந்தர்பள்ளி,81246 91171
28. புதுப்பட்டினம், கிழக்குக் கடற்கரைச் சாலை, பாவலரேறு,94441 43800
29. கரூர், தொழிற்பேட்டை, சத்தி தமிழ்வழிப்பள்ளி, 99421 17356
30. சேலம், கோனேரிப்பட்டி (அஞ்.), திருவள்ளுவர் பள்ளி, 90034 51425
31. சென்னை, பள்ளிக்கரணை, பாவாணர் தமிழ்ப்பள்ளி, 90031 54649
32. திருவண்ணாமலை, வீராணம், திருவள்ளுவர் பள்ளி, 94438 15216

# 25. தமிழர் திருவிழா !

உலகில் தோன்றிய ஒவ்வோர் மாந்த இனத்திற்கும் ஒவ்வொரு மொழி, பண்பாடு, நாகரிகம், கலைகள், திருவிழாக் கொண்டாட்டங்கள் கட்டாயம் தோன்றியிருக்கும் ; தோன்றி வளர்ந்து வந்திருக்கும். அந்த இனம் வளர வளர அவ்வினத்திற்கே உரிய மேற்கூறிய அனைத்தும் தொடர்ந்து வாழையடி வாழையாக வளர்ந்து வந்திருக்கும். ஆண்டுகள் செல்லச் செல்ல, தலைமுறைகள் மாற மாற, சீரும் சிறப்புமாய்ச் செழிப்புற்று வளர்ந்து வரும் இப் பழக்கவழக்கங்கள் அவ்வினத்தினுள் வேறோர் இனத்தின் தலையீடு நிகழும் வரை தொன்றுதொட்டு மாறாமல் அப்படியே கடைப்பிடிக்கப்பட்டு வரும். அதையே ***மரபு*** என்று நம் முன்னோர் வழங்கலாயினர். அப்படி வேறோர் இனத்தினர் தலையிடும்போதும் தலையிட்டுக் குழப்பங்களை உருவாக்கும்போதும் தான், குறிப்பிட்ட அந்த மூல இனத்தின் மொழி, பண்பாடு, நாகரிகம், கலைகள், திருவிழாக்கள் போன்றவற்றில் திரிபுகளும் மாற்றங்களும் குழப்பங்களும் ஏற்பட்டு, அவை தம் மெய்நிலையில் மாறுபடத் தொடங்குகின்றன. காலப்போக்கில் அந்த மூல இனத்தின் மெய்த்தன்மையானது இடையிற்புகுந்த இனத்தால் சிதைக்கப்பட்டு, உருமாறுகின்றது. இந்த நிலைதான் இன்றைய நம் தமிழினத்திற்கு நேர்ந்துள்ளது.

ஆம் ! உலகில் தோன்றிய மூத்த முதற்குடியாம் நம் தமிழினத்துள் – உலகிற்கே மொழியைத் தந்த, உலகிற்கே பண்பாட்டைத் தந்த, உலகிற்கே நாகரிகத்தைத் தந்த, உலகிற்கே அறிவியலைத் தந்த, உலகிற்கே மருத்துவத்தைத் தந்த, உலகிற்கே கலைகளைத் தந்த,

உலகிற்கே நயன்மையை, நேர்மையை, நல்லொழுக்கத்தை, நன்னெறிகளைத் தந்த – நம் தமிழினத்துள் பாதியில் நிகழ்ந்த ஆரியப் படையெடுப்பால் நம்மின் கலை, பண்பாடு, நாகரிகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுச் சிதைவுகளும் திரிபுகளும் நேர்ந்து விட்டன. அப்படி இடையிற்புகுந்த ஆரிய இனத்தாலும் வெவ்வேறு சமயவழிபாடுகளாலும் தமிழினத்தின் உண்மையான, தொன்றுதொட்ட பண்பாடுகளிலும் விழாக்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அப்படிப் புகுந்த ஆரிய – இந்து மதத்தின் பண்பாட்டுத் திணிப்பு வேலைகளால் தான் ***சாமி – கடவுள் –*** என்னும் பெயரில் பொம்மைகளை வைத்து வழிபடும் உருவ வழிபாடுகளும் அவற்றிற்குப் பூசனைகள் செய்து கொண்டாடுவதும் தோன்றி, அந்தச் **சாமி**யைப் **பல சாமி**களாக உருவாக்கியதும் அதைக் கரணியமாக்கி, அதில் பிறப்பினால் சாதி வேறுபாடுகளைப் புகுத்தியதும் இந்திந்தச் சாதிக்கு இந்திந்த சாமி என்று அமைத்து, மாந்தருள் உயர்ந்தவர்–தாழ்ந்தவர்–தீண்டத்தகாதவர் என்னும் வேற்றுமைகளைத் தோற்றி வளர்த்ததும் முதலான பெருங்கேடுகள் இத் தமிழினத்துள் நிகழ்ந்து – கலந்துவிட்டன. இதனால் தான் நம் தமிழினத்துள் இத்தனைத் திருவிழா எனும் பெயரில் பல்வகைக் கொண்டாட்டங்களும் களியாட்டங்களும் நிகழ்கின்றன. ஆண்டுக்கு ஒன்று என்றில்லாமல் மாதத்திற்கு ஒன்று என்று எண்ணற்ற மூட விழாக்கள் தமிழினத்துள் பல்கிப் பெருகி வளர்ந்து வருகின்றன.

ஆனால், இந் நிலவுலகில் உயிர்கள் துளி1ர்விட்ட காலந்தொட்டு, மாந்த இனம் தோன்றிய காலந்தொட்டு, எந்தவகை மூட நம்பிக்கையுமில்லாமல் எந்தவகைக் கட்டுக்கதைகளும் பண்பாட்டுத் திரிபுகளும் இல்லாமல் இன்றுவரை மாறாமல் – மறையாமல் – சிதையாமல் நிகழ்ந்துவரும் ஒரே திருவிழாக் கொண்டாட்டம் **தை எனும் சுறவத் திங்களில்** கொண்டாடப்பட்டு வரும் பொங்கல் திருவிழா ஒன்றுதான். ஆம் !

நம் தாய்த்தமிழினத்திற்கு ஒரே திருவிழாக் கொண்டாட்டம் என்றால் அது அறுவடைத் திருநாளாம் பொங்கற்திருநாள் ஒன்றே !

பொங்கல் திருநாள் ஒன்றே தமிழர் திருநாள் – அதுவே தமிழர்க்குப் புத்தாண்டு – தமிழ்ப்புத்தாண்டு. தமிழர் ஒவ்வொருவரும் இதையே தமிழ்ப்புத்தாண்டாய்க் கொண்டாட வேண்டும்.

தமிழரின் உண்மையான பண்பாட்டை - நாகரிகத்தை அடையாளப்படுத்தும் ஒரே விழா பொங்கல் திருவிழா. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் ஆரியப்பார்ப்பனருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த - இன்னும் கிடக்கின்ற நம் அருமைத் தமிழினத்தில், ஆரியப் பண்பாடுகளால் மறைக்கப்பட்டு, அழித்தொழிக்கப்பட்ட எண்ணற்ற விழாக்களுக்கு நடுவே ஆரிய இருட்டடிப்பிலிருந்து தப்பித்து, மிஞ்சிய ஒரே ஒரு தமிழ்ப்பண்பாட்டுத் திருவிழா பொங்கல் திருவிழா !

அதற்கும் இன்று **சங்கராந்திப் பொங்கல்** என்று ஆரியப் பெயர்சூட்டி, தமிழர்தம் அடையாளத்தைத் தன்னுடையதாக்க முயன்றுவருகிறான் ஆரியன். அதற்கு இடங்கொடுக்காமல் ஆண்டுதோறும் பொங்கல் - தமிழ்ப்புத்தாண்டு விழாவைத் தமிழர்களாகிய நாம் வெகுசிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

ஆரிய விழாக்களான தீபாவளி, விநாயகர் பிறப்பு, கிருட்டிணன் பிறப்பு போன்ற விழாக்களைப் புறக்கணித்துத், தமிழர்கள்நாம் நம் பொங்கல் விழாவைப் பெரிய அளவில் கொண்டாட வேண்டும்.

ஆனால், பொங்கல் விழா, சிற்றூர்ப்புறங்களில் மட்டும்தான் அப்படிக் கொண்டாடப்பெறுகின்றது. அங்குதான், ஏறத்தாழ ஒரு கிழமை முழுக்கப் பொங்கல் விழா கொண்டாடுவதைக் காணமுடிகிறது. தைப்பொங்கல், பட்டிப் பொங்கல், காணும்பொங்கல், கதிரவப் பொங்கல், மாட்டுப்பொங்கல் என்று நாளொரு பொங்கலாகச் சிற்றூர்ப்புற மக்கள் தான் பொங்கல் விழாவை இப்படிக் கொண்டாடுகின்றனர்.

பட்டணத்து மக்களோ ஒரே ஒருநாள் மட்டும் - வீட்டில் - அதுவும் தங்களின் 10க்கு 10 - பைஞ்சுதைக் கட்டட அறைக்குள்ளேயே வளி அடுப்பிலே பொங்கலை வைத்துப் பெயரளவில் மட்டுமே கொண்டாடுகின்றனர். பொங்கலுக்கென்று விடப்படுகின்ற விடுமுறை நாள்களிலே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ( கொடுமைகளை )க் காண்பதையும் திரைப்படக் களியாட்டங்களில் ஈடுபடுவதையுமே பட்டணத்து மக்கள் செய்துவருகின்றனர். இப்படியே சென்றுகொண்டிருந்தால் பொங்கல் திருவிழாவை வெறும் சடங்காக ஆக்குவதோடு, மெல்ல மெல்ல அதன் அடிச்சுவடே இல்லாமல்

போகுமளவுக்குச் செய்துவிடுவோமோ என்றும் நம்மை – நம் தமிழியப் பண்பாட்டைப் பின்தள்ளி விட்டு, மடமை மிக்க ஆரிய விழாக்களை நம்மிடையே வலுவாகக் காலூன்றி விட முயற்சிக்கும் பார்ப்பனருக்கும் வடவருக்கும் இது ஏந்தாகப் போய்விடுமோ என்றும் அச்சமாக உள்ளது.

இந்த நிலை மாற வேண்டும். எங்கள் ஊர்களிலெல்லாம் பொங்கல் திருவிழா ஒவ்வோராண்டும் மிகப் பெரிய அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. பொங்கலுக்கு நான்கைந்து நாள்களுக்கு முன்பே வீடுகளைத் தூய்மையாக்கி, வெள்ளையடித்தும் வண்ணங்கள் பூசியும் பொங்கல்நாளான தமிழ்ப்புத்தாண்டு பிறப்பதற்கு முந்திய நாள் இரவெல்லாம் கண்விழித்து, புத்துணர்வுடனும் பெருமகிழ்வுடனும் வீட்டு வாயில்களில் பல்வேறு வண்ணங்களில் எண்ணற்ற கோலங்களை இட்டும் தைப்பொங்கலை – தமிழ்ப்புத்தாண்டை உளமார வரவேற்பர். மார்கழித் திங்களின் நிறைவு நாளில் உடல்நடுங்குமளவு பனி கொட்டுகின்ற அந்த இரவு வேளைகளில் – எங்கள் வீட்டு வாயில்களிலெல்லாம் மனங்களிக்கும் மாக்கோலங்கள் வரையப்பட்டு, ஓவியங்களாகக் காட்சியளிக்கும். இதைப் போன்ற கொண்டாட்டங்களைப் பட்டணங்களில் இன்று பெருமளவில் காணமுடிவதில்லை.

உழவர் பெருமக்கள் பொங்கல் திருவிழாவில் வீடுகளுக்கு மட்டுமல்ல, வேளாண்மைக்குப் பேருதவியாக இருக்கும் மாடுகளைக் குளிப்பாட்டி, அவற்றின் கொம்புகளுக்கு வண்ணங்கள் தீட்டி, அவற்றை வணங்கி, அன்புடன் சோறூட்டுவர். இன்று காலம் போகின்ற போக்கைப் பார்த்தால் சிற்றூர்ப்புறங்களில் மிஞ்சியுள்ள உழவர் பெருமக்களும் தங்களுடைய வேளாண் நிலங்களை மனைநிலங்களாக்கிடும் வணிகர்களுக்கு விற்றுவிட்டு, அவர்களும் பட்டணத்திற்கு வந்துவிடுவரோ என்று பெருங்கவலையாக உள்ளது.

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

என்னும் வள்ளுவரின் சொல்லை என்றென்றும் மறவாமல் உலகம் உய்ய உழவை மேற்கொள்ள வேண்டுமென்பதை உணர்ந்து, உழவர் பெருமக்கள் பயிர்த்தொழிலைக் கைவிடாமல் தொடரவேண்டும். இதனை உணர்ந்த தமிழர் ஒவ்வொருவரும் அவ் உழவர்களுக்குப்

புரிவிக்க வேண்டும். பொங்கல் விழாவின் ஒரு பகுதியான உழவர் திருநாளை அவர்களோடு சேர்ந்து நாம் அனைவரும் கொண்டாட வேண்டும்.

பொங்கல்விழாவை வெகுசிறப்பாக நாம் கொண்டாட வேண்டும்... பொங்கல் விழாவில் தமிழர்தம் பண்பாட்டைப் பகுத்தறிவோடு விளக்கும் பாவரங்குகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், சொல்லாடல்கள் போன்ற நிகழ்வுகளை நடத்தியும் தமிழர்தம் கலை, பண்பாடு, நாகரிகம் குறித்து மிக அரியனவாக வெளிவருகின்ற நூல்கள், இதழ்கள், குறும்படங்கள், ஆவணப்படங்கள் போன்றவற்றை விழாவில் வெளியிட்டும் அவைகுறித்துத் திறனாய்வு செய்தும் பொதுமக்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையில் விளக்கிக் கூறிடவேண்டும்.

இதன்மூலம் தனிப்பெருந்தகைமை கொண்ட தமிழ்ப்பெருமக்களுக்குத் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின் மேன்மையையும் சிறப்புகளையும் விளக்கித் தெளிவுபடுத்தல் வேண்டும். முதலில், அறியாத் தமிழர் பலர் தங்கள் வீட்டின் வாயிலில் எழுதிக்கொண்டிருக்கின்ற **கேப்பி பொங்கல்** (Happy Pongal) என்பதைத் தவிர்க்க வலியுறுத்த வேண்டும். இதைப் போன்றதோர் கொடுமை வேறெந்த நாட்டிலும் வேறெந்த இனத்திலும் இருப்பதில்லை. தமிழர்நாட்டில் தமிழர்திருவிழாவைத் தமிழர் வீட்டில் இப்படித் தரங்கெட்ட முறையில் தம்பட்டம் அடிப்பது தவறு என்பதை முதலில் நம் தமிழர்களுக்குப் புரிவித்தல் வேண்டும்.

இந்தக் காலகட்டங்களில் தமிழிளைஞர்கள் ஒவ்வொருவரும் இதிலுள்ள உண்மைகளைத் தம் அண்டை அயலாரிடமும் சுற்றத்தார் – நட்பினரிடமும் இதுகுறித்த கலந்தாய்வுகளைச் செய்து, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

எழுதுவது மட்டுமல்லாது பொங்கலன்று எவரைச் சந்தித்தாலும் – எல்லாரிடமும் நம் மக்கள் மனமுவந்து வாயாரச் சொல்வதெல்லாம் **கேப்பி பொங்கல்** (Happy Pongal) என்பது தான். பெரும்பான்மையான வாய்களுக்குப் **பொங்கல் வாழ்த்துகள்...** என்று சொல்லவே வருவதில்லை. இவைபற்றியெல்லாம் எடுத்துக்கூறி, நம் வீடுகளிலும் தெருக்களிலும் நாம் பணிபுரிகின்ற அலுவலகங்களிலும்

பயில்கின்ற பள்ளி – கல்லூரிகளிலும் பொங்கல் விழாவைச் செம்மையுற நடத்தவேண்டும்.

எங்கள் உடுமலைப்பேட்டை அருகில் கணியூர் என்னும் பகுதியில் கடந்த 10ஆண்டுகளாகப் பொங்கல் விழாக் கொண்டாடி வரும் இளைஞர்கள், முற்றிலும் புதுமையான முறையில் சென்ற ஆண்டு முதல் தமிழ்ப்புத்தாண்டு பிறக்கின்ற அன்று அதிகாலையே ஊரிலுள்ள தெருவெங்கும் பட்டாசு வெடிகள் வெடித்தும் வாணவேடிக்கைகள் விட்டும் ஒளிமயமாக 2044 தமிழ்ப்புத்தாண்டை ( திருவள்ளுவர் ஆண்டை ) வரவேற்றுக் கொண்டாடினர். புதிய தமிழாண்டுப் பிறப்பை ஊர் மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் மிகுந்த பரபரப்புடன் ஊர் முழுக்கப் பறை இசை முழக்கிச் சென்று, மாறுபட்ட முறையில் பொங்கல் விழாவைக் கொண்டாடினர். இம்முறையையும் கூட நாமனைவரும் பின்பற்றலாம்.

தொன்றுதொட்டுப் பல தலைமுறைகளாக அழிக்கப்பட்டும் ம(ற)றக்கப்பட்டும் போன பல்வகை விழாக்களுக்கிடையே இன்றும் நம்மிடையே அழியாது வாழுகின்ற **பொங்கல் திருவிழாவை**த் தமிழர் அனைவரும் கொண்டாடி, இனிவரும் தலைமுறைகட்குக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

அரிஅரன் மகன் ஐயப்பன், நரகாசுரன்–கண்ணன் என்பன போன்ற புனைசுருட்டுக் கதைகள்கொண்டு வீணாகப் பரப்பப்பட்டு வருகின்ற ஆரிய – இந்துமதப் பொய்விழாக்களைக் கொண்டாடுவதைக் கைவிட்டு, இயற்கைக்கும் அறிவியலுக்கும் அன்றும் இன்றும் எக்காலும் பொருந்தி நிற்கின்ற, தமிழர்தம் விழாவாம் பொங்கல் திருவிழாவையே தமிழர் அனைவரும் கொண்டாடவேண்டும். தமிழரின் அரும்பெரும் அடையாளத்தை நிலைநிறுத்த வேண்டும்.



▶ ▶ ▶ ▶ ▶ 25 தலைப்புகளில் கட்டுரைகள் வடித்துள்ளார். அனைத்தும் மிகச் சிறப்பாக உள்ளன. இப்படிப்பட்ட கருத்துகளை வெளியிடப் பெரிய எழுத்தாளர்கள் என அறிமுகமாகி உள்ள எவரும் முன்வருவதில்லை. நாடறிந்த எழுத்தாளர்கள் எழுதுவன எல்லாம் பெரிதும் பொருளற்றவையாயிருப்பினும் படிக்கிறோம். ஆனால்,

கொழுமத்தார் எழுதியிருப்பது அத்தனையும் பொருள் பொதிந்தவை. படித்துப் பார்த்த பிறகு தான் இவரிடம் மறைந்து கிடக்கும் எழுத்தாற்றல் புலப்படுகிறது. எமக்குத் தெரிந்தவரையில் அண்மைக் காலத்தில் எந்த எழுத்தாளரும் இத்தகைய சிறப்பான படைப்பை அளித்ததில்லை. இது அறிவாசான் தந்தை பெரியார் வழியில் படைக்கப்பட்ட ஒரு கருத்துக் கருவூலம் ! தோழர் ஆதி இந்நூலில் சொல்லியுள்ளவையெல்லாம் தமிழர்க்குப் பயனுடையவையே என்பதில் எவ்வகை ஐயப்பாடும் இல்லை.

பெரியாரோடு அணுக்கமாக இருந்த உரிமையில் சொல்லுகிறோம். பெரியார் இம் மண்ணில் விதைத்த விதை முளைத்து, இன்று பெரிய மரமாக வளர்ந்து நிழல் தருகிறது என்பதை இரண்டாந் தலைமுறையில் தோன்றிய நம் ஆதி மெய்ப்பித்துள்ளார். பெரியாரியம் எம்முடைய தலைமுறையோடு மறக்கப்பட்டு விடுமோ என்ற எம் போன்றோரின் அச்சத்தை இந்நூலின்வழி போக்கியுள்ளார். இது எமக்கு மிகவும் மகிழ்ச்சி ஊட்டுவதாகும். – **கு.ம.சு.** (எ) **குளமுற்றத்து மருதநாடனார்**

▶ ▶ ▶ ▶ ▶ பிறமொழி கலந்து எழுதுவதில் பெருமை கொள்ளும் கேடர்கள் நடுவே பாவலர் ஆதி அவர்கள் எம்மொழியாம் தமிழைச் செம்மைப்படுத்தி வருகின்றார் பாவலரேறு பெருஞ்சித்திரனார் வழியில். பணிச்சுமை மிகுந்த இவர், கனிச்சுவை ததும்பும் பாவினையும் தனிச்சுவை கொட்டும் கட்டுரைகளையும் எழுதி வருகின்றார்.

அகவையில் இளையவராக இருப்பினும் அறிவில் மூப்படைந்தவராய் இவரது கருத்துகள் இருக்கின்றன. களமும் கருத்தும் ஒன்றாய் இவரிடம் கைகோர்த்து நிற்கக் காலம் சொல்லும் இவரின் படைப்பினை வெல்லும் நிலையில். தாய்மொழியாம் தமிழைப் படிக்காத அல்லது படிக்க விரும்பாத தமிழர்கள் நடுவே தமிழ்மொழியைப் பற்றிப் பேசினால் ஏளனமாய்ப் பார்க்கும் எத்தர்கள் நடுவே இவரின் படைப்புகள் இனத்திற்கு அரணாக உள்ளன.

பக்கத்தை நிறைக்க எழுத்துகளை, சொற்றொடர்களைப் போடாது குறளைப் போல் சொல்லை வடிகட்டி எல்லையைக் காக்கும் படையாய்க் கடைகட்டித் தந்திடும் பாங்கு போற்றுதலுக்குரியது. கருத்தினை அறுவடை செய்து களத்து மேட்டில் கொட்டிய ஆதிக்கு நன்றி. இந்நூலுள் இடம் பெற்ற அனைத்துச் சொற்களும் நம்மைச் செதுக்கும். அது நாளைய தலைமுறையை வழிநடத்தும். மானமும் அறிவும் தாங்கி வந்த இந்த நூலினை நாம் தாங்கிப் பிடிப்போம் ! இனம், மொழி உயர்வினைத் தூக்கிப் பிடிப்போம் ! **– பரணிப்பாவலன்**



கொழுமம் ஆதி அவர்கள் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களையும் தமிழ்த்தேசியத் தந்தை பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களையும் வழிகாட்டுதலாகக் கொண்டு இக் குமுகத் தேற்றத்திற்கான இன்றியமையாப் பணிகளைச் செய்துவருகிறார். அவர் தேனீ போன்ற உழைப்பினராதலால் அவர் சிந்தனையுள் பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறை என்ற கொள்கைப் பாசறையை நிறுவி அதன்வழி குமுக - அறிவுப்பணி ஆற்றி வருகிறார்.

இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய, இளைஞர்களுள் தலைமையான ஒருவர் ஆதி. இவர் முற்போக்குச் சிந்தனையும் - பகுத்தறிவும் மட்டும் உடையவரல்லர். அன்பையும் - பண்பையும் - அறிவையும் தொழக்கூடிய மாந்தநேய மிக்க அரிய மாந்தர். ஆதியின் ஒவ்வொரு கட்டுரைக் கருவியும் இக்குமுக அவலங்களை, மூடத்தனங்களை அழித்துப் பொசுக்கி, குமுகத் தேவைகளை, குமுக மலர்ச்சிகளை உருவாக்கும் நுண்மையானவை.

- 'அன்னை' **தேன்மொழியம்மையார்**

மொழி, பெரியார், விழா, ஈழம், குறள் எனப் பல்வேறு தளங்களில் தோழர் கொழுமம் ஆதி அவர்களால் பல்வேறு இதழ்களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். தோழர் ஆதி அவர்கள் நல்ல மரபுப் பாவலராக, தனித்தமிழ் ஆர்வலராக, அழுத்தமான பெரியாரியராக விளங்குபவர். அதற்கு இந்நூலின் கட்டுரைகளே நல்ல சான்றாகும். தந்தை பெரியார் தமிழுக்கு எதிரியா? என்ற கட்டுரையில் தோழர் ஆதி அழுத்தமான ஒரு சொற்போரைத் தொடங்கி வைத்திருக்கிறார். கல்வி, தமிழ்வழிக்கல்வி, தாய்த்தமிழ்ப் பள்ளி குறித்து எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் ஆழ்ந்து உணர்ந்து, பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுக் கட்டுரைகள். தோழர் ஆதி அவர்கள் மொழித்தூய்மை பேணுவதில் காட்டும் ஆர்வமும் அதுபோலவே அவர்தம் பகுத்தறிவுச் சிந்தனைப் போக்கும் நூல்முழுதும் விரவிக் கிடக்கின்றன.

- தோழர் **கொளத்தூர் மணி**

தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக்கொள்வதில் உள்ள தேவையும் அரசியலும் விளக்கப்பட்டிருப்பது போலவே, தமிழ்வழிக்கல்வி தொடர்பான செய்திகளிலும் பல கோணங்களில் விளக்கி எழுதியிருக்கிறார். தமிழர் பண்பாடு குறித்துத் தோழர் ஆதி எழுதியுள்ள கருத்துகள் சிந்திக்க வேண்டியவையும் தமிழகம் எங்கும் பரவவும் பரப்பவும் பட வேண்டியவையுமாகும். திருக்குறள் திருவிழா என்கிற பெயரில் தமிழகம் முழுக்க விழாக்கள் எடுப்பது பண்பாட்டுச் சீர்மைக்கு வழி என்கிற அவரின் விளக்கம் மகிழத் தக்கது. பெரியார் குறித்து இப்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிற செய்திகள் பலவற்றுக்கும் விளக்கம் தருகிறார் தோழர். இன்றைய தமிழ்க் குமுகத்திற்குத் தேவைப்படும் தமிழியச் செய்திகளை வெளிப்படுத்தும் உண்மைகள் எனும் அளவில் தோழர் ஆதி வெளியிட்டிருக்கும் இந்நூல், தோழர்களின் சிந்தனைக்குப் பயன்படும் சிறந்ததொரு நூல்.

- தோழர் **பொழிலன்**


வெளியீடு

**பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறை** உடுமலைப்பேட்டை.

**தேன்தமிழன் பதிப்பகம்** கொழுமம்.




சொல்லத் தயங்கும் உண்மைகள் - கொழுமம் ஆதி -